VELS

INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
PALLAVARAM - CHENNAI
INSTITUTION WITH UGC 12B STATUS

DLTAM-11

# தமிழ் - I



B.Com, BBA
B.A. (Hons) Economics
B.A. (Hons) English
ODL MODE
[Semester Pattern]

**School of Languages**
Centre for Distance and Online Education
Vels Institute of Science, Technology and Advanced Studies (VISTAS)
Pallavaram, Chennai - 600 117

# வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கற்றல் மையம்

# BBA / B.Com

**ODL Mode – பருவமுறை**

# DLTAM-11: தமிழ்-I

**(4 கற்றல் அளவெண்கள்)**

**பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு குழு**

**பேராசிரியர் ப. மகாலிங்கம்**
மொழிகள் புல முதன்மையர்
விஸ்டாஸ், பல்லாவரம்
சென்னை.

**பேராசிரியர் வெ. சிவசங்கர்**
தமிழ்த்துறை தலைவர்
விஸ்டாஸ், பல்லாவரம்
சென்னை.

**பாட ஆசிரியர்**

**முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.

**பாட ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.

**பாடப் பொருள் திருத்தம்**

**முனைவர் கே. கமலா**
பேராசிரியர்
தமிழ்த்துறை தலைவர்
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.

**மொழித்திருத்தம்**

**முனைவர் கே. துர்காதேவி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை தலைவர்
விஸ்டாஸ், பல்லாவரம்
சென்னை.

**பாட புத்தக அச்சடிப்பு மற்றும் வினியோகம்**

**திருமதி எம். எஸ். விஜயலட்சுமி**
துணைப் பதிவாளர்
தொலைநிலை மற்றும்
இணையவழிக் கற்றல் மையம்
பல்லாவரம், சென்னை.

**திரு. வி. குமார்**
பிரிவு அலுவலர்
தொலைநிலை மற்றும்
இணையவழிக் கற்றல் மையம்
பல்லாவரம், சென்னை.

**ISBN: 978-93-5996-570-3**

செப்டம்பர் – 2023 (முதல் பதிப்பு திருத்தப்பட்டது)

**© வேல்ஸ் அறிவியல், தொழிற்நுட்பம் மற்றும் உயர்கல்வி நிறுவனம் -2023**

அனைத்து பதிப்புரிமைகளும் பாதுகாக்கப்பட்டது. இந்த பாடத்திலிருந்து எந்தவொரு பகுதியையும், வேல்ஸ் அறிவியல், தொழிற்நுட்பம் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தின் எழுத்துப் பூர்வமான அனுமதியின்றி யாரும் பயன்படுத்தக் கூடாது.

மேலும் விவரங்களுக்கு, வேல்ஸ் அறிவியல், தொழிற்நுட்பம் மற்றும் உயர்கல்வி நிறுவன தொலைநிலைக் கல்வி மற்றும் இணையவழி கற்றல் மையம், வேலன் நகர், பி.வி. வைத்தியலிங்கம் ரோடு, பல்லாவரம் சென்னை – 600 117. என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும் அல்லது www.velsuniv.ac.in என்ற இணையதளத்தை தொடர்பு கொள்ளவும்.

அச்சிட்டோர்:

**FOREWORD**



**Dr.Ishari K Ganesh**
**Chancellor**

Vels Institute of Science, Technology and Advanced Studies (VISTAS), deemed to be a university, was established in 2008 under section 3 of the Act of 1956 of the University Grants Commission, Government of India, New Delhi.

VISTAS has blossomed into a multi-disciplinary Institute offering more than 100 UG & PG Programmes, besides Doctoral Programmes, through 18 Schools and 46 Departments. All the Programmes have the approval of the relevant Statutory Regulating Authorities such as UGC, UGC-DEB, AICTE, PCI, BCI, NCTE and DGS.

The deemed to be University aims to provide innovative syllabi and industry-oriented courses, and hence, the revision of curricula is a continuous and ongoing process. The revision is initiated by the faculty depending on the requirement and approved by the Board of Studies of the concerned Department/School. The courses are under Choice Based Credit Systems that enable students to get adequate freedom in choosing subjects.

I am pleased to inform you that VISTAS has been rendering its services to society to democratize the opportunities of higher education for those who are in need through Open and Distance Learning (ODL) mode.

VISTAS ODL Programmes offered have been approved by the University Grants Commission (UGC) – Distance Education Bureau (DEB), New Delhi.

The curriculum and syllabi have been approved by the Board of Studies, Academic Council, and the Executive Committee of the VISTAS, and they are designed to help provide employment opportunities to the students.

The ODL Programme (B.Com., BBA and MBA) study material have been prepared in the Self Instructional Mode (SIM) format as per the UGC-DEB (ODL & OL) Regulations 2020. It is highly helpful to the students, faculties and other professionals. It gives me immense pleasure to bring out the ODL programme with a noble cause of enriching learners' knowledge. I extend my congratulations and appreciation to the Programme Coordinator and the entire team for bringing up the ODL Programme in an elegant manner.

At this juncture, I am glad to announce that the syllabus of this ODL Programme has been made available on our website, www.vistas.ac.in, for the benefit of the student fraternity and other knowledge seekers. I wish that this Self Learning Materials (SLM) would be a nice treatise to the academic community and everyone.

**CHANCELLOR**

**FOREWORD**



**Dr.S.Sriman Narayanan**
**Vice-Chancellor**

My Dear Students!

Open and Distance Learning (ODL) of VISTAS gives you the flexibility to acquire a University degree without the need to visit the campus often. VISTAS-CDOE involves the creation of an educational experience of qualitative value for the learner that is best suited to the needs outside the classroom. My wholehearted congratulations and delightful greetings to all those who have availed themselves of the wonderful leveraged opportunity of pursuing higher education through this Open and Distance Learning Programme.

Across the world, pursuing higher education through Open and Distance Learning Systems is on the rise. In India, distance education constitutes a considerable portion of the total enrollment in higher education, and innovative approaches and programmes are needed to improve it further, comparable to Western countries where close to 50% of students are enrolled in higher education through ODL systems.

Recent advancements in information and communications technologies, as well as digital teaching and e-learning, provide an opportunity for non-traditional learners who are at a disadvantage in the conventional system due to age, occupation, and social background to upgrade their skills.

VISTAS has a noble intent to take higher education closer to the oppressed, underprivileged women and the rural folk to whom higher education has remained a dream for a long time.

I assure you all that the Vels Institute of Science, Technology and Advanced Studies would extend all possible support to every registered student of this deemed to be university to pursue her/his education without any constraints. We will facilitate an excellent ambience for your pleasant learning and satisfy your learning needs through our professionally designed curriculum, providing Open Educational Resources, continuous mentoring and assessments by faculty members through interactive counselling sessions.

This university brings to reality the dreams of the great poet of modern times, Mahakavi Bharathi, who envisioned that all our citizens be offered education so that the globe grows and advances forever.

I hope that you achieve all your dreams, aspirations, and goals by associating yourself with our ODL System for never-ending continuous learning.

With warm regards,

**VICE-CHANCELLOR**

## பாட அறிமுகம்

மாணவர்களிடையே தமிழ் மொழித் திறத்தினை மேம்படுத்தும் நோக்கில், DLTAM-11: தமிழ்-1 என்ற பாடம் 5 தொகுதிகளாகவும் மற்றும் 18 பிரிவுகளாகவும் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது. தொகுதி 1இல் சங்க இலக்கிய அறிமுகத்துடன் தொடங்குகிறது.

தொகுதி - 1 சங்க இலக்கியம் நான்குப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது - பிரிவு - 1இல் குறுந்தொகையும், பிரிவு - 2இல் புறநானூறும், பிரிவு-3இல் பட்டினப்பாலையும் மற்றும் பிரிவு - 4இல் மதுரைக்காஞ்சியும், என விரிவாக சங்க இலக்கியத்தை அறிமுகம் செய்கிறது.

தொகுதி - 2இல் இக்கால இலக்கிய அறிமுகத்தை அறிமுகம் செய்யும் நோக்கில் நான்குப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிவு - 5இல் பாரதியார் பற்றியும், பிரிவு - 6இல் பாரதிதாசன் பற்றியும், பிரிவு - 7இல் தேசிக விநாயகம் பிள்ளை பற்றியும், பிரிவு - 8இல் அப்துல் ரகுமான் பற்றியும் இக்கால கவிதையியலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்கிறது.

தொகுதி - 3இல் உரைநடை வழிச் சிந்தனைகள், மொழிச்சிறப்பு ஆகியவற்றை அறியும் நோக்கில் நான்குப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிவு - 9இல் திரு.வி.க.,வின் மாணாக்கரும் தாய்மொழியும், பிரிவு - 10இல் மு.வரதராசனாரின் மன வலிமை வேண்டும் என்பது பற்றியும், பிரிவு - 11இல் செம்மொழித் தமிழின் சிறப்புகள் பற்றியும், பிரிவு - 12இல் பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள் பற்றியும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்கிறது.

தொகுதி - 4இல் தமிழர் வாழ்வும் பண்பாடும் இரண்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிவு - 13இல் பண்பாடு - வாழ்வியல் முறை - அகம், புறம் உணவு முறை, விருந்தோம்பல், நம்பிக்கைகள், விழாவும் வழிபாடும் ஆகியவைப்பற்றி விளக்கப்பட்டுள்ளது. பிரிவு - 14 கலைகள், கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்கு என்பன போன்றவை தமிழரின் பழமையையும் வாழ்வியலையும் வெளிப்படுத்தும் பாடமாகிறது.

தொகுதி-5இல் மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம் சார்ந்து நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரிவு -15இல் எழுத்துப்பிழை, தொடர்ப்பிழைகள், பிரிவு - 16இல் வேற்றுமை இலக்கணம், பிரிவு - 17இல் செய்யுள் நலம் பாராட்டல், பிரிவு - 18இல் பாடம் தழுவிய இலக்கிய வரலாற்றில் மரபுக்கவிதை, புதுக்கவிதை, உரைநடை எனப் படைபிலக்கியத் திறத்தினை வளர்த்தெடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

# DLTAM-11: தமிழ்-I


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| **தொகுதி -1: சங்க இலக்கியம்** | | |
| பிரிவு - 1 | குறுந்தொகை | 7 |
| பிரிவு - 2 | புறநானூறு | 15 |
| பிரிவு - 3 | பட்டினப்பாலை | 23 |
| பிரிவு - 4 | மதுரைக் காஞ்சி | 31 |
| **தொகுதி-2 : இக்கால இலக்கியம்** | | |
| பிரிவு - 5 | பாரதியார் | 44 |
| பிரிவு - 6 | பாரதிதாசன் | 54 |
| பிரிவு - 7 | தேசிக விநாயகம் பிள்ளை | 67 |
| பிரிவு - 8 | அப்துல் ரகுமான் | 79 |
| **தொகுதி-3 : உரைநடை** | | |
| பிரிவு - 9 | மாணாக்கரும் தாய்மொழியும் - திரு.வி.க., | 93 |
| பிரிவு - 10 | மன வலிமை வேண்டும் - மு.வரதராசனார் | 105 |
| பிரிவு - 11 | செம்மொழித் தமிழின் சிறப்புகள் | 125 |
| பிரிவு - 12 | பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள் | 151 |
| **தொகுதி - 4 : தமிழர் வாழ்வும் பண்பாடும்** | | |
| பிரிவு - 13 | தமிழர் வாழ்வும் பண்பாடும் | 165 |
| பிரிவு - 14 | தமிழர் கட்டடக் கலைகள் மற்றும் வணிகம் | 192 |
| **தொகுதி - 5 : மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம்** | | |
| பிரிவு - 15 | எழுத்துப் பிழை, தொடர்ப் பிழைகள் | 211 |
| பிரிவு - 16 | வேற்றுமை இலக்கணம் | 223 |
| பிரிவு - 17 | செய்யுள் நலம் பாராட்டல் | 229 |
| பிரிவு - 18 | பாடம் தழுவிய இலக்கிய வரலாறு - மரபுக் கவிதை, புதுக்கவிதை, உரைநடை | 233 |
| **உண்மைத்தன்மைச் சான்றிதழ்** | | 244 |

## தொகுதி-1: அறிமுகம்

**தொகுதி-1ல் சங்க இலக்கியம்** நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகளில் சங்க இலக்கியம், புறநானூறு, பட்டினப்பாலை மதுரைக்காஞ்சி ஆகியவற்றைப் பற்றி தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு-1: சங்க இலக்கியம் -** குறுந்தொகை - குறுந்தொகை, குறுந் தொகை – 3, குறுந்தொகை – 40, குறுந்தொகை – 135 இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

**பிரிவு – 2: புறநானூறு -** புறநானூறு, கற்கை நன்றே, யானை புக்க புலம்!, பெரியோர் சிறியோர்! பிரிவில் விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

**பிரிவு – 3: பட்டினப்பாலை -** பட்டினப் பாலை, காவிரியின் சிறப்பு 01-07, சோழ நாட்டு சிறப்பு 20-28, பல்பொருள் வளம் 183-193 இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

**பிரிவு – 4ல் : மதுரைக் காஞ்சி –** மதுரைக்காஞ்சி, பாண்டியர் பரம்பரை 01-23, மன்னர்க்கு மன்னன் 64-74, பாண்டியன் புகழ் 197-209 இப் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

தொகுதி 1இல் உள்ள அனைத்து பிரிவுகளிலும் உங்கள் முன்னேற்றத்தைச் சோதிப்பதற்கான பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் அனைத்தையும் தாங்கள் தவறாமல் முடிக்க வேண்டும்.

மேலும், மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் இந்த மாதிரி வினாத்தாளுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து படிக்கவும்.

# பிரிவு-1

## குறுந்தொகை

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

1.1. குறுந்தொகை

1.2. குறுந்தொகை - 3

1.3. குறுந்தொகை - 40

1.4. குறுந்தொகை - 135

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

தமிழ் மொழித் திறத்தினை மாணவர்களிடையே எல்லா நிலைகளிலும் மேம்படுத்தி வளர்த்தல். செம்மொழித் தமிழின் இலக்கிய இலக்கண வளமைகளை அறிமுகம் செய்தல்; நல்ல தமிழ் எழுதும் பயன்பாட்டு மொழியாற்றலை வளர்த்தல்; சங்க இலக்கியத் திறத்தினை மாணவர்களிடையே எல்லா நிலைகளிலும் மேம்படுத்தி வளர்த்தல்; எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்தெடுப்பதின் வழி தகவல் தொடர்பியல் மற்றும் ஊடகத்தமிழுக்கு தகுதிப்படுத்துதல்; மொழிபெயர்ப்பு மற்றும் கலைச்சொல்லாக்கப் பயிற்சியளித்தல்; தமிழில் படைபிலக்கியத் திறத்தினை வளர்த்தெடுத்தல். இப்பிரிவில் குறுந்தொகை, குறுந்தொகை-3, குறுந்தொகை- 40 மற்றும் குறுந்தொகை - 135 பற்றி ஆகியவற்றைப் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை படித்து முடித்த பின்னர் உங்களால் கீழ்க் கண்ட வற்றைப் பற்றி விவரிக்க முடியும்.

- குறுந்தொகை, குறுந்தொகை - 3
- குறுந்தொகை – 40, 1.4 குறுந்தொகை - 135

## 1.1. **அறிமுகம் - குறுந்தொகை**

குறுந்தொகைப் பாடல்களின் சிற்றெல்லை நான்கு அடி; பேரெல்லை எட்டு அடி. நீண்ட பாடல்கள் அடங்கிய அகநானூற்றை 'நெடுந்தொகை' என்று குறித்தல் போல, அகவற்பாவின் அமைப்பில் சுருங்கிய அடிவரையறையைக் கொண்ட பாடல் - தொகுதி குறுந்தொகை என்று பெயர் பெறுவதாயிற்று, என்பன போன்ற அடிப்படைகளைக் காணலாம்.

**குறுந்தொகை நூலின் செய்யுள் -** தொகை கடவுள் வாழ்த்தை விடுத்து 401. நற்றிணை, அகநானூறு, போலவே இதுவும் 400 செய்யுட்களாயிருத்தலே பொருத்தம் உடையதாகும். இதனுள் 307, 391 ஆம் செய்யுட்கள் ஒன்பது அடி உடையன. எட்டு அடிப் பேரெல்லையைக் கடந்துள்ள இந்த இரண்டு பாடல்களும் ஐயத்திற்கு இடமானவை. நற்றிணையில் முற்றும் காணப் பெறாத செய்யுள் இவ் இரண்டனுள் ஒன்றாயிருக்குமோ என்று நினைக்கவும் இடமுண்டு. 391ஆம் செய்யுள் சில பாட பேதங்களுடன் எட்டு அடியாகச் சில பிரதிகளில் எழுதப்பட்டுள்ளது என்றும், இதனை எட்டு அடியாகக் கொண்ட போதிலும், 307ஆம் செய்யுள் எல்லாப் பிரதிகளிலும் ஒன்பது அடிகளை உடையதாக இருக்கிறதென்றும், இந்தப் பாடலைக் (307) குறுந்தொகையுள் சேராதது என்று விலக்கின் 400 செய்யுட்கள் என்னும் வரையறை நிரம்பியதாகும்

'இத் தொகை முடித்தான் பூரிக்கோ. இத் தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்' என்பது பழங் குறிப்பு. இதனைத் தொகுப்பித்தார் பெயர் தெரியவில்லை. 10 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை. எஞ்சிய பாடல்களைப் பாடியவர்களின் தொகை 205 என்ற வரையறையைப் பூர்த்தி செய்கின்றது.

பாடல்களின் அடியில் கொடுக்கப் பெற்றிருக்கும் கருத்துகள் பழமையானவை. ஆனால், பாடல்களின் தலைப்பில் இடம் பெற்றுள்ள திணைக்குறிப்புகள் பழமையானவை அல்ல; நற்றிணையிற் போலப் பதிப்பாசிரியர்களால் ஊகித்துக் கொடுக்கப் பெற்றனவே.

குறுந்தொகையில் 380 செய்யுட்களுக்குப் பேராசிரியர், தமது கல்வித் திறம் விளங்க, அரியதோர் உரை வகுத்திருந்தார் என்று தெரியவருகின்றது. பேராசிரியர் உரை எழுதாத இறுதி இருபது செய்யுட்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதி அப் பணியை முற்றுவித்தார் என்று தெரிகிறது. பேராசிரியரின் குறுந்தொகை உரையை நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பிய உரையிலே ஓரிடத்தில் மேற்கோளாகவும் (பொருள். அகத். சூ. 46) எடுத்துக் காட்டியிருக்கின்றார். இந்த இரண்டு சிறந்த

உரையாசிரியர் களாலும் எழுதப்பெற்ற பழைய உரை இன்று நமக்குக் கிடைக்கப் பெறவில்லை.

## 1.2. குறுந்தொகை 3ஆவது பாடல்

**பாடலின் பின்னணி:** தலைவன்மீது தலைவி மிகுந்த காதல் உடையவளாகவும் அன்புடையவளாகவும் இருக்கிறாள். அவர் களிடையே உள்ள நட்பை அவள் மிகவும் அருமையானதாகக் கருதுகிறாள். ஒருநாள் தலைவன் தலைவியைக் காண வருகிறான். தலைவன் காதில் கேட்கும்படியாக, அவர்களுடைய நட்பின் அருமையைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

***நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரள வின்றே சாரல்***
***கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.***

**அருஞ்சொற்பொருள்**

உயர்ந்தன்று = உயர்ந்தது; நீர் = கடல்; ஆர் = அருமை; அளவின்று = அளவினை உடையது; சாரல் = மலைப் பக்கம்; கருங்கோல் = கரிய கொம்பு; இழைத்தல் = செய்தல்; நாடன் = குறிஞ்சி நிலத் தலைவன்.

**உரை:** மலைப்பக்கத்தில் உள்ள, கரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு, பெருமளவில் வண்டுகள் தேனைச் செய்தற்கு ஏற்ற இடமாகிய நாட்டை உடைய தலைவனோடு எனக்குடைய நட்பு, பூமியைக் காட்டிலும் பெரியது; ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழம் உடையது.

**விளக்கம்** : இப்பாடலில் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளாகிய குறிஞ்சிப் பூவும், வண்டும், உரிப்பொருளாகிய புணர்ச்சியும் (ஆண் பெண் சேர்க்கையும்) குறிப்பிடப்பட்டிருப்பதால், இப்பாடல் குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

## உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1

1. குறுந்தொகையைத் தொகுத்தவர் ________

2. குறுந்தொகையைத் தொகுப்பித்தவர் _______

3. குறுந்தொகையை பாடிய புலவர்கள் எண்ணிக்கை _______

## 1.3. குறுந்தொகை 40 ஆவது பாடல்

நம் தமிழினத்தின் நாகரிகத்தினைப் படம்பிடித்துக் காட்டும் பாடலிது. தலைவனும் தலைவியும் எதிர்பாராமல் சந்திக்கின்றனர். காதலிக்கின்றனர், அங்கே சாதி, மத வேறுபாடில்லை. ஆனால், தலைவிக்கு தலைவன்மேல் ஒரு சந்தேகம் வருகிறது. இவன் நம்மைப் பிரிந்துவிடுவானோ என்பதுதான் அது! அவளின் இந்த உள்ளக் குறிப்பைக்கூட, அவள் கூறாமலே உணர்ந்து கொள்கின்றான் தலைவன். அவர்கள் கண்ணெதிரே, மழை நீர் மண்ணோடு கலந்து ஓடுகிறது. தலைவியின் அச்சத்தை, எதைச் சொல்லி, எப்படிச் சொல்லித் தெளிவிப்பது? என்று நினைத்தத் தலைவனுக்குக் கண் முன்னே தோன்றும் நீரும் நிலனுமே கைகொடுக்கிறது. "இந்த நிலத்தோடு பிரிக்க முடியாதவாறு மழைநீர் சேர்ந்துவிட்டதல்லவா? அதைப் போன்றதுதான் நம் அன்பும்" என்கிறான் தலைவன். தலைவனின் அன்பு மொழிக்கு முன் தலைவியின் அச்சம் காணாமல் போவது இயல்பு தானே?

**யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.**

- செம்புலப் பெயல்நீரார்

**குறிஞ்சித்திணைப் பாடல்**

**கருத்துரை:** என் தாயும் உன் தாயும் எவ்வாறு உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவானவர்கள்? எந்த உறவின் வழியாக நீயும் நானும் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம்? செம்மண்ணில் பெய்த மழை நீர் எவ்வாறு அம்மண்ணோடு ஒன்று கலந்து பிரிக்கமுடியாதவாறு ஆகிவிடுகிறதோ அதைப்போல ஒன்றுபட்ட அன்பினால் நம் நெஞ்சங்களும் ஒன்று கலந்தன. (அதனால் நெஞ்சம் ஒன்று கலந்த நம் அன்பும் என்றும் பிரியாது. மண்ணோடு கலந்த நீரை எப்படி பிரிக்கமுடியாதோ, அவ்வாறே நம்மையும் பிரிக்க முடியாது.)

**சொல்பொருள் விளக்கம்:** யாயும்-என் தாயும், ஞாயும்- உன் தாயும், யார் ஆகியரோ- யாருக்கு யார் உறவினர், எந்தையும்- என் தந்தையும், நுந்தையும்- உன் தந்தையும், எம்முறை- எந்த முறையில், கேளீர்- உறவினர், யானும் நீயும் – நானும்- நீயும் நானும், எவ்வழி- எந்த உறவின்

வழியாக, அறிதும்- அறிந்து கொண்டோம்? செம்புலப் பெயல் நீர் போல- செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் போல, அன்புடை நெஞ்சம் – அன்பான நெஞ்சங்கள், தாம் – தாமாகவே (யாதொரு உறவுமின்றி), கலந்தனவே- கலந்துகொண்டனவே. எவ்வாறு மழையினை செம்புலம் ஏற்றதோ அவ்வாறே தலைவனின் அன்பினையும் தலைவி ஏற்றாள். இங்கே நிலம்-தலைவி, நீர்- தலைவன்.

## 1.4. குறுந்தொகை 135ஆவது பாடல்

பாலை - தோழி கூற்று

**வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க் காடவர் உயிரென**
**நமக்குரைத் தோருந் தாமே**
**அழாஅல் தோழி அழுங்குவர் செலவே.**

- பாலைபாடிய பெருங் கடுங்கோ

**கூற்று:** தலைவன் பிரியுமென வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

**கூற்று விளக்கம்:** தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து செல்ல எண்ணிக் கொண்டிருக்கிறான். அதை அறிந்த தலைவி வரப்போகும் பிரிவை நினைத்து வருத்தத்தோடு அழுது கொண்டிருக்கிறாள். அப்பொழுது, தோழி அங்கு வருகிறாள். அவள் தலைவியை நோக்கி, “ஆடவர்தான் மகளிர்க்கு உயிர் என்று கூறிய தலைவர் உன்னைவிட்டுப் பிரிந்து செல்லமாட்டார். நீ வருந்தாதே!” என்று ஆறுதல் கூறுகிறாள்.

**கொண்டு கூட்டு:** தோழி! வினையே ஆடவர்க் குயிரே! மனையுறை வாணுதல் மகளிர்க்கு ஆடவர் உயிரென நமக்குரைத் தோரும் தாமே. அழுங்குவர் செலவே! அழாஅல்!

**அருஞ்சொற்பொருள்:** வாள் = ஒளி; நுதல் = நெற்றி; அழுங்குதல் = தாமதித்தல்; அழாஅல் = அழாதே.

**உரை:** தோழி! தொழில்தான் ஆண்களுக்கு உயிர் ஆகும்; வீட்டிலிருந்து வாழும் ஒளிபொருந்திய நெற்றியையுடைய மகளிர்க்கு, கணவன்மாரே உயிர் ஆவர் என்று, நமக்கு எடுத்துக் கூறியவரும் தலைவர்தான். ஆகவே, அவர் செல்லுதலைத் தவிர்ப்பார். நீ அழாதே!

**சிறப்புக் குறிப்பு:** செலவழுங்குதல் என்பது தலைவிக்கு ஆறுதல் கூறி, சிலகாலம் கழித்துச் செல்லுவதைக் குறிக்கிறது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

1. நெஞ்சம் ஒன்று கலந்த நம் ____________என்றும் பிரியாது
2. "ஆடவர்தான் மகளிர்க்கு _____________
3. தலைவன் பிரியுமென வேறுபட்ட ____________சொல்லியது

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் நீங்கள் குறுந்தொகை, குறுந்தொகை-3, குறுந்தொகை- 40 மற்றும் குறுந்தொகை -135 பற்றி ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -1**

1. "உப்பூரிகுடிகிழார் மகனார்" ( பூரிக்கோ)
2. 'பெயர் தெரியவில்லை'
3. "205"

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -2**

1. அன்பும்
2. உயிர்
3. தலைமகட்குத் தோழி

**பயிற்சி வினா - விடை**

1. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை - "400"
2. குறுந்தொகை அடிகள் - "4 முதல் 8 அடி"
3. குறுந்தொகை ஒரு - "அகப்பொருள் நூல்"
4. "முருகனைப்" பற்றிப் பாடும் கடவுள் வாழ்த்தாக அமைந்த நூல் "குறுந்தொகை"
5. **குறுந்தொகை என எவ்வாறு பெயர் பெற்றது**

   **விடை :** "குறைந்த அடிகளை உடைய பாட்டால் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை"
6. **குறுந்தொகைக்கு உரை எழுதியவர்கள்**

   **விடை :** "முதல் 380 பாடல்களுக்கு பேராசிரியரும்" அடுத்த"20" பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை எழுதினார்கள்.
7. **குறுந்தொகை பிரித்து எழுதுக**

   **விடை :** "குறுமை + தொகை"
8. **குறுந்தொகையில் இடம்பெறும் கடவுள் வாழ்த்துப் பாடலை பாடியவர்**

   **விடை :** "பாரதம் பாடிய பெருந்தேவனார்"

9. **குறுந்தொகையின் வேறு பெயர்கள்**

**விடை :** “நல்ல குறுந்தொகை”, “குறுந்தொகை நானூறு”

10. **குறுந்தொகையை முதலில் பதிப்பித்தவர்**

**விடை :** “சௌரி பெருமாள் அரங்கனார்”

11. **குறுந்தொகையின் பாடல் தொடர்களால் புகழ் பெற்ற புலவர்கள்**

**விடை :** “அணிலாடு முன்றிலார்”
“குப்பைக் கோழியார்”
“காக்கை பாடினியார்”
“விட்ட குதிரையார்”
“மீனெறி தூண்டிலார்”
“வெள்ளி வீதியார்”
“செம்புலப் பெயல் நீரார்”

12. **'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே... மூத்தகுடி' என்று கூறிய நூல் எது?**

**விடை :** புறப்பொருள் வெண்பாமாலை

13. **முச்சங்கங்கள் பற்றி விரிவாகக் கூறிய நூல் எது?**

இறையனார் களவியல் உரை

14. **முதற் சங்கம் பற்றிக் கூறுக.**

**விடை :** முதற்சங்கம் கடல்கொண்ட தென்மதுரையில் நிலவியது. இச்சங்கம் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக 89 அரசர்களால் 4440 ஆண்டுகள் நடத்தப்பெற்றது. 4449 புலவர்கள் தமிழ் ஆராய்ந்தனர். பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்ற நூல்கள் பாடப்பெற்றன. இச்சங்கத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், முருகவேள், அகத்தியர் முதலிய புலவர்கள் இருந்தனர்.

15. **இடைச்சங்கம் பற்றி விளக்குக.**

**விடை :** இடைச்சங்கம் கபாடபுரத்தில் நடத்தப் பெற்றது. இச்சங்கத்தில் வெண்தேர்ச் செழியன் என்ற பாண்டிய மன்னனால் தொடங்கப்பெற்று முடத்திருமாறன் என்பவன் காலத்தில் முடிவுற்றது. 59 மன்னர்களால் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. இச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர் போன்ற 3700

புலவர்கள் இருந்தனர். இவர்களால் பாடப்பெற்றவை கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் போன்றவை.

16. **இன்றைய சங்க இலக்கியங்கள் எந்தச் சங்ககாலத்தைச் சேர்ந்தவை?**

**விடை :** இன்று கிடைக்கக் கூடிய சங்க இலக்கியங்கள் கடைச் சங்க காலத்தைச் சார்ந்தவை.

17. **மாங்குடி மருதன் யார்?**

**விடை :** மாங்குடி மருதனார் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் சங்கத்தில் இருந்த தலைமைப் புலவர்.

18. **சின்னமனூர்ச் செப்பேடு சங்கம் பற்றி என்ன கூறுகிறது?**

**விடை :** மகாபாரதம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மொழிபெயர்க்கப் பெற்றதாகக் கூறுகிறது.

19. **சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக விளங்கிய நூல் எது?**

**விடை :** சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாக விளங்கிய நூல் தொல்காப்பியம்

20. **தொல்காப்பியம் எதற்குப் பயன்படுகிறது?**

**விடை :** தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றிற்கு இலக்கணம் கூறுகிறது. இலக்கியங்களை அகம், புறம் எனப் பிரித்து வகைப்படுத்துவதற்குப் பயன்படுகின்றது.

21. **எட்டுத்தொகையில் அகப்பாடல்கள் யாவை?**

**விடை :** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை எட்டுத்தொகையில் உள்ள அகநூல்களாகும்.

22. **பத்துப்பாட்டில் ஆற்றுப்படைப் பாடல்களைக் கூறுக.**

**விடை :** திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறு பாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடு கடாம்.

23. **அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?**

**விடை :** தலைவியின் காதலைத் தோழி, செவிலித் தாய் மூலம் தாய்க்குத் தெரியப்படுத்துதல் அறத்தொடு நிற்றல் எனப்படும்.

24. **கலிப்பா யாப்பில் அமைந்துள்ள எட்டுத்தொகை நூல் எது?**

**விடை :** கலிப்பாவில் அமைந்துள்ள எட்டுத்தொகை நூல் கலித்தொகை ஆகும்.

# பிரிவு-2

## புறநானூறு

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

2.1. புறநானூறு

2.2. கற்கை நன்றே

2.3. யானை புக்க புலம்!

2.4. பெரியோர் சிறியோர்!

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினா

பார்வை நூல்கள்

**அறிமுகம்**

இப்பிரிவில் நீங்கள் புறநானூறு, கற்கை நன்றே, யானை புக்க புலம்!, மற்றும் பெரியோர் சிறியோர்! ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை படித்து முடித்த பின்னர் உங்களால் கீழ்க்கண்ட வற்றைப் பற்றி விவரிக்க முடியும்.

- புறநானூறு, கற்கை நன்றே
- யானை புக்க புலம்!, பெரியோர் சிறியோர்!

**2.1. புறநானூறு**

புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்கத் தமிழ் நூலாகும். இது சங்க காலத் தமிழ் நூல் தொகுப்பான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந் நூலில் அடங்கியுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை. அகவற்பா வகையைச் சேர்ந்த இப்பாடல்கள், 150க்கும் மேற்பட்ட புலவர்களால் எழுதப்பட்டவை. புறநானூற்றின் பாடல்கள்

சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு புறத்திணை. நானூறு பாடல்களைக் கொண்டதால் இது புறநானூறு' என்ற பெயரைப் பெற்றது. ஆனால் இதுவரை அதில் ஒரு பாடல் மட்டும் கிடைக்கவில்லை; 399 பாடல்களே உள்ளன. புறநானூற்றை ஒரு வரலாற்றுக் கருவூலம் என்று கூறலாம். பழந்தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்களின் வரலாற்றையும் தமிழ்ச் சமுதாய நிலையையும் அறிய உதவும் சான்றாக இது விளங்குகின்றது.

சோர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்கள், பாரி, பேகன், அதியமான் முதலான கடையெழு வள்ளல்கள். குறுநில மன்னர் மற்றும் நிலக்கிழார் போன்ற அக்கால அரசாண்ட பரம்பரையினரின் ஆட்சிச் சிறப்பு: போர், வீரம், கொடை புகழ் முதலான பல செய்திகளைப் புறநானூறு வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

அக்காலச் சமுதாயத்தில் கல்வி பெரிதாக மதிக்கப்பட்ட உண்மை புறநானூற்றால் அறிய முடிகிறது. அரிய பண்பாட்டுச் செய்திகள் பலவற்றைப் புறநானூறு தருகின்றது. **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற மேன்மைமிக்க கூற்று புறநானூறு தந்ததுதான்.

ஆடவர் மட்டுமன்றிப் பெண்களும் புலமை வாய்க்கப்பெற்றுப் பாடல்கள் புனைந்துள்ளனர். அவர்களுள் தலைசிறந்தவர் ஔவையார். காக்கை பாடினியார். நச்செள்ளையார். பொன்முடியார்.ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தி, காமக்கண்ணியார், காவற்பெண்டு. பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டு, மாறோக்கத்து நப்பசலையார். வெள்ளிவீதியார். பாரி மகளிர் முதலிய எறத்தாழ பெண்பாற்புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர். அவர்களின் பெரும்பாலான பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

நாட்டை ஆண்டதோடு பாட்டையும் ஆண்டிருக்கிறார்கள் நமது பழந்தமிழ் மன்னர்கள் பலர். அறிவுடை நம்பி. இளம்பெருவழுதி. உக்கிரப் பெருவழுதி, சேரமான். கணைக்கால் இரும்பொறை, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, சோழன் நெடுங்கிள்ளி. சோழன் நல்லுருத்திரன், பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பாலை பாடிய பெருங்கடுங்கோ முதலான ஏறத்தாழ 30 அரசப் புலவர்களின் பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

## 2.2. கற்கை நன்றே! 183

பாடியவர்: ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்

திணை: பொதுவியல் துறை: பொருண்மொழிக் காஞ்சி

***உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,***
***பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!***
***பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,***
***சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;***
***ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,***
***'மூத்தோன் வருக' என்னாது, அவருள்***
***அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;***
***வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,***
***கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,***
***மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே,***

ஒரு தாய் ஒரு வயிற்றுப் பிறந்தவருள்ளும், அவரவர் சிறப்பின் காரணமாகத் தாயும் தன் பாசத்திலே ஓரளவிற்கு வேறுபடுபவளாவள். ஒரு குடிவந்த பலருள்ளும், 'மூத்தோனை 'வருக' என்று அழையாது.' அறிவுடையோனையே 'வருக' என்று அரசனும் சென்று கேட்பான். வேற்றுமைப்பட்ட நால்வேறு வகையான மக்களுள்ளும், கீழ் நிலையிலுள்ளான் ஒருவன் கல்வி கேள்விகளிலே வல்லான் ஆயின், மேல்நிலையிலுள்ளவனும் அவனுக்கு ஆட்படுவான். இதனால் ஊறுபாடு நேர்ந்தவிடத்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், அதனால் நேரும் இழப்பு வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு வேறுபடாதும். முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும். அதனால், சிறப்பும் அறிவும் நூற்பயிற்சியும் பெற்று இவ்வுலகத்து வாழ்விலும் உயரலாம்.

## உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக – 1

1. புறநானூறு என்பது ……………. எனப் பிரியும்.

அ) புறம் + நான்கு + நூறு

ஆ)புறம் + நானூறு

இ) புற + நானூறு

ஈ) புறம் + நாலு + நூறு

2. தமிழரின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்படுவது …………

அ) நற்றிணை

ஆ) குறுந்தொகை

இ) புறநானூறு

ஈ) அகநானூறு

3. புறம், புறப்பாட்டு என வழங்கப்படும் நூல் …………

அ) புறநானூறு

ஆ) அகநானூறு

இ) கலித்தொகை

ஈ) பதிற்றுப்பத்து

## 2.3. யானை புக்க புலம்! 184

பாடியவர்: பிசிராந்தையார்.

பாடப்பட்டோன்: பாண்டியன் அறிவுடை நம்பி.

திணை: பாடாண். துறை: செவியறிவுறூஉ.

***காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,***
***மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்;***
***நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,***
***வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;***
***அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,***
***கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;***
***மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்***
***வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,***
***பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,***
***யானை புக்க புலம்போலத்,***
***தானும் உண்ணான், உலகமும் கெடுமே.***

ஒரு மாவுக்குக் குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்துக் கவளம் கவளமாக யானைக்கு ஊட்டினால் பல நாட்களுக்கும் அது வரும்; யானையும் பலநாட் பசியடங்கி இன்புறும். அல்லாது, நூறு செய்யாயினும், தன் போக்கிலே யானை சென்று தின்னப் புகுந்தால், அது உண்ட நெல்லினும் அதன் காலடி பட்டு அழிவெய்தியதே மிகுதியாகிவிடும். இதே போன்று, அறிவுடைய வேந்தன் அறநெறியறிந்து குடிகளிடம் இறை கொண்டால், கோடிக்கணக்கான செல்வம் பெற்று அவனும் இன்புறுவதுடன், அவனது நாடும் செழிக்கும். அஃதன்றி, அவன்

அறியாமையை உடையவனாக, அவன் மந்திரச் சுற்றமும் அறங்கூறாது அவன் போக்கையே ஆதரித்து நிற்பவராக, குடிகளை வற்புறுத்தி அறமற்ற பெருந்தொகையான இறையைப் பெறவிரும்பினால், அதனால் அவனுக்கும் அவன் நாட்டுக்கும் கேடுதான் விளையும்.

## 2.4. பெரியோர் சிறியோர்! 192

பாடியவர்: கணியன் பூங்குன்றன்

திணை: பொதுவியல் துறை: பொருண்மொழிக் காஞ்சி

***யாதும் ஊரே; யாவரும் கேளிர்;***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா;***
***நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;***
***சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்***
***இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,***
***இன்னா தென்றலும் இலமே; 'மின்னொடு***
***வானம் தண்துளி தலைஇ, ஆனாது***
***கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று***
***நீர்வழிப் படூஉம் புணைபோல, ஆருயிர்***
***முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்***
***காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்***
***பெரியோரை வியத்தலும் இலமே;***
***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.***

எவ் வூராயினும் அஃது எம் ஊரே! யாவராயினும் அவர் எம் உறவினரே! தீதும் நன்றும், நோதலும் தணிதலும் பிறரால் வருவதன்று; நம்மாலேயே விளைவதாம். சாதலோ இவ்வுலகிலே புதிய செய்தியன்று. வாழ்தலே இனிது என மகிழ்தலும், வெறுத்து அதனை இன்னாதென ஒதுக்குதலும் இல்லோம். பேரியாற்று நீரிலே செல்லும் மிதவைபோல் எம் அரிய உயிரானது முறையாகச் சென்று கரைசேரும் என்பதனைத் துறவுடையோர் காட்சியினால் தெளிந்தோம். எனவே, செல்வத்தாற் பெரியவரை மதித்தலும் செய்யோம்; சிறியோரை இகழ்தலும் செய்யோம். அவரவர், ஒழுக்கம் ஒன்றையே யாமும் கருதுவோம்.

கேளிர் = உறவினர்; நோதல் = வருந்துதல்; தணிதல் = குறைதல்; முனிவு = கோபம், வெறுப்பு; தலைஇ = பெய்து; ஆனாது = அமையாது; இரங்கல் = ஒலித்தல்; பொருதல் = அலைமோதல்; மல்லல் = மிகுதி; வளமை; புணை =

தெப்பம்; திறம் = கூறுபாடு; திறவோர் = பகுத்தறிவாளர்; காட்சி = அறிவு; மாட்சி = பெருமை.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -2**

1. புறநானூற்றுப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்______.
2. பெரியோர் சிறியோர் என்னும் பாடலை பாடியவர்________.
3. பாடப் பகுதியில் அமைந்துள்ள புறநானூற்றுப் பாடலில் உள்ள திணை_______.

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் நீங்கள் புறநானூறு, கற்கை நன்றே, யானை புக்க புலம்!, மற்றும் பெரியோர் சிறியோர்! ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்றதியும் பயிற்சிக்கான விடைகள் -1**

1. அ) புறம் + நான்கு + நூறு
2. அ) புறநானூறு
3. இ) புறநானூறு

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்றதியும் பயிற்சிக்கான விடைகள் -2**

1. ஜி.யு.போப்
2. கணியன் பூங்குன்றன்
3. பொதுவியல்

**பார்வை நூல்கள்**


1. புறநானூறு மூலமும் உரையும், (இரண்டு தொகுதிகள்) ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை.
2. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அக்காதெமி, புதுடெல்லி.
3. மது.ச.விமலானந்தன், தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
4. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

**பயிற்சி வினா- விடை**

1. புறநானூறு- குறிப்பு வரைக.
2. சங்க அரசப் புலவர்கள் குறித்து விளக்குக.
3. சங்க காலத்தில் பெண்கள் கல்வியில் சிறப்புற்று விளங்கினர் என்பதை நும் பாடப்பகுதி வழி விளக்குக.
4. “கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி” பாடிய மற்றொரு பாடல் அமைந்துள்ள நூல் …………..

   அ) நற்றிணை

   ஆ) பரிபாடல்

   இ) கலித்தொகை

   ஈ) அகநானூறு

**விடை : பரிபாடல்**

5. “உண்டாலம்ம இவ்வுலகம்” என்னும் புறப்பாடல் …………… வகையைச் சார்ந்தது

   அ) நேரிசை ஆசிரியப்பா

   ஆ) இன்னிசை ஆசிரியப்பா

   இ) நிலைமண்டில ஆசிரியப்பா

   ஈ) அடிமறி மண்டில ஆசிரியப்பா

**விடை : நேரிசை ஆசிரியப்பா**

6. “முனிதல்” என்ற சொல்லின் பொருள் ……………

   அ) மகிழ்தல்

   ஆ) நகைத்தல்

   இ) வெறுத்தல்

   ஈ) சினத்தல்

**விடை : வெறுத்தல்**

7. வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படதாத செய்திகளைக கூறுவது ………………..

   அ) குறிஞ்சி திணை

   ஆ) முல்லை திணை

   இ) பெருந்திணை

   ஈ) பொதுவியல் திணை

**விடை : பொதுவியல் திணை**

8. உ.வே.சா புறநானூற்றை முதன் முதலில் பதிப்பித்த ஆண்டு …………..

அ) 1894

ஆ)1984

இ) 1994

ஈ) 1876

**விடை : 1894**

9. பிறவிப் பயன் என்பது …………. வாழ்வது

அ) புகழொடு

ஆ) செல்வமோடு

இ) வீரத்தோடு

ஈ) பிறர்க்கென

**விடை : பிறர்க்கென**

10. பண்பாட்டு கருவூலமாக _____________ திகழ்கிறது.

விடை : புறநானூறு

11. புறநானூறு _____________ நூல்களுள் ஒன்று.

விடை : எட்டுத்தொகை

12. யாக்கை என்பதன் பொருள் _____________.

விடை : உடம்பு

13. ……………… கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

விடை : உணவு

14. குடபுலயனானர் அறிவுரை வழங்கிய பாண்டிய மன்னன் …………..

விடை : பாண்டியன் நெடுஞ்செழியன்

15. உலகில் உள்ள அனைத்தையும் மிகுதியாகக் கொண்டுள்ளவன் …………..

விடை : பாண்டியன் நெடுஞ்செழியன்

# பிரிவு-3

## பட்டினப்பாலை

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

3.1. பட்டினப் பாலை

3.2. காவிரியின் சிறப்பு 01-07

3.3. சோழ நாட்டு சிறப்பு 20-28

3.4. பல்பொருள் வளம் 183-193

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பார்வை நூல்கள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

இப்பிரிவில் நீங்கள் பட்டினப் பாலை, காவிரியின் சிறப்பு 01-07, சோழ நாட்டு சிறப்பு 20-28 மற்றும் பல்பொருள் வளம் ஆகிய வற்றைப்பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை படித்த பின்னர் கீழ்க்கண்டவற்றைப் பற்றி அறிந்துகொள்வீர்கள்

- பட்டினப் பாலை, காவிரியின் சிறப்பு 01-07
- சோழ நாட்டு சிறப்பு 20-28, பல்பொருள் வளம்

**3.1. பட்டினப்பாலை**

| | | |
|---|---|---|
| பாடியவர் | – | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| பாடப்பட்டவன் | – | திருமாவளவன் (கரிகாற் பெருவளத்தான் கரிகாலன்) |
| திணை | – | பாலை |
| துறை | – | செலவழுங்குதல் |

பாவகை - ஆசிரியப்பா, வஞ்சி

மொத்த அடிகள் - 301

இப்புலவர் தொண்டைமான் இளந்திரையனுக்காகப் பெரும் பாணாற்றுப் படையை எழுதியவர். இச்சோழ மன்னன் கரிகாலனுக்காக முடத்தாமக் கண்ணியார் என்ற புலவர் பொருநராற்றுப்படையை எழுதியுள்ளார்.

நச்சினார்க்கினியர் உரையில், இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாகலின், இதற்கு பட்டினப்பாலையென்று பெயர் கூறினார். பாலையாவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் கூறுவது. இப்பாட்டு வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்துத் தலைவன் செலவு அழுங்கிக் கூறியது.

**நூல் அமைப்பு**

- திணை = நெய்தல் திணையும் பாலைத் திணையும்
- துறை = பொருள்வயின் பிரியக் கருதிய தலைவன் செலவழுங்குதல் (செலவழுங்குதல் = செல்லாது விடுதல்)
- பாவகை = இடையிடையே ஆசிரியப்பா அமைந்த வஞ்சி நெடும் பாட்டு
- அடி எல்லை = 301

**பட்டினப்பாலை விளக்கம்**

- பாலைத் திணையையும், காவிரிப்பூம்பட்டினம் நகரின் வளத்தையும் ஒருங்கே கூறுவதால் பட்டினப் பாலை எனப் பெயர் பெற்றது.

**வேறு பெயர்கள்**

- வஞ்சி நெடும் பாட்டு (தமிழ் விடு தூது கூறுகிறது)
- பாலைபாட்டு

**பட்டினப்பாலை ஆசிரியர்**

- பாடிய புலவர் = கடியலூர் உருத்திரங்கண்ணனார்
- பாட்டுடைத் தலைவன் = சோழன் கரிகாலன்

**பட்டினப்பாலை உரை**

- மறைமலையடிகள் உரை
- ரா.இராகவையங்கார் உரை

**பொதுவான குறிப்புகள்**

- பட்டினப் பாலை பாடியமைக்காக கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்கு கரிகாற் சோழன் பதினாறு நூறாயிரம் பொற்காசுகள் பரிசளித்தான் என கலிங்கத்துப்பரணி கூறுகிறது.
- இந்நூலுக்கு வஞ்சிநெடும் பாட்டு என்ற பெயர் இருந்தமையை தமிழ் விடு தூது குறிப்பிடுகிறது
- பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம் ஆகும். இந்நகரை புகார், பூம்புகார் எனவும் அழைப்பர்.
- இந்நூலில் 163 அடிகள் வஞ்சிப்பாவல் அமைந்துள்ளது.
- இந்நூல் அரகேற்றப்பட்ட இடம் = பதினாறு கால் மண்டபம்
- பிற்காலப் பாண்டிய மன்னன் ஒருவன் சோழநாட்டை வென்று அதன் தலைநகரை அழித்தபோது, அந்நகரில் இந்நூல் அரங்கேற்றப்பட்ட பதினாறு கால் மண்டபத்தை அழிக்காதிருக்க ஆணையிட்டான் என "திருவெள்ளரைக் கல்வெட்டு" கூறுகிறது.
- இந்நூலில் கிளவித் தலைவனின் பெயர் கூறப்படவில்லை.

**முக்கிய அடிகள்**

- நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
- காலின் வந்த கருங்கறி மூடையும்

## 3.2. காவிரியின் சிறப்பு 01-07

***வசை இல் புகழ், வயங்கு வெண்மீன்***
***திசை திரிந்து தெற்கு ஏகினும்,***
***தற் பாடிய தளி உணவின்***
***புள் தேம்பப் புயல் மாறி,***
***வான் பொய்ப்பினும், தான் பொய்யா,***
***மலைத் தலைய கடல் காவிரி***

மழை இல்லாவிட்டாலும் காவிரியில் நீர் வந்து வயலில் பொன்போல் விளைச்சல் பெருகும். எனவே அது பொய்யாக் காவிரி. ஒளி விளங்கும் சூரியன் ஒரு வெண்மீன். திங்களைப் போல் காலம் மாறாமல், காலக் கணியாய் விளங்குவதால் அது வசையில்லாத புகழினை ஊடையது. வானம்பாடி 'வ்வான் வ்வான் ' என்று குரல் தந்து தன்னையே பாடிக்கொள்ளும். 'தளி' என்பது மேகத்திலுள்ள நீர். வானம்பாடி நீராக

உண்ணுவது இந்தத் தளிநீரை மட்டுமே. சூரியன் திசைமாறித் தென்முகமாகச் சென்றாலும், வானம்பாடி நீரின்றித் தேம்பினாலும், காவிரியில் புனல் பாய்ந்து பொன் கொழிப்பது தவறுவதில்லையாம். காவிரித் தாய்க்குத் தலை. தலைக்காவிரி தோன்றும் குடகுமலை.

வசைஇல் – குற்றம் இல்லாத, புகழ் – புகழ், வயங்கு – ஒளியையுடைய

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -1**

1. காலத்தால் (அ) பருவத்தால் பெயர்ப்பெற்ற நூல் எது?
2. பத்துப்பாட்டில் காலத்தால் பிந்திய நூல்எது?
3. இருதொகுப்பில் [பத்துப்பாட்டு, 11 ஆம் திருமுறைகள்] இடம் பெற்ற ஒரே நூல் எது?

## 3.3. சோழ நாட்டு சிறப்பு 20-28

***அகல் நகர் வியல் முற்றத்து,***
***சுடர் நுதல், மட நோக்கின்,***
***நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்***
***கோழி எறிந்த கொடுங் கால் கனங் குழை,***
***பொன் கால் புதல்வர் புரவி இன்று உருட்டும்,***
***முக் கால் சிறு தேர் முன் வழி விலக்கும்***
***விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா,***
***கொழும் பல் குடிச் செழும் பாக்கத்து,***
***குறும் பல் ஊர் நெடுஞ் சோணாட்டு***

காயும் உணவுப்பொருள்களைக் கவர்ந்து உண்ணும் கோழிகளை, காதில் அணிந்திருக்கும் பொன்னணிகளைக் கழற்றி எறிந்து மகளிர் ஓட்டுவர். அவை குழந்தைகள் உருட்டும் நடைவண்டிகளைத் தடுக்கும் செல்வச் சீமாட்டியர் சுடரும் நெற்றியும், எதையும் பொருட்படுத்தாத கள்ளம் கபடமற்ற மடமை நோக்கமும் கொண்டவர்கள். காதிலே மதிப்புமிக்க குழைகளையும், கழுத்திலே பொருத்தமான இழைகளையும் அணிந்திருப்பர். முற்றத்தில் உணவு தானியங்களை அந்த மகளிர் காயவைத்துக் கொண்டிருப்பர். கோழிகள் அவற்றைக் கவர்ந்து உண்ணும். அந்தக் கோழிகளை அவர்கள் தம் காதுகளில் அணிந்திருக்கும் குழைகளைக் கழற்றி எறிந்து ஓட்டுவர். அவர்களுடைய பிள்ளைகள் மூன்று சக்கர வண்டியை அவ்விடங்களில் உருட்டிக்கொண்டு செல்லும்போது அந்தக் குழைகள் தடுக்கும். தடையையோ, குழையின்

மதிப்பையோ பொருட்படுத்தாமல் பிள்ளைகள் தம் தேர் வண்டியை உருட்டிச் செல்வர்.

விலங்கு - பகை அல்லது மக்களை மக்கள் தாக்கும் பகை இல்லாதது சோழநாடு. சோழ நாட்டில் பயிர்களை உண்ணும் விலங்குபகை உண்டு. உட்பகை, வேற்றுநாட்டுப் பகை போன்ற எந்தப் பகையும் இல்லை. கொழுத்துக் கிடக்கும் செல்வக் குடிகள் பலவாகப் பெருகியிருந்தன. இவர்கள் வாழும் செழுமையான சிற்றூர்கள் பலவற்றைக் கொண்டது சோழநாடு.

அகல் நகர் – பெரிய வீடு, வியன் முற்றத்து – பெரிய முற்றம், சுடர் நுதல் – ஒளிமயமான நெற்றி, மட நோக்கின் – மென்மையாக பார்ப்பது, நேர் இழை – ஒத்த இழை, மகளிர் – மகளிர், உணங்கு – காய்ந்த, உணா – உணவு பொருட்கள், கவரும் – வரும், கோழி – கோழி, எறிந்த – எறிந்த, கொடுங்கால் – வளைந்த தாள், கனங்குழை – பொன்னாற் செய்த காதணி, பொன் கால் – பொன்னால் ஆன சலங்கை, புதல்வர் – புதல்வர், புரவி இன்று உருட்டும் – குதிரை, முக்கால் சிறு தேர் – நடை வண்டி, முன் வழி விலக்கும் – முன் வழியை நீக்கும், விலங்கு பகை – தடுக்கும் பகைமை, அல்லது கலங்கு பகை – கலக்கத்தினால் அல்ல, அறியா – அறியா, கொழும் – சிறப்பு வாய்ந்த, பல் குடி – பல குடிகள், செழும் பாக்கத்து – வளமை மிகுந்த கடல் ஒட்டி இருக்குமிடம்

---

### 3.4. பல்பொருள் வளம் 183-193

---

*செல் கதிர் நுழையாச் செழு நகர் வரைப்பின்*
*செல்லா நல் இசை அமரர் காப்பின்,*
*நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,*
*காலின் வந்த கருங் கறி மூடையும்,*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,*
*தென் கடல் முத்தும், குண கடல் துகிரும்,*
*கங்கை வாரியும், காவிரிப் பயனும்,*
*ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,*
*அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,*
*வளம் தலைமயங்கிய நனந் தலை மறுகின்*

வேறு பிற கொடிகளும், மிகவும் நெருங்கி, பல்வேறு உருவங்களில் இருந்தன. அந்தக் கொடிகளினால், கதிரவனின் கதிர் நுழைய முடியாதபடி

இருந்தது அந்தச் செழிப்பான நகர். அதன் எல்லையில் கெடாத நல்ல புகழையுடைய தேவர்கள் பாதுகாத்தனர்.

அகன்ற தெருவில், கடலில் வந்த நிமிர்ந்த நடையையுடைய குதிரைகளும், வண்டிகளில் வந்த கரிய மிளகு மூடைகளும், வடமலையில் பிறந்த பொன்னும், குடகு மலையில் தோன்றிய சந்தனமும் அகிலும், தென் கடலின் முத்தும், கீழ்த் திசைக் கடலின் பவளமும், கங்கை ஆற்றினால் உண்டான பொருட்களும், காவிரி ஆற்றினால் உண்டான பொருட்களும், ஈழத்து உளவும், மியன்மாரின் பொருட்களும், அரிய பொருட்களும் பெரிய பொருட்களும், நிலத்தை நெளிக்கும்படி திரண்டு ஒன்றோடொன்று கலந்து இருந்தன.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக-2**

1. பட்டினப்பாலையின் ஆசிரியர் _______________
2. பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன் ____________
3. பட்டினப்பாலையின் வேறு பெயர் _____________

**தொகுத்தறிவோம்**

இப் பிரிவில் பட்டினப் பாலை, காவிரியின் சிறப்பு 01-07, சோழ நாட்டு சிறப்பு 20-28 மற்றும் பல்பொருள் வளம் ஆகியவற்றைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. நெடுநல்வாடை
2. திருமுருகாற்றுப்படை
3. திருமுருகாற்றுப்படை

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

1. கடியலூர் உருத்திரங் கண்ணனார்
2. கரிகால் பெருவளத்தான்
3. வஞ்சி நெடும்பாட்டு

**மாதிரி வினாக்கள்**

1. ஆற்றுப்படை நூல்களுள் பெரியது எது?

   விடை : மலைபடுகடாம் – 583 பாடல்கள்

2. விருந்தினர் பிரியும்போது கரிகாலன் ஏழடி நடந்து வந்து வழியனுப்புவான் என்ற செய்தியைக் கூறும் நூல் எது ?

விடை : பொருநராற்றுப்படை

3. ஓய்மா நாடு என்பது எது?

விடை : தீண்டிவனப் பகுதி

4. கடைபேழு வள்ளல்களைப் பற்றிக் கூறும் நூல் எது?

விடை : சிறுபாணாற்றுப்படை

5. நாகம் கொடுத்த ஆடையைச் சிவனுக்குக் கொடுத்தவன் யார்?

விடை : ஆய் அண்டிரன்

6. எட்டுத்தொகை நூல்களில் ஒரு பாடலையும் பாடாதவர் புலவர் யார்?

விடை : நப்பூதனார்

7. புகார் நகரத்தில் நடைபெற்ற வணிகத்தைப் பற்றி விரிவாகக் கூறும் நூல் எது?

விடை : பட்டினப்பாலை

8. கோயில், கடை, கள்ளுக்கடை ஆகிய இடங்களில் கொடி கட்டியிருப்பதைக் கூறும் நூல் எது?

விடை : பட்டினப்பாலை

9. புகாரில் ஏழை எளியவர்களுக்கு உணவு அளிக்கும் சமையல் சாலைகள் இருந்தது எனக் கூறும் நூல் எது?

விடை : பட்டினப்பாலை

10. "முட்டார் சிறப்பின் பட்டினம் பெறினும்

விடை : வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய

11. வாரேன் வாழிய தநஞ்சே" என்ற பாடலடி வரும் நூல் எது?

விடை : பட்டினப்பாலை

12. காடுகொன்று நாடாக்கி குளம்தொட்டு வளம் பெருக்கி" என்ற பாடலடி வரும் நூல் எது?

விடை : பட்டினப்பாலை

13. “வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைஇய கடற் காவிரி“ என்ற பாடலடி வரும் நூல் எது ?

விடை : பட்டினப்பாலை

14. நன்னன் ஆண்ட பகுதி எது?

விடை : சவ்வாது மலைபகுதி

15. நன்னனின் தலைநகரம் எது ?

விடை : இன்றைய செங்கம்

16. நன்னனின் மலை?

விடை : நவிரமணி

17. ‘பத்துப்பாட்டு’ என்ற தொடரை முதன்முதலாகப் பயன் படுத்தியர் யார்?

விடை : நன்னூலின் முதல் உரையாசிரியராகிய மயிலைநாதர்

18. பத்துப்பாட்டில் “அறத்தொடு நிற்றல்“ என்ற துறையில் அமைந்த நூல் எது?

விடை : குறிஞ்சிப்பாட்டு

19. பத்துப்பாட்டில் செலவழுங்கல் துறையில் அமைந்த நூல் எது?

விடை : பட்டினப்பாலை

20. பத்துப்பாட்டில் வீடு பேற்றிற்கு முதன்மை கொடுக்கும் நூல் எது?

விடை : மதுரைக்காஞ்சி

21. பத்துப்பாட்டில் அகநூலாக இருந்தும் புறச்செய்திகளை மிகுதியாகக் கூறும் நூல் எது?

விடை : பட்டினப்பாலை

22. யானைக்கு மலையை உவமையாகக் கூறும் நூல் எது?

விடை : மலைபடுகடாம்

23. சமுதாயப்பாட்டு எனத் தமிழண்ணல் குறிப்பிடும் நூல் எது?

விடை : பெரும்பாணாற்றுப்படை

# பிரிவு-4

## மதுரைக் காஞ்சி

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

4.1. மதுரைக்காஞ்சி

4.2. பாண்டியர் பரம்பரை 01-23

4.3. மன்னர்க்கு மன்னன் 64-74

4.4. பாண்டியன் புகழ் 197-209

உங்கள் முன்னேற்றத்தைச் தோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பார்வை நூல்கள்

பயிற்சி வினா

### அறிமுகம்

நீங்கள் இப்பிரிவில் மரைக்காஞ்சி, பாண்டியர் பரம்பரை 01-23, மன்னர்க்கு மன்னன் 64-74 மற்றும் பாண்டியன் புகழ் 197-209 இவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

### குறிக்கோள்கள்

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை தெரிந்து கொள்ளலாம்.

- மரைக்காஞ்சி, பாண்டியர் பரம்பரை 01-23
- மன்னர்க்கு மன்னன் 64-74 , பாண்டியன் புகழ் 197-209

### 4.1. மதுரைக்காஞ்சி

| | | |
|---|---|---|
| பாடியவர் | : | மாங்குடி மருதனார் |
| பாடப்பட்டவன் | : | தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் |
| திணை | : | காஞ்சி திணை |
| பாவகை | : | அகவல்பா (ஆசிரியப்பா) |
| மொத்த அடிகள் | : | 782 |

சங்கத் தமிழ் பாடல் தொகுப்பான பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில் அடங்குவது மதுரைக் காஞ்சி. இத் தொகுப்பில் உள்ள நூல்களுள் மிகவும் நீளமானது இதுவே. மாங்குடி மருதனார் என்னும் புலவர் இந் நூலை இயற்றியுள்ளார். இப்பாடலில் 782 அடிகள் உள்ளன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு உலகியல் உணர்த்துவதாய் இப்பாடல் பாடப் பட்டுள்ளது. பாண்டி நாட்டின் தலைநகரமான மதுரையின் அழகையும், வளத்தையும் கூறுகின்ற இந்நூல், அந்நாட்டின் ஐவகை நிலங்களைப் பற்றியும் கூறுகின்றது. இப் பாட்டின் தொடக்கத்தில் திரைகடல் சூழ்ந்த ஞாலம் பற்றிப் பாடும் புலவர் பிறகு தேன் கூடுகள் நிறைந்திருக்கும் மலையுச்சிகளைப் பற்றியும் கூறுகிறார். இந்த உவமைகள் இயற்கை வளம் குறித்துப் பாடும் பொருட்டு அமைந்தவை அல்ல. வாழ்க்கை அலை போன்று நிலையில்லாதது. எனவே நல்லறங்கள் செய்து மலை போல் என்றும் அழியாப் புகழைத் தேடிக்கொள் என்று மன்னனுக்கு மறைமுகமாய்க் கூறுகிறார்.

**நூல் அமைப்பு**

- திணை = மருதம், புறத்திணை
- பா வகை = வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பா
- அடி எல்லை = 782

**மதுரைக்காஞ்சி பெயர்க்காரணம்**

- மதுரையை ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு பொருட்செல்வம், இளமை, யாக்கை போன்ற உலக இன்பங்கள் நிலையற்றவை என்று காஞ்சித் திணையை விரித்துக் கூறுவது மதுரைக் காஞ்சி

**மதுரைக்காஞ்சி வேறு பெயர்கள்**

- மாநகர்ப்பாட்டு (ச.வே.சுப்பிரமணியன்)
- கூடற் தமிழ்
- காஞ்சிப்பாட்டு

**மதுரைக்காஞ்சி ஆசிரியர்**

- பாடிய புலவர் = மாங்குடி மருதனார்
- பாட்டுடைத் தலைவன் = தலையானங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

**பாண்டியனின் போர் வெற்றி**

- கோச்சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
- சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி
- குறுநில மன்னர்கள் ஐவர் = திதியன், எழினி, எருமையூரன், பொருளன், இருங்கோ வேண்மான் ஆகியவர்களை தோற்கடித்தான்

**பாண்டியனின் முன்னோர்**

- முந்நீர் வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன்
- பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி
- நிலத்திரு திருவிற் பாண்டியன்

**பொதுவான குறிப்புகள்**

- நிலையாமையை உணர்த்தும் திணை காஞ்சித்திணை
- தொல்காப்பியரின் காஞ்சித்திணை நிலையாமை பற்றியது; புறப் பொருள் வெண்பா மாலையின் காஞ்சித் திணை போர் பற்றியது.
- பத்துப்பாட்டின் அதிக அடிகளை கொண்டது
- பத்துப்பாட்டு வெண்பா இந்நூலை "பெருகு வளமதுரை காஞ்சி" எனப் போற்றுகிறது.
- மதுரையின் நாள் அங்காடியும் (பகல் கடல்), அல் அங்காடியும் (இரவு நேரக்கடை) கூறப்பட்டுள்ளது.
- இதனை "மாநகர்ப் பாட்டு" எனக் கூறியவர் ச.வே.சுப்பிரமணியன்
- மதுரையில் நடைபெற்ற ஆறு விழாக்கள் = திருபரங்குன்ற விழா, மதுரைக்கோவில் விழா, அந்திவிழா, எழுநாள் விழா, திருவோண விழா, மன்னன் பிறந்த நாள் விழா.

---

**முக்கிய அடிகள்**

---

- கரை பொருது இறங்கும் கணைஇரு முந்நீர்
- திரையீடு மணலிலும் பலரே, உரைசொல்

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -1**

---

1. ஆழ்ந்த மணிநீர் கிடங்கின் – மணிநீர் கிடங்கு என்பது யாது?

   அ) மணல்

ஆ) கடல்

இ) அகழி

ஈ) ஆறு

2. மதுரைக்காஞ்சி நூலின் மொத்த அடிகள் எத்தனை?

அ) 732

ஆ) 752

இ) 782

ஈ) 792

3. மதுரைக்காஞ்சி நூல் மதுரை நகரின் சிறப்புகளை எத்தனை அடிகளில் பெருமைப்படுத்தி உள்ளது?

அ) 254

ஆ) 284

இ) 324

ஈ) 354

---

### 4.2. பாண்டியர் பரம்பரை 01-23

---

*ஓங்குதிரை வியன் பரப்பின்*
*ஒலி முந்நீர் வரம்பு ஆக,*
*தேன் தூங்கும் உயர் சிமைய*
*மலை நாறிய வியல் ஞாலத்து,*
*வல மாதிரத்தான் வளி கொட்ப,*
*வியல் நாள்மீன் நெறி ஒழுக,*
*பகல் செய்யும் செஞ் ஞாயிறும்*
*இரவுச் செய்யும் வெண் திங்களும்,*
*மை தீர்ந்து கிளர்ந்து விளங்க,*
*மழை தொழில் உதவ, மாதிரம் கொழுக்க,*
*தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய,*
*நிலனும் மரனும் பயன் எதிர்பு நந்த,*
*நோய் இகந்து நோக்கு விளங்க;*
*மே தக, மிகப் பொலிந்த*
*ஓங்கு நிலை வயக் களிறு;*
*கண்டு தண்டாக் கட்கு இன்பத்து,*

*உண்டு தண்டா மிகு வளத்தான்,*
*உயர் பூரிம விழுத் தெருவில்,*
*பொய் அறியா, வாய்மொழியால்*
*புகழ் நிறைந்த, நல் மாந்தரொடு*
*நல் ஊழி அடிப் படர,*
*பல் வெள்ளம் மீக்கூற,*
*உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!*

பொங்கி அலைவீசும் பரப்பினைக் கொண்டது கடல். அதனை எல்லையாகக் கொண்ட ஞாலத்தில் தேன்கூடுகள் தொங்கும் உயர்ந்த முகடுகளைக் கொண்ட மலைகள் தோன்றியுள்ளன. வானப் பெரு வெளியில் காற்று வலிமையுடன் சுழன்று கொண்டுள்ளது. எல்லா வற்றையும் விடப் பெரிதாக அகன்றுள்ள விண்மீன்கள் தத்தம் வழியில் செல்கின்றன. பகலில் ஒளிதரும் ஞாயிறு இரவில் ஒளிதரும் திங்கள் ஆகிய இரண்டும் மயக்கமின்றித் தோன்றி ஒளிர்கின்றன. மழை பொழிந்தது. மாநிலம் கொழுத்துள்ளது. ஒன்று விதைத்தால் அது ஆயிரமாக விளைகிறது. விதைத்த நிலமும் விதைக்காத மரங்களும் நல்ல பலனைத் தருகின்றன. இப்படி இயற்கை உதவுவதால் மக்களின் நோக்கத்திலும் துன்பத்தைக் காண முடியவில்லை. யாரும் துன்பம் செய்யவில்லை. கண்டு மாளாத களிறு. அக் களிறு உண்டு மாளாத வளம். தெருவெங்கும் பூரிப்பு. பொய் பேசத் தெரியாமல் உண்மையே பேசும் மக்கள். அவர்கள் உலகம் புகழும் நன்மக்கள். இப்படிப்பட்ட மக்கள் வாழும் நல்ல ஊழிக்காலம் வெள்ளம் என்னும் எண்ணளவினைக் கொண்ட ஊழிக்காலம். மக்கள் தன் காலடியைப் பற்றிக்கொண்டு பின்தொடரும்படி வெள்ளம் (கோடி கோடி) ஆண்டுகள். கோடிகோடி (1021) ஆண்டுகள் ஆண்டுவந்த பாண்டியரின் வழித்தோன்றலாக விளங்கும் மருகனே! (தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனே!)

---

## 4.3. மன்னர்க்கு மன்னன் 64-74

---

*அருங் குழு மிளை, குண்டு கிடங்கின்,*
*உயர்ந்து ஓங்கிய நிரைப் புதவின்,*
*நெடு மதில், நிரை ஞாயில்,*
*அம்பு உமிழ், அயில், அருப்பம்*
*தண்டாது தலைச் சென்று,*
*கொண்டு நீங்கிய விழுச் சிறப்பின்*
*தென் குமரி வட பெருங்கல்*

***குண குட கடலா எல்லைத்***
***தொன்று மொழிந்து தொழில் கேட்ப,***
***வெற்றமொடு வெறுத்து ஒழுகிய***
***கொற்றவர்தம் கோன் ஆகுவை;***

இடியானது, பச்சை மரங்களை எரித்துத் தின்று பட்ட மரங்களாக்கும். பாறையாக உள்ள மலைகளையும் உதிரச் செய்யும். அதுபோல நெடுஞ் செழியன் பகைவர் பலரது கோட்டைகளைத் தகர்த்தான். பகைவரின் கோட்டை கடத்தற்கரிய காவற்காடுகளுக்கு இடையே இருந்தது. ஆழமான அகழிகள், மிக உயரத்தில் வீரர்கள் பதுங்கிக் கொள்ளும் புதவு, நீண்ட மதில், படைக்கருவிகளைப் பாதுகாக்கும் ஞாயில், மறைந்திருந்து அம்பெய்யவும் வேல் வீசவும் உதவும் அருப்பம் முதலானவற்றைக் கொண்டிருந்தது, பகைவரின் கோட்டை. இப்படிப்பட்ட இடங்களி லெல்லாம் நெடுஞ்செழியனின் படை தடையின்றி உள்ளே சென்று கோட்டையைத் தனதாக்கிக் கொண்டது. இது அவனது விழுமிய சிறப்புகளுள் ஒன்று.

தெற்கில் குமரிமுனை, வடக்கில் வேங்கடமலை, கிழக்கிலும் மேற்கிலும் கடல், இந்த எல்லைப் பகுதிக்குள் ஆண்ட மன்னர்கள் அனைவரும் வழிவழியாகத் தனது ஆணைக்குட்பட்டு நடக்கும்படி செய்த அரசர்க்கரசன் நெடுஞ்செழியன். வெற்றம் = வெறுப்பு, வேறு வழி இல்லையே என்னும் வெறுப்போடு இவனுக்கு அடிபணிந்து ஒழுகினர். கொற்றம் = பிறர் பணியும் வெற்றி.

## 4.4. பாண்டியன் புகழ் 197-209

***உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்,***
***பொய் சேண் நீங்கிய வாய் நட்பினையே;***
***முழங்கு கடல் ஏணி மலர் தலை உலகமொடு***
***உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்,***
***பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே;***
***தென் புல மருங்கின் விண்டு நிறைய***
***வாணன் வைத்த விழு நிதி பெறினும்,***
***பழி நமக்கு எழுக என்னாய், விழு நிதி***
***ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே;***
***அன்னாய்! நின்னொடு, முன்னிலை, எவனோ?***
***கொன் ஒன்று கிளக்குவல், அடு போர் அண்ணல்!***
***கேட்டிசின் வாழி! கெடுக நின் அவலம்!***

*கெடாது நிலைஇயர், நின் சேண் விளங்கு நல் இசை!*

வானுலகத்தை அமிழ்தத்தோடு சேர்த்துக் கொடுத்தாலும் தான் கொடுத்த வாக்கிலிருந்து தவற மாட்டான். பகைவர்க்கு அஞ்சிப் பணியாதவன் முழங்கும் கடல் ஏணிக்கு மேல் உலகம் மலர்ந்து பூத்திருக்கிறது. உயர்ந்த மேல் உலகத்தின் வானோர் மண்ணுலகத்தையே படையாகத் திரட்டிக் கொண்டு எதிர்த்து வந்தாலும் செழியன் பணியமாட்டான். பழிக்கு அஞ்சுபவன் - பாண்டிய நாட்டின் தென்பகுதியில் வாணன் என்பவன் விழுமிய நிதிக்குவியலை மூங்கில் குழாய்களில் சேமித்து வைத்திருந்தான். அதனை முழுமையாகப் பெறுவதாயினும் 'ஏற்றல்' பழி வரும் என்று எண்ணி வாங்கமாட்டான். புகழ்வேள்வி செய்பவன் - தன்னிடம் உள்ள விழுமிய செல்வத்தை யெல்லாம் 'ஈய வேண்டும்' என்னும் எண்ணத்தோடு வாரி வழங்கும் இசை வேள்வியைச் செய்வான்.

செழியனை 'அன்னாய்' என விளித்துப் புலவர் சொல்லத் தொடங்குகிறார். எங்களுக்கெல்லாம் தாயாக விளங்குபவனே! உன் முன்னே நின்று கொண்டு உன் பெருமைகளைப் பேசுவதால் என்ன பயன். சும்மா! ஒரு நினைப்பு. சொல்கிறேன் கேள். போரில் அப்பாவி மக்களை அழித்துவிட்டோமே என்று துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாய். இந்தத் துன்பக் கவலையை விட்டு விடுக. தொலைவிடங்களும் போற்றும் நின் புகழ் குன்றாமல் நிலைத்திருக்கட்டும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

1. சங்கத் தமிழ் பாடல் தொகுப்பான பத்துப்பாட்டு என்னும் தொகுப்பில் அடங்குவது _________________
2. செழியனை ____________ என விளித்துப் புலவர் சொல்லத் தொடங்குகிறார்.

**தொகுத்தறிவோம்**

நீங்கள் மரைக்காஞ்சி, பாண்டியர் பரம்பரை 01-23, மன்னர்க்கு மன்னன் 64-74 மற்றும் பாண்டியன் புகழ் 197-209 ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்-1**

1. இ) அகழி
2. இ) 782
3. ஈ) 354

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்-2**

1. மதுரைக் காஞ்சி.
2. அன்னாய்.

**பயிற்சி வினா மற்றும் விடை**

**1. மதுரைக் காஞ்சி – பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.**

- காஞ்சி என்றால் நிலையாமை என்று பொருள். “மதுரை” நகரைக் குறிக்கும்.
- மதுரை நகரின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றியக் கருத்துகளைக் கூறுவதாலும், இப்பெயர் பெற்றது.

**2. இடஞ்சுட்டி பொருள் விளக்குக.**

“மாகால் எடுத்த முந்நீர் போல” –

இடம் :

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சி என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

பொருள் :

மதுரையின் வளங்களையும், விழாக்களையும் பற்றிக் குறிப்பிடும் போது புலவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

விளக்கம்:

ஆறு போன்ற தெருக்களில் பல்வேறு பொருள்களை வாங்க வந்த பல்வேறு மொழி பேசும் மக்களின் ஒலியோடு விழாக்கள் பற்றிய அறிவிப்புகள் ஒலிக்கின்றன. “முரசறைவோரின் முழக்கம், பெருங்காற்று புகுந்த கடலொலி போல்” ஒலிக்கிறது. இதனையே “மாகால் எடுத்த முந்நீர் போல” என்றார் மாங்குடி மருதனார்.

**3. பொருத்துக:**

அ) புழை – 1. நீர்நிலை

ஆ) பனை – 2. ஓவியம்

இ) கயம் – 3. முரசு

ஈ) ஓவு – 4. சாளரம்

விடை **அ) 4 ஆ) 3 இ) 1 ஈ) 2**

4. குழாஅத்து – எவ்வகை அளபெடை?

அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

**இ) செய்யுளிசை அளபெடை** ஈ) இயற்கை அளபெடை

விடை **இ) செய்யுளிசை அளபெடை**

5. ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு உள்ள நகரம் எது?

அ) தஞ்சாவூர் ஆ) சென்னை

**இ) மதுரை** ஈ) முசிறி

விடை **இ) மதுரை**

6. மதுரைக்காஞ்சி பாடியவர் யார்?

அ) கபிலர் ஆ) பரணர்

இ) ஓரம்போகியார் **ஈ) மாங்குடி மருதனார்**

விடை **ஈ) மாங்குடி மருதனார்**

7. மாங்குடி மருதனார் எட்டுத் தொகையில் ………… பாடல்களைப் பாடியுள்ளார்.

அ) 11 ஆ) 12

**இ) 13** ஈ) 14

விடை **இ) பதின்மூன்று**

8. மதுரைக்காஞ்சி நூலின் பாட்டுடைத் தலைவர்…………….

**அ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்**

ஆ) கிள்ளிவளவன்

இ) வெற்றிவேற்செழியன்

ஈ) நெடுஞ்செழியன்

விடை **அ) தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்**

9. காஞ்சி என்ற சொல்லின் பொருள் …………… ஆகும்.

அ) உண்ணாமை ஆ) அழியாமை

இ) இல்லாமை **ஈ) நிலையாமை**

விடை **ஈ) நிலையாமை**

10. மாகால் – இலக்கணக் குறிப்பு யாது?

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) தொழிற்பெயர் **ஈ) உரிச்சொல் தொடர்**

விடை **ஈ) உரிச்சொல் தொடர்**

**11. குறுவினா மற்றும் விடை**

மாங்குடி மருதனார் – குறிப்பு வரைக.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

**12. சிறுவினா மற்றும் விடை**

மதுரைக்காஞ்சி குறிப்பு வரைக.

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமைத் தத்துவத்தைக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப் பெயர்.
- இந்நூல் 782 அடிகளை உடையது.
- இந்நூலை இயற்றியவர் மாங்குடி மருதனார் ஆவார்.
- இந்நூலின் பாட்டுடைத்தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்.

**13. நெடுவினா மற்றும் விடை**

மதுரை மாநகரின் அழகை மாங்குடி மருதனாரின் வழி விளக்குக.

முன்னுரை:

மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கில், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில்

நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன.

**மதுரையின் சிறப்புகள்:**

மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய் பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப் போல மக்கள் எப்போதும் வாயில்கள் வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக் கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் .பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற

அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

**முடிவுரை :**

காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**பாடலின் பொருள்:**

மதுரை மாநகரிலே ஆழமான, தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது.

பழமையானதும், வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. வாயில் கதவுகளில் நெய் பூசியதால் கரிய நிறமும், வலிமையும் உடையதாய் மாறிவிட்டன.

மேகங்கள் உலவும் மலைமுகடுகளைப் போல மாளிகைகள் ஓங்கி உயர்ந்து உள்ளன. இடைவிடாது பாய்ந்தோடும் வைகையைப் போல மக்கள் வாயில் வழி சென்று கொண்டே இருக்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை என பல்வேறு அங்கங்களை உடையதாய், வான்வரை ஓங்கிய, தென்றல் காற்று இசைத்து நுழையும் பல சாளரங்களைக் கொண்ட நல் இல்லங்கள் உள்ளன.

ஆறு போன்ற அகன்ற நீண்ட தெருக்களில் மலையெனக் குவிந்து கிடக்கும் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்ற நகரம்,

விழா பற்றிய முரசறைவோனின் முழக்கமானது. பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும்

இசை, நீர்நிலைகளைக் கைகளினால் குடைந்து விளையாடும் தன்மை போல எழுகின்றது.

இசையைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும், அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன என்று மதுரைக் காஞ்சி, மதுரையின் பெருமையைக் கூறுகிறது.

## தொகுதி-2: அறிமுகம்

**தொகுதி-2 இக்கால இலக்கியம்** நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை மற்றும் அப்துல் ரகுமான் அவர்களின் கவிதைகள், பாடல்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு – 5: பாரதியார் –** இப்பிரிவில் இக்கால இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ, மகாகவி பாரதியார், பாரததேசம், பாரததேசம், கவிதை மையப்பொருள், பாரததேசம் உணர்த்தும் செய்திகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

**பிரிவு - 6: பாரதிதாசன் –** இப்பிரிவில் பாரதிதாசன், பாரதிதாசனின் இன்பத் தமிழ் ஆகியவை விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

**பிரிவு - 7: தேசிக விநாயகம் பிள்ளை -** இப்பிரிவில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மரபுக்கவிதை, உடல் நலம் பேணல், பாடல் விளக்கம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.

**பிரிவு – 8: அப்துல் ரகுமான்** இப்பிரிவில், முனைவர் சை. அப்துல் ரகுமான் – கவிக்கோ, அப்துல் ரகுமான் - ஆலாபனை, கவிதையின் உள்ளடக்கம் ஆகியவை விரிவாக தரப்பட்டுள்ளது.

தொகுதி 2இல் உள்ள அனைத்து பிரிவுகளிலும் உங்கள் முன்னேற்றத்தைச் சோதிப்பதற்கான பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் அனைத்தையும் தாங்கள் தவறாமல் முடிக்க வேண்டும்.

மேலும், மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் இந்த மாதிரி வினாத்தாளுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து படிக்கவும்.

# பிரிவு-5

## பாரதியார்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

5.1. இக்கால இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ

5.2. மகாகவி பாரதியார்

5.3. பாரத தேசம்

5.3.1 பாரத தேசம் - கவிதை மையப்பொருள்

5.3.2 பாரததேசம் உணர்த்தும் செய்திகள்

உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பார்வை நூல்கள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

இப்பிரிவில் நீங்கள் இக்கால இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ, மகாகவி பாரதியார், பாரத தேசம், பாரத தேசம் கவிதை மையப்பொருள் மற்றும் பாரததேசம் உணர்த்தும் செய்திகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை தெரிந்து கொள்ளலாம்.

- இக்கால இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ
- மகாகவி பாரதியார், பாரத தேசம்
- பாரத தேசம் கவிதை மையப்பொருள், பாரததேசம் உணர்த்தும் செய்திகள்

5.1. **இக்கால இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ**

பாரதியாரும் அவருக்கு அடுத்து வந்தவர்களும் தொடங்கி இக்கால இலக்கியத்தின் எல்லையை அமைத்தல் பொருந்தும்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஐக்கூக் கவிதை எனப் பல வகைகளில் கவிதை சிறக்கும் காலகட்டம் இது.

கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபுக் கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபுக் கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியனவே யாகும். யாப்பு வடிவத்திற்கு அடிப்படை சந்தமும், தொடையும் ஆகும். சந்தம் என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது. அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது. மரபுக் கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் இவை படிக்கப்படுவனவாக மட்டுமே அமைந்து விட்டன. பாக்களின் ஓசை நயத்துக்குக் காரணமான சொற்களை அளவிட்டுச் சீர் எனக் குறிப்பிட்டனர்.

குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துகளால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியும், அடியால் பாடலும் முறையே அமைகின்றன. சீர்களுக்கு இடையிலான ஓசை தளை எனப்படுகின்றது. சீர், தளை, அடி ஆகியவற்றின் வேறுபாட்டால் பா வகைகள் அமைகின்றன.

சீர்களின் முதலெழுத்து ஒற்றுமை - மோனை; இரண்டாம் எழுத்து ஒற்றுமை - எதுகை; இறுதியில் அமையும் ஒலி ஒற்றுமை - இயைபு; சொல், பொருள் ஆகியவற்றில் காணும் முரண்பாடு - முரண்; ஓர் அடியின் எழுத்தோ அசையோ சீரோ அடுத்த அடியின் முதலாக அமைவது அந்தாதி - எனப் பாடல்கள் தொடுக்கப்படுவது தொடை எனப்படும். அடுத்த பாடத்தில் (மரபுக் கவிதை வடிவம்) இவை குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை, மரபுக்கவிதைக்கே உரியது.

**புதுக்கவிதை**

சீர், அடி, தளை போன்றவற்றின் வரையறைகள் அற்றது. அதற்காக ஒடித்தெழுதும் உரைநடையெல்லாம் புதுக்கவிதையாகி விடுவ தில்லை. கவிதை வீச்சு இருப்பதே புதுக்கவிதை எனப்படும்.

கி.பி. இருபதாம் நூற்றாண்டு தொடங்கிப் புதுக்கவிதை, தமிழிலக்கியத்தில் தோன்றிச் சிறக்கலானது. பாரதியார் எழுதிய வசன கவிதைகளே தமிழில் காணும் புதுக்கவிதை முறைக்கு முன்னோடியாக அமைந்தது.

யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் வகையில் உருவானதே புதுக்கவிதை. எதுகை, மோனை, சீர், தளை சிதையாமை முதலான காரணங்களால் மரபுக் கவிதையில் அடைமொழிகளாக வெற்றெனத் (பயனின்றி) தொடுத்தல் அமைவதாக உணரத் தொடங்கியமையின் மடைமாற்ற முயற்சி எனவும் இதனைக் கருதலாம். கவிதை எழுத இனிக் காரிகை (யாப்பருங்கலக் காரிகை) கற்க வேண்டியதில்லை என்ற தெம்புடன் கவியெழுத வந்த புதுக்கவிதையாளர்களும் இங்கு உண்டு. புதுக்கவிதை, உரை வீச்சாகக் கருதத்தக்கது. அது மரபுக்கவிதை, கவிதை வசனக் கலப்பு, வசனம் என எந்த வாகனத்திலும் பயணிக்க வல்லதாக அமைந்தது.

கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபுக் கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபுக் கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியன வேயாகும். யாப்பு வடிவத்திற்கு அடிப்படை சந்தமும் (Rhythm), தொடையும் (Rhyme) ஆகும். சந்தம் என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது. அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது. மரபுக் கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் இவை படிக்கப்படுவனவாக மட்டுமே அமைந்து விட்டன. பாக்களின் ஓசை நயத்துக்குக் காரணமான சொற்களை அளவிட்டுச் சீர் எனக் குறிப்பிட்டனர்.

குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துகளால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியும், அடியால் பாடலும் முறையே அமைகின்றன. சீர்களுக்கு இடையிலான ஓசை தளை எனப்படுகின்றது. சீர், தளை, அடி ஆகியவற்றின் வேறுபாட்டால் பா வகைகள் அமைகின்றன.

சீர்களின் முதலெழுத்து ஒற்றுமை - மோனை; இரண்டாம் எழுத்து ஒற்றுமை - எதுகை; இறுதியில் அமையும் ஒலி ஒற்றுமை - இயைபு; சொல், பொருள் ஆகியவற்றில் காணும் முரண்பாடு - முரண்; ஓர் அடியின் எழுத்தோ அசையோ சீரோ அடுத்த அடியின் முதலாக அமைவது அந்தாதி - எனப் பாடல்கள் தொடுக்கப்படுவது தொடை எனப்படும். அடுத்த

பாடத்தில் (மரபுக் கவிதை வடிவம்) இவை குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை, மரபுக்கவிதைக்கே உரியது.

கி.பி. இருபதாம் நூற்றாண்டு தொடங்கிப் புதுக்கவிதை, தமிழிலக்கியத்தில் தோன்றிச் சிறக்கலானது. பாரதியார் எழுதிய வசன கவிதைகளே தமிழில் காணும் புதுக்கவிதை முறைக்கு முன்னோடியாக அமைந்தது.

யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் வகையில் உருவானதே புதுக்கவிதை. எதுகை, மோனை, சீர், தளை சிதையாமை முதலான காரணங்களால் மரபுக் கவிதையில் அடைமொழிகளாக வெற்றெனத் (பயனின்றி) தொடுத்தல் அமைவதாக உணரத் தொடங்கியமையின் மடைமாற்ற முயற்சி எனவும் இதனைக் கருதலாம். கவிதை எழுத இனிக் காரிகை (யாப்பருங்கலக் காரிகை) கற்க வேண்டியதில்லை என்ற தெம்புடன் கவியெழுத வந்த புதுக்கவிதையாளர்களும் இங்கு உண்டு. புதுக்கவிதை, உரை வீச்சாகக் கருதத்தக்கது. அது மரபுக்கவிதை, கவிதை வசனக் கலப்பு, வசனம் என எந்த வாகனத்திலும் பயணிக்க வல்லதாக அமைந்தது.

**துளிப்பா (ஐக்கூ)**

ஜப்பானிய மொழியில் தோன்றிய ஐக்கூ, 5-7-5 என்னும் அசையமைப்புடையதாக, ஜென் (Zen) தத்துவத்தை விளக்கு வதற்கும் இயற்கையைப் போற்றுவதற்கும் பயன்பட்டது. தமிழிலக்கியத்தில் இவ்வடிவத்தில் அமைந்த கவிதைகள் சமூக விமர்சனத்திற்கும் சமூகக் கேடுகளைச் சாடுவதற்கும் பயன்படலானது. துளிப்பாவானது படிமம், குறியீடு, தொன்மம், முரண், அங்கதம், விடுகதை, பழமொழி, வினாவிடை, உவமை, உருவகம் எனப் பல்வேறு உத்திமுறைகளில் அமைகின்றது. மூன்று வரிகளில் நறுக்குத் தெறித்தாற்போல் அமையும் இயல்புடையது.

## 5.2. மகாகவி பாரதியார்

பாரதியார் 1882ஆம் ஆண்டு, டிசம்பர் 11ஆம் தேதியன்று, தமிழ் நாட்டின். திருநெல்வேலிச் சீமையில் உள்ள எட்டயபுரம் என்ற ஊரில், சின்னசாமி ஐயர் மற்றும் இலக்குமி அம்மையாருக்கு மகனாகப் அவருக்கு சுப்பிரமணியம் என்ற பெயரைச் சூட்டினர். பிறந்தார். பெற்றோர் அவர்,

தனது 11ஆம் வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார். அவரின் கவிதை எழுதும் திறமையைக் கண்டு வியந்த எட்டயபுரத்தின் மன்னர், "**பாரதி**" என்னும் பட்டத்தை வழங்கினார். அன்றிலிருந்து பாரதி என்று அழைக்கப்பட்டார்.

"முப்பது கோடி முகமுடையாள் - உயிர் மொய்ப்புற வொன்றுடையாள் - இவள் செப்பு மொழி பதினெட்டுடையாள் - எனிற் சிந்தனை ஒன்றுடையாள்" என்ற கவிதையின் மூலமாகப் இந்திய நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்திவர், அதனால், தேசியக் கவிஞர் என்று அழைக்கப்டுகின்றார்.

சமஸ்கிருதம், இந்தி, மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம், வங்காளம் முதலான மொழிகளில் புலமைப் பெற்றவர். இருப்பினும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடியதன் மூலம், தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்தவர். பாரதியார் ஏராளமான கவிதைப் படைப்புகளை இயற்றியுள்ளார். குயில் பாட்டு.கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை முப்பெரும் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. சுதேசமித்திரன் பத்திரிக்கையின் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும், இந்தியா ஆசிரியாகவும் பணியாற்றினார். அதனால், சிறந்த கட்டுரை யாசிரியாகவும் திகழ்ந்துள்ளார். தமிழ் நாளேட்டில், கருத்துப் படத்தை அறிமுகம் செய்தவர் என்ற சிறப்புக்குரியவர்.

மகாகவி, தேசியக்கவி, மக்கள் கவிஞர், வரகவி தமிழ்க்கவி, விடுதலைக்கவி, சக்திதாசன், புதுக்கவிதையின் முன்னோடி முதலானச் சிறப்புப் பெயர்களால் பாரதி போற்றப்படுகின்றார். பாரத தேசம் என்னும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள கவிதை நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

---

1. சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை _________ கவிதைக்கே உரியது.
2. எட்டயபுரத்தின் மன்னர் _____________ என்னும் பட்டத்தை வழங்கினார்.
3. பாரதியார் கவிதைகளில் ______________ என்னும் கவிதை பாரத நாட்டின் வளங்களையும் பாரத தேசத்தின் எதிர்கால வளர்ச்சியையும் சுட்டுகின்றது.

## 5.3. பாரத தேசம்

**ராகம்: புன்னாக வராளி**

**பல்லவி**

*பாரததேசம் என்று பெயர் சொல்லுவார் மிடி*
*பயம் கொல்லுவார் துயர் பகை வெல்லுவார்* 1

**சரணங்கள்**

*வெள்ளி பனி மலையின் மீது உலவுவோம் அடி*
*மேலை கடல் முழுதும் கப்பல் விடுவோம்*
*பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம் எங்கள்*

*பாரததேசம் என்று தோள்கொட்டுவோம்* 2
*சிங்கள தீவினுக்கு ஓர் பாலம் அமைப்போம்*
*சேதுவை மேடு உறுத்தி வீதி சமைப்போம்*
*வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்* 3

*வெட்டு கனிகள் செய்து தங்கம் முதலாம்*
*வேறு பல பொருளும் குடைந்து எடுப்போம்*
*எட்டு திசைகளிலும் சென்று இவை விற்றே*
*எண்ணும் பொருள் அனைத்தும் கொண்டு வருவோம்* 4

*முத்து குளிப்பது ஒரு தென் கடலிலே*
*மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே*
*நத்தி நமக்கு இனிய பொருள் கொணர்ந்து*
*நம் அருள் வேண்டுவது மேற்கரையிலே* 5

*சிந்து நதியின் மிசை நிலவினிலே*
*சேர நல் நாட்டு இளம் பெண்கள் உடனே*
*சுந்தர தெலுங்கினில் பாட்டிசைத்து*
*தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்* 6

*கங்கை நதிப்புறத்து கோதுமை பண்டம்*
*காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்*
*சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு*
*சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்* 7
*காசி நகர் புலவர் பேசும் உரைதான்*
*காஞ்சியில் கேட்பதற்கு ஓர் கருவி செய்வோம்*
*ராசபுத்தானத்து வீரர் தமக்கு*

*நல் இயல் கன்னடத்து தங்கம் அளிப்போம் 8*
*பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்*
*பண்ணி மலைகள் என வீதி குவிப்போம்*
*கட்டி திரவியங்கள் கொண்டு வருவார்*
*காசினி வணிகருக்கு அவை கொடுப்போம் 9*

*ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்*
*ஆலைகள் வைப்போம் கல்வி சாலைகள் வைப்போம்*
*ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்*
*உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம் 10*

*குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்*
*கோணிகள் செய்வோம் இரும்பு ஆணிகள் செய்வோம்*
*நடையும் பறப்பும் உணர் வண்டிகள் செய்வோம்*
*ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம் 11*

*மந்திரம் கற்போம் வினை தந்திரம் கற்போம்*
*வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்*
*சந்திர மண்டலத்து இயல் கண்டு தெளிவோம்*
*சந்தி தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம் 12*

*காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்*
*கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்*
*ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்*
*உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம் 13*

*சாதி இரண்டு ஒழிய வேறிலை என்றே*
*தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்*
*நீதி நெறி நினின்று பிறர்க்கு உதவும்*
*நேர்மையர் மேலவர் கீழவர் மற்றோர்* 14

### 5.3.1. பாரத தேசம் - கவிதை மையப்பொருள்

பாரதியார் கவிதைகளில் 'பாரத தேசம்' என்னும் கவிதை பாரத நாட்டின் வளங்களையும் பாரத தேசத்தின் எதிர்கால வளர்ச்சியையும் சுட்டுகின்றது. இக்கவிதை பாரதியாரின் கனவுமாகும்.

தேசம் உயரவேண்டும். மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எல்லா வளங்களையும் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதே இதன் மையக் கருத்தாகும்.

### 5.3.2. பாரததேசம் உணர்த்தும் செய்திகள்

அண்டை நாட்டுடன் சுமூகமான உறவுடன் நம் நாட்டிற்குள்ளேயும் ஒரு மாநிலப்பொருள் மற்றொரு பகுதியைச் சென்று சேர வேண்டும் என்றும். நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அனைத்தையும் உலக வணிகர்கள் காத்திருந்து வாங்கிச் செல்ல வேண்டும் என்பதிலிருந்து வணிகத்திலும் தொழில்நிலையிலும் உயர வேண்டும் என்றும் கலையிலும் கல்வியிலும் உயர்ந்த நாடாகவும், உழவு முதல் அனைத்துத் தொழிலையும் உவப்புடன் செய்யும் தேசமாகவும் சாதி பேதம் மறைந்து உயர்ந்த ஒழுக்கத்தோடு வாழும் மக்களைக் கொண்டநாடாகவும் நம் பாரத நாடு திகழும் என்று பாரதி நம்பிக்கையோடு இக் கவிதையினைப் புனைந்துள்ளார்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

---

1. 'பாரதியார் ஒரு அவதார புருஷர், இவர் நுலைத் தமிழர் வேதமாகக் கொள்ள வேண்டும்" என்று பாரதியாரைப் புகழ்ந்தவர் யார்?
2. பாரதியின் புதுக்கவிதையின் முன்னோடியாக திகழ்ந்தவர் யார்?
3. 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"-என்று பாடியவர் யார்?

---

**தொகுத்தறிவோம்**

---

இந்தப் பகுதியில் நீங்கள் இக்கால இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ, மகாகவி பாரதியார், பாரத தேசம், பாரத தேசம் கவிதை மையப்பொருள் மற்றும் பாரததேசம் உணர்த்தும் செய்திகள் ஆகியவற்றை தெரிந்துகொண்டீர்கள்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிதறியும் பயிற்சிக்கான விடைகள் -1**

---

1. மரபுக்
2. பாரதி
3. பாரத தேசம்

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

---

1. பரலி.சு.நெல்லையப்பர்
2. வால்ட் விட்மின்
3. பாரதியார்

**பயிற்சி வினா மற்றும் விடை**

1. எந்த ஆண்டு பாரதியார் செல்லம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார்?

   விடை : **1897**

2. பகவத் கீதையை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

   விடை : **பாரதியார்**

3. கவிதையில் சுயசரிதம் எழுதிய முதல் கவிஞர் யார்?

   விடை : **பாரதியார்**

4. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்"-என்று பாடியவர் யார்?

   விடை : **பாரதியார்**

5. 'வாழிய பாரத மணித்திரு நாடு" என்று பாடியவர் யார்?

   விடை : **பாரதியார்**

6. தன்னை 'செல்லிதாசன்" என அழைத்துக்கொண்டவர் யார்?

   விடை : **பாரதியார்**

7. பாரதியார் பிறந்த ஊர்?

   விடை : **திருநெல்வேலி மாவட்டம், எட்டையபுரம்**

8. பொன் வால் நரி, ஆறில் ஒரு பங்கு ஆகிய படைப்புகளின் ஆசிரியர்?

   விடை : **பாரதியார்**

9. பாரதியார் இயற்றிய பாஞ்சாலி சபதம் எத்தனை பாடல்களை உடையது?

   விடை : **412**

10. புதுக்கவிதைக்கு முன்னோடி யார்?

    விடை : **பாரதியார்**.

11. குறுங்கவிதையின் வகைகள் யாவை?

    விடை : **துளிப்பா (ஐக்கூ),**

    **நகைத் துளிப்பா (சென்ரியு),**

    **இயைபுத் துளிப்பா (லிமரைக்கூ).**

12. துளிப்பாவிற்கான ஜப்பானிய இலக்கியப் பெயர் யாது?

விடை : **ஐக்கூ (ஹைக்கூ).**

13. விடுகதை அமைப்பில் அமையும் பா எது?

விடை : **துளிப்பா (ஐக்கூ).**

14. இயைபுத் துளிப்பா எவ்வாறு அமையும்?

விடை : **அங்கதத்தோடு மூன்றடிகளில் அமையும். முதலடியும் மூன்றாமடியும் ஈற்றுச் சீர்களில் இயைபு பெறும். இரண்டாமடி பிறவற்றினும் நீண்டிருத்தல் சிறப்பு.**

# பிரிவு-6

## பாரதிதாசன்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

6.1. பாரதிதாசன்

6.2. பாரதிதாசனின் இன்பத் தமிழ்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பார்வை நூல்கள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

இந்தப் பிரிவில் பாரதிதாசன் மற்றும் பாரதிதாசன் இன்பத் தமிழ் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை தெரிந்து கொள்ளலாம்.

- பாரதிதாசன் மற்றும் பாரதிதாசன் இன்பத் தமிழ்

**6.1. பாரதிதாசன்**

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், புதுச்சேரியில், ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி, 1891ஆம் ஆண்டில், கனகசபை மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். பாரதிதாசன் அவர்களின் இயற்பெயர் சுப்புரத்தினம். அவரது தந்தையின் பெயரின் முதல் பாதியைத் தன்னுடைய பெயரில் இணைத்து, 'கனக சுப்புரத்தினம்' என்று மாற்றிக் கொண்டார்.

'தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்" என்ற தேன் சுவைசொட்டும் பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர் பெரும் புகழ் படைத்த பாவலரான பாரதிதாசன் அவர்கள், 'புரட்சிக்கவி', 'பாவேந்தர்' என்றும் அழைக்கப்பட்டார். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதாந்தங்களை முறையாகக் கற்றுத்

தேர்ந்தவர், கவிஞர், தமிழாசிரியர். அரசியல்வாதி திரைக் கதாசிரியர். எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர்.

பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கவிஞன் என்று, தன்னை அறிவித்துக் கொண்டவர் பாரதிதாசன். பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது, அவருடன் சேர்ந்து பணியாற்றினார். பாரதியிட மிருந்து பாராட்டுக்களைப் பெற்றதோடு மட்டுமல்லாமல், அவரது நட்புக்கும் உரியவர் ஆனார். அதனால், கனகசுப்புரத்தினம் என்னும் தன் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டார்.

எண்ணற்றப் படைப்புகளை அவர் தமிழ்மொழிக்கு வழங்கியுள்ளார். சாதி மறுப்பு, கடவுள் எதிர்ப்பு போன்ற மூடநம்பிக்கைகளை மக்களின் மனதிலிருந்து அழிக்கும் விதமாகப் பல்வேறு படைப்புகளை வெளியிட்டார். அவற்றுள் 'பாண்டியன் பரிசு 'எதிர்பாராத முத்தம்' 'குறிஞ்சித்திட்டு', 'குடும்ப விளக்கு', 'இருண்ட வீடு', அழகின் சிரிப்பு', 'தமிழ் இயக்கம், இசையமுது' 'குயில்', 'தமிழச்சியின் கத்தி', பாண்டியன் பரிசு', போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பாரதிதாசனுக்கு "புரட்சிக் கவிஞர்" என்னும் பட்டத்தைப் பெரியார் வழங்கிச் சிறப்புத்தார். அறிஞர் அண்ணா, 'புரட்சிக்கவி' என்ற பட்டத்தை வழங்கினர். அவரின் நினைவைப் போற்றும் விதமாகத் தமிழ்நாடு அரசால், ஆண்டுதோறும் ஒரு தமிழ் கவிஞருக்குப் 'பாரதிதாசன் விருதினை வழங்கி வருகின்றது. மேலும், 'பாரதிதாசன் பல்கலைக்கழகம்' என்ற பெயரில் ஒரு மாநில பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது.

1946இல் அவரது 'அமைதி-ஊமை' என்ற நாடகத்திற்காக அவர் தங்கக் கிளி பரிசு வென்றார். 1970இல் அவரின் மரணத்திற்குப் பின், 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக அவருக்கு 'சாகித்ய அகாடமி' விருது வழங்கப்பட்டது. இது என்னும் இலக்கியத்திற்காக இந்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருதாகும். 2001இல் அக்டோபர் மாதம் 9ஆம் தேதி, சென்னை தபால் துறை மூலமாக ஒரு நினைவு அஞ்சல்தலை அவரது பெயரில் வெளியிடப்பட்டது.

எழுத்தாளர் திரைப்படக் கதாசிரியர், கவிஞர், அரசியல்வாதி என்று பன்முகம் கொண்ட பாரதிதாசன் அவர்கள், ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி, 1964ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

“தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்” என்ற தேன் சுவைசொட்டும் பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர், ‘பாவேந்தர் பாரதிதாசன்’ அவர்கள். பெரும் புகழ் படைத்த பாவலரான பாரதிதாசன் அவர்கள், ‘புரட்சிக்கவி’ என்றும், ‘பாவேந்தர்’ என்றும் அழைக்கப்பட்டார். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதாந்தங்களை முறையாகக் கற்று, தமிழ் மொழிக்கு அருட்தொண்டாற்றியவர், பாரதிதாசன் அவர்கள். தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக் கதாசிரியர், எழுத்தாளர், கவிஞர், என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர் என்று சொன்னால் அது மிகையாகாது. தனது படைப்பு களுக்காக ‘சாஹித்ய அகாடமி விருது’ பெற்றவர் பாவேந்தர் பாரதிதாசன்.

**பாரதியார் மீது பற்று**

தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவராக இருந்த பாரதிதாசன் அவர்கள், அவரது மானசீக குருவாக சுப்ரமணிய பாரதியாரைக் கருதினார். அவரது பாடலைத் தனது நண்பனின் திருமண நிகழ்வின் போது பாடிய அவர், பாரதியாரை நேரில் சந்திக்கவும் செய்தார். பாரதியிடமிருந்து பாராட்டுக்கள் பெற்றதோடு மட்டுமல்லாமல், அவரது நட்பும் கிடைத்தது அவருக்கு. அன்று முதல், அவர் தனது இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்பதை ‘பாரதிதாசன்’ என்று மாற்றிக் கொண்டார்.

**பாரதிதாசன் படைப்புகள்**

பாரதிதாசனின் எண்ணற்ற படைப்புகளை தமிழ்மொழிக்கு வழங்கி இருந்தாலும், சாதி மறுப்பு, கடவுள் எதிர்ப்பு போன்ற மூடநம்பிக்கைகளை மக்களின் மனதிலிருந்து அழிக்கும் விதமாகப் பல்வேறு படைப்புகளை வெளியிட்டார். அவரது மிகச்சிறந்த படைப்புகளில் சில:

‘பாண்டியன் பரிசு’, ‘எதிர்பாராத முத்தம்’, ‘குறிஞ்சித்திட்டு’, ‘குடும்ப விளக்கு’, ‘இருண்ட வீடு’, ‘அழகின் சிரிப்பு’, ‘தமிழ் இயக்கம்’, ‘இசையமுது’, ‘குயில்’, ‘தமிழச்சியின் கத்தி’, ‘பாண்டியன் பரிசு’, ‘பாரதிதாசன் ஆத்திசூடி’, ‘பெண்கள் விடுதலை’, ‘பிசிராந்தையார்’, ‘மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது’, ‘முல்லைக் காடு’, ‘கலை மன்றம்’, ‘விடுதலை வேட்கை’, மற்றும் பல.

**விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்**

பாரதிதாசன் அவர்களுக்கு பெரியார், “புரட்சி கவிஞர்” என்ற பட்டமும், அறிஞர் அண்ணா, ‘புரட்சிக்கவி’ என்ற பட்டமும் வழங்கினர். தமிழ்நாடு

மாநில அரசாங்கம், அவரது நினைவாக ஆண்டுதோறும் ஒரு தமிழ் கவிஞருக்கு ‘பாரதிதாசன் விருதினை’ வழங்கி வருகிறது மற்றும் ‘பாரதிதாசன் பல்கலைக்கழகம்’ என்ற பெயரில் ஒரு மாநில பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது.

1946 – அவரது “அமைதி-ஊமை” என்ற நாடகத்திற்காக அவர் ‘தங்கக் கிளி பரிசு’ வென்றார்.

1970 – அவரது மரணத்திற்குப் பின், அவரது ‘பிசிராந்தையார்’ நாடகத்திற்காக அவருக்கு ‘சாஹித்ய அகாடமி விருது’ வழங்கப்பட்டது

2001 – அக்டோபர் மாதம் 9ஆம் தேதி, சென்னை தபால் துறை மூலமாக ஒரு நினைவு அஞ்சல்தலை அவரது பெயரில் வெளியிடப்பட்டது.

**ஆண்டு வரிசையில்…**

1891: புதுவையில், ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி, 1891 ஆம் ஆண்டில் கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

1919: காரைக்காலைச் சேர்ந்த அரசினர் கல்லூரித் தமிழாசிரியாராகப் பதவியேற்றார்.

1920: பழநி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

1954: புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1960: சட்டமன்ற தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

1964: ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி, 1964 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

1970: அவரது மரணத்திற்குப் பின், அவரது ‘பிசிராந்தையார்’ நாடகத்திற்காக அவருக்கு ‘சாஹித்ய அகாடமி விருது’ வழங்கப்பட்டது.

**பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்பு**

இயற் பெயர் = சுப்புரத்தினம்

பெற்றோர் = கனகசபை, இலட்சுமி அம்மையார்

மனைவி = பழநி

ஊர் = புதுச்சேரி

காலம் = 29.04.1891-21.04.1964

**பாரதிதாசன் சிறப்புப் பெயர்கள்**

- புரட்சிக்கவி (அறிஞர் அண்ணா)
- புரட்சிக்கவிஞர் (பெரியார்)
- பாவேந்தர்
- புதுவைக்குயில்
- பகுத்தறிவு கவிஞர்
- தமிழ்நாட்டு இரசுல் கம்சதேவ்
- இயற்கை கவிஞர்

**புனைப் பெயர்கள்**

பாரதிதாசன் பல்வேறு புனைப் பெயர்களில் தனது கவிதைகளை எழுதி வெளியிட்டுள்ளார். அவையாவன,

- கண்டழுதுவோன்
- கிறுக்கன்
- கிண்டல்காரன்
- பாரதிதாசன்

**பாரதிதாசன் இயற்றிய நூல்கள்**

- இசை அமுது
- பாண்டியன் பரிசு
- எதிர்பாராத முத்தம்
- சேரதாண்டவம்
- அழகின் சிரிப்பு
- புரட்சிக்கவி
- குடும்ப விளக்கு
- இருண்ட வீடு
- குறிஞ்சித்திட்டு
- கண்ணகி புரட்சிக்காப்பியம்
- மணிமேகலை வெண்பா
- காதல் நினைவுகள்

- கழைக்கூத்தியின் காதல்
- தமிழச்சியின் கத்தி
- இளைஞர் இலக்கியம்
- சுப்பிரமணியர் துதியமுது
- சுதந்திரம்
- தமிழியக்கம் (ஒரே இரவில் எழுதியது)

**உரைநடை நூல்கள்**

- திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்
- சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

**பாரதிதாசன் நாடகங்கள்**

- சௌமியன்
- நல்ல தீர்ப்பு
- பிசிராந்தையார் (சாகித்ய அகாடமி விருது பெற்றது)
- சக்திமுற்றப் புலவர்
- அமைதி ஊமை (தங்கக் கிளி பரிசு)
- இரணியன் அல்லது இணையற்ற வீரன்
- சௌமியன்
- படித்த பெண்கள்
- இன்பக்கடல்
- நல்லதீர்ப்பு
- அம்மைச்சி
- ரஸ்புடின்
- அமைதி

**பாரதிதாசன் நடத்திய இதழ்கள்**

- குயில்
- முல்லை (முதலில் தொடங்கிய இதழ்)

**பாரதிதாசன் பற்றிய தகவல்**

- பதினாறு வயதில் புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்
- பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாக தம்மை தாசன் ஆக ஆக்கிக்கொண்டார்
- அகவல், எண் சீர்விருத்தம், அறுசீர் விருத்தம் ஆகியவை இவருடைய பாடல்களில் மிகுதியாகப் பயன்படுத்தி உள்ளார்
- பாரதியின் வேண்டுகோளுக்கு இணங்க இவர் பாடிய "எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற பாடலைக் கேட்ட அவர், அக்கவிதையைத் தாமே, "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது" எனச் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பினார்
- பிரபல எழுத்தாளரும், திரைப்படக் கதாசிரியரும், பெரும் கவிஞரான இவர், அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக, 1954-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்
- தந்தை பெரியாரின் விரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாகக் கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள் மூலம் பதிவு செய்தார்
- தொடக்க கல்வி கற்றது = திருப்புளி சாமியாரிடம்
- இவர் தமிழ் பயின்றது = புலவர் பு.அ.பெரியசாமியிடம்
- இவரின் கவித்திறன் கண்டு "நாவலர் சோமசுந்தர பாரதியார்" தலைமையில் அறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு "புரட்சிக்கவி" என்ற பட்டத்தையும் 25000 ரூபாய் நன்கொடையும் அளித்தார்
- வ.ரா.வின் அழைப்பின் பேரில் "இராமனுஜர்" என்னும் படத்திற்கு திரைப்படப்பாடல் எழுதினார்
- நகைச்சுவை உணர்வு மிக்கவர். நன்கு பாடுவார். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவார். சிலம்பம், குத்துச்சண்டை, குஸ்தி பயின்றார். வீடு என்று இருந்தால் கோழி, புறா, பசு மூன்றும் இருக்க வேண்டும் என்பார். அவற்றை தானும் வளர்த்துவந்தார்.

**பாரதிதாசன் சிறப்பு**

- புதுமைபித்தன் = அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன்
- கு.ப.இராசகோபாலன் = பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி
- சிதம்பரநாத செட்டியார் = அவர் தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகி விடுவான்
- வி.ஆர்.எம்.செட்டியார் = புரட்சிக்கவி அவர், புதிய கவிதையை சிருஷ்டி செய்கிறார்; இயற்கையாகவே செய்கிறார்; தமிழ் மொழியில் புதியவளைவும், நெளிவும் மெருகும் ஏற்றுகிறார்; அவர் இசை வெறியில் கவிதைக் கனலுடன் பாடும்போது நாம் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் சலிப்பின்றிக் கேட்டு இன்புறலாம். இது உண்மை! மறுக்க முடியாத உண்மை
- திரு.வி.க = குயிலின் பாடலும் மயிலின் ஆடலும் வண்டின் யாழும் அருவியின் முழவும் இனிக்கும், பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்
- சுரதா = தடையேதும் இல்லை இவர் நடையில், வாழைத் தண்டுக்கோ தடுக்கின்ற கனுக்களுண்டு
- 1990ஆம் ஆண்டு தமிழக அரசு இவரின் நூல்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கியது
- 2001 – அக்டோபர் மாதம் 9ஆம் தேதி, சென்னை தபால் துறை மூலமாக ஒரு நினைவு அஞ்சல்தலை அவரது பெயரில் வெளியிடப்பட்டது.

பாரதிதாசன் அவர்களின் இன்பத் தமிழ் என்னும் தலைப்பில் அமைந்த கவிதை நமக்குப் பாடமாக இடம்பெற்றுள்ளது.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

---

1. பாரதிதாசன் அவர்கள் ___________, ____________ என்றும் அழைக்கப்பட்டார்.
2. பாரதிதாசன் தமிழை ________________ ஒப்பிடுகிறார்.
3. _________________ நாடகத்திற்காக அவருக்கு 'சாகித்ய அகாடமி' விருது வழங்கப்பட்டது

## 6. 2 பாரதிதாசனின் இன்பத் தமிழ்

தமிழ் மக்களுக்கு, இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம், நல்ல தொண்டு; எனத் தமிழுக்குச் செய்யும் தொண்டையே தம் வாழ்நாள் தொண்டாகச் செய்தவர்.

தமிழ் இன்பத் தமிழ், எங்கள் உயிருக்கு நேர் எனத் தமிழை உயிரெனக் கருதிப் போற்றியவர்.

**தமிழுக்கும் அமுதென்றுபேர்! – அந்தத்**
**தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**
**தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!**
**தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்**
**தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!**
**தமிழுக்கு மதுவென்று பேர்! – இன்பத்**
**தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்!**

**தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! இன்பத்**
**தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்!**
**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!**
**தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்**
**தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!**
**தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! – இன்பத்**
**தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!**

(பாரதிதாசன் கவிதைகள்)

பாரதிதாசன் தமிழை அமுதத்தோடு ஒப்பிடுகிறார். அதாவது, அமுதம் எப்படி இனிமையாக இருக்குமோ அதைப்போலத் தமிழ் இனிமையான மொழி என்கிறார். மேலும் தமிழை மனித உயிருக்கு நிகராக ஒப்புமைப் படுத்திக் கூறுகின்றார். சமூகம் சிறப்புற்று வளர்வதற்குத் தமிழ்மொழி நீராகப் பயன்படும் என்றும் தமிழ் நறுமணம் உடையது என்றும் கூறுகின்றார்.

‘உண்டவர்களை மயக்கம் கொள்ளச் செய்யும் மதுவாகத் தமிழை உவமிக்கின்றார். மனிதர்கள் இளமையோடு பொலிவாக இருக்கப் பால் எப்படிப் பயன்படுகிறதோ, அத்தகைய பால் போன்ற சுவையும் வளமும் நிறைந்தது தமிழ். இந்தத் தமிழ் புலவர்களின் புலமையை அறிவிக்கும்

கூர்வேலாகும். தமிழ் எங்கள் உயர்வுக்கு வானமாகும். இன்பத் தமிழ் மொழியே எங்கள் அறிவுக்குத் தோளாகும். இன்பத் தமிழ் எங்கள் கவிதையில் கவித்துவத்திற்கு வாளாகும். எங்கள் பிறவியின் தாயாகும். அப்படிப்பட்ட இன்பத் தமிழ் எங்கள் வாழ்க்கையை வளமுடையதாக மாற்றக் கூடிய தீ ஆகும்'.

இப்பாடல் உவமைச் சிறப்பு மிக்கதாகும். தமிழுக்கு அமுதையும், நிலவையும், நறுமணத்தையும் மதுவையும் உவமிக்கின்றார். தமிழின் சுவையைத் தேனின் சுவையோடு ஒப்பிடுகிறார். தமிழை ஓர் அழகிய பூக்காடு என்றும் தன்னை அதில் வட்டமிடும் ஒரு தும்பியாகவும் உருவகித்துக் கூறுகின்றார்.

**தமிழே! நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி**

**(பாரதிதாசன் கவிதைகள்)**

**தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாதல் இல்லை.தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டா ?**

என்று தமிழ்த் தொண்டர்க்கும், தமிழ் கற்றார்க்கும் நிலைப்பேறு உண்டு என்கிறார். தமிழையும், பாரதியையும் புகழ்ந்து உரைக்கின்றார். தமிழை என்னுயிர் என்பேன் என்று தமிழை உயிரோடு இணைத்துப் பாடிய மாபெரும் கவிஞர் பாரதிதாசன்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

---

1. பாரதியாரின் கவிதைகள் மேல் கொண்ட பற்றின் காரணமாகத் தம்பெயரை மாற்றிக் கொண்ட கவிஞர் _____________

   அ) தேசிய விநாயகம் பிள்ளை ஆ) சுரதா

   இ) வள்ளலார் ஈ) பாரதிதாசன்

2. தமிழக்கு அமுதென்று பேர் எனப் பாடியவர் _____________

   அ) பாரதியார் ஆ) ஔவையார்

   இ) பாரதிதாசன் ஈ) வள்ளலார்

3. தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய _____________ போன்றது

   அ) அம்பு ஆ) வானம்

   இ) வாள் ஈ) வேல்

**தொகுத்தறிவோம்**

இப் பிரிவில் பாரதிதாசன் மற்றும் பாதிதாசன் இன்பத் தமிழ் ஆகியவற்றைப் பற்றி தெரிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. புரட்சிக்கவி, பாவேந்தர்
2. அமுதத்தோடு
3. ‘பிசிராந்தையார்’

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

1. ஈ) பாரதிதாசன்
2. இ) பாரதிதாசன்
3. ஆ) வானம்

**பயிற்சி வினா மற்றும் விடை**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. _________ அமுதென்று பேர்

   அ) தமிழிற்கு ஆ) தமிழுக்கு

   இ) தமிழுக்கும் ஈ) தமிழுக்கே

   விடை : தமிழுக்கும்

2. தமிழ் நமது இளமைக்குக் காரணமான ________ போன்றது

   அ) தேன் ஆ) நெய்

   இ) நெல் ஈ) பால்

   விடை : பால்

3. தமிழ்மொழி, புலவர்களுக்கு _________ போன்றது

   அ) அம்பு ஆ) கேடயம்

   இ) வாள் ஈ) வேல்

   விடை : வேல்

4. நமது சோர்வை நீக்குவதில் தமிழ் ___________ போன்றது

   அ) சோறு ஆ) தேன்

   இ) நீர் ஈ) பால்

   விடை : தேன்

5. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதிமிக்க __________ ஆகும்.

அ) அணிகலம் ஆ) கவசம்

இ) வாள் ஈ) வேல்

விடை : வாள்

6. சுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் ________

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) இராமலிங்க அடிகளார் ஈ) திருவள்ளுவர்

விடை : பாரதிதாசன்

7. புரட்சிக்கவி, பாவேந்தர் என்று போற்றப்படுபவர் __________

அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன்

இ) அழ.வள்ளியப்பா ஈ) கவிமணி

விடை : பாரதிதாசன்

8. தமிழ் எங்கள் அறிவுக்கு துணை கொடுக்கும் ____________ போன்றது

அ) தேன் ஆ) தோள்

இ) நெல் ஈ) பால்

விடை : தோள்

**பொருத்துக**

1. வாழ்வுக்கு - அ. வாள்
2. உயர்வுக்கு - ஆ. ஊர்
3. கவிதைக்கு - இ. வான்

**விடை : 1 - ஆ, 2 - இ, 3 - அ**

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ________ தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன.

விடை : தாய்மொழியைத்

2. ________ தமிழை பலவிதங்களில் போற்றுகின்றார்

விடை : பாரதிதாசன்

3. எங்கள் வாழ்விற்காக உருவாக்கப்பட்ட ஊர் ________

விடை : தமிழ்

4. ________ எங்கள் சமூக வளர்ச்சிக்கு ஊர் ஆகும்

விடை : இன்பத்தமிழ்

**சேர்த்து எழுதுக**

அமுது + என்று = அமுதென்று

இன்பம் + தமிழ் = இன்பத்தமிழ்

மணம் + என்று = மணமென்று

**பிரித்து எழுதுக**

நிலவென்று = நிலவு + என்று

புகழ்மிக்க = புகழ் + மிக்க

சுடர்தந்த = சுடர் +தந்த

**குறுவினா மற்றும் விடை**

1. பாரதிதாசன் – பெயர்க்காரணம் கூறுக

   விடை : பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

2. பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் புரட்சிகரமான கருத்துகள் யாவை?

   விடை : பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு

3. பாரதிதாசன் எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறார்?

   விடை : புரட்சிக்கவி, பாவேந்தர்

**சிறுவினா மற்றும் விடை**

பாரதிதாசன் – சிறுகுறிப்பு வரைக

- பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதிதாசனின் பெற்றோர் கனகசபை-இலக்குமி அம்மையார். பிறப்பு – 29.04.1891 . பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.
- தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார் எனவே, இவர் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார். இவர் பாவேந்தர் என்றும் சிறப்பிக்கப்படுகிறார்.
- குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு அழகின் சிரிப்பு முதலியன இவரின் படைப்புகளாகும்.

# பிரிவு-7

## தேசிக விநாயகம் பிள்ளை

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

7.1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

7.2. மரபுக்கவிதை - உடல் நலம் பேணல்

7.3. பாடல் விளக்கம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பார்வை நூல்கள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

இப்பிரிவில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மரபுக்கவிதை - உடல் நலம் பேணல் மற்றும் பாடல் விளக்கம் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை தெரிந்து கொள்ளலாம்.

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
- மரபுக்கவிதை - உடல் நலம் பேணல், பாடல் விளக்கம்

தமிழ் மொழித் திறத்தினை மாணவர்களிடையே எல்லா நிலைகளிலும் மேம்படுத்தி வளர்த்தல். செம்மொழித் தமிழின் இலக்கிய இலக்கண வளமைகளை அறிமுகம் செய்தல்; நல்ல தமிழ் எழுதும் பயன்பாட்டு மொழியாற்றலை வளர்த்தல்; சங்க இலக்கியத் திறத்தினை மாணவர் களிடையே எல்லா நிலைகளிலும் மேம்படுத்தி வளர்த்தல்; எழுத்தாற் றலையும் பேச்சாற்றலையும் வளர்தெடுப்பதின் வழி தகவல் தொடர்பியல் மற்றும் ஊடகத்தமிழுக்கு தகுதிப்படுத்துதல்; மொழிபெயர்ப்பு மற்றும்

கலைச்சொல்லாக்கப் பயிற்சியளித்தல்; தமிழில் படைபிலக்கியத் திறத்தினை வளர்த்தெடுத்தல்

## 7.1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

### ஆசிரியர் குறிப்பு

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், சிவதாணுப்பிள்ளை-ஆதிலட்சுமி தம்பதியர்க்கு மூன்றாவதாகப் பிறந்தவர். குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞராவார். அவரது காலம் (ஜூலை 27, 1876 - செப்டம்பர் 26, 1954).

நாகர்கோவிலில் உள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.

இயற்கைப் பாடல்கள், பக்திப் பாடல்கள், வரலாற்று நோக்குடைய கவிதைகள், குழந்தைப் பாடல்கள், வாழ்க்கைப் போராட்ட கவிதைகள், சமூகப் பாட்டுக்கள், தேசியப் பாட்டுக்கள், வாழ்த்துப் பாக்கள், கையறு நிலைக் கவிதைகள், பல்சுவைப் பாக்கள் என விரிந்த தளத்தில் செயல்பட்டவர்.

இவர் மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், கதர் பிறந்த கதை, தேவியின் கீர்த்தனங்கள், குழந்தைச்செல்வம், கவிமணியின் உரை மணிகள் போன்ற நூல்களைப் படைத்துள்ளார். எட்வின் ஆர்னால்டின் எழுதிய லிவீரீலீt ஷீயீ கிsவீணீ என்ற நூலைத் தழுவி 'ஆசிய ஜோதி' யைத் தமிழில் எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.

24 டிசம்பர் 1940இல் சென்னை பச்சைப்பன் கல்லூரியில் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் கவிமணி என்ற பட்டத்தை வழங்கினார். 1954இல் கவிமணிக்கு தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது அக்டோபர் 2005இல் இந்திய அரசு முத்திரை வெளியிட்டுச் சிறப்பித்தது.

**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**

- ஊர் = கன்னியாகுமரி மாவட்டம் தேரூர்
- பெற்றோர் = சிவதாணுபிள்ளை, ஆதிலட்சுமி அம்மையார்
- துணைவியார் = உமையம்மையார்
- ஆசிரியர் = சாந்தலிங்க தம்பிரான்

- காலம் = 27.08.1876-26.09.1954

**கவிமணி சிறப்பு பெயர்கள்**

- கவிமணி (சென்னை மாகாணத் தமிழ் சங்கத்தின் தலைவர் உமாமகேசுவரனார்)
- குழந்தை கவிஞர்
- தேவி
- நாஞ்சில் நாட்டு கவிஞர்
- தழுவல் கவிஞர்

**கவிமணி நூல்கள்**

- அழகம்மை ஆசிரிய விருத்தம்(இயற்றிய முதல் நூல்)
- காந்தளூர் சாலை
- மலரும் மாலையும்
- ஆசிய ஜோதி
- நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்(நகைச்சுவை நூல்)
- குழந்தைச் செல்வம்
- தேவியின் கீர்த்தனைகள்
- தீண்டாதார் விண்ணப்பம்
- கவிமணியின் உரைமணிகள்

**கவிமணி குறிப்பு**

- எட்வின் ஆர்னால்ட் என்பார் எழுதிய light of asia என்ற நூலை அழகிய தமிழில் ஆசிய ஜோதி என மொழிப்பெயர்த்துள்ளார்
- பாரசீக கவிஞர் உமர் கய்யாம் பாடல்களை தமிழில் ரூபாயத் என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார்
- மும்மொழிப் புலமை வாய்ந்தவர்

**கவிமணி – சிறப்பு**


- இனிய தமிழில் எவரும் விளங்கப் பாடல் இயற்றும் திறம் மிக்கவர்
- ரசிகமணி டி.கே.சி = தேசிய விநாயகம் பிள்ளையின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம்; அறிய செல்வம், தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுவதும் தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்கத் கூடிய வாடாத கற்பகப்பூச்செண்டு
- நாமக்கல் கவிஞர் = தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை – தினமும் கேட்பது என்செவிப் பெருமை

- டி.கே.சண்முகம் = கவிமணியின் கவிதைகளைப் புரிந்து கொள்வதற்குப் பண்டிதராக வேண்டியதில்லை; படிக்கத் தெரிந்த எவரும் பொருள் கொள்ளத்தக்க எளியநடை
- மு.வரதராசனார் = போராட்டமும் பரபரப்பும் மிகுந்த காலத்தில் வாழ்ந்த போதிலும் அவருடைய உள்ளமும், கவிதைகளும் அமைதியும் இனிமையும் உடையனவாக விளங்கியது விந்தையே
- நாமக்கல் கவிஞர் = துரும்பென மெலிந்த தேகம், துலங்கிடும் குளிர்ந்த பார்வை, இரும்பினும் வலிய உள்ளம், இனியவே செய்யும் எண்ணம், பரம்பொருள் நினைவே காட்டும் பாரெல்லாம் பரந்த நோக்கம், கரும்பினும் இனிய சொற்கள், கவிமணி வடிவம் ஆகும்

**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை கவிதைகள்**

- தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு – அங்கே
- துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி
- அம்மா என்குது வெள்ளைப் பசு
- ஓடும் உதிரத்தில் – வடிந்து
- ஒழுகும் கண்ணீரில்
- தேடித் பார்த்தாலும் – சாதி
- தெரிவதுண்டோ அப்பா?
- உள்ளத்துள்ளது கவிதை – இன்பம்உருவெடுப்பது கவிதை
- தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
- தெரிந்து ரைப்பது கவிதை
- மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா

## 2005 அக்டோபரில், இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டது.



கவிமணி – தமிழ்க் கவிதைக் கண்மணி: இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகில் தடம் பதித்த கவிஞர்கள் நால்வர். இவர்கள் ஒவ்வொருவாருக்கும் தனிச்சிறப்பு உண்டு. நால்வருள் மோனையைப் போல் முன்னிற்பவர் பாரதியார். இவர் 39 ஆண்டுகளே வாழ்ந்து கவிதை உலகில் சாதனை படைத்தவர். பாரதியாருக்கு அடுத்த நிலையில் புகழ் பெற்று விளங்கியவர் பாரதிதாசன்; பாரதியாருக்கு ஒன்பது ஆண்டுகள் இளையவரான இவர் 73 ஆண்டுகள் வரை வாழ்ந்தவர்.

கவிமணி சி.தேசிக விநாயகம் (பிள்ளை) (1876–1954) பாரதியாரை விட ஆறு ஆண்டு மூத்தவர். தமிழில் ‘குழந்தைப் பாடல்’ என்னும் இலக்கிய வகையைத் தொடங்கி வைத்த பெருமை இவருக்கு உரியது; எனவே ‘குழந்தைக் கவிஞர்’ என்னும் சிறப்புப் பெயர் வாய்த்தது. பாரதியாருக்கு ஆறு ஆண்டுகள் பின்னவரான நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் (பிள்ளை) 84 ஆண்டுக் காலம் வாழ்ந்தார்.

**பாரதியும் கவிமணியும்**

பாரதிக்கு நிகரான சொல்லாற்றல் படைத்தவராகக் கவிமணி விளங்கினார். எனினும் இருவருக்கும் இடையே பெரிய வேறுபாடும் இருந்தது. அறிஞர் சி.தில்லைநாதன் இப்படி கூறுகிறார்: “பாரதியின் சொற்கள் பகைவர்களைத் தாக்கும் போர் வீரர்களைப் போலவோ வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளைப் போலவோ செயலாற்று கின்றன. கவிமணியின் சொற்கள் அமைதி நெறியில் சேவை செய்யப் புகுந்த தொண்டர்களைப் போல அமைதியாகத் தம் பணியைச் செய்கின்றன”.

கவிமணி எந்த ஒரு கருத்தினையும் மென்மையான சொற்களைக் கையாண்டு அமைதியாகவே பாடுவார். ‘ஐயா’ ‘அப்பா’ ‘அம்மா’ என்பன போன்ற சொற்களே அவரது மொழி நடையில் பயின்று வரும். “பாடுபடுவருக்கே இந்தப் பாரிடம் சொந்தம் ஐயா!” என்றும் “ஏழை என்று ஒருவர் உலகில் இருக்கல் ஆகாது ஐயா!” என்றும் “மங்கைய ராகப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!” என்றும் “ஊக்கம் உடையவர்க்குத் – துன்பம் உலகில் இல்லை அம்மா!” என்றும் பாடுவது கவிமணியின் முத்திரைப் பண்பு.

கவிமணியின் வாழ்க்கை அமைதி, இனிமை, இரக்கம், எளிமை, கருணை, பொறுமை ஆகிய நற்பண்புகள் பொருந்தியது. அவர் பாடிய கவிதைகளிலும் இப் பண்புகள் கொலுவிருக்கக் காணலாம். “நீண்ட காலமாகப் பெண்கள் கல்விச்சாலையில் ஆசிரியராக இருந்தமையால் இக் குணங்கள் சிறந்து விளங்குவதற்கு இடமிருந்தது. ஆவேசம் பரபரப்பு முதலியன சிறிதளவும் கிடையாது. கவிமணியோடு நாற்பது ஆண்டு

களாகப் பழகியுள்ளேன்; என்றாலும் ஒரு முறையாவது யாரோடும் அவர் கோபங் கொண்டதை நான் பார்த்ததே இல்லை" எனக் குறிப்பிடுவார் பேராசிரியர் வையாபுரி.

'உள்ளத்தில் உள்ளான் இறைவன்!': முற்போக்கான சீர்திருத்தக் கருத்தினையும் இனிய வடிவில் படைத்துத் தரும் வல்லமை பெற்றவர். இதனை விளக்கக் 'கோயில் வழிபாடு' என்னும் கவிதை ஒன்றே போதும்.

**"கோயில் முழுதும் கண்டேன் – உயர்**
**கோபுரம் ஏறிக் கண்டேன்**
**தேவாதி தேவனை யான் – தோழி!**
**தேடியும் கண்டிலனே"**

எனத் தொடங்கும் அக் கவிதை அற்புத மூர்த்தியினை, -ஆபத்தில் காப்பவனை – கோயில் முழுவதும் தேடி அலைவதைச் சொல்கிறது. தெப்பக் குளத்திலோ சுற்றித் தேரோடும் வீதியிலோ சிற்பச் சிலையிலோ நல்ல சித்திர வேலையிலோ இறைவனைக் காண முடியவில்லையாம். இறைவன் உண்மையில் எங்கே தான் இருக்கிறான்? அவனை எப்படி காண்பது? இவ்வினாக்களுக்கு கவிமணி இக் கவிதையின் நிறைவுப் பகுதியில் தரும் விடை:

**"உள்ளத்தில் உள்ளான் அடி! -அது நீ**
**உணர வேண்டும் அடி**
**உள்ளத்தில் காண்பாய் எனில் – கோயில்**
**உள்ளேயும் காண்பாய் அடி!"**

'இறைவன் உண்மையான அன்பு கொண்ட அடியவர்களின் உள்ளத்தில் உள்ளான்; இந்த அடிப்படையான உண்மையை உணர்ந்து கொண்டால் போதும். உள்ளத்தில் இறைவனைக் காணக் கற்றுக் கொண்டால் கோயில் உள்ளேயும் அவனைக் கண்டு கொள்ளலாம்' என்ற முற்போக்கான இறைநெறிச் சிந்தனையை எவ்வளவு எளிய தமிழில் தெளிவாகச் சொல்லி விட்டார் என்று பாருங்கள்!

**குழந்தைப் பாடல்**

கவிமணி குழந்தைகளுக்கு என்றே பல பாடல்களை எழுதியுள்ளார். அவை 'குழந்தைச் செல்வம்' என்ற பெயரால் தனி நூலாக வெளியிடப் பெற்றுள்ளன. அதில் மிகச் சிறந்தது 'பசுவும் கன்றும்' பாடல்:

**"தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு – அங்கே**
**துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி.**

**அம்மா என்குது வெள்ளைப் பசு – உடன்**

**அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி.**

**நாவால் நக்குது வள்ளைப் பசு – பாலை**

**நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி.**

**முத்தம் கொடுக்குது வெள்ளைப் பசு – மடி**

**முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி."**

இதில் கடினமான சொல் ஒன்று கூட இல்லை. பாடலின் தொடக்கமும் முடிவும் அற்புதமாக அமைந்துள்ளன.

மொழிபெயர்ப்புத் துறைக்கும் நிலையான பங்களிப்பினை நல்கியுள்ளார். ‘ஆசிய சோதி’யும் ‘உமார் கய்யாம் பாடல்களும்’ அவரது மொழி பெயர்ப்புத் திறனுக்கு சான்று.

**"வெய்யிற் கேற்ற நிழலுண்டு;**

**வீசும் தென்றல் காற்றுண்டு;**

**கையில் கம்பன் கவியுண்டு;**

**கலசம் நிறைய மதுவுண்டு;**

**தெய்வ கீதம் பலவுண்டு;**

**தொடர்ந்து பாட நீயுமுண்டு;**

**வையந் தரும்இவ் வனமன்றி**

**வாழும் சொர்க்கம் வேறுண்டோ?"**

இத்தகைய பாடல்களைப் படிக்கும் போது மொழி பெயர்ப்பு, தழுவல் என்ற எண்ணங்களே தோன்றாத; தமிழ் மொழி கவிதைகளைப் பாடி இன்புறுவது போன்ற உணர்வே ஏற்படும். இதுவே மொழி பெயர்ப்பாளர் என்ற முறையில் கவிமணி பெற்ற இமாலய வெற்றி.

**வெண்பாவிற்கோர் கவிமணி**

வெண்பா இயற்றுவதிலும் வல்லவர் கவிமணி. அவரது வெண்பாக்களின் நடையும் எவ்வகையான சிக்கலும் இல்லாமல் உணர்ச்சியும் ஓசையும் கருத்தும் கற்பனையும் கை கோத்துச் செல்லும்; படிப்பவர் நெஞ்சில் நேரடியாகச் சென்று தெளிவாகப் பதியும். இரசிகமணி டி.கே.சி.யின் ஒரே மகனான தீபன் என்னும் தீக்காரப்பன் 32 அகவையிலேயே மறைந்த போது கவிமணி டி.கே.சி-க்கு அனுப்பிய வெண்பா இவ் வகையில் குறிப்பிடத்தக்கது.

**"எப்பாரும் போற்றும் இசைத்தமிழ்ச் செல்வாளன்**

**அப்பா அழகியசெல் லையா – இப்பாரில்**

**சிந்தை குளிரச் சிரித்தொளிரும் நின்முகத்தை**
**எந்தநாள் காண்பேன் இனி!"**

இவ் வெண்பாவைப் படித்து உள்ளம் உருகிய இரசிகமணி "தங்கள் உள்ளத்தின் கனிவு வெண்பாவில் தெளிந்து கிடக்கிறது. தமிழுலகில் இந்த வெண்பா எழுத ஒருவர்தான். அது தாங்கள் தான்... கவிக்கு உயிரையே கொடுக்கலாம் என்று சொல்லுவது நம்மவர் மரபு. தங்கள் கவி உயிரைக் கொடுத்து வந்த மாதிரியே இருக்கிறது. தாங்களும் தமிழுமாகச் சேர்ந்து எவ்வளவோ ஆறுதலைத் தருகிறீர்கள்" எனக் கவிமணிக்கு மறுமொழி எழுதினார். 'இப்படி ஒரு அற்புதமான கவிதை தமிழுக்குக் கிடைக்கு மானால் உயிரைக் கொடுத்துக்கூட அதைப் பெறலாம்' என இரசிகமணியைச் சொல்ல வைத்த அற்புதமான வெண்பா இது!

**"மக்களுக்கு நல்வாழ்வு வாழும் வழிகளெல்லாம்**
**சிக்கலறக் காட்டும் தினமலர்நீ – எக்கணமும்**
**வாடாது தெய்வ மலர்போல வாழ்ந்திடுக**
**நீடாழி சூழும் நிலத்து."**

என்பது 'தினமலர்' இதழை வாழ்த்திக் கவிமணி படைத்த அழகிய வெண்பா.

'எது கவிதை?' என்ற வினாவுக்குக் கவிமணி தரும் விடை...

**"உள்ளத்து உள்ளது கவிதை – இன்பம்**
**உருவெடுப்பது கவிதை;**
**தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை**
**தெரிந்து உரைப்பது கவிதை"**

கவிதைக்கு இங்ஙனம் வரைவிலக்கணம் வகுத்துத் தந்ததோடு நின்றுவிடவில்லை; அதன் படியே தெள்ளத் தெளிந்த தமிழில் – கவிதைகளைப் படைத்துத் தந்து நம் உள்ளத்தில் நிலைத்த இடத்தினைப் பெற்றவர் கவிமணி.

கவிமணி அவர்கள் எழுதிய உடல் நலம் பேணல் என்னும் கவிதை நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.

---

## 7.2. மரபுக்கவிதை - உடல் நலம் பேணல்

---

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**உடலின் உறுதி உடையவரே**
**உலகின் இன்பம் உடையவராம்**
**இடமும் பொருளும் நோயாளிக்கு**
**இனிய வாழ்வு தந்திடுமோ?**

**சுத்த முள்ள இடமெங்கும்**
**சுகமும் உண்டு நீ அதனை**
**நித்தம் நித்தம் பேணுவையேல்**
**நீண்ட ஆயுள் பெறுவாயே!**

**காலை மாலை உலாவிநிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப் போவானே.**

**ஆளும் அரசன் ஆனாலும்**
**ஆகும் வேலை செய்வானேல்**
**நாளும் நாளும் பண்டிதர்கை**
**நாடி பார்க்க வேண்டாமே.**

**கூழையே நீ குடித்தாலும்**
**குளித்த பிறகு குடி அப்பா!**
**ஏழையே நீ ஆனாலும்**
**இரவில் நன்றாய் உறங்கப்பா!**

**மட்டுக் குணவை உண்ணாமல்**
**வாரி வாரித் தின்பாயேல்**
**திட்டு முட்டுப் பட்டிடுவாய்**
**தினமும் பாயில் விழுந்திடுவாய்.**

**தூய காற்றும் நன்னீரும்**
**சுண்டப் பசித்தபின் உணவும்**
**நோயை ஓட்டி விடும் அப்பா!**
**நூறு வயதும் தரும் அப்பா!**

**அருமை உடலின் நலமெல்லாம்**
**அடையும் வழிகள் அறிவாயே!**
**வருமுன் நோயைக் காப்பாயே**
**வையம் புகழவாழ்வாயே.**

## 7.3. பாடல் விளக்கம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், இக்கவிதையில் உடலுக்கு நன்மை தருகின்ற வழிகளையும், தனிமனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுக்கமுறைகளையும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

எவ்விதமான நோயும் தாக்காதவாறு உடலை உறுதியாக வைத்துக் கொள்பவர்களே இந்த உலகில் நிலையான இன்பத்தை அடை கின்றனர்.

வசதி மிக்க இடங்களும், செல்வச் செழிப்பும் கொண்ட ஒருவன் நோயாளியாக இருப்பின் அந்த வாழ்க்கை அவனுக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை.

நோய்கள் நம்மை அணுகாது இருக்க வேண்டுமாயின், நம் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள இடத்தை அனுதினமும் தூய்மையாக வைத்துக் கொள்ளப் பழகினால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

கதிரவன் உதிக்கின்ற அதிகாலையிலும், கதிரவன் மறைகின்ற மாலைப் பொழுதிலும் தூய்மையான காற்று நிரம்பி இருக்கும். அச்சமயங்களில் உடற்பயிற்சி செய்தால் நம் உடலுக்கு நன்மை விளையும். நோய்கள் நம்மை நெருங்காது. வாழ்வில் எத்தகைய உயரத்தில் இருந்தாலும், அரசனாகவே வாழ்ந்தாலும், அவரவர் வேலையை அவரவரே செய்யப் பழகிக் கொண்டால், மருத்துவரின் உதவியை நாம் நாட வேண்டிய அவசியம் இருக்காது.

எத்தகைய உணவாக இருந்தாலும் குளித்த பிறகே உணவு உண்ணும் பழக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். இரவில் எவ்வித சலனமும் இன்றி நன்றாக உறங்க வேண்டும். மனம் விரும்புகின்றதே என்று எண்ணி, உணவுகளை வரைமுறையின்றி உண்ணுதல் கூடாது. அப்படி உண்டால் நோய்கள் தானாகவே நம்மை வந்தடையும்.

தூய்மையான காற்றும், தூய்மையான நீரும், நன்கு பசித்த பின் உண்ணுகின்ற உணவும் நோய்களை விரட்டிவிடும். நூறு வயது வரை நோயின்றி வாழ்கின்ற வரத்தையும் தரும்.உடலுக்கு நன்மை தருகின்ற வழிகள் எதுவோ அவற்றை முறையாக கடைபிடித்தால் நோய்கள் வருவதைத் தவிர்க்கலாம். உடல் ஆரோக்கியத்துடன் இந்த உலகம் புகழ வாழலாம். என்று கவிமணி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**தமிழக மறுமலர்ச்சிக் கவிஞர்:** தமிழ்நாட்டின் 20ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (Kavimani Desika Vinayagam Pillai) பிறந்த தினம் ஜூலை 27.

- குமரி மாவட்டம், தேரூரில் பிறந்தார் (1876). ஐந்து வயதில் தேரூர் ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஒன்பதாவது வயதில் தந்தையை

இழந்தார். திருவாவடுதுறை மடத் தலைவர் சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். எம்.ஏ. பட்டம் பெற்றார்.

- திருவனந்தபுரம் ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் பயின்றார். கோட்டாறு, நாகர்கோவில் பாடசாலைகளில் ஆசிரியர், திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியில் பேராசிரியர் என 36 ஆண்டுகள் கல்விப் பணியாற்றினார்.

- இவரது இலக்கிய வெளிப்பாட்டில் ஒரு அறிவியல் கண்ணோட்டம் பிரதிபலித்தது. நாட்டின் பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ளும் ஆர்வம் காரணமாக கல்வெட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். சுதந்திர போராட்டத்தில் காந்தியத்துக்கு ஆதரவாகக் கவிதைகளை எழுதியதால் 'விடுதலைக் கவிஞர்' எனவும் போற்றப்பட்டார்.

- 'ஆங்கிலத்தில் உள்ளதுபோல தமிழில் குழந்தைப் பாடல்கள் இல்லையே என்றுதான் நான் பள்ளிப் பிள்ளைகளுக்கு எளிய நடையில் பாடல்கள் எழுதினேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

- 'மலரும் மாலையும்', 'ஆசிய ஜோதி', 'உமர்கய்யாம் பாடல்கள்', 'நாஞ்சில் நாட்டு மருமக்கள்வழி மான்மியம்', 'அழகம்மை ஆசிரிய விருத்தம்', 'கதர் பிறந்த கதை', 'குழந்தைச் செல்வம்' உள்ளிட்ட இவரது படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவரது 'தேவியின் கீர்த்தனங்கள்' என்ற இசைப்பாடல் தொகுப்பில் இடம் பெற்ற பல பாடல்களை, இசைக் கலைஞர்கள் மேடைகளில் விரும்பிப் பாடினார்கள்.

- இவரது சொற்பொழிவுகள் 'கவிமணியின் உரை மணிகள்' என்ற நூலாக வெளிவந்தது. சிறந்த மொழிபெயர்ப்பாளரான இவர் எட்வின் ஆர்னால்டின் 'தி லைட் ஆஃப் ஏஷியா' என்ற படைப்பைத் தழுவி 'ஆசிய ஜோதி' என தமிழில் எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.

- சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராகப் பணியாற்றினார். 'கம்பராமாயணம் திவாகரம்', 'நவநீதப் பாட்டியல்' உள்ளிட்ட பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்துள்ளார். 'தேசியக் கவிஞர்', 'குழந்தைக் கவிஞர்',

'சமுதாயக் கவிஞர்', 'விடுதலைக் கவிஞர்', 'உணர்ச்சிக் கவிஞர்' என்றெல்லாம் போற்றப்பட்டார்.

- 'பைத்தியக்காரன்', 'மணமகள்', 'தாயுள்ளம்', 'வேலைக்காரன்', 'கள்வனின் காதலி', 'கண்ணின் மணிகள்', 'நன் நம்பிக்கை' ஆகிய திரைப்படங்களில் இவர் எழுதிய பாடல்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.
- 'தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை தினமும் கேட்பது என் செவிப்பெருமை' என நாமக்கல் கவிஞர் பாராட்டியுள்ளார். 1940-ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் உமாமகேஸ்வரம் பிள்ளை இவருக்கு 'கவிமணி' பட்டம் வழங்கினார்.
- இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர்களுள் ஒருவருமான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 1954ஆம் ஆண்டு, 78ஆவது வயதில் மறைந்தார். இவர் பிறந்த ஊரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு இவர் நினைவாக 2005இல் தபால் தலை வெளியிட்டது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்த ஆண்டு __________
2. கவிமணிக்கு __________ நினைவு நிலையம் அமைக்கப்பட்டது
3. கவிமணியின் பாடல் தொகுதி ________________

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மரபுக்கவிதை - உடல் நலம் பேணல் மற்றும் பாடல் விளக்கம் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

1. 1876
2. தேரூரில்
3. மலரும் மாலையும்

# பிரிவு-8

## அப்துல் ரகுமான்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

8.1. முனைவர் சை. அப்துல் ரகுமான் - கவிக்கோ

8.2. அப்துல் ரகுமான் - ஆலாபனை

8.3. கவிதையின் உள்ளடக்கம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினாக்கள்

---

**அறிமுகம்**

---

இந்தப் பிரிவில் முனைவர் சை. அப்துல் ரகுமான் – கவிக்கோ, அப்துல் ரகுமான் – ஆலாபனை, கவிதையின் உள்ளடக்கம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

---

**குறிக்கோள்கள்**

---

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை தெரிந்து கொள்ளலாம்.

- முனைவர் சை. அப்துல் ரகுமான் – கவிக்கோ
- அப்துல் ரகுமான் - ஆலாபனை, கவிதையின் உள்ளடக்கம்

---

**8.1. முனைவர் சை. அப்துல் ரகுமான் - கவிக்கோ**

---

அப்துல் ரகுமான் (S. Abdul Rahman, நவம்பர் 9, 1937 - சூன் 2, 2017), தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப்பேராசிரியரும் ஆவார். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகப் புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் ஆவார்.



## அப்துல் ரகுமான் ஆசிரியர் குறிப்பு

- மதுரையில் பிறந்தவர்
- தமிழக அரசின் "பாரதிதாசன் விருது", தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கிய, "தமிழ் அன்னை விருது" போன்ற பல பரிசினை பெற்றுள்ளார்
- தொன்மம் என்ற இலக்கிய உத்தியை மிகுதியாகப் பயன்படுத்தியவர்

## அப்துல் ரகுமான் சிறப்பு பெயர்கள்

- இவர், "மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்" எனப் பாராட்டப்படுபவர்
- கவிக்கோ
- விண்மீன்கள் இடையே ஒரு முழுமதி
- வானத்தை வென்ற கவிஞன்
- சூரியக் கவிஞன்
- தமிழ்நாட்டு இக்பால்

### இதழ்

**கவிக்கோ**

**கட்டுரை நூல்கள்**

- கரைகளே நதியாவதில்லை
- அவளுக்கு நிலா என்று பெயர்
- முட்டைவாசிகள்
- மரணம் முற்றுப்புள்ளி அல்ல
- விலங்குகள் இல்லாத கவிதை
- பூப்படைந்த சப்தம்
- தொலைபேசிக் கண்ணீர்
- காற்று என் மனைவி
- உறங்கும் அழகி
- நெருப்பை அணைக்கும் நெருப்பு
- பசி எந்தச் சாதி
- நிலவிலிருந்து வந்தவன்
- கடவுளின் முகவரி

- முத்தங்கள் ஓய்வதில்லை
- காக்கைச் சோறு
- சோதிமிகு நவகவிதை
- சிலந்தியின் வீடு
- இது சிறகுகளின் நேரம்
- இல்லையிலும் இருக்கிறான்
- தட்டாதே திறந்திருக்கிறது
- எம்மொழி செம்மொழி
- பூக்காலம்

**ஆய்வு நூல்**

- புதுக்கவிதையில் குறியீடு
- கம்பனின் அரசியல் கோட்பாடு

**அப்துல் ரகுமான் கவிதை நூல்கள்**

- பால்வீதி (முதல் கவிதை)
- நேயர் விருப்பம்
- சொந்த சிறைகள் (வசன கவிதை)
- சுட்டுவிரல்
- ஆலாபனை (சாகித்திய அகாதமி விருது)
- பித்தன்
- விதைபோல் விழுந்தவன் (அறிஞர் அண்ணா பற்றியது)
- முத்தமிழின் முகவரி (கலைஞர் கருணாநிதி பற்றியது)
- தாகூரின் சித்ரா (மொழிபெயர்ப்பு கவிதை)
- ரகசிய பூ
- பறவையின் பாதை
- இறந்தால் பிறந்தவன்
- தேவகானம்
- கண்ணீர் துளிகளுக்கு முகவரி இல்லை
- பாலை நிலா

**விருதுகள்**

- குன்றக்குடி அடிகளார் வழங்கிய “கவியரசர் பாரிவிழா விருது”

- தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கிய "தமிழ் அன்னை விருது"
- தமிழக அரசின் = பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது
- தமிழ் வளர்ச்சித்துறையின் "உமறுப் புலவர் விருது"
- சிற்பி அறக்கட்டளை விருது
- ரானா இலக்கிய விருது
- இலங்கை கம்பன் சங்கத்தின் "கம்ப காவலர் விருது"

**சிறப்புகள்**

- தமிழில் கவிதைக் குறியீடுகள் குறிந்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்.
- தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.
- கவியரசு கண்ணதாசன் = 'நான் கலீல் ஜிப்ரானைப் படிக்கும் போதெல்லாம் 'தமிழில் இப்படி எழுத யாருமில்லையே' என ஏங்குவேன். அந்த ஏக்கம் இப்போது இல்லை. இதோ, search அப்துல் ரகுமான் வந்துவிட்டார். இவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டால், 'யார் இந்தக் கவிஞன்?' என்று உலகம் விசாரிக்கும்.'
- வாகீசக் கலாநிதி கி.வா.ஜ = 'கம்பனுக்கும் தோன்றாத கற்பனைகள் ரகுமானுக்கு தோன்றுகின்றன'

## 8.2. அப்துல் ரகுமான் - ஆலாபனை

**ஒருநாள், எனக்கும் வானத்திற்கும் போட்டி நடந்தது**
**நான் புன்னகையை எடுத்து வைத்தேன்**
**அது வைகறையை எடுத்து வைத்தது**
**நான் கண்ணீரை எடுத்து வைத்தேன்**
**அது மழையை எடுத்து வைத்தது**
**நான் வியர்வைத் துளிகளை எடுத்து வைத்தேன்**
**அது நட்சத்திரங்களை எடுத்து வைத்தது**
**நான் கோபத்தை எடுத்து வைத்தேன்**
**அது வெயிலை எடுத்து வைத்தது**
**நான் காதலை எடுத்து வைத்தேன்**

**அது நிலவை எடுத்து வைத்தது**
**நான் எண்ணங்களை எடுத்து வைத்தேன்**
**அது மேகங்களை எடுத்து வைத்தது**
**நான் எழுத்தை எடுத்து வைத்தேன்**
**அது மின்னலை எடுத்து வைத்தது**
**நான் பேச்சை எடுத்து வைத்தேன்**
**அது இடியை எடுத்து வைத்தது**
**நான் கவிதையை எடுத்து வைத்தேன்**
**அது வானவில்லை எடுத்து வைத்தது**
**நான் உறக்கத்தை எடுத்து வைத்தேன்**
**அது இருளை எடுத்து வைத்தது**
**நான் சந்தேகங்களை எடுத்து வைத்தேன்**
**அது கிரகணங்களை எடுத்து வைத்தது**
**நான் பெருமூச்சை எடுத்து வைத்தேன்**
**அது புயலை எடுத்து வைத்தது**
**இறுதியில் நான்**
**புதுப்புது இலட்சியங்களை நோக்கி நடக்கும்**
**என் பாதங்களை எடுத்து வைத்தேன்**
**வானம் தோற்றது**

**அப்துல் ரகுமான்**

தமிழ்நாட்டில், மதுரையில் 09-11-1937இல் பிறந்தார் அக்காலத்தில் தமிழ், உருது ஆகிய இருமொழிகளிலும் சிறந்த எழுத்தாளராக விளங்கிய 'மஹதி' சையத் அஹ்மத் என்பார் இவருடைய தந்தையார் ஆவார். இதனால் இளவயதில் இருந்தே மொழிப் புலமையும் கவிதை எழுதும் ஆற்றலும் அப்துல் ரகுமானிடம் வளரத் தொடங்கின.

**கல்வியும் பணியும்**

தமிழ்க் கல்விக்குச் சிறந்த கல்லூரி என்று புகழ் பெற்றிருந்த மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் புதுக்கவிதையில் குறியீடு என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். வாணியம்பாடியில் இசுலாமியாக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக முப்பது ஆண்டுகள் பணியாற்றினார். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகச் சென்னையில் இருந்து தம் படைப்புப் பணியைத் தீவிரத்துடன் செய்து வருகிறார்.

**கவிதை ஆர்வம்**

அப்துல் ரகுமான் பள்ளிப் பருவத்திலேயே கவிதை புனைந்தவர். கல்லூரி நாட்களிலேயே புதுமையாக எழுதிப் புகழ் பெற்றவர். கல்லூரி இலக்கிய மன்றங்களும், வானொலி நிலையங்களும், அண்ணாவின் அரசியல் இயக்கமும் நிகழ்த்திய பல கவியரங்கங்களில் பங்கேற்றார். புதுமையாய்ப் பாடும் திறத்தால் தமிழகம் முழுதும் புகழ் பரவப் பெற்றார்.

**கவிராத்திரி**

பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் புதுக்கவிதையை ஆயிரக் கணக்கானோர் கூடிச் சுவைக்க வழி செய்தார். கவிராத்திரி என்ற பெயரில் கவியரங்கத்தைப் புதுமைப் படுத்தினார். தம் மாணவர்களைப் புதுக்கவிதை எழுதவைத்து அவர்களின் கவிதைகளைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டார்.

**அன்னம் பதிப்பகம்**

தம் வகுப்புத் தோழரும் கவிஞருமான மீராவுடனும் மற்ற நண்பர்களுடனும் சேர்ந்து, புதிய படைப்பாளிகளின் இலக்கிய நூல்களை வெளியிடுவதற்காகவே அன்னம் என்னும் பதிப்பகத்தை உருவாக்கினார்.

**தமிழ் உணர்வு**

தமிழ்மொழியின் மீது பற்றும், சமுதாய நலனில் அக்கறையும், நல்லொழுக்கமும் நிறைந்தவர் அப்துல் ரகுமான்.

தம் அறுபதாவது வயது நிறைவைக் கொண்டாட மாணவர்களும் நண்பர்களும் திரட்டித் தந்த நிதியைக் கொண்டு தம் பெயரில் ஒரு கவிதை அறக்கட்டளை நிறுவினார். ஆண்டு தோறும் தமிழில் சிறந்த கவிதை நூல் படைக்கும் கவிஞருக்கு ரூபாய் முப்பதாயிரம் பரிசளித்துப் பாராட்டி வருகிறார்.

**சிறப்பும் விருதும்**

கவிக்கோ என்னும் அடைமொழியால் தமிழகத்திலும், தமிழறிந்த அயலகங்களிலும் அறியப்படும் அப்துல் ரகுமான், 1999ஆம் ஆண்டுக்கான தமிழ்க் கவிதைக்குரிய சாகித்திய அக்காதெமி விருது பெற்றவர். 1989இல் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கிய தமிழன்னை விருது, தமிழக அரசு வழங்கிய பாவேந்தர் பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது ஆகியவற்றைப் பெற்றார். 1997ஆம் ஆண்டு

கலைஞர் விருது பெற்றார். இவையல்லாத பல்வேறு விருதுகளும் சிறப்புகளும் பெற்றிருக்கிறார்.

**போட்டி**

'கவிக்கோ' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட பேராசிரியர் கவிஞர் அப்துல் ரகுமான், அவர்கள், முறையாகத் தமிழிலக்கியம் பயின்று மரபிலக்கணம் கற்றுத் தேர்ந்த தமிழ்ப்பேராசிரியர் ஆவார். இவருடைய கவிதையில் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியன செவ்வனே மிளிர்வதைக் காணமுடிகிறது. இசையோடு கூடிய ஒலி நயமிக்க சொற்களால் கவிதைப் புனைவதில் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கியவர். கவிஞர் அவர்கள் 'ஆலாபனை' 'தேவகானம்' ஆகிய இரு கவிதைத் தொகுப்பினையும் இசைக் குறிப்பின் அடிப்படையில் வெளியிட்டுள்ளார். இவற்றுள்,

**'ஆலாபனை'** என்னும் கவிதைத் தொகுப்பிலுள்ள 'போட்டி' என்னும் தலைப்பிலான இக்கவிதை நமக்குப் பாடப்பகுதியாக அமைக்கப் பட்டுள்ளது.

**'போட்டி'** என்னும் தலைப்பிலான் இக்கவிதை ஒவ்வொரு தனிமனிதனின் உணர்வுகளுக்கு வானில் தோன்றும் இயல்பான நிகழ்வுகளுக்குமான போட்டியாக இக்கவிதை சித்தரிக்கப் பட்டுள்ளது. இப்போட்டியில் இறுதியாக வெல்லப்போவது மனிதனின் முயற்சியா? அல்லது இயற்கையில் செயல்பாடுகளா? என்பதை இக்கவிதையின் அடிநாதம் உணர்த்தும்.

ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளத்தே தோன்றும் இன்பம், துன்பம், காதல், வீரம், எண்வகை மெய்ப்பாடுகள், ஐயப்பாடுகள் என ஒவ்வொரு மெய்ப்பாட்டு நிலைகளையும் வானில் இயல்பாய் நிகழும் நிகழ்வுகள் மட்டுமின்றி சாதாரண மற்றும் அசாதாரண சூழ்நிலைகளையும் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு வசன கவிதையாக அமைந்திருப்பது இக்கவிதைக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக -1**

---

1. புதுக்கவிதையில் ____________ என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

2. இலக்கிய நூல்களை வெளியிடுவதற்காகவே __________ என்னும் பதிப்பகத்தை உருவாக்கினார்.

3. கவிஞர் அவர்கள் ____________, __________ ஆகிய இரு கவிதைத் தொகுப்பினையும் இசைக் குறிப்பின் அடிப்படையில் வெளியிட்டுள்ளார்.

## 8.3. கவிதையின் உள்ளடக்கம்

ஒரு நாள் கவிஞர் தனக்கும் வானத்திற்கும் போட்டி நடந்ததாக இக்கவிதையைத் தொடங்குகின்றார்.

**ஒருநாள் எனக்கும் வானத்திற்கும்**
**போட்டி நடந்தது**
**நான் புன்னகையை எடுத்து வைத்தேன்**
**அது வைகறையை எடுத்து வைத்தது.**
**நான் கண்ணீரை எடுத்து வைத்தேன்**
**அது மழையை எடுத்து வைத்தது**

என கவிதை வரிகள் நமக்குள் அறிமுகமாகின்றன.

இவ்வரிகளில், கவலையை மறக்கச் செய்யும் புன்னகையும் இருளை விலக்கும் விடியலையும், உள்ளக் குமுறலின் வெளிப்பாடாகவும் துன்பத்தின் மீட்சியாகவும் விளங்கும் கண்ணீரை, வானின் கண் மேகக் கூட்டங்கள் முட்டி மோதிக் கொண்டு பொழியும் மழை நீருக்கு ஒப்புமையாக்குகின்றார் கவிஞர்.

ஒருவர் முகம் மலர்ந்து புன்னகைக்கும் பொழுது அவரது உள்ளம் மகிழ்வதுடன் அவரைச் சுற்றியுள்ளோரும் மகிழ்வது போல, இருண்ட வானில் திங்கள் தோன்றி உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் நல்ல விடியலைத் தருகின்றது; உள்ளம் மகிழ வேண்டுமானால் உள்ளக் குமுறல்களனைத்தும் கண்ணீர்த் துளிகளாக வெளிப்படுவது போல, உலகத்து உயிர்களனைத்தும் மகிழ வானம் மழைத்தூறல்களைச் சிந்தி உலகைக் குளிர்விக்கின்றது.

மனிதனின் உழைப்பால் உடலில் தோன்றி வெளிப்படும் முத்து முத்தான வியர்வைத் துளிகளால் அவனது வாழ்வு அழகும் சிறப்பும் பெறுவது போல வானின்கண் தோன்றும் நட்சத்திரங்களும் அவ்வானிற்கு அழகைத் தருகின்றன; மனிதனின் உணர்ச்சிப் பெருக்கில் வெளிப்படும் கோபத்தால் அவனும் அவனைச் சார்ந்தோரும் துன்பம் அடைவது போல, கதிரவனின் கோபத்தால் வெளிப்படும் மிகுந்த வெப்பத்தால் இவ்வுலகத்தார் துன்பமடைவர் என்பதை,

**நான் வியர்வைத் துளிகளை எடுத்து வைத்தேன்**
**அது நட்சத்திரங்களை எடுத்து வைத்தது;**

**நான் கோபத்தை எடுத்து வைத்தேன்**
**அது வெயிலை எடுத்து வைத்தது**

என்னும் கவிதை வரிகளால் அறியலாம்.

மாலை நேரத்து நிலவின் தண்மை (குளிர்ச்சி) உடலுக்கு இனிமைத் தருவது போல இரு உள்ளங்களின் காதலால் தோன்றும் அன்பின் நெகிழ்வும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தருவன; மனித எண்ணங்களும் சிந்தனைகளும் எல்லோருக்கும் ஒரே வகைப்பட்டதாக இருப்பதில்லை. அதுபோல வானின்கண் தோன்றும் மேகக் கூட்டங்களும் ஒரே வடிவாக காட்சியளிப் பதில்லை. அவரவர் கற்பனைக்கேற்ப வானத்து மேகங்கள் காட்சியளிப்பதை மனித எண்ணங்களோடு ஒப்பிட்டுரைத்திருப்பது மிகவும் நுணுகிய உவமையாக, கவிஞரின் நுண்மான் நுழை புலத்தை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. அவ்வரிகள்,

**நான் காதலை எடுத்து வைத்தேன்**
**அது நிலவை எடுத்து வைத்தது**
**நான் எண்ணங்களை எடுத்து வைத்தேன்**
**அது மேகங்களை எடுத்து வைத்தது.**

என்னும் வைர வரிகள் போற்றி போற்றி மகிழத்தக்கன. இருண்ட வானின்கண் தோன்றும் மெல்லிய ஒளிப்படர்ந்த மின்னல் கீற்றுப்போல மூடநம்பிக்கைகளும் பகுத்தறியும் ஆற்றலுமற்ற மூடர் கூட்டத்திற்கும், சமூக அவலங்களுக்கு தீர்வு காண்பதாகவும் எழுத்தாளரின் சிந்தனைப் போக்கு அமைய வேண்டும் என்பதை,

**நான் எழுத்தை எடுத்து வைத்தேன்**
**அது மின்னலை எடுத்து வைத்தது**

என்னும் கவிதை வரிகளில் தெளிவுப்படுத்துகின்றார்.

சொல்லழகும் கருத்தாழமும் கிக்க உரமான பேச்சானது ஊரார் கண்டும் கேட்டும் அஞ்சும் வானத்து இடியோசைக்கு ஒப்பிட்டுரைத்திருப்பது மேன்மேலும் கவிதைக்குச் சிறப்புச் சேர்க்கிறது. இதனை,

**நான் பேச்சை எடுத்து வைத்தேன்**
**அது இடியை எடுத்து வைத்தது**

என்னும் கவிதை வரிகளால் அறியலாம்.

வானின்கண் தோன்றும் அழகிய வானவில் போல, சொற்களின் அழகாக கவிதை விளங்க வேண்டுமென்பதை,

**நான் கவிதையை எடுத்து வைத்தேன்**
**அது வானவில்லை எடுத்து வைத்தது**

என்னும் அழகிய சொற்களின் கோர்வை உணர்த்துகிறது.

உயிரினங்கள் கண்மூடி துயிலும் கொள்ளும் நிலையினை இரவு நேரத்து இருளோடும், மனித மனத்தின்கண் தோன்றும் சாந்தேகங்களை வானின்கண் தோன்றும் கிரகணங்களோடும், மனித அரிய முயற்சியின் முடிவில் வெளிப்படும் பெருமூச்சும், இயற்கையின் இறுக்கமான செயல்பாடுகளால் உண்டாகும் புயலையும் கவிஞர் ஒப்பிட்டுரைத்திருப்பது கவிதையை மேலும் சுவையாக்குகிறது.

**நான் உறக்கத்தை எடுத்து வைத்தேன்**
**அது இருளை எடுத்து வைத்தது**
**நான் சந்தேகங்களை எடுத்து வைத்தேன்**
**அது கிரகணங்களை எடுத்து வைத்தது**
**நான் பெருமூச்சை எடுத்து வைத்தேன்**
**அது புயலை எடுத்து வைத்தது**

இறுதியில், மனித முயற்சிகளுக்கு முன்னால் இயற்கையே தோல்வி கண்டது என்பதை,

**இறுதியில் நான்**
**புதுப்புது இலட்சியங்களை நோக்கி நடக்கும்**
**என் பாதங்களை எடுத்து வைத்தேன்**
**வானம் தோற்றது**

என்று கவிதையை முடித்து, மனித முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதை அறியலாம்.

உலகவே கண்டு வியக்கும் இயற்கையின் எழிலுக்கும் சீற்றத்திற்கும் முன்னால் மனிதன் எடுக்கும் முயற்சியே சிறந்தோங்கும். மனித முயற்சியே மாபெரும் வெற்றியைத் தரும் என்பதை கவிஞர் இக்கவிதையில் பதிவு செய்கின்றார்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

---

1. “வானம்பாடி” இயக்கக் கவிஞர்களுள் ஒருவர் ……………….

அ) அப்துல் ரகுமான் ஆ) பிரமிள்

இ) பானுசந்திரன் ஈ) புதுமைப்பித்தன்

2. சாகித்திய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமானின் கவிதைத் தொகுப்பு ……………….

அ) சுட்டுவிரல் ஆ) மஸ்னவி

இ) நட்சத்திரவாசி ஈ) ஆலாபனை

3. “மரபுக்கவிதைகளில் வேர் பார்த்தவர், புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்” – எனப் போற்றப்படுவர் ……………….

அ) பிரமிள் ஆ) பானுசந்திரன்

இ) அப்துல் ரகுமான் ஈ) புதுமைப்பித்தன்

**தொகுத்தறிவோம்**

இந்தப் பிரிவில் முனைவர் சை. அப்துல் ரகுமான் – கவிக்கோ, அப்துல் ரகுமான் – ஆலாபனை, கவிதையின் உள்ளடக்கம் பற்றி தெரிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. குறியீடு
2. அன்னம்
3. ‘ஆலாபனை’ ’தேவகானம்’

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

1. அ) அப்துல் ரகுமான்
2. ஈ) ஆலாபனை
3. இ) அப்துல் ரகுமான்

**சிறுவினா மற்றும் விடை**

அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா – விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.

- கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
- காகிதம் தின்பது கல்வியில்லை.
- பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? – வெறும்
- பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல.
- என்பன, வினா – விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளாகும்.

**கூடுதல் வினா மற்றும் விடை**

1. கவிக்கோ அப்துல் ரகுமான் குறித்து நீ அறிவன யாவை?

- கவிக்கோ அப்துல் ரகுமான், வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவர், 'வானம்பாடி'க் கவிஞர்களுள் ஒருவர்.
- புதுக்கவிதை, வசனகவிதை, மரபுக்கவிதை எனப் பல வடிவங்களில் கவிதைகளைப் படைத்துள்ளார்.
- பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன், ஆலாபனை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.
- பாரதிதாசன் விருது, தமிழன்னை விருது, சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

2. எவற்றையெல்லாம் மாயை என்று கவிக்கோ அப்துல் ரகுமான் கருதுகிறார்? மாயையிலிருந்து விடுபட, அவர்கூறும் வழிமுறையை ஆராய்க.

கவிக்கோ மாயை எனக் கருதுபவை:

நாள்தோறும் காலையில் விடிந்துவிட்டது எனக் கூறுவது, எடுத்த செயல் ஒன்று முடிந்துவிட்டதாகச் சொல்வது, சில நூல்களைப் படித்துவிட்டு அனைத்தையும் கற்றுவிட்டதாகக் கூறுவது, பிள்ளைகளைப் பெற்றேன் எனக் கூறுவது, காலம் காலமாய்த் தினமும் குளித்துவிட்டேன் எனச் சொல்லுவது, 'இதைக் கொடுக்கின்றேன்' என்று கூறி ஒன்றைக் கொடுப்பது, உடலை அலங்கரிப்பதாகக் கூறி உடைகளை அணிவது, விடை அறிந்துவிட்டேன் எனக் கூறுவது, 'உண்டேன்' எனக் கூறுவது, 'வென்று விட்டேன்' என்று சொல்லுவது ஆகிய எல்லாவற்றையும், கவிக்கோ மாயை என்று கூறுகிறார்.

**விடைத் தெரிக**

1. அப்துல் ரகுமான் பெற்ற விருதுகள் ...................

அ) தமிழன்னை விருது, அண்ணா விருது

ஆ) தமிழன்னை விருது, பெரியார் விருது

இ) தமிழன்னை விருது, காமராஜன் விருது

ஈ) தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது

**விடை : தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது**

2. தமிழ் பல்கலைக்கழகத்தின் “தமிழன்னை விருது” பெற்றவர் ………………

அ) பிரமிள் ஆ) பானுசந்திரன்

இ) புதுமைப்பித்தன் ஈ) அப்துல் ரகுமான்

**விடை : அப்துல் ரகுமான்**

3. “கரைகளே நதியாவதில்லை” என்ற நூலின் ஆசிரியர் ……………

அ) அப்துல் ரகுமான் ஆ) சுரதா

இ) பாரதியார் ஈ) புதுமைப்பித்தன்

**விடை : அப்துல் ரகுமான்**

---

***சிறுவினா மற்றும் விடை***

---

கவிக்கோ அப்துல் ரகுமான் குறித்து நீ அறிவன யாவை?

- கவிக்கோ அப்துல் ரகுமான், வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- இவர் வானம்பாடிக் கவிஞர்கள் ஒருவர்.
- புதுக்கவிதை, வசனக்கவிதை, மரபுக்கவிதை எனப் பல வடிவங்களில் கவிதைகளைப் படைத்துள்ளார்.
- பெயர் தெரியாத கல்லையும், மண்ணையும் கூடப் பெயர்களைச் சொல்லி அழைக்க விருப்பப்படுகிறார்.
- பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன், ஆலாபனை முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.
- தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

## தொகுதி-3: அறிமுகம்

**தொகுதி-3இல் உரைநடை** நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதன. அவை மாணாக்கரும் தாய்மொழியும் – திரு.வி.க., மன வலிமை வேண்டும், மு. வரதராசனார், செம்மொழித் தமிழின் சிறப்புகள், பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு – 9:** இப்பிரிவில் மாணாக்கரும் தாய்மொழியும் - திரு.வி.க., - உரை நடை, மாணாக்கரும் தாய்மொழியும் விரிவாக கொடுக்கப் பட்டுள்ளது.

**பிரிவு – 10:** இப்பிரிவில் மன வலிமை வேண்டும் - மு.வரதராசனார், மு. வரதராசன், மனவலிமை வேண்டுவன பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**பிரிவு – 11:** இப்பிரிவில் செம்மொழித் தமிழின் சிறப்புகள் - செம்மொழித் தமிழின் சிறப்புகள், தமிழின் செம்மொழி தகுதி சிறப்புகள், செவ்வியல் நூல்கள் ஆகியவை விளக்கப்படடுள்ளன.

**பிரிவு – 12:** இப்பிரிவில் பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள், பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள், கல்லணை, நீர் நிலைகளை குறிக்கும் பெயர்கள், மாமல்லபுரம், அங்கோர்வாட் கோயில் மற்றும் பெரிய (பெருவுடையார்) கோயில் தஞ்சாவூர் ஆகியவற்றைப் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**தொகுதி 3**இல் உள்ள அனைத்து பிரிவுகளிலும் உங்கள் முன்னேற்றத்தைச் சோதிப்பதற்கான பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் அனைத்தையும் தாங்கள் தவறாமல் முடிக்க வேண்டும்.

மேலும், மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் இந்த மாதிரி வினாத்தாளுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து படிக்கவும்.

# பிரிவு-9

## மாணாக்கரும் தாய்மொழியும் - திரு.வி.க.,

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

9.1. உரை நடை

9.2. மாணாக்கரும் தாய்மொழியும்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

இந்தப் பிரிவில் உரைநடை மற்றும் மாணாக்கரும் தாய்மொழியும் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்வீர்கள்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை தெரிந்து கொள்ளலாம்.

- உரைநடை மற்றும் மாணாக்கரும் தாய்மொழி.

**திரு வி க வாழ்க்கைக்குறிப்பு**

- திரு.வி.கலியாணசுந்தரனார்(திருவாரூர் விருதச்சல்னார் மகனார் சுருக்கமே திரு.வி.க என்பது)
- பெற்றோர் = விருதச்சலனார் – சின்னம்மையார்
- பிறந்த ஊர் = காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள துள்ளம்.
- இவ்வூர், தற்போது தண்டலம் என அழைகப்படுகிறது. இவ்வூர் சன்னியை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே உள்ளது.

**9.1. உரை நடை**

**மாணாக்கரும் தாய்மொழியும் (திரு.வி.க)**

**ஆசிரியர் குறிப்பு**



கவிஞர், மேடைப்பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் என பன்முகத் திறன் கொண்டவர். ‘தமிழ்த் தென்றல்’ என்ற அடைமொழியைப் பெற்றவர். திரு. வி. க. என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். இவர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம் என்னும் சிற்றூரில் (1883) பிறந்தவர்.

யாழ்ப்பாணம் தமிழ் அறிஞர் நா.கதிரவேற் பிள்ளையிடம் புராணங்கள், யாப்பிலக்கணமும், மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியாரிடம் வடமொழியும், சைவ சமய நூல்களையும், பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதங்களையும், அப்துல் கரீமிடம் திருக்குரானும் கற்றார். ஜஸ்டிஸ் சதாசிவராவ் தொடர்பால் ஆங்கில அறிவு பெற்றவர்.

அன்னிபெசன்ட் அம்மையார், மறைமலை அடிகளாரின் தொடர்பு இவரை உயர்த்தியது. 1906இல் ஸ்பென்சர் நிறுவனத்தில் கணக்கராக சேர்ந்தார். விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டதால், அந்த வேலையைத் துறந்தார். வெஸ்லி கலாசாலையிலும், பள்ளியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிவர்.

‘தேச பக்தன்’ பத்திரிகையின் ஆசிரியராக இரண்டரை ஆண்டுகள் இருந்தார். தனது எழுச்சிமிக்க எழுத்துகளால், ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களை பொங்கி எழச்செய்தார். அந்நிய அடக்குமுறையை எதிர்த்து மேடைகளில் ஆவேசமாக உரை நிகழ்த்தியவர்.

**சிறப்பு பெயர்கள்**

- தமிழ்த்தென்றல்
- தமிழ் முனிவர்
- தமிழ் பெரியார்
- தமிழ்ச்சோலை
- தமிழ் புதிய உரைநடையின் தந்தை
- தமிழ் மேடைப்பேச்சின் தந்தை

- தொழிலாளர் தந்தை
- பேனா மன்னருக்கு மன்னன்(பி.ஸ்ரீ.ஆச்சாரியார்)
- இக்காலத் தமிழ்மொழி நடையாளர்
- தமிழ் வாழ்வினர்

**கற்றல்**

- தமிழ் கற்றது = யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளையிடம்
- சித்தாந்த சாத்திரம் கற்றது = மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம்
- இலக்கியம் கற்றது = மறைமலை அடிகளிடம்
- சமய அறிவு பெற்றது = பாம்பன் சுவாமிகளிடம்




**திரு வி க உரைநடை நூல்கள்**

- முருகன் அல்லது அழகு
- தமிழ்ச்சோலை
- உள்ளொளி
- மேடைத்தமிழ்
- சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
- மனித வாழ்கையும் காந்தியடிகளும்
- பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம்
- தமிழ்த் தென்றல்
- சைவத்திறவு
- இந்தியாவும் விடுதலையும்
- சைவத்தின் சமரசம்

- கடவுட் காட்சியும் தாயுமானவரும்
- நாயன்மார்கள்தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
- இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
- தமிழ்ந்நோல்களில் பௌத்தம்
- காதலா? முடியா?சீர்திருத்தமா?
- என் கடன் பணி செய்து கிடப்பதே
- இமயமலை அல்லது தியானம்
- இளமை விருந்து
- பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியும்
- வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கை பிதற்றல்

**செய்யுள்**

- முருகன் அருள் வேட்டல்
- கிறித்துவின் அருள் வேட்டல்
- உரிமை வேட்கை
- திருமால் அருள் வேட்டல்
- சிவன் அருள் வேட்டல்
- புதுமை வேட்டல்
- பொதுமை வேட்டல்
- அருகன் அருகே
- கிறித்து மொழிக்குறள்
- இருளில் ஒளி
- இருமையும் ஒருமையும்
- முதுமை உளறல்

**பயண நூல்**

- எனது இலங்கை செலவு

**இதழ்**

- நவசக்தி

- தேசபக்தன்

**திரு வி க குறிப்புகள்**

- பெரியபுராணத்திற்கு குறிப்புரை எழுதியுள்ளார்
- திருக்குறளின் முதல் 10 அதிகாரங்களுக்கு விரிவுரை அளித்துள்ளார்
- சென்னை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகப் பனிப் புரிந்தார்
- இவரின் சொற்பொழிவுகள் எல்லாம் “தமிழ்த்தென்றல்” என்ற தலைப்பில் தொகுத்து வெளியிடப்பட்டது
- இவரின் பத்திரிக்கைத் தலையங்கம் எல்லாம் தொகுத்து “தமிழ்ச்சோலை” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது
- இவரின் மேடைபேச்சுகள் எல்லாம் “மேடைத்தமிழ்” என்ற தளிப்பில் வெளியிடப்பட்டது
- இவரின் செய்யுள் நூல்கள் எல்லாம் “அருள் வேட்டல்” என்ற தலைப்பில் தொகுத்து வெளியிடப்பட்டது

**திரு வி க சிறப்புகள்**

- இந்தியாவிலிலேயே முதன் முதலாக சென்னையில் தொழிலாளர் சங்கத்தைத் தொடங்கினார்
- திரு.வி.க நடை என்று கூறும் அளவிற்கு தனி நடையை உரைநடையில் கொண்டவர்
- அடுக்குத் தொடர்கள், வியங்கோள் அமைப்பு, வியப்புத் தொடர்கள், மரபுச் சொற்கள், கவிதை வரிகள், வினாவிடைப் பாங்கு, மேடைப் பேச்சுநடை, புதிய சொல்லாக்கம் ஆகியன இவர் தம் உரைநடையின் தனித்தன்மையாகும்
- பி.ஸ்ரீ.ஆச்சார்யா = பேனா மன்னருக்கு மன்னன். அவர் சிறந்த பக்தன். அவர் சாகவில்லை. ஏனெனில் பக்தனைக் கண்டு சாவுதான் செத்துப் போகிறது. அவர் வாழ்ந்து வந்த புதுப்பேட்டை விலாசம் தான் மாறியிருக்கிறது. புது விலாசம் மக்கள் உள்ளம்
- “பிரயாணம்” என்ற சொலுக்கு பதிலாக “செலவு” என்ற சொல்லை பயன்படுத்தியவர்
- எத்துறை பற்றியும் இன்தமிழில் பேசவும் எழுதவும் முடியும் என நிறுவியவர் இவரே

- திரு.வி.காவின் இலக்கிய வாரிசுகள் = மு.வ, கல்கி
- திரு.வி.க-வைப் பற்றிக் குறிப்பிடும்போது கல்கி கூறுகிறார்: "அவருடைய குணாதிசயங்களுக்குள்ளே என் ஞாபகத்தில் மேலோங்கி நிற்பது 'அவர் எவ்வளவு நல்லவர்' என்பதேயாகும். இந்த உலகத்தில் ஒரு மனிதன் பெறக்கூடிய பேறு இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்கிறது?"
- சங்க இலக்கியங்கள் பற்றி திரு.வி.க இவ்வாறு அழைக்கிறார்.
- இயற்கை ஓவியம் = பத்துப்பாட்டு
- இயற்கை இன்பக்கலம் = கலித்தொகை
- இயற்கை வாழ்வில்லம் = திருக்குறள்
- இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் = சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
- இயற்கைத் தவம் = சிந்தாமணி
- இயற்கைப் பரிணாமம் = கம்பராமாயணம்
- இயற்கை அன்பு = பெரியபுராணம்
- இயற்கை இறையுறையுள் = தேவார திருவாசக திருவாய் மொழிகள்

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

---

1. திரு. வி. க _____________ என்ற அடைமொழியைப் பெற்றவர்.
2. திரு.வி.க ____________ பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

---

## 9.2. மாணாக்கரும் தாய்மொழியும்

மாணாக்கர்களுடைய கடமைகள் பல. அவைகளுள் சிறந்தது தாய்மொழிக்குரிய கடனாகும். தமிழ் நாட்டு மாணாக்கர்களுடைய வாழ்நாளைப்பற்றி ஆராய்கின்ற காலத்து, அவர்கள் தங்கள் தாய்மொழிக்காக எவ்வளவு நேரம் செலவழிக்கிறார்கள் என்பதற்கும், உண்மையாக அதன்மாட்டு அவர்களுக்குக் காதல் உண்டா என்பதற்கும் ஆசிரியரே காரணமாக இருப்பர்.

நானும் ஏறக்குறைய 15 ஆண்டுகள் உங்களைப் போன்ற மாணாக்கர்களிடத்தில் நன்கு பழகிச் சில கல்லூரிகளில் ஆசிரியனாகவும் தமிழ் ஆசிரியனாகவும் பெரிதும் இருந்ததுண்டு. அதிலிருந்து பெற்ற

அடைவு என்னவெனில், நம்முடைய நாட்டில் இளைஞர்களுக்குப் தாய்மொழியினிடம் பற்று இல்லை என்பதே. அவ்வுண்மையைக் கண்டே, சர்வகலா சாலையார், சில ஆண்டுகளுக்கு முன்னர், 'தமிழ் கட்டாய பாடமாக இருத்தல் கூடாது. அதை இஷ்டபாடமாகச் செய்தல் நலம்' என்று நினைந்து, அவ்வாறே செய்திருக்கிறார். எனவே, இளைஞர்களாகிய உங்களுக்குத் தமிழினிடத்தில் வேட்கை இல்லையெனில், வேறு எப்பொருளினிடத்து உங்களுக்கு வேட்கை உண்டாகும் என்று நீங்களே ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

ஒரு நாட்டினுடைய நிலையை அளந்து பார்க்க வேண்டுமானால், அந்நாட்டினுடைய மொழிநிலை எவ்வாறாக இருக்கிறது என்பதை முதலாவது அளந்து பார்த்தல் வேண்டும்" என திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார்.

நம்முடைய நாட்டை ஆண்டு வருவோர் யார்? ஆங்கிலேயர் என்று நீங்கள் சொல்வீர்கள் யான் வேறு வழியாகச் சொல்வேன். 'நம்மை ஆள்வது ஆங்கில மொழி' என்று யான் சொல்வேன் என திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர்கள் - வாணிபம், அரசியல், தொழில், போர், இன்னோரன்ன பல துறைகளில் உழைத்துவரும் அளவில் நில்லாது, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தாங்கள் பிறந்த தாய்நாடாகவுள்ள இங்கிலாந்து மாதினுடைய மொழியைப் பொன்னேபோல் போற்றி வளர்த்து வருகிறார்கள்.

இங்கிலாந்தும் நமது நாடு போன்ற ஒரு நாடே. அந்நாட்டார் எவ்வளவு ஆர்வங்கொண்டு, பல்லாயிரம் மைல் தூரத்திலிருந்து, போந்து, அவர் மொழியிலே மிளிர்கிற மணிகளை நாம் அணியுமாறு செய்திருக்கிறார். ஆங்கிலேய மொழியில் ஒருவன் உலகத்திலிருக்கிற எண்ணிறந்த கருத்துக்களை உணரலாம்.

பிஷப் கால்டுவல், டாக்டர் போப் முதலியவர்கள் இந்நாட்டிலே வந்து செல்வம் திரட்டிச் சென்றார்கள் என்று மட்டும் நாம் சொல்வதுகூடாது. அவர்கள், தாங்கள் பிறந்த நாட்டினுடைய ஆங்கிலேய மொழிக்கு ஆக்கம் தேடிவைத்தது பெரிதும் கருதற்பாலது. நம்மவர்க்குள் ஆங்கிலம் படித்தவர் பலர் தொல்காப்பியம் அறிந்திலர். ஆனால் பிஷப் கால்டுவல், அந்நூலைப் பயின்று, ஆராய்ந்து அதன் நுட்பங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். மாணிக்கவாசகருடைய திருவாசகத்தின் உள்ளுறையை ஆங்கிலம் பயின்ற நம்மவர் அறிய விரும்பும்போது, டாக்டர்

போப்பினுடைய மொழிபெயர்ப்பைத் தேடிப் பார்க்கிறார்கள். நம்மாழ்வார் திருவாய்மொழியின் கருத்தை அறியவேண்டுமானால், சிலர் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தடவுகிறார். இன்னும், திருவள்ளுவரின் திருக்குறளை நேராகத் தமிழில், ஆங்கிலம் பயின்ற தமிழர்களில் பலர் படிக்கிறாரில்லை. நம் நாட்டுப் பெரியோர்கள் அருளிய உண்மைகளைத் தாய்மொழி வாயிலாக உணரும் ஆற்றலையும் வன்மையையும் இழந்து அவைகளை வேறுமொழி வாயிலாக அறிந்துகொள்ள முயலும் நிலையை நாம் அடைந்திருக்கிறோம். திருவாசகம், திருவாய்மொழி போன்ற அரும்பெரும் நூல்களின் கருத்துக்களை நாம் செவ்வனே உணர வேண்டுமானால், அவைகளைத் தாய்மொழியின் மூலம் உணர்வதே சிறப்பு.

ஆங்கில நாட்டினர் தம் தாய்மொழியில் உலகக் கருத்துக்களை இறக்கி, அம்மொழியைச் சேம நிதியாக்கி- யிருக்கிறார். அவர்கள் வீரர்களே. தாய்மொழியைப் பரப்புவது வீரம் வீரமே யாகும். இப்பொழுது ரவீந்திரநாத் தாகூர் இங்கே வருவாரானால், இங்கே இருக்கிற ஆங்கிலப் புலவர்களும் ஆங்கில மொழியின் அருமையை உணர்ந்து, பாட்டின் அழகை நன்றாக அறிந்துள்ள நம்மவர்களும் - அவரை வரவேற்பார்கள். என்ன காரணம்? அவர் உலகம் போற்றும் ஒரு பெரிய ஆங்கிலக் கவி அரசர் என்பதே அவருக்கு அப் பட்டத்தைக் கொடுத்தது எது? அவரால் அருளிச் செய்யப்பெற்ற கீதாஞ்சலி என்னும் நூல் ஆகும்.

அஃது இப்பொழுது ஆங்கிலத்திலே வெளி வந்திருக்கிறது. மேல்நாட்டார் அதைப் படிக்கிறார் பெல்ஜியம், ஜெர்மனி முதலிய இடங்களுக்குத் தாகூர் ஏகியபோது, 'இவர் தாமோ கீதாஞ்சலி இயற்றிய தாகூர்' என்று பல்லாயிரம் மக்கள் கேட்டார்கள்; போற்றினார்கள். தாகூர் கீதாஞ்சலியை முதல் முதல் வங்கத் தாய் மொழியிலேயே அதை எழுதினார். பின்னர் அவரே அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

தேசபக்தியில் சிறந்த பாலகங்காதர திலகர் ஆறு ஆண்டு சிறைக்கோட்டம் நண்ணிய காலத்தில், 'கீதா ரகசியம்' என்னும் அரிய நூலை ஆங்கிலத்தில் எழுதாமல் அவரும் முதலில் அதைத் தமது தாய்மொழியாகிய மஹராஷ்டிர மொழியிலேயே எழுதினார். ஏன்? அவர் நாட்டின் மொழியை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தினாலே அக் கடனாற்றினார். இவ்வளவு ஏன்? இவ்வுலகம் போற்றும் மகாத்மா காந்தி, 'எங் இந்தியா பத்திரிகையில் எத்துணையோ கருத்துக்களை நேராக ஆங்கிலத்தில் எழுதி வந்தாலும், தம் வாழ்க்கை வரலாற்றை மட்டும், அவர் தாம் பிறந்த நாட்டின் மொழியாகிய

கூர்ஜரத்தில் அன்றோ எழுதுகிறார்? பின்னைத் தேசாய் என்பவர் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகிறார்.

தமிழ் என்பது நமது தாய்மொழி. நாடு என்பதற்கு ஆங்கிலத்தில் Land என்று மொழி பெயர்க்கிறார் சிலர். அது கூடாது. 'தமிழ்நாடு' என்பதற்கு 'Tamil Nation' என்று சொல்வேன். Nation என்பதற்குத் தமிழென்ன' என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. யான் 'நாடு' என்று சொல்வது வழக்கம். மனிதர்களின் பழக்க வழக்கம், கல்வி, அரசு, வாழ்வு, வீரம் இவைகள் எல்லாஞ் சேர்ந்த ஒன்றற்கு 'நாடு' என்று பெயர். இப்பொழுது இவைகளில் நமக்கு என்னென்ன இருக்கின்றன? நமக்கு இப்பொழுது நாடு உண்டா? நாம் நாடு அற்றவர்களாக இருக்கிறோம். காரணம் என்ன? தாய்மொழியினிடத்தில் இடையறாத காதல் செலுத்தாமையாகும்.

தமிழ்நாட்டிலே தோன்றியிருக்கிற போர், சாதிப் போரே. மற்றப் போர்கள் இதில் அடங்கிவிடும். ஒரு நாட்டில் குடிபுகுந்து நிலைத்திருப்போர் அந்நாட்டவராதல் இயல்பு. இதுபற்றிய விரிவுரை ஈண்டு வேண்டுவதில்லை. எல்லோரும் தமிழர்களாக வாழ்ந்துவரின், உட்போர்கள் ஞாயிறு முற்பட்ட பனியைப்போல மறையும். 'Expansion of England' என்னும் நூலாசிரியர் கடவுளின் நெறி (சமயம்) நாட்டுக்கு அடிப்படையாக இருத்தல் வேண்டுமென்று சொல்கிறார். சமயப்போர் உலகிடைத் தோன்றின், ஐரோப்பா கண்டத்தின் (Christendom) ஒற்றுமை புலனாகுமென்று அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

தமிழ்நாட்டிலோ ஒரே சமயத்தைக் கொண்டு, எல்லோரையும் அதைக் கடைப்பிடிக்குமாறு செய்தல் முடியாது. அது கஷ்டமே. என்றாலும், இந்நாட்டிடைப் பிறந்த மக்களை ஒற்றுமை என்ற வலையிலே பிணிக்க வேண்டுமானால், அதற்கு உறுகருவி யாயிருப்பது தமிழ்மொழியே. தமிழர்களில் கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் பலர் இருக்கிறார். இவர்களிற் சிலர் தம்மைத் தமிழராகக் கருதி வாழ்வு நடாத்துவதில்லை. இது தவறு.

சில இங்கிலீஷ்காரர்கள் முஸ்லீம்களாகவும் ஹிந்துக்களாகவும் மாறி இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தங்களை இங்கிலீஷ்காரர் களென்றே சொல்லிக் கொள்கிறார்கள். நாம் எந்தச் சமயத்தைப் பற்றினாலும் நாம் அனைவரும் தமிழர்கள் என்பதை மறத்தலாகாது. நாம் பண்டை நிலையை அடைய வேண்டுமானால் - அதற்குரிய ஒற்றுமை பெற வேண்டுமானால் தாய்மொழியின் இன்றியமையாமையை உணர்ந்து வாழ்வோமாக. தமிழ் வாழ்க. (நவசக்தி, 08-02-1928).

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக-2**

1. திரு.வி.க. பெரியபுராணத்திற்கு ____________ எழுதியுள்ளார்.
2. திரு.வி.க.வின் சொற்பொழிவுகள் எல்லாம் _____________என்ற தலைப்பில் தொகுத்து வெளியிடப்பட்டது.
3. திரு.வி.க வின் செய்யுள் நூல்கள் எல்லாம் _______ என்ற தலைப்பில் தொகுத்து வெளியிடப்பட்டது.

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் நீங்கள் உரைநடை மற்றும் மாணாக்கரும் தாய்மொழியும் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. 'தமிழ்த் தென்றல்'
2. 'தேச பக்தன்'

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -2**

1. குறிப்புரை
2. "தமிழ்த்தென்றல்"
3. "அருள் வேட்டல்"

**பயிற்சி வினா மற்றும் விடை**

**குறுவினா**

1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

   **விடை:** இன்றைய கல்வி குறிப்பிட்ட பாடங்களை நெட்டுற (மனப்பாடம்) செய்து தேர்வில் தேறி, பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்கு ஒரு கருவியாக கொள்ளப்பட்டு வருகிறது.

   நாளடைவில் அக்கல்விக்கும், வாழ்விற்கும் தொடர்பு இல்லாமல் போகிறது என்று திரு.வி.க. கூறுகிறார்

2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

   **விடை:** தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது.

3. திரு. வி. க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

**விடை:** இளங்கோவடிகள், திருத்தக்கத்தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி

**சிறு வினா மற்றும் விடை**

1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.

   **விடை:** கலப்பில் வளர்ச்சி உண்டு என்பது இயற்கை நுட்பம்.

   - தமிழை வளர்க்கும் முறையிலும், அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பி.
   - ஆகவே, தமிழ் மொழியில் அறிவுக் கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கம் தேடுவோம் என்னும் புதுப்பாட்டு பாடுமாறு சகோதரர்களை கேட்டுக் கொள்கிறேன்.
   - கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தப்படும் காலமே தமிழ்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று திரு.வி.க. கூறுகின்றார்.

2. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?

   **விடை:** உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்'

   - உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றை பற்றிய அறிவும், கோள் இயக்கம், கணிதம், அகத்திணை முதலிய அறிவும் நமக்கு வேண்டும்.
   - இந்நாளில் அத்தகைய அறிவு தேவை. புற உலகு ஆராய்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது.
   - நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி, இந்நாளில் உறுதி பெறலரிது.
   - இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை.
   - ஆகவே, அறிவியல் என்றும் அறிவுக்கலை இளைஞர்கள் உலகில் பரவ வேண்டும் என்று திரு.வி.க. கூறுகிறார்

**நெடு வினா மற்றும் விடை**

1. காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**விடை:** வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதுவே முதன்மையானது என்றும் கூறலாம்.

- நாம் தமிழர்கள். நாம் பாட்டு இன்பத்தை நுகர வேண்டும். அதற்காகத் தமிழ் இலக்கியங்களுக்கு இடையே செல்ல வேண்டும். தமிழ் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன.
- இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள்
- இத்தமிழக் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்திலும் வரும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது.
- இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள். தமிழ் இன்பத்தில் சிறந்த இன்பம் இவ்வுலகில் உண்டோ? தமிழ்க் காவியஙகளை படியுங்கள். இன்பம் நுகருங்கள் என்று திரு.வி.க. காப்பியக் கல்வி பற்றி கூறுகிறார்.

# பிரிவு-10

## மன வலிமை வேண்டும் - மு.வரதராசனார்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

10.1. மு. வரதராசன்

10.2. மனவலிமை வேண்டும்

உங்கள் முன்னேற்றத்தை சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

பயிற்சி வினா

**அறிமுகம்**

இப்பிரிவில் நீங்கள் மு.வரதராசன், மனவலிமை வேண்டும் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்வீர்கள்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்துகொள்ளலாம்.

- மு. வரதராசன், மனவலிமை வேண்டும்

**10.1. மு. வரதராசன் - மனவலிமை வேண்டும்**

**ஆசிரியர் குறிப்பு**



20ஆம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவரும் கல்வியாளர், இலக்கிய ஆராய்ச்சியாளர், படைப்பாளர் என பன்முகப் பரிமாணம் கொண்டவர் மு.வரதராசன்.

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் வேலம் என்ற சிற்றூரில் பிறந்தார் (1912). இவரது இயற்பெயர் திருவேங்கடம், வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டையில் ஆரம்பக் கல்வி கற்றார். திருப்பத்தூரில் உயர்நிலைக் கல்வி கற்றார்.

1931இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் தானே பயின்று 1935இல் வித்வான் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்ச்சி பெற்று, திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் ரூபாய் பரிசும் பெற்றார். திருப்பத்தூர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து, நற்றிணை விருந்து, திருக்குறள் உரை, தமிழ் இலக்கிய வரலாறு, கள்ளோ காவியமோ, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, கரித்துண்டு, உள்ளிட்ட குறிப்பிடத்தக்க நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். தூய தமிழில் பிறமொழிக் கலப்பு இல்லாமல் கதை எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

'அகல் விளக்கு' என்ற நாவலுக்காக இவருக்கு 1961ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இவரது 'கள்ளோ காவியமோ', 'அரசியல் அலைகள்', 'மொழியியல் கட்டுரைகள்' ஆகிய 3 நூல்களுக்கு தமிழக அரசின் விருது கிடைத்தது. இவரது பல நூல்கள் ஆங்கிலம், இந்தி, மராத்தி, சிங்களம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கால தவறாமையை இறுதிவரைக் கடைபிடித்தவர். அனைவராலும் 'மு.வ.' என நேசத்துடன் அழைக்கப் பட்டார். இறுதிவரை தமிழ்ப் பணியாற்றி வந்தவருமான மு.வரதராசனார், 1974ஆம் ஆண்டு 62ஆவது வயதில் மறைந்தார்.

பழங்கால நம்பிக்கைகளும் கொள்கைகளும் ஒருபுறம்: இக்காலப் புத்தறிவும் புதுப்போக்கும் ஒருபுறம்: இவற்றிடையே போராட்டம் உள்ளது. பழமைக்கு எதிர்ப்பு வளர்ந்து வருகிறது; ஆயினும் புதுமையும் ஆக்கம் தருவதாக இல்லை. ஆதலின் பலர் உள்ளம் தடுமாற்றம் உற்றுத்

தளரக் காண்கிறோம். பழமை புதுமை இவற்றி டையே, என்றும் பயன் தரவல்ல அடிப்படை நெறிகள் சில உள்ளன. அவற்றைப் போற்றினால், வாழ்வில் அமைதியும் இன்பமும் வாய்ப்பதை ஒவ்வொருவரும் உணரலாம். இதை அறிவுறுத்துவதே இந்த நூலின் நோக்கம் ஆகும். (சென்னை-30 20-6-1973)

**மு. வரதராசன் ஆசிரியர் குறிப்பு**

- மு.வ என அழைக்கப்படுபவர் = மு.வரதராசனார்
- மு. வரதராசனாரின் இயற்பெயர் = திருவேங்கடம்.
- காலம் = ஏப்ரல் 25, 1912 – அக்டோபர் 10, 1974
- ஊர் = வாலாஜாப்பேட்டை அருகே வேலம்
- பெற்றோர் = முனுசாமி – கண்ணு அம்மாள்
- பாட்டி வைத்த பெயர் = திருவேங்கடம்
- பெற்றோர் வைத்த பெயர் = வரதராசன்.
- மு.வ வின் ஆசிரியர் = முருகையா முதலியார்
- மு.வரதராசனாரின் அரசியல் ஆசிரியர் = திரு.வி.க

**மு. வரதராசன் சிறப்புப்பெயர்கள்**

- தண்டமிழ்ச் சான்றோர்
- தமிழ்நாட்டின் இலக்கிய நோபல் பரிசாளர் (கூறியவர் = இலங்கை அமைச்சர் நடேசன்)
- “தமிழ் பெர்னாட்ஷா” என்று அழைக்கப்பட்டவர் = மு.வ (கூறியவர் = திரு.வி.க)
- “இலக்கிய இமயம்” என்று அழைக்கப்படுபவர் = மு.வ
- “உலகம் சுற்றிய முதல் தமிழ் அறிஞர்” என்று அழைக்கப்படுபவர் = மு.வ
- “உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர்” என்று அழைக்கப்படுபவர் = மு.வ

**மு. வரதராசன் நாவல்கள்**

- கல்லோ காவியமோ
- நெஞ்சில் ஒரு முல்

- அகல் விளக்கு (சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நாவல்)
- கரித்துண்டு
- பெற்ற மனம்
- செந்தாமரை (மு.வ அவர்களின் முதல் நாவல்)
- பாவை
- அந்த நாள்
- மலர் விழி
- அல்லி
- கயமை
- மண் குடிசை
- வட மலர்

**மு. வரதராசன் நாடகங்கள்**

- பச்சையப்பர்
- மனச்சான்று
- இளங்கோ
- மருத்துவர் அலி
- மூன்று நாடகங்கள்
- காதல் எங்கே?

**மு. வரதராசன் கட்டுரைகள்**

- அறமும் அரசியலும்
- அரசியல் அலைகள்
- குருவி போர்
- பெண்மை வாழ்க
- குழந்தை
- கல்வி
- மொழி பற்றி
- நாட்டுப் பற்று

- உலக பேரேடு
- மண்ணின் மதிப்பு
- நல்வாழ்வு

**மு. வரதராசன் இலக்கிய வரலாறு நூல்கள்**

- தமிழ் இலக்கிய வரலாறு
- தமிழ் நெஞ்சம்
- மணல் வீடு
- திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்
- திருக்குறள் தெளிவுரை
- ஓவச்செய்தி
- கண்ணகி
- மாதவி
- முல்லை திணை
- நெடுந்தொகை விருந்து
- குறுந்தொகை விருந்து
- நற்றிணை விருந்து
- இலக்கிய ஆராய்ச்சி
- நற்றிணை செல்வம்
- குருந்தொகை செல்வம்
- நடைவண்டி
- கொங்குத்தேர் வாழ்க்கை
- புலவர் கண்ணீர்
- இலக்கிய திரன்
- இலக்கிய மரபு
- தாயுமானவர்
- இளங்கோ அடிகள்
- இலக்கிய கட்சிகள்

- குறள் காட்டும் காதலர்
- சங்க இலக்கியத்தில் இயற்கை

**குழந்தை இலக்கியம்**

- குழந்தைப் பாடல்கள் (மு.வ அவர்களின் முதல் நூல்)
- இளைஞருக்கான இரு சிறுகதைகள்
- படியாதவர் படும்பாடு
- கண்ணுடைய வாழ்வு

**மொழியியல் நூல்கள்**

- மொழி நூல்
- மொழியின் கதை
- எழுத்தின் கதை
- சொல்லின் கதை
- மொழி வரலாறு
- மொழியியற் கட்டுரைகள்

**வாழ்க்கை வரலாறு நூல்கள்**

- அறிஞர் பெர்னாட்ஷா
- காந்தியண்ணல்
- கவிஞர் தாகூர்
- திரு.வி.க

**மு.வ கடிதங்கள்**

- அன்னைக்கு
- தம்பிக்கு
- தங்கைக்கு
- நண்பருக்கு

**ஆங்கில நூல்கள்**

- The Treatment of Nature in Sangam
- Ilango Adigal

**பயண இலக்கியம்**

- யான் கண்ட இலங்கை

**மு. வரதராசன் சிறுகதைகள்**

- கி. பி. 2000
- பழியும் பாவமும்
- விடுதலையா?
- குறட்டை ஒலி
- எதையோ பேசினார்?
- தேங்காய்த் துண்டுகள்
- வீண் கனவு
- திலகவதியார்
- ஆலும் தென்னையும்
- கட்டாயம் வேண்டும்
- வாய்த் திறக்க மாட்டேன்
- எவர் குற்றம்
- அந்த மனம் வருமா
- சுடரின் நகைப்பு
- அமவாசையார்
- அக்கரைப்பச்சை
- வாழும் வழி

**மு. வரதராசன் குறிப்புகள்**

- 13 நாவல்கள், 6 நாடகங்கள், 2 சிறுகதைத் தொகுப்புகள், 11 கட்டுரைத் தொகுப்புகள், தமிழ் இலக்கிய வரலாறு குறித்த புத்தகம், தமிழ் மொழியியல் புத்தகங்கள் மற்றும் குழந்தைகளுக்கான புத்தகங்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.
- ர.பி.சேதுப்பிள்ளையின் வேண்டுகோளை ஏற்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றியவர்.

- மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி உள்ளார்.
- மு.வ வின் ஆசிரியர் = முருகையா முதலியார்
- மு.வரதராசனாரின் அரசியல் ஆசிரியர் = திரு.வி.க
- மு.வ அவர்களின் முதல் நூல் = குழந்தைப் பாட்டுக்கள்.

**மு. வரதராசன் சிறப்புகள்**

- மு.வரதராசன் 1953இல் வித்வான் தேர்வில் தமிழக அளவில் முதன்மையிடம் பெற்று திருப்பனந்தாள் ஆதீனம் அளித்துவந்த ஆயிரம் ரூபாய் பரிசையும் பெற்றார்.
- சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்றவர் = மு.வ ஆவார்.
- மு.வரதராசனின் நூல்களில் மிகப்பெரிய அளவில் விற்பனையானதும், தொடர்ந்து விற்பனையாவதும் திருக்குறளுக்கு எழுதிய எளிய உரை.
- மு.வ அவர்களின் “அகல் விளக்கு” நாவலுக்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.
- மு.வரதராசனுக்கு அமெரிக்க வூஸ்டர் கல்லூரி டி.லிட் பட்டத்தை 1977இல் வழங்கியது. வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் பட்டம் முதல் தமிழ் அறிஞர் மு.வ தான்.
- உலகம் சுற்றி வந்த முதல் தமிழ் பேராசிரியர்.
- இவரது ‘கள்ளோ காவியமோ’, ‘அரசியல் அலைகள்’, ‘மொழியியல் கட்டுரைகள்’ ஆகிய 3 நூல்களுக்கு தமிழக அரசின் விருது கிடைத்தது
- தமிழ் இலக்கியத்துறைக்குக் கடித இலக்கியம் என்ற புதியதொரு இலக்கியத்தை அறிமுகம் செய்த பெருமை இவருக்கு உண்டு.
- கடித இலக்கியத்தை தமிழில் அறிமுகம் செய்தவர்.
- இந்திய சுதந்திரப் பேராட்ட நூற்றாண்டின் போது, 08.1957 அன்று அவருக்கு சென்னை அரசாங்கம் ‘தமிழிலக்கியத் துறையில் தலையாய தொண்டாற்றியவர்’ என்ற பாராட்டுப் பத்திரம் வழங்கி, அழகிய நடராஜர் உருவம் பொறித்த செப்புக்கேடயத்தை வழங்கிக் கௌரவித்தது.

**மு. வ. தமிழ் அறிஞர், இலக்கிய ஆராய்ச்சியாளர்**

20ஆம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவரும் கல்வியாளர், இலக்கிய ஆராய்ச்சியாளர், படைப்பாளர் என பன்முகப் பரிமாணம் கொண்டவருமான மு.வரதராசன் (Mu.Varatharasan) பிறந்த தினம் இன்று (ஏப்ரல் 25).

- வட ஆற்காடு மாவட்டம், திருப்பத் தூரில் வேலம் என்ற சிற்றூரில் பிறந்தார் (1912). இவரது இயற்பெயர் திருவேங்கடம், ஆனால் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே நிலைத்துவிட்டது. வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டையில் ஆரம்பக் கல்வி கற்றார். திருப்பத்தூரில் உயர்நிலைக் கல்வி கற்றார்.
- 1931இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் தானே பயின்று 1935-ல் வித்வான் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்ச்சி பெற்று, திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் ரூபாய் பரிசும் பெற்றார். திருப்பத்தூர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
- காந்தியடிகள், திரு.வி.க., தாயுமானவர், ராமதீர்த்தர், ராமலிங்க சுவாமிகள், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், தாகூர், காண்டேகர் ஆகியோரின் கருத்துகளால் கவரப்பட்டார். 1939-ல் பி.ஓ.எல். தேர்ச்சி பெற்றார். அதே ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் கீழ்த்திசை மொழிகளில் விரிவுரையாளர் என்ற பொறுப்பேற்றார்.
- 1944இல் 'தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதி, எம்.ஓ.எல். பட்டம் பெற்றார். 1948இல் 'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முறையாகத் தமிழில் முனைவர் பட்டம் பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் சென்னை பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறைத் தலைவராக செயல்பட்டார். பின்னர் மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றி ஓய்வுபெற்றார்.
- நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து, நற்றிணை விருந்து, திருக்குறள் உரை, தமிழ் இலக்கிய வரலாறு, கள்ளோ காவியமோ, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, கரித்துண்டு, உள்ளிட்ட குறிப்பிடத்தக்க நூல்களை எழுதியுள்ளார்.

- இவரது திருக்குறள் தெளிவுரை 100க்கும் மேற்பட்ட பதிப்புகளாக வெளிவந்துள்ளன. சாகித்ய அகாடமி, பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம்-தமிழ் அகராதிக் குழு உள்ளிட்ட ஏராளமான அமைப்புகளில் அங்கம் வகித்துள்ளார்.
- தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். தூய தமிழில் பிறமொழிக் கலப்பு இல்லாமல் கதை எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.
- கல்வித் துறை ஆய்வு மாநாடுகளில் பங்கேற்பதற்காக இந்தியா சார்பில், ரஷ்யா, பாரீஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்றுள்ளார். 1972இல் அமெரிக்க ஊஸ்டர் கல்லூரி இவருக்கு டி.லிட். பட்டம் வழங்கியது.
- ‘அகல் விளக்கு’ என்ற நாவலுக்காக இவருக்கு 1961ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இவரது ‘கள்ளோ காவியமோ’, ‘அரசியல் அலைகள்’, ‘மொழியியல் கட்டுரைகள்’ ஆகிய 3 நூல்களுக்கு தமிழக அரசின் விருது கிடைத்தது. இவரது பல நூல்கள் ஆங்கிலம், இந்தி, மராத்தி, சிங்களம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- காலம் தவறாமையை இறுதிவரைக் கடைபிடித்தவர். அனைவராலும் ‘மு.வ.’ என நேசத்துடன் அழைக்கப்பட்டார். இறுதிவரை தமிழ்ப் பணியாற்றி வந்தவருமான மு.வரதராசனார், 1974ஆம் ஆண்டு 62ஆவது வயதில் மறைந்தார்.

**தமிழ் உரைநடைக்கு மு.வ.வின் பங்களிப்பு**

மு. வரதராசனாரின் படைப்புகள் அனைத்தும் தமிழ் உரைநடைக்கு அவர் அளித்த பங்களிப்புகள் ஆகும். மு.வ.வின் பங்களிப்புகளைப் பின்வரும் ஐந்து தலைப்புகளில் வகைப்படுத்திக் காணலாம். அவை,

- புனைகதை
- இலக்கிய ஆய்வுகள்
- கடித இலக்கியம்
- திருக்குறள் தெளிவுரை
- வாழ்க்கை வரலாற்று நூல்கள் என்பன.

**புனைகதை**

புனைகதை என்பது படைப்பிலக்கியம் என்றும் அழைக்கப்படும். இப்பிரிவில் மு.வ.வின் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், சிந்தனைக் கதைகள் ஆகியவற்றை அடக்கலாம். முறையாகத் தமிழ் பயின்று, பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் தமிழாசிரியர்களாகத் திகழ்பவர்கள் படைப்பிலக்கியத் துறையில் புகழ்பெறுவதில்லை என்றவொரு கருத்து மு.வ. காலத்தில் நிலவியது. அதனைத் தம் புனைகதைகளால் முறியடித்தவர் மு.வ. தமிழ்ப் பேராசிரியர்கள் நாவல், சிறுகதை, நாடகம் முதலியவற்றைப் படைத்துப் பாராட்டுப் பெற முடியும் என்பதை மு.வ. நிறுவினார்.

**புனைகதைகளில் மொழிநடை**

தமிழ் உரைநடையில் மு.வ.வின் முக்கியப் பங்களிப்பு என்பது அவரது புனைகதைகளில் காணப்பட்ட மொழிநடை ஆகும். புனைகதைகளில் கதைமாந்தர்களின் உரையாடல் அவர்தம் கல்வி, வாழ்க்கை நிலை, வாழ்விடம் இவற்றிற்கு ஏற்ற வகையில் தான் அமைய வேண்டும்; அமையும் என்று மற்றவர்கள் எண்ணியும் எழுதியும் வந்த போது மு.வ. தம் கதைமாந்தர்கள் அனைவரையும் தூய தமிழில் பிறமொழிக் கலப்பற்ற தமிழில் பேசுமாறு படைத்தவர். மு.வ.வின் புனைகதைகளில் கைவண்டி இழுப்பவரும், கல்லூரிப் பேராசிரியரும் ஒரே வகையிலேயே பேசும் இயல்பினராகப் படைக்கப்பட்டுள்ளனர்.

**இலக்கிய ஆய்வுகள்**

மு.வ. கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் தமிழகத்தில் சங்க இலக்கியங்களைப் பயில வேண்டும் என்ற வேட்கை எழுந்தது. அதற்கு ஏதுவாகச் சங்க இலக்கியக் காட்சிகளை மு.வ. தனித்தனி ஆய்வு நூல்களாக ஆக்கித் தந்தார். இவ்வகையில் மு.வ. ஆக்கியவற்றுள், முல்லைத் திணை, நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து, நற்றிணை விருந்து முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த உரைநடை நூல்கள் சங்க இலக்கியக் காட்சிகளை இயல்பாக வெளிப்படுத்தும் தன்மையில் அமைந்தவை ஆகும். இது மு.வ.வின் மற்றொரு பங்களிப்பாகும்.

**கடித இலக்கியம்**

ஆங்கில இலக்கியத்தில் ‘கடித இலக்கியம்’ என்பது புகழ்பெற்ற உரைநடை வடிவமாக அமைந்திருந்தது. அதனைப் போலவே தமிழிலும் கடித இலக்கியத்தைப் படைத்துக் காட்ட வேண்டும் என்று முனைந்தவர்களில் மு.வ. குறிப்பிடத்தக்கவர். இவர் எழுதிய கடித நூல்கள் நான்கு ஆகும். அவை முறையே,

- அன்னைக்கு
- நண்பர்க்கு
- தம்பிக்கு
- தங்கைக்கு

என்பன.

மு.வ.வின் கடித இலக்கியங்களில் ஒரு குடும்பம் கற்பனை செய்யப்படுகிறது. அது படித்த குடும்பம். குடும்பத்தில் தந்தை, தாய் இருக்கின்றனர்; இரண்டு ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையும் இருக்கிறார்கள். இந்தக் குடும்பத்தில் அண்ணன் தம்பிக்கும் தங்கைக்கும், மகன் அன்னைக்கும் எழுதும் கடிதங்கள் கடித இலக்கியம் என்னும் மு.வ.வின் பங்களிப்பாக அமைந்துள்ளன.

“தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும், இனிமேல் வல்லவர்களாகவும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்” (தம்பிக்கு, பக்கம். 6)

**திருக்குறள் தெளிவுரை**

‘தமிழ் மறை’ என்று போற்றப்படும் திருக்குறளுக்குப் பண்டைய நாளில் பத்துப்பேர் உரை எழுதியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்கள் பலரும் இந்த அறநூலுக்கு உரை வகுத்தனர். இவர்களுள் மு.வ. குறிப்பிடத்தக்கவர். மு.வ திருக்குறள் தெளிவுரை தமிழ் உரைநடைக்கு அவர் வழங்கியிருக்கும் வளம் நிறை கொடையாகும்.

மு.வ. திருக்குறள் முழுமைக்கும் தெளிவுரை வழங்கியிருக்கிறார். அவரது உரைநடை திருக்குறளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு**

என்னும் குறளுக்கு மு.வ வழங்கியிருக்கும் தெளிந்த உரையைப் பாருங்கள்.

"மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்; நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்லணிகலம் என்றும் கூறுவர்".

தமிழக மக்களிடையே திருக்குறளின் கருத்துகளை எளிய நடையில் எடுத்துச் சென்று சேர்த்த பெருமை மு.வ.வின் உரைநடைக்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

**வாழ்க்கை வரலாற்று நூல்கள்**

தமிழ் உரைநடைக்கு மு.வ. வழங்கிய மற்றுமொரு பங்களிப்பாக அவர் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்களைக் குறிப்பிடுதல் வேண்டும். மு.வ எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் நான்கு. அவை முறையே,

- அறிஞர் பெர்னாட்ஷா
- காந்தியண்ணல்
- கவிஞர் தாகூர்
- திரு.வி.க.ஆகும்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

---

1. மு.வ. வின் இயற்பெயர் _______________
2. மு.வ கூறும் நம் வாழ்க்கையின் மூன்று கூறுகள் _________
3. உலகத்தைத் திருத்துவதை விட _________ திருத்துவது எளிது.

---

## 10.2. மனவலிமை வேண்டும்

நம் வாழ்க்கையில் மூன்று கூறுகள் உள்ளன. ஒன்று உலகத்தால் - சுற்றுப்புறத்தால் - அமையும் வாழ்க்கைப் பகுதி; மற்றொன்று உடம்பால் அமையும் பகுதி. இன்னொன்று மனத்தால் அமையும் பகுதி.

பெரும்பாலோர் உலகத்தை சுற்றுப்புறத்தை திருத்துவதில் முனைந்திருக்கிறார்கள். உடம்பைத் திருத்துவதில் சிறு முயற்சியே செய்கிறார்கள். மனத்தைத் திருத்துவதற்கு முயற்சி செய்வதில்லை. இது தலைகீழான நிலை. எப்படி என்று பார்ப்போம்.

இந்த உலகம் - சுற்றுப்புறம் மிகப் பெரியது. தனி - மனிதன் அதில் மிகச் சிறு கூறு. ஆகவே, ஒருவன் எண்ணிய படி உலகத்தைத் திருத்திவிட முடியாது. தவிர, மனிதனுடைய சக்தியைவிடக் காற்று, மழை, வெள்ளம், கடல், எரிமலை முதலிய இயற்கைக் கூறுகளின் சக்தி மிகப் பெரிது. புயலோ, பூகம்பமோ நிகழும்போது, இயற்கையின் முன் மனிதன் எவ்வளவு சிறியவன் என்று எண்ணத் தோன்றுகிறது. நோய்க் கிருமிகளை எதிர்த்து மனிதன் எவ்வளவோ போராட வேண்டியுள்ளது. சாதிமதப் பூசல், அரசியல் கட்சிப் மூடநம்பிக்கைக் கோளாறுகள் இவை போன்ற சமுதாயக் குறைகள் எவ்வளவோ உள்ளன.

எவ்வளவோ உத்தமர்களின் அறிவுரைகளை எல்லாம் உலகம் விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருப்பதுபோல் உள்ளது. பலர், உலகத்தைத் திருத்தும் அரிய செயலை எளியது என்று தவறாக எண்ணிவிடுகிறார்கள். செய்யத்தக்க மற்ற நல்ல கடமைகளைக் கைவிடுகிறார்கள். உலகத்தைத் திருத்த முயலக்கூடாது என்று சொல்லவில்லை. அது எளியது என்று தப்புக் கணக்கு இட்டு ஏமாறக் கூடாது என்பதே கருத்து.

உலகத்தைத் திருத்துவதைவிட உடம்பைத் திருத்துவது எளியது. எவ்வாறு என்றால், உடம்பு ஓரளவு நம்முடைய கையில் உள்ளது. தகுந்த உணவு, நல்ல பயிற்சி, புலனடக்கம், தக்க மருத்துவம் முதலியவற்றால் ஓரளவு உடம்பு திருந்துவதைக் காண்கிறோம். ஆயினும், உடம்பு முழுவதும் நம் வசப்பட்டது என்று கருதக் கூடாது, அது இயற்கையின் தட்ப வெப்பத்தால் கட்டுப்படுவது; வெளியே உள்ள தூசி புகை முதலியவற்றால் மாறுவது: தீய காற்று. கெட்ட நீர் முதலியவற்றால் கெடுவது: நோய்க் கிருமிகளால் தாக்கப்படுவது: அல்லாமலும், உடம்பு கருவில் வளரும்போதே பெற்றோர்களின் உடம்பில் இருந்த சில தீமைகளையும் பெற்று வளருகிறது. ஆகவே, பாதி அளவிற்கு நம் முயற்சிக்கு உட்பட்டதாகவும் உள்ளது. ஆகையால் உடம்பைக் காக்கும் கடமையை ஒருவகை நம்பிக்கையோடு மேற்கொள்ள வேண்டும். ஆனால், இவ்வகையில் முயற்சி எடுத்துக்கொள்வோர் ஒரு சிலரே. உலகத்தைத் திருத்த வரிந்து கட்டி ஓடுகின்றவர்களும் உடம்பைத் திருத்த முயல்வதில்லை.

மூன்றாவதாக உள்ளது மனம். அதைச் செம்மைப் படுத்திக்கொள்ள முயல்வது மிகமிகக் குறைவு, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இந்த முயற்சியைச் செய்கிறார்கள்; உண்மையாகப் பார்த்தால், இந்தத் துறையில்தான் பலரும் முயல வேண்டும். ஏன் என்றால் இங்குத்தான்

முயற்சிக்கு ஏற்ற கூலி உண்டு. மனத்தைப் பொறுத்தவரையில் பரந்த உலகத்தின் தாக்குதல் குறைவு: இயற்கையின் தாக்குதல் மிகக் குறைவு: உடம்பின் தாக்குதலும் ஓரளவே உள்ளது. எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும், எப்படிப்பட்ட உடம்பினுள் இருந்தாலும், ஒருவர் விடாமல் முயன்றால் விரும்பியபடி மனத்தை வைத்துக்கொள்ள முடியும். காந்தியடிகள் இளமையில் எவ்வளவு பயங்கொள்ளியாக இருந்தார்; பிறகு அஞ்சாமையின் திருவுருவாக விளங்கினார்.

தன்னலம் நிறைந்த மனம். தியாகம் நிரம்பிய மனமாக ஆக முடியும். ஒழுக்கத்தில் நம்பிக்கை அற்ற மனம். ஒழுக்கத்தில் உறுதி பெற முடியும். கண்டபடி அலையும் மனம். புத்தர் மனம் போல் அமைதி பெற முடியும். சோம்பலுக்கு இடம் தரும் மனம். விடாமுயற்சியைப் போற்றும் மனம் ஆக முடியும். எண்ணிய எண்ணியாங்கு எய்துப என்பது மனத்தைப் பொறுத்தவரையில் முழுதும் நடக்கக் கூடியது. உடம்பைப் பொறுத்த வரையில் ஒரு பாதியே நடக்கக் கூடியது. உலகத்தைப் பொறுத்தவரையில் பல ஆயிரத்தில் ஒரு சிறு பங்கே நடக்கக் கூடியது. அப்படி இருந்தும், மனத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ள முயல்வோர் ஒரு சிலராகவே இருப்பது வருந்தத்தக்கது. மனம்போல் வாழ்வு. மனத்தினால் எண்ணித்தானே வந்தது இவ்வுலகமாகும்.

மனம் இங்கேயே நரகத்தை உண்டு பண்ணிக் கொள்ள முடியும். சுவர்க்கத்தைப் படைத்துக் கொள்ள முடியும். வாழ்வே மனத்தின் தன்மையை ஒட்டியது தான். இன்பமும், துன்பமும் மன நிலைக்கு ஏற்றவாறு அமையும். இவ்வளவெல்லாம் மனம் அடிப்படையாக இருந்தும் மனத்தைப் பண்படுத்துவதற்குப் பலர் முயல்வதில்லை. அதனாலே உத்தமர்களின் அறிவுரைகள் பலருக்குப் பயன்படுவதில்லை.

மனம் பண்படுவதற்கு வழி என்ன? நமக்கு முன் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாறுகளைப் படிக்க வேண்டும். அவர்கள் சொன்ன சொற்களை அல்லது எழுதி வைத்த எழுத்துக்களைத் திரும்பத் திரும்பப் படித்து உணர வேண்டும். கெட்ட காற்றிலும் நீரிலும் உள்ள நோய்க்கிருமிகள் நம் உடம்பில் புகாமல் ஊசி போட்டும் மருந்து உண்டும் காத்துக்கொள்வது போலவே, கெட்ட நூல்களிலும், கெட்ட கலைகளிலும் மனத்தின் பண்பாட்டுக்கு ஆகாத நோய்க் கருத்துகள் உள்ளன. அவை மனத்தில் புகாமல் காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காப்போமானால் கட்டாயம் குறிக்கோளை அடைய முடியும்.

உலகத்தையும் உடம்பையும் திருத்துவதைவிட இவ்வாறு மனத்தைப் பண்படுத்துவதுதான் கருதியபடி கைகூடுவது என்பதை உணர வேண்டும்.

பரிபாடல் என்ற பழைய நூலில் ஒரு புலவர் கடவுளிடம் தம் வேண்டுகோளைச் சொல்லி முடிக்கும்போது. "ஐயனே! உன்னிடம் யான் வேண்டிக் கேட்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல. அன்பும் அருளும் அறமு மாகிய இந்த மூன்றையுமே கேட்கின்றேன்." என்கின்றார்.

**யாஅம் இரப்பவை பொருளும்**
**பொன்னும் போகமும் அல்ல**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே.**

இவ்வாறு அவர் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் மேற்சொன்ன உண்மை உள்ளது. அதாவது, உலகத் தொடர்பான பொன் பொருள் போகம் இவற்றை நாம் நினைத்த படி அடைய முடியாது. ஆனால் மனத்தின் தொடர்பான அன்பு அருள் அற உணர்வு இவற்றை விரும்பி முயன்றால் முயற்சிக்கு ஏற்ப அடைய முடியும் என்ற உண்மையை உணர்ந்தே அவ்வாறு வேண்டினார்.

இந்த நம்பிக்கை ஏற்பட்டால், நமக்குப் பொறுமை இயல்பாக அமையும். பொறுமை என்றால், பிறர் கூறும் கொடுஞ்சொல்லைக் கேட்டுப் பொறுத்தலும், பிறர் செய்யும் துன்பத்தைத் தாங்கிப் பொறுத்தலும் மட்டும் அல்ல; உடனடியாக விளையும் சிறு பயனை நாடி அவசரப்படாமல், நாளடைவில் விளையும் பெரும் பயனை விரும்பிப் பொறுத்திருக்கும் பொறுமையும் நமக்கு இயல்பாக அமையும்.

பிறர் கொடுஞ் சொல் சொல்வதைக் கேட்டவுடன் நம் மனம் கொதிக்கிறது. அதற்கு ஈடாக நாமும் சினம் கொண்டு கொடுஞ்சொல் சொல்லிப் பழிக்கிறோம். ஏன்? அதனால் உடனே ஒருவகைத் திருப்தி நிறைவு ஏற்படுகிறது. பழிக்குப் பழி வாங்கிவிட்டதாக ஒரு மன நிறைவு உண்டாகிறது. எண்ணிப் பார்த்தால் அது சிறு பயன்தான். கொஞ்சம் பொறுத்திருந்தால் அதைவிடப் பெரிய பயன் ஏற்பட்டிருக்கும். உடனடியாக விளையும் பயனை நாடினோம். அதனால் நின்று விளையும் நல்ல பயனை உடனே கொடுஞ்சொல் சொல்லிவிட்ட காரணத்தால், பழித்தவரின் உறவை இழந்தோம். அவருடைய பகையைத் தேடிக்கொண்டோம். பொறுத்திருந்தால் அவரே மனம் மாறியிருக்கலாம்; நம்மிடம் அவரே வந்து வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். அவருக்கும் மற்றவர்களுக்கும் நம்மிடம் மறுபடியும்

அன்பு ஏற்பட்டிருக்கும். பயனை உடனடியாக விரும்பிய காரணத்தால் இவ்வளவும் இழந்துவிட்டோம். திருவள்ளுவர் இதை எவ்வளவு அழகாகச் சொல்கிறார்:

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்.**

பழிக்குப் பழி என்று ஒறுத்தவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பது ஒரு நாள் இன்பம்தானாம். அவ்வாறு அன்றிப் பொறுமையுடன் இருப்பதற்கு எவ்வளவோ மனவலிமை வேண்டும். அந்த மனவலிமை பாடுபட்டால் பெறக்கூடியது. துறவிகளின் மன வலிமையைவிட இந்த மனவலிமை சிறந்தது என்பது திருவள்ளுவரின் கருத்து. 'உணவு உண்ணாமல் நோன்பு நோற்பவர்களை விட, பிறருடைய கடுஞ்சொற்களைப் பொறுத்திருப்பவர்கள் பெரியவர்கள்' என்கிறார் அவர்:

**உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

அவ்வாறே. கோபம் கொள்வதற்கு மன வலிமை தேவையில்லை: கோபம் வாராமல் தடுத்துக் கொள்வதற்கே மனவலிமை வேண்டும். பொய் சொல்வதற்கு மனவலிமை தேவையில்லை; யார் வேண்டுமானாலும் எப்போதும் பொய் சொல்ல முடியும். ஆனால் என்ன காரணத்திற்காகவும் பொய் சொல்லாமல் உண்மையே பேசி உண்மையாக நடப்பதற்கு மனவலிமை வேண்டும். சூது ஆடுவதற்கு மனவலிமை வேண்டியதில்லை; ஆட்டத்தில் பழக்கம் இருந்தால் போதும். ஆனால் சூது ஆடாமல் அந்த நேரத்தைப் படிப்பு, தோட்ட வேலை முதலியவற்றில் செலவிடுவதற்கே மனவலிமை வேண்டும். சூதாடும் இன்பம் நிலையற்ற சிறு சுகம் என்றும், படிப்பு முதலியவை நிலையான இன்பம் என்றும் உணர்ந்து தெளிந்தால் தான் அந்த மனவலிமையைப் பெற முடியும்.

பண்டிகை நாள்களில் மற்றவர்களைப்போல் கண் மூடி நடந்து ஆரவாரமாக வாழ்வதற்கு மனவலிமை தேவையில்லை. அந்த நாள்களில் கடவுளின் ஆட்சியை நினைந்து போற்றி அமைதியாக உணர் வதற்குத்தான் மனவலிமை வேண்டும். திருவிழா நாள்களில் ஊரைவிட்டு ஊருக்குப் போய் பஸ் நெரிசலுக்கும் ரயில் நெரிசலுக்கும் ஆளாகி மந்தையோடு மந்தையாய் அலைச்சலைப் பெருக்குவதற்கு மனவலிமை தேவையில்லை. அமைதியாக இருந்து வழிபாடு நடத்தி நல்லுணர்வை வளர்த்துச் சிறந்த சிந்தனைகளில் மூழ்குவதற்குத்தான் மனவலிமை தேவை. கண்டபடி கடமைகளைப் பெருக்கிக் கொண்டு எதையும்

செம்மையாகச் செய்யாமல் பலவற்றில் ஈடுபட்டு அலைவதற்கு மனவலிமை தேவையில்லை. நேரும் வேலைகளில் பலவற்றைத் தள்ளித் தக்க சிலவற்றை மட்டும் மேற்கொண்டு அவற்றைச் செம்மையாகச் செய்வதற்குத் தான் மனவலிமை வேண்டும்.

இவ்வாறே நம்முடைய ஆத்திரச் செயல்களுக்கும் பரபரப்பான அலைவுகளுக்கும் கண்மூடிப்போக்குகளுக்கும் காரணம் மனவலிமை இல்லாத குறையே என்பதை உணர் வேண்டும். மனவலிமை ஏற்பட ஆத்திரமும் அலைச்சலும் குறைந்து, தெளிவு வளர்வதைக் காணலாம்: அமைதி வளர்வதைக் காணலாம். இவ்வளவு நல்ல பயன் விளைவிக்கும் மனவலிமை என்பது கிட்டுவதற்கு அருமை யானது என்று அஞ்சித் தயங்க வேண்டியதில்லை. உலகச் செல்வாக்கைவிட, உடம்பின் ஆட்சியைவிட, மனவலிமைதான் முயற்சியால் பெறக்கூடியது என்று உணர வேண்டும். முயற்சிக்கு ஏற்ற கூலி தரும் ஒரு துறையை - வாழ்வுக்கு அடிப்படையான ஒரு துறையை அருமையானது என்று விட்டுவிடக்கூடாது.

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

முன்னோர்கள் ஏற்படுத்திய நோன்புகள் (விரதங்கள்) மனவலிமை பெறுவதற்கு உதவியாக ஏற்படுத்தியவைகளே. ஆனால் அவற்றின் நோக்கம் பெரும்பாலும் நிறைவேறவில்லை. ஏதோ அச்சம் அல்லது தவறான நம்பிக்கைக் காரணமாக அவற்றைப் பலர் மேற்கொள்வதால், தக்க பயன் விளையவில்லை. நோன்புகளும் தவறான முறையில் மேற்கொள்ளப் படுகின்றன. சில நாள்களில் சில வேலைகளில் உணவை விட்டு இருத்தல், சிலவகை உணவுகளை விடுதல் முதலியன. நம் நாக்கிற்கு அடிமையாகாமல் ஆளும் தலைமை பெறுவதற்காக அமைந்தவை. ஆனால் அந்த நாள்களை எப்படியோ கழித்து, அடுத்த நாளே அந்த உணவை மிகுதியாகவே நுகரும் போக்கு உள்ளது.

வயது ஆனவர்கள் காசிக்கோ பிற இடங்களுக்கோ போய் வந்த பிறகு ஏதாவது ஒன்றை விட்டுப் பழகுவதற்கு வழிவகுத்தார்கள். அதுவும் மூட நம்பிக்கையாய் முடிந்து பயன்படாமல் போயிற்று. அவ்வாறு போய்வந்தவர்களில் சிலர் முருங்கை இலையில் சாப்பிடுவதை விட்டு வாழை இலையில் உண்பதை மேற்கொள்ளுகிறார்கள். இதில் என்ன பயன்? தட்டுகளில் உண்பதை விட்டு, இலையில் மட்டுஉண்ணத் தொடங்குகிறார்கள். இதனாலும் பயன் இல்லை. சிலர் வாழைக்காய், கத்திரிக்காய் முதலியவற்றில் ஒன்றை விட்டு விட்டு அதை நோன்பாக

மதித்து மகிழ்கிறார்கள். நாக்கை அடக்குவதற்காக மனவலிமை மிகுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பழக்கம் இது என்பதை மறந்துவிடுகிறார்கள். உடம்புக்குத் தீமையானதும் புலன்களுக்குச் சுவையானதும் ஆகிய ஒன்றை விட்டால் பயன் விளையும். மனத்தை வலிமையாக உடையதாக ஆக்கிப் பழக்குவதற்காக ஒரு நோன்பை நாமாகவே மேற்கொள்வதற்கு முன்னோர்கள் வழிவகுத்தார்கள். வற்புறுத்தலால் அச்சத்தால் மேற்கொள்ளும் நோன்பை விட. நாமாக முன்வந்து மேற்கொள்ளும் நோன்பு நல்லது. அதனால் மனத்துக்கு நல்ல பயிற்சி ஏற்படும். ஆனால் முருங்கைக்காயையும். கத்தரிக்காயையும் விடுவதால் பயன் இல்லை.

கோபத்தையும் ஆத்திரத்தையும் குறைக்கும் வகையில் பேசா நோன்பு, உண்ணா நோன்பு முதலியவற்றை மேற்கொள்ளுவது பயன்தரும். அல்லது, புகைப் பழக்கம். குடிப்பழக்கம். சூதாட்டப் பழக்கம், காலையில் எழாத சோம்பற்பழக்கம் முதலியவை இருந்தால் அவற்றுள் ஒன்றை விடும் நோன்பைக் கொள்ள வேண்டும். அத்தகைய நோன்பு பயன்தரும். நம் ஆத்திரம். கோபம் இயல்புகளைப் பற்றிக் காலையில் வழிபாட்டின்போது நினைத்து உறுதிகொள்ளும் அன்றாடப் பயிற்சியும் பயன் தரும். செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி நாட்குறிப்பு எழுதும் பயிற்சியும் பயன் தரும். இவை எல்லாம் படிப்படியே மனவலிமை வளர்வதற்கு உதவி புரிவன ஆகும்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

---

1. மு.வ. படைத்த நூல்களின் எண்ணிக்கை யாது?
2. சாகித்திய அக்காதமி பரிசு பெற்ற மு.வ.வின் நூல் எது?
3. தமிழ் உரைநடைக்கு மு.வ.வின் பங்களிப்பை எத்தனைத் தலைப்புகளில் காணலாம்?.

---

**தொகுத்தறிவோம்**

---

இப்பிரிவில் நீங்கள் மு.வரதராசன், மனவலிமை வேண்டும் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. திருவேங்கடம்
2. உலகத்தால், சுற்றுப்புறத்தால், மனதால்
3. உடம்பு

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

1. மு.வ. படைத்த நூல்களின் எண்ணிக்கை 85 ஆகும்.
2. சாகித்திய அக்காதமி பரிசு பெற்ற மு.வ.வின் நூல் அகல்விளக்கு என்னும் நாவல் ஆகும்.
3. தமிழ் உரைநடைக்கு மு.வ.வின் பங்களிப்பை 5 தலைப்புகளில் காணலாம்.

**குறுவினா விடை மற்றும் விடை**

1. மு.வ. வகித்த பதவிகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

   மு.வ. வகித்த பதவிகள்:

   **விடை:**

   - சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்
   - சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர்.

5. புனைகதைகளில் மு.வ.வின் பங்களிப்பு என்ன?

   **விடை:**

   - புனைகதைகளில் மு.வ. மொழிநடையே அவரது பங்களிப்பு ஆகும். வாழ்க்கையின் பலதரப்பட்ட மக்களும் தூய தமிழில் பேசுமாறு அமைத்துக் காட்டியது இவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

6. மு.வ.வின் கடித இலக்கியம் குறித்து எழுதுக.

   **விடை:**

   - மு.வ.வின் கடித இலக்கியம் நான்கு நூல்களில் அடங்குவதாகும். அவை,
   - அன்னைக்கு
   - நண்பர்க்கு
   - தம்பிக்கு
   - தங்கைக்கு

7. மு.வ. எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் எத்தனை?

   **விடை:**

   - மு.வ. எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் நான்கு.

# பிரிவு-11

## செம்மொழித் தமிழின் சிறப்புகள்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

11.1. செம்மொழித் தமிழின் சிறப்புகள்

11.2. தமிழின் செம்மொழி தகுதி சிறப்புகள்

11.3. செவ்வியல் நூல்கள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

### அறிமுகம்

இப்பிரிவில் நீங்கள் செம்மொழித் தமிழின் சிறப்புகள், தமிழின் செம்மொழி தகுதி சிறப்புகள் மற்றும் செவ்வியல் நூல்கள் பற்றி அறிந்து கொள்ளலாம்

### குறிக்கோள்கள்

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- செம்மொழித் தமிழின் சிறப்புகள்
- தமிழின் செம்மொழி தகுதி சிறப்புகள்
- செவ்வியல் நூல்கள்

### 11.1. செம்மொழித் தமிழின் சிறப்புகள்

'செந்தமிழ்' என்று தொல்காப்பியர் காலத்திலேயே அழைக்கப்பட்ட மொழி "தமிழ்" மொழி. எழுத்துருவங்களையும் தொல்காப்பியர் காலத்திலேயே (கி.மு.700) வரையறை செய்து கொண்ட தொன்மையான மொழி தமிழ் மொழியாகும்.

திராவிட மொழிகளின் தாய்மொழி "தமிழ்" என்றும், தமிழ்மொழி "உயர்தனிச் செம்மொழி" என்றும் 1856இல் கால்டுவெல் உறுதி செய்தார்.

**பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட்**

பன்மொழிப் புலமையையும், இலக்கியத் திறனறிவினையும் ஒருங்கே பெற்ற பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள், "தமிழ்மொழி உலகின் மிகவுயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும், மரபுச் செல்வங்களையும் பெற்றுத் திகழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்பதனை நான் எவ்விதத் தயக்கமும் இன்றித் தெளிவாக அறுதியிட்டுக் கூறுவேன்." "தமிழ் ஒரு செவ்வியல் மொழி என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காக நான் இதைப்போன்று ஒரு கட்டுரை எழுத வேண்டியுள்ளது என்ற எண்ணமே எனக்கு இயல்புக்கு மாறானதாகத் தோன்றுகிறது.

இச்செயல் எப்படியிருக்கிறது என்றால், 'இந்தியா ஒரு மிகப்பெரிய நாடு, இந்துசமயம் உலகின் மிகப்பெரிய சமயங்களுள் ஒன்று' என்னும் கூற்றை நிலைநாட்ட முற்படுவது போன்றுள்ளது. 'தமிழ் செவ்வியல் மொழி' என்னும் தகுதி நிலையை மறுக்க முனைவது, இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கும், வளமைக்கும் இன்றியமையாத மையக் கூறாக விளங்கும் உயிராதாரமாக விளங்கும் உறுப்பு ஒன்று 'அதற்கு இருக்கக்கூடாது' என்று மறுக்க முனைவதற்கு ஒப்பானதாகும்" என்று கூறித் தமிழ் செம்மொழி என இந்திய அரசினால் ஏற்கப்படாத அவலத்தை எண்ணி வருத்தத்தோடு எழுதியுள்ளார்.

பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட்டு அவர்களது இந்த அறிக்கையில் உள்ள கருத்துகள் இந்தியத் திருநாட்டின் கல்வியாளர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு; தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் எழுச்சியையும் ஏற்படுத்தியது.

**பல்கலைக்கழகம் – தமிழ்ச்சங்கம்**

தமிழைச் செம்மொழி என சென்னைப் பல்கலைக்கழகம் அறிவிக்க வேண்டும் என்று 1918இல் மறைமலை அடிகள் தலைமையில் நடந்த சித்தாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1919-20இல் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் இக்கோரிக்கையை முன்வைத்தது. 2004 அக்டோபர் மாதம் 12ஆம் நாள் நடுவண் அரசு செம்மொழிகள் என்ற ஒரு சிறப்புப் பிரிவைத் தோற்றுவித்தது. அந்தப் பிரிவில் தமிழைச் செம்மொழி என அறிவித்தது. இந்த அறிவிப்புக்கு முன் தமிழைச் செம்மொழியாக ஆக்கவேண்டும் என்று பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதலான தமிழ் அமைப்புகள் தமிழைச் செம்மொழியாக்க வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு

வேண்டுகோள்கள் விடுத்தன. ஆங்கிலேயர் ஆட்சியின் போது நிகழ்ந்தது அது. அப்போது இந்த வேண்டுகோள்கள் கவனிக்கப்படவில்லை. 2001வாக்கில் சென்னைப் பல்கலைக்கழகம் முறையாக தமிழைச் செம்மொழியாக்க முயற்சிகள் மேற்கொண்டன. ஆட்சிமன்றம், கல்விப்பேரவை, பொதுப்பேரவை ஆகிய எல்லா அமைப்புகளின் மூலமும் தமிழைச் செம்மொழியாக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2001இல் இந்த தீர்மானம் மாநில அரசுக்கும் மைய அரசுக்கும், பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவிற்கும் அனுப்பப்பட்டது. அதன்பிறகு சில மாதங்கள் கழித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இப்படியரு தீர்மானத்தை நிறைவேற்றியது. தமிழகத்திலுள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளும் இடைவிடாமல் இந்த முயற்சிகளில் ஈடுபட்டன.

**டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம்**

07.06.2004 அன்று நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியக் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் அவர்கள், தமிழ் செம்மொழியெனப் பிரகடனப்படுத்தப்படும் என்று செய்த அறிவிப்பு, தமிழறிஞர் களையும், தமிழ் ஆர்வலர்களையும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. இந்திய அரசு, 12.10.2004 அன்று, தமிழைச் செம்மொழியெனப் பிரகடனம் செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது! இதன் விளைவாக செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் உருவானது.

இந்திய மொழிகளின் மைய நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்தப்பட்டக் கருத்தரங்கில் செம்மொழிச் சிந்தனைகள் முன் வைக்கப்பட்டன. செம்மொழிச் சிந்தனைகளில் பதிப்புப்பணி மிகவும் இன்றியமையாதது. பிழைகள் இல்லாது பதிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழ் இலக்கியங்களை வெளியே கொண்டு வரும் பொழுது அவை பிழைகளோடு வரக்கூடாது என்ற கருத்து செம்மொழிச் சிந்தனை களில் முதன்மையானதாகும்.

அடுத்ததாக, சங்க இலக்கியங்கள் தொடர்பான எல்லா நூல்களையும் கட்டுரைகள் உட்பட அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்துப் பாதுகாக்க காப்பகம் ஒன்றும், சங்க இலக்கியம் தொடர்பாக தெரிந்து கொள்ள நல்ல தகவல் மையம் ஒன்றும் வேண்டும் என்பதாகும். மற்றொன்று, பிரிட்டிஷ் மியூசியம் போன்று ஒரு அரும்பொருள் காட்சியகம் சங்ககாலத்தை மையப்படுத்தி நாடளாவிய நிலையில் உலகளாவிய நிலையில்

உருவாக்கப்பட வேண்டும் என்பதும் செம்மொழிச் சிந்தனைகளில் ஒன்றாகும்.

மொழிபெயர்ப்பு சரியான முறையான மொழிபெயர்ப்பு வரவேண்டும். மிகச் சிறந்த நூல்களை உடனடியாக மொழிபெயர்த்துக் கொடுக்க வேண்டும். ஒரு அறிவியல் நூலை, வரலாற்று நூலை மொழிபெயர்ப்பது போல் இலக்கியத்தை மொழிபெயர்த்துவிட முடியாது. ஆகையால் ஒரு இலக்கியத்தை எந்த மொழியில் பெயர்க்க விருப்புகிறோமோ அம்மொழியில் புலமைப் பெற்றிருக்க வேண்டும். மூல மொழிப் புலமையும் மொழிப் பெயர்ப்பிற்கு அவசியமாகிறது.

சங்க இலக்கியத்தை மக்கள் மயமாக்க வேண்டும். மக்கள் மயமாக்க யார் எந்த முயற்சி எடுத்தாலும் அதற்கு செம்மொழி நிறுவனம் ஊக்கப்படுத்த வேண்டும் என்பது போன்ற சிந்தனைகளை பேராசிரியர் பொன். கோதண்டராமன் அவர்கள் செம்மொழி மாநாட்டுக் கருத்தரங்கில் வலியுறுத்தியுள்ளார்.

## 11.2. தமிழின் செம்மொழி தகுதி சிறப்புகள்

செம்மொழி என்பது ஒரு மொழியின் இலக்கியப்பழமை அடிப்படையிலும் பிற பண்புத்தகுதிகளின் அடிப்படையிலும் செய்யப்படும் வகைப்பாடு ஆகும். செம்மொழியாக ஒரு மொழியைத்தெரிவு செய்ய அதன் இலக்கியப் படைப்புகள் வளம் மிகுந்ததாகவும் பழமையானதாகவும், அதன் தோன்றல் ஏனைய மொழிகளில் சாராதிருத்தலும் வேண்டும்.ஒரு மொழிக்கு செம்மொழி என்ற தகுதி அம்மொழியில் இடம் பெற்றிருக்கும் இலக்கியத் தரத்தின் அடிப்படையில்தான் முடிவு செய்யப்படுகிறது. இருப்பினும் செய்மொழி என்பதற்கு அம்மொழியில் இடம் பெற்றிருக்கும் முக்கியமான இரண்டு சிறப்புகள் தேவையாய் இருக்கிறது.

- **இலக்கியப் படைப்புகள்**
- **கலைப் படைப்புகள்**

இந்த இரு படைப்புகளைக் கொண்டே அந்த மொழி செம்மொழிகளாக அறிவிக்கப்படுகின்றன.

**இலக்கியப் படைப்புகள்**

ஒரு மொழியின் சிறப்பிற்கும் செம்மைக்கும் முதல் அடையாளமாகத் திகழ்வது அம்மொழியின் பழமை வாய்ந்த இலக்கியங்கள்தான். இந்த இலக்கியங்களில் இருக்கும் பழமையுடன் அதில் கருத்துச் செறிவுகளும்

இருக்க வேண்டும். ஒரு மொழியின் சிறப்பு அந்த மொழியில் படைக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் வழியாகத்தாள் அறிய முடிகிறது.

**கலைப் படைப்புகள்**

ஒரு மொழியின் பழமைக்கு இலக்கியம் சான்றாக இருந்தது என்பதுடன் அந்த மொழி சார்ந்த பகுதிகளில் உருவாக்கப்பட்ட சுலைப் படைப்புகள் அந்த மொழியின் பழமையை உணர்த்தும் அடுத்த சான்றாக இருக்க வேண்டும். கலைப் படைப்புகள் என்பது கட்டிடக்கலை, சிற்பக்கலை போன்ற பழமை வாய்ந்த கலைச் சான்றுகளாக இருக்க வேண்டும்.

**உலகச் செம்மொழிகள்**

இன்று உலகில் செம்மொழிகளாகக் கருதப்படும் மொழிகள் 8 ஆக இருக்கின்றன. கீரேக்க மொழி, சமஸ்கிருநம், இலத்தீன், பசாசீக மொழி, அரபு மொழி, எமிரேயம், தமிழ், சீன மொழி

**தமிழின் செம்மொழித் தகுதிகள்**

செம்மொழி என்ற நிலையில் ஒரு மொழி ஏற்கப்பட வேண்டுமானால் அதற்கென்று சில தகுதிப்பாடுகள் தேவைப் படுகின்றன. செம்மொழி என்று ஒரு மொழி அழைக்கப்பட வேண்டுமானால் அம்மொழி தொன்மைச் சிறப்பு வாய்ந்ததாக அதற்கென ஒரு தனித்த பண்பாடு உடையதாக, அந்தப் பண்பாடு எதனோடும் தொடர்பற்றதாக, வளமையான இலக்கியச் செழுமை வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்று கருதுகிறார் ஜார்ஜ் ஹர்ட் இவ்வளவில் சிறப்பு பெற்ற உலகச் செம்மொழிகளாக கிரேக்கம், இலத்தீன், அரபி, சமஸ்கிருதம், சீனம் போன்ற பல மொழிகள் திகழ்ந்து வருகின்றன. இவற்றோடு தற்போது தமிழும் செம்மொழியாக ஏற்கப் பெற்றுள்ளது.

தமிழ் தொன்மையானதாக, தனித்த பண்பாடு உடையதாக, இலக்கிய வளம் மிக்கதாக இருப்பதனோடு வாழும் மொழியாகவும் அது திகழ்ந்து வருகின்றது. பெரும்பாலான செம்மொழிகள் வழக்கில் இருந்து நீக்கி விட்டன. மக்களிடம் அவை பேச்சு மொழியாகக் கூட இல்லை. குறிப்பாக சமஸ்கிருதம், பாலி. எகிப்து போன்ற இவ்வகைப்பட்டனவே ஆகும். ஆனால் தமிழின் தொன்மைச் சிறப்பு, மரபு பண்பாடு போன்றன மாறாமல், சிதறாமல் இன்னமும் காக்கப் பெற்று வருகின்றன. இதற்கு மிசு முக்கிய காரணம் தமிழ் என்ற மொழியின் ஈட்டமைப்பு மட்டுமே ஆகும். தமிழ் என்பதை மன்னர்கள், புலவர்கன், மக்கள் வளர்த்தாலும் அவர்கள்

மறைந்தபோதும் மறையாமல் தமிழ் காப்பற்றப்பட்டுக் கொண்டே வந்துள்ளது என்பது சிறப்பிற்கு உரியதாகும்.

பொதுவாக, செம்மொழிக்கு உரிய தகுதிகளாகப் பதினோரு கூறுகளை எடுத்துரைக்கலாம்.

பாவாணர் பதினாறு தன்மைகளால் தமிழ் செம்மொழித் தன்மை பெற்றுள்ளது என்று கருதுகின்றார்.

1. தொன்மை 2 தனித்தன்மை 3. பொதுமைப் பண்பு 4. நடு நிலைமை 5. தாய்மைப் பண்பு 5. பண்பாட்டுக் கலை அறிவு பட்டறிவு வெளிப்பாடு 7. பிறமொழித் தாக்கமில்லா தனித் தன்மை 8. இலக்கிய வளம் 9. உயர் சிந்தனை 10. கலை இலக்கியத் தனித்தன்மை 11. மொழிக் கோட்பாடு, இப்பதினொன்றும் தமிழுக்கு உண்டு.

### 1. தொன்மை

செம்மொழி நிலைக்கு ஒரு மொழி ஆயிரம் ஆண்டுக்கால தொன்மை படைத்ததாக விளங்க வேண்டும். தமிழோ ஆயிரமல்ல ஈராயிரம் ஆண்டிற்கும் மேலாகப் பேசி, எழுதி, படைத்து தனக்குள்ளே பெரும் இலக்கியச் செல்வங்களைக் கொண்டது. இதனை எவராலும் மறுக்கப்படாமல் ஏற்கத்தக்க அளவிற்கு இதன் தொன்மை சிறப்பானது. அத்துடனில்லாமல் இன்றளவும் உலகமெங்கும் பரவியுள்ள தமிழர்களின் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும், கல்வி கற்கும் மொழியாகவும், படைப்பு புனைதலில் புதிய புதிய துறைகளிலும் நிகரற்று விளங்குவது அதன் தனிச் சிறப்பு.

### 2. தனித்தன்மை

பல்வேறு திணை நிலங்களிலும் திராவிட குடும்ப மொழிகள் கிளைத்திட வைத்த தமிழ். தாயாக விளங்கி தனக்கென ஒரு மொழிக் குடும்பத்தை உருவாக்கி தன்னைச் சுற்றி வேர்களாகவும், விழுதாகவும் மொழிகள் கிளைப்பினும் தன்னிலை மாறாத உன்னத நிலையுடன் நிலைபெற்று விளங்குவது இதன் தனித்தன்மையாகும்.

### 3. பொதுமைப் பண்பு

உலகின் எந்த இயற்கை மொழிக்கும் இல்லாத சிறப்புமிக்க இலக்கணக் கட்டமைப்பு கொண்டது தமிழ் மொழி, தமிழின் இலக்கணப் பொதுமைப் பண்பு நெறிகள் திராவிட மொழிக் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் இதர இயற்கை மொழி அனைத்தும் பயனுறும் வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும்.

**4. நடு நிலைமை**

தமிழின் இலக்கண விதி உன்னத நெறியுடனான பன்முகத் தன்மை கொண்டது. எனினும் இதன் இலக்கண விதிகள் வேறு எதனுடனும் சாராமல் தனித்தியங்கி நடுநிலையுடன் விளங்குவது.

**5. தாய்மைப் பண்பு**

தமிழ் எனும் மூல மொழி தான் மட்டுமே என்ற தன்னலமின்றி தாய்மைப் பண்புடன் திராவிட மொழிக் குடும்பம் உருவாகிட அடிப்படையில் விளங்கியது. பேச்சு மொழியென்றும், இலக்கிய வளமிக்க மொழிகளென்றும், பல்வேறு தன்மையுள்ள மொழிக் குடும்பத்தில் முதலாய் ஏனையவற்றுக்குத் தொடக்கமாய் விளங்கும் தாய்மைப் பண்பு ஏனைய இயற்கை மொழிகளை விட சிறப்பானது.

**6. பண்பாட்டுக் கலையறிவு பட்டறிவின் வெளிப்பாடு**

தமிழின் உன்னதமே அதன் இலக்கிய வளங்கள் தாம். தமிழரின் அகத்திணைக் கோட்பாடும். புறத்திணைக் கோட்பாடும் இலக்கியப் படைப்பாளர்களான முன்னோர்களின் பண்பாட்டுக் கலையறிவின் வெளிப்பாடாகும். வெளிப்பாடாகும். அகத்திணை புறத்திணை மட்டு மல்லாமல் மெய்யியல் கோட்பாடும், அறவழிக் கோட்பாடும் வேறெந்த இயற்கை மொழிப் படைப்பிலும் தமிழில் உள்ள அளவுக்கு இல்லை. இந்த இலக்கிய வளமே தமிழ்ப் புலவர் பெருமக்களின் அறிவுப் புலன் சான்றாக இன்றளவும் திகழ்கிறது.

**7. பிறமொழித் தாக்கமில்லா தனித் தன்மை**

உலகில் நிலவும் மொழிக் குடும்பங்களில் மூல மொழியாய்த் திகழும் மொழிகள் யாவும் வேர்ச் சொல்லாக்கத் திறன் குறைவால் பிறமொழிகளின் கூறுகளை சில துறைகளில் தாங்கி நிற்கின்றன.

வினைகளால் ஒரு புதிய துறை சார்ந்த சொற்களை தமிழில் எளிதாக உருவாக்கும் அளவுக்கு இலக்கண வளம் செறிந்தது தமிழ். ஆகையினால் கடந்த காலமாயினும் சரி நிகழ்காலமாயினும் சரி எதிர்காலமாயினும் சரி எக்காலத்திலும் சமூகப் பண்பாட்டில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப தனித் தன்மையுடன் தனக்கேயுரிய இலக்கண செழுமையுடன் தமிழில் புதிய சொற்களை, துறைகளை உருவாக்குதல் எளிது.

கம்ப்யூட்டர் எனும் 20ஆம் நூற்றாண்டு சாதனம். உலகெங்கும் பல துறைகளில் பரவியது போன்றே தமிழ் நிலத்திலும் காலூன்றியது. பிறமொழிகள் அதில் வழங்கும் துறை சார்ந்த சொற்களை நேரடியாகப்

பயன்படுத்தும் நிலையில் தமிழில் அதனை பொருளுணர்ந்து கணியம், கணினி, கணிப்பொறி என ஆக்கம் செய்து பயன்படுத்தல் ஒன்றே தமிழின் பிறமொழி கலவாத் தனிந்தன்மை விளங்கிக் கொள்ளத்தக்கது.

### 8. இலக்கிய வளம்

தமிழர் தமிழ் இனம் எனும் மக்களினத்தைத் தெளிவாக அறியக்கூடிய காலக் கண்ணாடியாக விளங்குவது தமிழில் உள்ள இலக்கியங்களே. இலக்கியங்கள் வழியாக தமிழரைப் பார்க்கும் போது தமிழ் நிலத்தில் ஓங்கி இருந்த பண்பாட்டை, சமூக, பொருளாதார, இயற்கைக் கோட்பாட்டுடன் இணைந்த தமிழரின் வாழ்வை, வளத்தை அறிய இயலும்.

சங்க காலத்திலிருந்து தொடங்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு காலம் தோறும் அந்தந்த சூழல்களுக்கேற்ப அரசன், தலைவன், தெய்வம், அற வாழ்க்கை, அக வாழ்க்கை, புற வாழ்க்கை, வீரம், இயற்கை வளம், பழக்க வழக்கம், வழிபாட்டு முறைகள் என்பன போன்றவற்றின் தாக்கம் எப்போதெல்லாம். அதிகரிக்கின்றதோ அப்போதெல்லாம் அது தொடர்பான இலக்கியங்கள் படைக்கப்பட்டன. எந்த இலக்கியமாக இருந்தாலும் அதில் கையாளப்படும் மொழியின் ஓசை, எழுத்து, சொல், பொருள் போன்றவை பொதுமைப் பண்புடன் துலங்கும் வகையில் இலக்கணக் கட்டமைப்புடன் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளது.

***தமிழிலக்கியத்தின் சிறப்பு***: பொதுவில் இத்தகைய இலக்கியப் படைப்புகள் தனிநபர், தன்னார்வக்குழு, அரசு நிறுவனம் எனும் மூன்று தளங்களில் உருவாக்கப்பட்டன. சிற்சில இலக்கியம் தனிப்புலவர்களால் உருவாக்கப்பட்டது. அதைப் போலவே கூட்டாக புலவர்கள் குழுக்களும் நூல்களைப் படைத்துள்ளனர். இது போன்ற படைப்பிலக்கியப் பணிகளுக்கு கொடையாளர்களாக அரசர்கள், அரசாங்கம் விளங்கியுள்ளது. சில அரசர்களே புலமைமிக்கவர்களாக விளங்கி இருந்தமையால் நேரடி இலக்கியப் படைப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

### 9. உயர் சிந்தனை

இலக்கியத்தில் உயர் சிந்தனை என்பது அது எத்தகைய படைப்பாக விளங்கிடினும் மக்கள் சமூகத்திற்கு பயன் விளைவிப்பதாக விளங்குதலே. இந்த அடிப்படைதான் தமிழ் இலக்கியங்களின் கருப் பொருளாக விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்கள் எத்தகைய காலத்தவையாக இருப்பினும் அவை மானுடம் போற்றும் உயர் சிந்தனைகளின் தொகுப்பாகவே மிளிர்வதைக் காணலாம். சங்க இலக்கியங்களில்

பாடுபொருளாக விளங்கும் அகத்திணையும், புறத்திணையும், அறவியலும் தமிழர் வாழ்வுடன் இணைந்த உயர் சிந்தனை மரபாகும். உயர் சிந்தனை மரபுகள் இலக்கியத்தில் நிலை பெற்றிட வேண்டி இலக்கண நெறிகள் பிழையுற பின்பற்றப்பட்டன. தனிமனிதர் தொடங்கி சமூகம், என்ற மூன்று நிலைகளிலும் கோட்பாடுகளை, வாழ்வியல் நெறிகளை வலியுறுத்தும் தமிழ் இலக்கியங்களில் உள்ள உயர்ந்த சிந்தனை மரபு உலக சிந்தனை மரபிலிருந்து உயர்ந்தோங்கியவை என்பது மறுக்கவியலாது.

### 10. கலை இலக்கிய தனித் தன்மை வெளிப்பாடு

தமிழ் இலக்கியங்களில் திகழும் கலை நயம் தனித் தன்மை பெற்றது. தமிழ் இலக்கியங்களில் தனிப்பாடலாயினும், புலவர்கள் குழு படைத்து, தொகுத்த பாடலாயினும் அரசர்கள் அரசு உதவியுடன் படைப்புகளை உருவாக்கிய இலக்கியங்களில் இழையோடும் கலை நயமும் கவி நயமும் போற்றத்தக்கவை.

### 11. மொழிக்கோட்பாடு

உலகில் சில இனங்களின் அடையாளமாக மொழி காணப்படுகிறது. அந்த மொழியில் படைக்கப்பட்டுள்ள படைப்புக்களும். மொழியின் பயன்பாடும். அதன் பொதுமைப்பண்புகளும் எல்லா காலங்களுக்கும் பொருந்தும் வகையில் மொழியானது தனக்குள் உரியவாறு கட்டமைப்பைக் கொண்டிருப்பதே அம் மொழியின் அடிப்படைக் கோட்பாடாகும். இந்த அரும்பண்புகள் தமிழுக்குண்டு.

மொழியியலார் ஒரு மொழியை மதிப்பிடுகையில் மொழியில் உருவான இலக்கியங்களை திறனாய்வு செய்வர். அதில் அம்மொழிக்குரிய இனம், அது வாழ்ந்த, வாழ்ந்துவரும் சூழல், காலம் எனும் மூன்றையும் நோக்குவர்.

ஏனெனில் ஒரு மொழியால் உருவான இலக்கியம் அச்சமூகத்தை மட்டுமே நமக்குத் தெரிவிப்பவை அல்ல. கூடவே அச்சமூகத்தை தொடர்ந்து வரும் மரபார்ந்த பண்பு நலன்கள் பலவற்றையும் தெரிவிக்கின்றன. எனவே தான் முன்னோர்கள் தமிழ் மொழிகளின் படைப்புகள் சமுதாயத்தில் தாக்கத்தை உருவாக்கும் வல்லமை கொண்டது என்கிற காரணத்தால் இலக்கியங்கள் கற்பதற்கும். கற்பிப்பதற்கும் வழங்கும்போது பொருளமைதி குறித்த கோட்பாட்டை வகுத்தனர். இந்த கோட்பாட்டை நெறிபிறழாமல் விளங்க இலக்கணத்தை வகுத்தனர். அதனால் தான் தமிழ்மொழி தனக்குள்ளே இலக்கணம் என்கிற கட்டமைப்பை பெற்றுள்ளதால் தரமிக்க இலக்கியப்

படைப்புகள் அனைத்தும் சங்ககாலம் முதல் ஓர் ஒழுங்கமைதியுடன் பேணப்பட்டுவருகிறது.

செம்மொழித்தன்மைகள் பதினொன்றுக்கும் உரியதாகத் தமிழின் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. இதன் காரணமாக தமிழின் செம்மொழித் தன்மை உடைய இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன என்பது உறுதியாகின்றனது.

**பரிதிமால் கலைஞர் - கால்டுவெல்**

தமிழின் செம்மொழித் தன்மையை அறிந்து உணர்த்திய தமிழறிஞர்களுள் குறிக்கத்தக்கவர்கள் பரிதிமால் கலைஞர் பாவாணர் கால்டுவெல் போன்ற பலர் ஆவர். இவர்களின் செம்மொழிப் பற்றிய கருத்துக்கள் பல திறத்தன. இவர்கள் தரும் அனைத்து வரையறைகளும் தமிழுக்கு உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

கால்டுவெல் தமிழின் தனித்தியங்கும் தன்மை பற்றிப் பேசுகின்றார். "திராவிடம் சமஸ்கிருத்தில் இருந்துப் பிறந்தது என்ற கருத்து முந்திய தலைமுறையினராய் மொழிநூல் வல்லுநர்க்கு ஏற்புடைத்தாய் விளங்கினும் இக்காலை அறவே அடிப்படையற்றுப் போன கட்டுக் கதையாகி விட்டது என்பது இவரின் கருத்தாகும்.

இவ்வகையில் பல அறிஞர்கள் தமிழின் செம்மொழித் தன்மையைத் தகுதியை உலகம் உணரும் அளவிற்கு எடுத்துரைத்து உள்ளனர். தொடர்ந்த இந்தச் செயல்பாட்டின் வழியாகத் தமிழ் தற்போது செம்மொழித் தகுதியைப் பெற்று விளங்குகிறது.

தமிழின் செம்மொழித் தன்மையைத் தற்போது உலகிற்கு உணர்த்தியவர் உணர்த்தி வருபவர் கலிபோர்னியாவில் வாழும் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் ஹார்ட் ஆவார், தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றி ருப்பதற்கான காரணங்களாக நான்கினை அவர் முன்னிறுத்துகிறார்.

தமிழ்மொழி பழமைச் சிறப்பு வாய்ந்தது. தமிழ் தனக்கான தனித்த இலக்கிய மரபினை உடையது. தமிழ் மொழியின் சென்வியக்கியங்களான சங்க இலக்கியங்கள். மற்ற செம்மொழிகளின் இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கவை. இந்தியப் பண்பாடு மாபுகளின் தனித்துவம் உடையதாக தமிழ்ச் செவ்விலக்கியங்கள் விளங்குகின்றன. இந்த நான்கு கருத்துக்களை அவர் எடுத்துக் கூறியதோடு மட்டுமில்லாமல் அதற்கான சான்றுகளையும் எடுத்துக் கூறி தமிழின் செம்மொழித் தன்மையை உலகிற்கு எடுத்துக்காட்டினர்.

இந்திய மொழிகளைப் பொருத்தவரை வேதகால சம்பந்தங்களைக் கொண்ட சமஸ்கிருதம் செம்மொழிக்கான தகுதி உடையது என்ற பேச்சு இருந்த காலகட்டத்திலும், முதல் செம்மொழி அந்தஸ்தைத் தமிழ் மொழியேப் பெற்றது.

இந்திய மொழிகளில் செம்மொழி என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட முதல் மொழி தமிழ் ஆகும். 2004ஆம் ஆண்டு இதே நாளில் (ஜூன் 6ஆம் நாள்), நாடாளுமன்றத்தில் அப்போதைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்தார்.

செம்மொழி என்பது ஒரு மொழியின் இலக்கியப் பழைமை அடிப்படையில் தரப்படும் சிறப்புப் பெருமை ஆகும். செம்மொழியாக ஒரு மொழியைத் தேர்வு செய்ய அதன் இலக்கியப் படைப்புகள் வளம் மிகுந்ததாகவும், பழைமையானதாகவும், அதன் தோன்றல் ஏனைய மொழிகளைச் சாராதிருத்தலும் வேண்டும்.

மேலும் அம்மொழியானது 1,500 முதல் 2,000 ஆண்டுகள் வரையிலான வரலாறு மற்றும் பழைமையான இலக்கியங்கள் கொண்டதாக இருக்க வேண்டும். மற்றும் அதன் தொடக்கக்கால இலக்கியங்கள் உயர்தரத்தில் இருத்தல் வேண்டும். இவ்வாறு உலக மொழிகளில் லத்தின், கிரேக்கம், ஹீப்ரு, பாரசீகம் ஆகிய மொழிகள் அத்தகுதியைப் பெற்றுள்ளன.

இந்திய மொழிகளைப் பொருத்தவரை வேதகால சம்பந்தங்களைக் கொண்ட சமஸ்கிருதம் அத்தகுதி உடையது என்ற பேச்சு இருந்த காலகட்டத்திலும், முதல் செம்மொழி அந்தஸ்தைத் தமிழ்மொழியேப் பெற்றது.

இன்றைய நிலையில் இந்திய மொழிகளில் தமிழ் (2004), தெலுங்கு (2008), சமஸ்கிருதம் (2005), கன்னடம் (2008), மலையாளம் (2013), ஒடியா (2014) ஆகிய 6 மொழிகள் செம்மொழி என்ற சிறப்பினை அடைந்துள்ளன. தற்போது மராத்தி மொழியையும் இந்த வரிசையில் இணைக்க வேண்டும் கோரிக்கையும் எழுந்துள்ளது.

இந்திய அரசு செம்மொழியைத் தேர்வு செய்ய 11 தகுதிகளை வகுத்துள்ளது. அவை தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்புகள், நடுவுநிலைமை, தாய்மைத் தன்மை, கலை பண்பாட்டுத் தன்மை, தனித்து இயங்கும் தன்மை, இலக்கிய இலக்கண வளம், கலை இலக்கியத் தன்மை, உயர் சிந்தனை, மொழிக் கோட்பாடு போன்றவை ஆகும்.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்கிற கோரிக்கை கால்டுவேல், பரிதிமாற் கலைஞர் காலத்திலிருந்தே இருந்து வருகிறது. தொண்ணூறுகளின் பிற்பகுதியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் போன்றவை தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியது.

**செம்மொழித் தமிழ்ன் வரலாற்றுச் சுவடுகள்**

உலகப் புகழ் பெற்ற மொழியியல் அறிஞரும், லத்தீன், கிரேக்கம், தமிழ், சமஸ்கிருதம், ரஷ்ய மொழிகளில் புலமை மிக்கவருமான ஜார்ஜ் எல். ஹார்ட் 2000ஆம் ஆண்டு தமிழின் செம்மொழித் தகுதி பற்றிய ஓர் அறிக்கையினை வெளியிட்டார். அதில் தமிழ் மொழியின் தனிச் சிறப்பினை உலகறியச் செய்தார். மேலும் அந்த அறிக்கை தமிழ் செம்மொழிக் கோரிக்கைக்கான பெரும் எழுச்சியையும் ஏற்படுத்தியது.

இத்தகைய 150 ஆண்டுக் கால முயற்சிகளுக்குப் பின் 2004 ஜூலை 6ஆம் தேதி தமிழ் ஒரு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. அதுமட்டும் இல்லாமல் செம்மொழி என இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட முதல் மொழி எனும் வரலாற்றுச் சிறப்பினையும் அடைந்தது.

உலகில் தொன்மையான தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ள மொழிகள் சிலவற்றை செம்மொழிகள் என அறிவித்துள்ளனர். உலக மக்கள் பேசும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6760 என கணக்கிட்டுள்ளனர். இவற்றில் இந்தியாவில் மட்டும் 1652 மொழிகள் பேசப்படுவதாக மொழியிலாளர்கள் கூறுகின்றனர்.

மொழிகள் எண்ணிக்கை உலக அளவிலும் நம் நாட்டளவிலும் கூடுதலாக இருக்க ஒரே காரணம் ஆயிரக்கணக்கான பழங்குடி இன மக்கள் கொண்டது இந்த உலகம் என்பதே. செம்மொழி (Classical language)

ஒரு மொழியை, செம்மொழி என வகைப்படுத்தும் முறைமை, ஐரோப்பியாவில் தோன்றியது. கிரேக்கம் மற்றும் ரோமானிய இலக்கிய வளத்தின் காரணமாக உலகளவில் கிரேக்கமும், இலத்தீனும் அறிஞர்களால் செம்மொழிகளாகக் கருதப்பட்டன. இலக்கிய வளமே ஒரு மொழிக்கு 'செம்மொழி' எனும் தகுதியை பெற்றுத் தருகிறது. என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

கி.பி 794 முதல் கி.பி. 1185 வரையிலான காலத்திய ஜப்பானிய இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன 17ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு இலக்கியங்களும் செவ்வியல் இலக்கியங்களாக கருதப்படுகின்றன. கி.பி 1660 முதல் கி.பி 1714 காலத்திய ஆங்கில இலக்கியங்கள் செவ்வியல் தன்மை கொண்டதாய் கருதப்படுகின்றன. கம்பராமாயணமும் பெரியபுராணமும் செவ்வியல் இலக்கியங்கள் எனச் சிலர் கூறுகின்றனர்

**தமிழ்ச் செம்மொழி வரலாறு**

இந்தியாவின் முதல் செம்மொழி தமிழே. தமிழுக்குப் பின்னரே சம்ஸ்கிருதம், பாலி போன்ற மொழிகள் செம்மொழிகளாக இந்திய அரசால் அறிவிக்கப்பெற்றன.

தமிழ் செம்மொழி அறிவிப்பிற்கான போராட்டம் 18ஆம் நூற்றாண்டில் தொடங்கியது.

**18ஆம் நூற்றாண்டு:** பரிதிமாற் கலைஞர் முதன்முறையாக தமிழ் மொழியை "உயர்தனிச் செம்மொழி" எனும் சொல்லாட்சியோடு உரைத்தார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், சைவ சித்தாந்த மகா சமாஜம் என பல அமைப்புகள் தமிழை செம்மொழியாக அறிவிக்கவும், இந்திய பல்கலைக் கழகங்களில் தமிழுக்கு முறையான இடம் தரவும் அறிவுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றின.

1916இல் தனித்து இயங்கும் தமிழுக்கு பிறமொழிக் கலப்பால் விளைந்த தீங்குகளைக் களைய 'தனித்தமிழ் இயக்கத்தை' மறைமலையடிகள் தோற்றுவித்தார்.

1918இல் குலசேகரப்பட்டணத்தில் நடைபெற்ற சைவ சமய மாநாட்டில், தமிழ் மொழியை ஒரு செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் மறைமலையடிகள் கையொப்பமிட்டார். இது அன்றைய ஆளுநருக்கு அனுப்பப் பட்டது.

1951இல் சாகித்திய அகெடெமி உருவாக்க மாநாட்டில், அபுல் கலாம் ஆசாத், "தமிழ் செழுமையும் தொன்மையும் மிக்க இலக்கியங்களைக் கொண்டது. அம்மொழியின் கவிதைகள் வெளிநாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்குரிய தகுதி பெற்றவை. தமிழ் உண்மையிலேயே ஒரு செம்மொழி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

1966இல் தேவநேயப் பாவாணர், "உலகின் முதன்மையான செம்மொழி" எனும் தன் ஆய்வை வெளியிட்டார். இதில் பல உறுதியான சான்றுகளுடன், தமிழே உலகின் முதன்மொழி என்பதை நிறுவினார்.

1977ஆம் ஆண்டு பாரிசில் நடந்த கூரியர் ஆசிரியர் மாநாட்டில், ஜீன்பிலியோஸா எனும் அயல்நாட்டு தமிழறிஞரோடு உரையாடும் போது தான் மணவை முஸ்தபா சில உண்மைகளை உணர்ந்தார். செம்மொழி எனும் காரணத்தால், சம்ஸ்கிருதம் உலகமெங்கும் உள்ள பல்கலைக் கழகங்களில் முதன்மை பெறுகின்றது. ஆனால், தமிழுக்கு அத்தகைய உயர்நிலை இல்லை என்பது.

1981இல் மதுரையில் நடந்த ஐந்தாம் தமிழ் மாநாட்டில் தமிழை செம்மொழியாக அறிவிக்கும் கோரிக்கை குறித்து மணவை முஸ்தபா உரையாற்றினார். அப்போதைய முதல்வர் எம்.ஜி.இராமச் சந்திரனார், தமிழ் செம்மொழி கோரிக்கையை அரசின் கோரிக்கையாக ஏற்று அதற்குரிய ஆவணங்களை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார்.

2000 இல் அமெரிக்கப் பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் (Dr. George L. Hart), தமிழின் செவ்வியல் தன்மை பற்றி வெளியிட்ட கட்டுரையில், "தமிழின் செவ்வியல் தன்மையை மறுப்பது, இந்தியப் பண்பாட்டின் உயிர்மூச்சாய் விளங்குவனவற்றுள் ஒன்றை மறுப்பதற்கு ஒப்பாகும்" என எழுதுகிறார்.

2002-2003இல் தில்லி தமிழ்ச்சங்கம், பெங்களூர் தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம், தலைநகர் தமிழ்ச்சங்கம் மேலும் பல அமைப்புகள் தொடர்ந்து தமிழை செம்மொழியாக்க அரும்பாடுபட்டன.

2004இல் கரந்தை தமிழ்ச்சங்கம், கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்தி, ஒரு கோடி பேரிடம் கையெழுத்து பெற்று நடுவண் அரசிற்கு அனுப்பியது.

தமிழக அரசின் சார்பில் தமிழ் ஒரு செம்மொழி என மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையும், பல்கலைக்கழக மானியக் குழுவும் அறிவிக்க வலியுறுத்தி, தேவ கவுடா, ஐ.கே.குஜ்ரால், வாஜ்பாய் போன்ற, இந்திய முதன்மை அமைச்சர்களுக்கு கடிதங்கள் எழுதப் பட்டன.

2004இல் அன்றைய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், நாடாளுமன்ற இரு அவைக் கூட்டுக் கூட்டத்தில் "தமிழ் செம்மொழி" என அறிவிக்கப்படும் என்று அறிவித்தார்.

12.10.2004 தமிழ் மொழி செம்மொழி என நடுவண் அரசால் அறிவிக்கப்பட்டது. அதற்குப்பின் இந்திய செம்மொழிகளின் பட்டியலில் 4

முதல்) சமஸ்கிருதம் தெலுங்கு (2008 முதல்) கன்னடம் (2008 முதல்) மலையாளம் (2013 முதல்) ஒடியா (2014 முதல்) சேர்க்கப்பட்டது.

செம்மொழி நூல்கள் என வரையறுக்சுப்பட்டவை அனைத்தும் கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முந்தியவை. தனித்தன்மை கொண்டவை. 41 செவ்வியல் நூல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

---

1. தமிழ் மொழியில் தோன்றிய முதல் பெருங்காப்பியம்__________.
2. ஒரு செம்மொழிக்கு __________கட்டாயமாக இருக்க வேண்டும்.

---

**11.3. செவ்வியல் நூல்கள்**

---

**1. தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை நூல்கள்:-**

2. நற்றிணை,

3. குறுந்தொகை,

4. ஐங்குறுநூறு,

5. பதிற்றுப்பத்து,

6. பரிபாடல்,

7. கலித்தொகை,

8. அகநானூறு,

9. புறநானூறு,

**பத்துப்பாட்டு:-**

10.திருமுருகாற்றுப்படை,

11.பொருநராற்றுப்படை,

12.சிறுபாணாற்றுப்படை,

13.பெரும்பாணாற்றுப்படை,

14.முல்லைப்பாட்டு,

15.மதுரைக்காஞ்சி,

16.நெடுநல்வாடை,

17. குறிஞ்சிப்பாட்டு,

18. பட்டினப்பாலை,

19. மலைபடுகடாம்,

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்:-**

20. நாலடியார்,

21. நான்மணிக்கடிகை,

22. இன்னாநாற்பது,

23. இனியவைநாற்பது,

24. கார்நாற்பது,

25. களவழிநாற்பது,

26. ஐந்திணை ஐம்பது,

27. திணைமொழி ஐம்பது,

28. ஐந்திணை எழுபது,

29. திணைமாலை நூற்றைம்பது,

30. பழமொழி,

31. சிறுபஞ்சமூலம்,

32. திருக்குறள்,

33. திரிகடுகம்,

34. ஆசாரக்கோவை,

35. முதுமொழிக்காஞ்சி,

36. ஏலாதி,

37. கைந்நிலை

**காப்பியங்கள்:-**

38. சிலப்பதிகாரம்,

39. மணிமேகலை,

40. முத்தொள்ளாயிரம்,

41. இறையனார் களவியல் உரை.

**எட்டுத்தொகை**

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று இத்திறத்த எட்டுத் தொகை".**

**நற்றிணை**: இது ஒரு அக நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. இவற்றில் 1 பாடல் முழுமையாக

நமக்குக் கிடைக்கவில்லை (234). ஒரு பாடலின் சில பகுதிகள் கிடைக்கவில்லை (285). பாடல்கள் 8 - 13 வரிகள் கொண்டவை.

**குறுந்தொகை**: இது ஒரு அக நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 4 - 8 வரிகள் கொண்டவை.

**ஐங்குறுநூறு**: இது ஒரு அக நூல். ஐந்து புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 500 பாடல்கள் உள்ளன. குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகிய ஒவ்வொரு திணையிலும் நூறு பாடல்கள் கொண்டது. ஓரம்போகியார் மருதத் திணைப் பாடல்களையும், அம்மூவனார் நெய்தற் திணைப் பாடல்களையும், கபிலர் குறிஞ்சித் திணைப் பாடல்களையும், ஓதலாந்தையார் பாலைத் திணைப் பாடல்களையும், பேயனார் முல்லைத் திணைப் பாடல்களையும் பாடியுள்ளனர். இந்த நூலில் 2 பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை (129,130). பாடல்கள் 3 - 6 வரிகள் கொண்டவை.

**பதிற்றுப்பத்து**: இது ஒரு புற நூல். சேர மன்னர்களுக்காக எழுதப்பட்ட நூல். பத்து மன்னர்களுக்காக, ஆளுக்கு 10 பாடல்கள் எழுதப்பட்டன. ஆனால் 80 பாடல்கள் தான் நமக்குக் கிடைத்துள்ளன. பாடல்கள் 8-56 வரிகள் கொண்டவை.

**பரிபாடல்**: இது அகமும் புறமும் கொண்ட நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. பாடல்கள் முருகனுக்கும், திருமாலுக்கும், வைகை நதிக்கும் எழுதப்பட்டன. மொத்தம் 70 பாடல்கள் எழுதப்பட்டன. நமக்குக் கிடைத்தது 22 பாடல்கள். பாடல்கள் 32 - 140 வரிகள் கொண்டவை.

**கலித்தொகை**: இது ஒரு அக நூல். ஐந்து புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 11 - 80 வரிகள் கொண்டவை. ஆயர் குடியினரின் ஏறு தழுவுதல் பற்றிய விவரங்கள் இந்த நூலில் மட்டுமே உள்ளன.

**அகநானூறு**: இது ஒரு அக நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 13 - 31 வரிகள் கொண்டவை. மொத்தம் 200 பாடல்கள் பாலைத் திணையிலும், 80 பாடல்கள் குறிஞ்சித் திணையிலும், 40 பாடல்கள் முல்லைத் திணையிலும், 40 பாடல்கள் நெய்தற் திணையிலும், 40 பாடல்கள் மருதத் திணையிலும் உள்ளன.

**புறநானூறு**:

இது ஒரு புற நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 4 - 40 வரிகள் கொண்டவை. மூவேந்தர், குறு நிலமன்னர், பாணர், புலவர், விறலியர், கொடை, மறம், வீரர்கள், நாடு, மலை, போர், வீரத்தாய்மார்கள், இறந்த மன்னர்களின் புகழைப் பாடுதல், வாழ்க்கையின் நிலையாமை, மன்னர்க்குப் பெண் தர மறுத்தல் என்று பல செய்திகள் இதில் உள்ளன. மேலும், பரணர், ஔவையார், கோவூர் கிழார், மாங்குடி கிழார் போன்ற பெரும் புலவர்கள் தங்களை பாணர்களாக பாவித்து பாடும் 32 பாடல்கள் உள்ளன.

**பத்துப்பாட்டு**

“முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய கோலநெடு நல் வாடை கோல் குறிஞ்சி பட்டினப் பாலை கடாத்தொடும் பத்து.”

இவற்றில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள். ஆற்றுப்படுத்தல் என்றால் ‘வழி காட்டுதல்’ என்று பொருள். திருமுருகாற்றுப்படை முருகனை அடையும் வழியைக் காட்டும் நூல். மற்ற நான்கு ஆற்றுப்படை நூல்களும் மன்னன் ஒருவனிடம் பரிசு பெற்ற பாணன் இன்னொரு பாணனுக்கு மன்னனிடம் சென்று பரிசு பெரும் முறையை விவரமாகக் கூறுவது. மன்னர்கள் தமிழை வளர்த்த பாணர்களின் மேல் கொண்ட அன்பையும் மதிப்பையும் நாம் ஆற்றுப்படை நூல்களில் காணலாம்.

**திருமுருகாற்றுப்படை** (புலவராற்றுப்படை):

இது ஒரு ஆற்றுப்படை நூல். 317 அடிகளைக் கொண்டது. புலவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் முருகனைப்பற்றி எழுதியது. முருகனுடைய அறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகள் இதில் உள்ளன. அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணி), பழமுதிர்சோலை ஆகியவை. முருகனுடைய 6 முகங்களின் இயல்பு, 12 கைகளின் தொழில் ஆகியவற்றைப் பற்றியும் விவரங்கள் உள்ளன.

**பொருநராற்றுப்படை**:

இது ஒரு ஆற்றுப்படை நூல். 248 அடிகளைக் கொண்டது. புலவர் முடத்தாமக் கண்ணியார் சோழன் கரிகால் பெருவளத்தானுக்காக எழுதியது. இதில் பாலை யாழ் மிகச் செம்மையாக வருணிக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடகியின் பேரழகைப் புலவர் அழகாக விவரிக்கின்றார். சோழ மன்னன் கரிகாலன் தன்னை நாடி வந்த பாணனுக்கு நான்கு வெள்ளைக் குதிரைகள் கொண்ட தேரைக் கொடுத்து, ஏழு அடி பின் நடந்து, பாணனைத் தேரில் ஏறக் கூறிச் சிறப்பிப்பதாகக் குறிப்பு உள்ளது. சோழ நாட்டின் வளமும் காவிரியின் வளமும் விவரிக்கப்பட்டுள்ளன.

**சிறுபாணாற்றுப்படை**:

இது ஒரு ஆற்றுப்படை நூல். 269 அடிகளைக் கொண்டது. புலவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் குறுநில மன்னன் ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனுக்காக எழுதியது. இந்தப் பாட்டில் சேர நாட்டின் வளம், சோழ நாட்டின் வளம், பாண்டிய நாட்டின் பெருமை, கடையெழு வள்ளல்களின் சிறப்பு யாவும் கூறப்பட்டுள்ளன. மன்னனை நோக்கிச் செல்லும் வழியில், அவனுடைய நாட்டில் வெவ்வேறு நிலங்களில் வாழ்பவர்கள் பாணர்க்குச் செய்யும் உபசரிப்பைப் பற்றியும் அறிகின்றோம்.

**பெரும்பாணாற்றுப்படை**:

இது ஒரு ஆற்றுப்படை நூல். 500 அடிகளைக் கொண்டது. புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறுநில மன்னன் தொண்டைமான் இளந்திரையனுக்காக எழுதியது. இந்தப் பாட்டில், பாதையில் மாட்டு வண்டியில் செல்லும் உப்பு வணிகர், கழுதையின் மேல் பண்டங்களைக் கொண்டு செல்லும் பிற வணிகர், காட்டு மக்களின் வாழ்க்கையும் விருந்தோம்பலும், குறிஞ்சி நிலத்தில் வாழ்வோர் வாழ்க்கை முறை, இடையர் குடியிருப்பு, முல்லை நிலத்தினர் பயணிகளுக்குக் அளிக்கும் உணவு, மருத நிலத்தின் காட்சிகளும் விருந்தோம்பலும், சர்க்கரை ஆலை, மீனவர் குடியிருப்பும் விருந்தோம்பலும், அந்தணர் குடியிருப்பும் விருந்தோம்பலும், கலங்கரை விளக்கம், காஞ்சீபுரத்தின் சிறப்பு, இளந்திரையனின் சிறப்பு, அவனுடைய விருந்தோம்பல் ஆகியவற்றை நாம் காணலாம்.

**முல்லைப்பாட்டு**:

இது 103 அடிகளைக் கொண்டது. புலவர் நப்பூதனார் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனுக்காக எழுதியது. இந்தப் பாட்டில் மன்னனின் பாசறை, அவன் பணியில் உள்ள யவனர், பாசறையில் பணி புரியும் பெண்கள், தண்ணீர் மணி காட்டி, தன் வீரர்களை நினைத்து வருந்தும் மன்னன், மன்னனை நினைத்து ஏங்கும்

அவன் மனைவி, ஏழு மாடத்து அரண்மனை, முல்லை நிலத்தின் அழகான வருணனை யாவற்றையும் காணலாம்.

**மதுரைக்காஞ்சி**:

இது 782 அடிகளைக் கொண்டது. புலவர் மாங்குடி மருதனார் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்காக எழுதியது. மதுரை நகரில் உள்ள கடைகள், நிகழ்வுகள் யாவற்றையும் மிகச் சிறப்பாக நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார் மாங்குடி மருதனார். இந்த நூலில் நெடுஞ்செழியனின் நால்வகைப் படையின் வலிமை, அவனது வீரமும் சிறப்பும், பாணர்களுக்கு யானைகளையும் பொன்னால் செய்த தாமரை மலர்களை மன்னன் கொடுப்பது, பாண்டிய நாட்டின் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் ஆகிய நிலங்களின் சிறப்பு, மதுரை நகரின் கோட்டையும், அகழியும், நாள் அங்காடி, இரவு அங்காடி, பௌத்தப் பள்ளி, சமணப் பள்ளி, அந்தணர் பள்ளி, நீதி மன்றம், இரவின் மூன்று சாமங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள், மதுரையின் ஒலிகள், தொழில் மாக்கள், மதுரையின் சிறப்பு யாவற்றையும் நாம் காணலாம்.

**நெடுநல்வாடை**:

இது 188 அடிகளைக் கொண்டது. புலவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் எழுதியது. மன்னனின் பெயர் கிடைக்கவில்லை. ஆனால் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்காக எழுதப்பட்டது என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். இந்தப் பாட்டில் நீண்ட குளிர் காலத்தினால் துன்பத்தில் தவிக்கும் இடையர்கள், பறவைகள், குரங்குகள், மற்றும் மாடுகள், மழைக் காலத்தின் செழிப்பு, மாலை நேரத்தில் விளக்கு ஏற்றி வழிபடும் பெண்கள், அரண்மனையைக் கட்டும் வல்லுநர், அரண்மனையின் அமைப்பு, அந்தப்புரத்தின் அமைப்பு, அரசியின் அழகிய வேலைப்பாடு அமைந்த கட்டில், அரசி கணவனை நினைத்து வருந்தும் நிலைமை, பாசறையில் மன்னனின் நிலைமை யாவற்றையும் காணலாம்.

**குறிஞ்சிப்பாட்டு**:

இது 261 அடிகளைக் கொண்டது. புலவர் கபிலர் ஆரிய மன்னன் பிரகதத்தனுக்குத் தமிழரின் களவு முறைத் திருமணத்தை இந்தப் பாடல் மூலம் விவரிக்கின்றார். தோழி தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே ஏற்பட்ட அன்பைப் பற்றி தலைவியின் தாயிடமும் செவிலித் தாயிடமும் கூறி, திருமணம் வேண்டுவதை ‘அறத்தோடு நிற்றல்’ என்று தமிழ்ச் சான்றோர் கூறினர்.

இந்தப் பாட்டில் தோழி ஒருத்தி தலைவியின் தாயிடம், தலைவி தலைவனைத் தினைப் புனத்தில் எப்படிச் சந்தித்தாள், காட்டு யானையிடமிருந்து தலைவன் அவர்களை எப்படிக் காப்பாற்றினான், தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே எவ்வாறு அன்பு ஏற்பட்டது, தலைவன் எவ்வாறு திருமணத்தை நாடுகின்றான், தலைவன் கொடூரமான பாதையில் இரவில் தனியே வருவதால் அவனுக்குத் துன்பம் நேரிடும் என்று தலைவி வருந்துகின்றாள், என்றெல்லாம் விவரமாகக் கூறுகின்றாள். கண்கள் சிவக்க அருவியில் குளித்து விட்டு 99 மலர்களால் தலைவியும் தோழியும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் காட்சி சிறப்புடையது.

**பட்டினப்பாலை**:

இது 301 அடிகளைக் கொண்டது. புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் சோழன் கரிகால் பெருவளத்தானுக்காக எழுதியது. காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய விவரங்கள் நிறைந்த நூல் இது. இந்தப்பாட்டில் சோழ நாட்டின் வளமை, காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, முனிவர்கள் வாழும் தவப் பள்ளிகள், மறவர்களின் விளையாட்டுக் களம், பரதவர் இருப்பிடம், காவிரிப்பூம்பட்டினத்தின் இரவு நிகழ்ச்சிகள், வரி வசூலிப்பவர்கள், ஏற்றுமதி, இறக்குமதி, மாளிகைகள், பல்வேறு கொடிகள், உழவர், அந்தணர், வணிகர் ஆகியோர் பற்றிய விவரங்கள், ஊரின் செல்வம், கரிகாலனின் போர்த் திறமை, யாவற்றையும் நாம் காணலாம்.

**மலைப்படுகடாம்** (கூத்தராற்றுப்படை):

இது ஒரு ஆற்றுப்படை நூல். 583 அடிகளைக் கொண்டது. புலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் குறுநில மன்னன் நன்னன் வேண்மானுக்காக எழுதியது. இந்தப்பாட்டில் பாணர் குடும்பம் பல்வேறு இசைக் கருவிகளை சுருக்குப் பைகளில் கட்டிக் கொண்டு செல்வது, நன்னனின் சிறப்பு, நவிர மலையின் தன்மை, பாதையில் உள்ள நல்லதும் பொல்லாததும், கானவர் குடியும் விருந்தோம்பலும், நன்னனின் மலை நாட்டுச் செல்வம், இரவில் பயணம் கூடாது என்ற அறிவுரை, கவணிடமிருந்து தப்புதல், வழுக்கி விழாமல் பாதையில் செல்லுதல், இறைவனைத் தொழுது செல்லுதல், இரவில் குகையில் தங்குதல், மலைப் பாம்பிடமிருந்து தப்பித்தல், மலை மக்களின் விருந்தோம்பல், மலையின் ஒலிகள், வழியில் காணும் கோட்டைகளும் நடு கற்களும், உதவும் மறவோர், சிற்றூரின் விருந்தோம்பல், உழவர்களின்

உதவி, நன்னனின் அரண்மனை, நன்னனின் கொடைத் தன்மை யாவற்றையும் நாம் காணலாம்

**சிலப்பதிகாரம்**

தமிழ் மொழியில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூலின் ஆசிரியர் இளங்கோ அடிகள் ஆவார். இது சமண சமயக் காப்பியம். இந்தக் காப்பியம் சங்க காலத்திற்கும் தேவாரக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தது.

காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**மணிமேகலை**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தினையும் தமிழில் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்கள் என்பர். ஐந்தனுள் சிறப்புத் தகுதி வாய்ந்தவை சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும். இவை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்று குறிப்பிடுவார்கள். இவ்விரண்டும் கதை நிகழ்ச்சியில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. மேலும் சமகாலத்தில் தோன்றியவை. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாலும் மணிமேகலை சீத்தலைச் சாத்தனாராலும் பாடப்பட்டவை. சமண சமயச் செய்திகளைச் சிலப்பதிகாரமும், பௌத்த சமயக் கொள்கைகளை மணிமேகலையும் கூறுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் பௌத்த சமயம் தமிழகத்தில் விரிவாகப் பரவி மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. புத்தருடைய வரலாறும், அறவுரையும் புலவர் பெருமானாகிய சாத்தனாருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதன் வெளிப்பாடே மணிமேகலையாகும்.

**முத்தொள்ளாயிரம்**

முத்தொள்ளாயிரம் வெண்பா யாப்பில் எழுதப்பட்ட நூல், இது சேர சோழ பாண்டியர்களின் புகழ் பாடுவது. எந்தக் குறிப்பிட்ட மன்னனையும் இது பாடவில்லை. மூன்று குடியினருக்கும் உரிய கோதை, கிள்ளி, மாறன் முதலான பொதுவான பெயர்களே இதில் இடம் பெற்றுள்ளன. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் தொகுதியில்

இருந்து எடுக்கப்பட்ட 108 செய்யுட்களே இன்று முத்தொள்ளாயிரம் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நூல் தொல்காப்பியர் குறிப்பிட்ட விருந்து என்னும் வகையைச் சாரும்.

**இறையனார் களவியலுரை**

சங்கம் மருவிய காலத்தை அடுத்து வந்த காலப் பிரிவே பல்லவர் காலம் எனக் குறிப்பிடப்படுகிறது. இது, ஏறக்குறைய கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை நீடித்தது எனலாம். இதுவே பக்தி இயக்கக் காலமும் ஆகும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் வாழ்ந்த இந்தக் காலத்தில் உரைநடையில் நூல்கள் ஏதும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இறையனார் களவியல் உரையே இலக்கியங்களுக்கு எழுந்த உரைநூல்களுள் முதலாவதாகக் கருதப்படுகிறது. இதன் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர் அறிஞர். எனவே இந்த உரை பல்லவர் ஆட்சியின் இறுதியில் எழுதப்பட்டது எனலாம்.

இறையனார் அகப்பொருள் என்றாலும் இறையனார் களவியல் என்றாலும் ஒன்றுதான். இந்த நூலில் அறுபது நூற்பாக்கள் உள்ளன. இந்த நூல் களவு, கற்பு என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இந்நூலின் ஆசிரியர் இறையனார் (சிவபெருமான்). இறையனார் களவியல் நூலின் உரைதான் முதல் உரைநடை நூல்.

தமிழ்மொழியின் வேர்களும், விழுதுகளும் உலக மொழிகளில் இருப்பதை மேல்நாட்டு அறிஞர் பலரும், ஆசிய நாட்டு அறிஞர்களும் தொடர்ந்து எடுத்தியம்பி வருகின்றனர்.

ஒரு செம்மொழிக்கு இரு தகுதிகள் கட்டாயமாக இருக்க வேண்டும். இலக்கிய வளமும் தொன்மையுமே அவ்விரு தகுதிகளாகும். இவற்றில் ஏதாவது ஒரு தகுதியை மட்டும் பெற்றிருந்தால் அந்த மொழி செம்மொழியெனக் கருதப்படுவதில்லை. எடுத்துக் காட்டாக, இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்கள் பேசிவரும் முண்டா மொழிகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை. ஆயினும் இந்த மொழிகளுக்கு இலக்கிய வளம் கிடையாது; எழுத்துகள்கூட இல்லை. ஆகையால், முண்டா மொழிகள் செம்மொழி என்ற தகுதியைப் பெறவில்லை. இன்னொரு பக்கம், ஆங்கில மொழி நிரம்பிய இலக்கிய வளம்பெற்ற மொழியாகத் திகழ்கின்றது: ஆயினும் இம்மொழியின் தொன்மை ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேல்

இல்லை. ஆகவேதான் ஆங்கிலேயரும் தம் மொழியைச் செம்மொழி எனக் கூறிக் கொள்வதில்லை.

இந்திய நாட்டில் இலக்கிய வளமும் தொன்மையும் உள்ள மொழிகள் இரண்டேதான்: சமற்கிருதமும் தமிழும். ஆகையால்தான் மத்திய அரசின் அறிவிப்பு இவ்விரு இந்திய மொழிகளைச் செம்மொழிகளென அங்கீகரித்துள்ளது.

இவற்றுள் சமற்கிருதம் வேத காலத்திலிருந்தும் தமிழ் சங்க காலத்திலிருந்தும் நமக்குக் கிடைத்துள்ளதால், சமற்கிருதம் தமிழைவிடப் பழைமையானது என்று இன்று கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில் பொதுவான ஒரு கருத்து உலக அறிஞர்களிடையே நிலவுகிறது. ஆயினும் வேதங்களிலேயே தென்னிந்திய மொழிச் சொற்கள் காணப்படுவதாலும், இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் இன்றும் தென்னிந்திய மொழிகள் (பிராகூய், குருக், மால்தோ) பேசப்பட்டு வருவதாலும், சிந்துவெளிப் பண்பாடு திராவிட மக்களால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தை உலகின் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதாலும், திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழ் இந்தியாவின் மிகத் பொதுவாகத் தொன்மையான முதல் செம்மொழி என்ற பெருமைக்கு உரித்தாகிறது.

தொன்மை, சீர்மை ஆகிய இரண்டு இயல்புகள் Classic / Classical என்ற சொற்களின் ஆட்சியிலே காணப்படுகின்றன. செம்மொழி என்றால் அனைத்து வகையாலும் செம்மையாக அமைந்த மொழி என்று பொருள்படும். இதனை ஆங்கிலத்தில் Classical Language என்பர். செம்மொழி என்பதின் மூலம் 'Classical' என்ற இலத்தீன் சொல்லேயாகும். இதற்குப் பரிமாற்கலைஞர் 'உயர்தனிச்செம்மொழி' என்றும், தேவநேயப் பாவாணர், 'செம்மொழி' என்றும், சி. கனகசபாபதி, 'செவ்வியல் பாங்கு' என்றும், கா. அப்பாதுரையார், 'தலைமைப் பண்பு' என்றும், ஜி .ஜான்சாமுவேல், 'செம்மொழி' என்றும், ந. பிச்சமுத்து,'முதன்மை மரபியல்' என்றும், இ. மறைமலை, 'உலகப்பெருமொழி' என்றும், சு. பாலச்சந்திரன், 'செம்பொருளியல்' என்றும், வை. சச்சிதானந்தன், 'உயர்தனி இலக்கியம்' என்றும், சி.சு.செல்லப்பா, 'காவிய இயல்' என்றும், ச. அகத்தியலிங்கம், தமிழண்ணல் ஆகியோர் 'செவ்வியல்' என்றும் பொருள் கூறியுள்ளனர். செம்மொழித் தகுதிகள் பதினொன்று என்று உலகமொழியியல் அறிஞர்கள் வகுக்கப்பட்டவற்றில் சீனம் பத்தும், கிரேக்கம் ஒன்பதும், இலத்தீன் ஹீப்ரூ எட்டும், சமஸ்கிருதம், அரேபியம் ஏழும் தகுதிகளைப்

பெற்றிருக்க தமிழானது பதினொருத் தகுதிகளையும் முழுமையாகப் பெற்ற மொழி என்று நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

செம்மொழி என்பது மிகத் தொன்மையும் நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியும் கொண்டதாக இருக்கும் என்பது பொதுவான கருத்து. அந்த வகையில், உலகின் தொன்மை மொழிகளாக ஆறு மொழிகளை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் 'யுனெசுக்கோ' அறிவித்துள்ளது. அவை தமிழ், சமசுகிருதம், சீனம், இலத்தீனம், கிரேக்கம், இப்ரூ ஆகியன. தமிழ்மொழி இந்தியாவிற்கே உரிய செம்மொழியாகத் திகழ்கின்றது

சமசுகிருதம் பேச்சு மொழியாக இல்லை; 'மந்திரங்கள்' என்ற உருவில் மட்டுமே இருக்கிறது. இலத்தீன், இப்ரூ மொழிகள் வழக்கொழிந்துவிட்டது. இசுரேலிய அரசு ஏசுபிரான் பேசிய இப்ரூ மொழிக்கு மீண்டும் உயிரூட்டி வருகிறது. கிரேக்க மொழியும் கிட்டதட்ட அழிவின் எல்லையைத் தொட்டுவிட்டு இப்போது மறுவாழ்வு பெற்று வருகிறது. சீன மொழியோ பட எழுத்து அமைப்பில் அமைந்ததுள்ளதால், மாந்த உள்ளுணர்வுகளை சீனமொழியால் மிகத் துல்லியமாக வெளிப்படுத்த முடியாது என்பது மொழியறிஞர்கள் கருத்து.

தமிழ் மொழி சிறந்த இலக்கியவளம், செம்மாந்த இலக்கண அரண், செறிவான விழுமியம், பொதுமை மரபு, உயரிய சிந்தனை, செரிவானச் சொல்வளம், வரலாற்றுப் பின்னணி, தனித்தியங்கும் மாண்பு, அழிவில்லா வாழ்வு, காலத்திற்கேற்ற புதுமை என எந்தக் காலத்திற்கும் ஏற்ற மொழியாக சிறப்புற்று விளங்குகிறது.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

---

1. செம்மொழித்தகுதியுடைய நூல்களாக வரையறுக்கப்பட்டவை எத்தனை?

   அ) 41 ஆ) 42, இ) 40, ஈ) 39

2. செம்மொழித் தகுதியுடைய நூல்களில் இடம்பெறும் இலக்கண நூல்கள் எத்தனை?

   அ) 3, ஆ)1, இ) 2, ஈ) 4

3. தமிழ் செம்மொழி குறித்து எந்த நூலில் முதன் முதல் குறிப்பிடப்பட்டது?

   அ) தமிழ் மொழி வரலாறு, ஆ) தமிழ் இலக்கிய வரலாறு,

   இ) தமிழர் வரலாறு, ஈ) பண்பாட்டு வரலாறு

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் செம்மொழித் தமிழின் சிறப்புகள், தமிழின் செம்மொழி தகுதி சிறப்புகள் மற்றும் செவ்வியல் நூல்கள் பற்றி நீங்கள் அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -1**

1. சிலப்பதிகாரம்
2. இரு தகுதிகள்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -2**

1. அ) 41
2. இ) 2
3. அ) தமிழ் மொழி வரலாறு,

# பிரிவு-12

## பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

12.1. பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள்

12.2. கல்லணை

12.3. நீர் நிலைகளை குறிக்கும் பெயர்கள்

12.4. மாமல்லபுரம்

12.5. அங்கோர்வாட் கோயில்

12.6. பெரிய (பெருவுடையார்) கோயில், தஞ்சாவூர்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இந்தப் பிரிவில் பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள், கல்லணை, நீர் நிலைகளை குறிக்கும் பெயர்கள், மாமல்லபுரம், அங்கோர்வாட் கோயில் மற்றும் பெரிய (பெருவுடையார்) கோயில், தஞ்சாவூர் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்வீர்கள்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள்
- கல்லணை, நீர் நிலைகளை குறிக்கும் பெயர்கள்
- மாமல்லபுரம், அங்கோர்வாட் கோயில்
- பெரிய (பெருவுடையார்) கோயில்

## 12.1. பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள்

### இராஜேந்திர சோழன்

1,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவை, கீழை நாடுகளை வென்ற தமிழ் மன்னன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்டு இந்தியாவையும் கீழை நாடுகள் சிலவற்றையும் வெற்றிகொண்ட சோழ மன்னனான ராஜேந்திரச் சோழன், இந்தியத் துணைக்கண்டம் பார்த்த மகத்தான பேரரசர்களில் ஒருவர். இந்திய துணைக் கண்டத்தின் பிற மன்னர்கள் நிகழ்த்தாத சாதனைகளை நிகழ்த்தியவர்.

சோழர்களின் வரலாற்றில் இராஜராஜ சோழனின் இடம் மிக முக்கியமானது என்றாலும், கடல் தாண்டிய அவருடைய வெற்றிகள் என்பவை இலங்கையோடு முடிந்துவிடும் நிலையில், இராஜேந்திரச் சோழன் இந்தியா மட்டுமல்லாமல், கடல் தாண்டிச் சென்று பல நாடுகளை வென்று, புதிய தலைநகரை நிர்ணயித்து தமிழர் வரலாற்றில் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றவர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்டு இந்தியாவையும் கீழை நாடுகள் சிலவற்றையும் வெற்றிகொண்ட சோழ மன்னனான இராஜேந்திரச் சோழன், இந்தியத் துணைக்கண்டம் பார்த்த மகத்தான பேரரசர்களில் ஒருவர். இந்திய துணைக் கண்டத்தின் பிற மன்னர்கள் நிகழ்த்தாத சாதனைகளை நிகழ்த்தியவர்.

சோழர்களின் வரலாற்றில் இராஜராஜ சோழனின் இடம் மிக முக்கியமானது என்றாலும், கடல் தாண்டிய அவருடைய வெற்றிகள் என்பவை இலங்கையோடு முடிந்துவிடும் நிலையில், ராஜேந்திரச் சோழன் இந்தியா மட்டுமல்லாமல், கடல் தாண்டிச் சென்று பல நாடுகளை வென்று, புதிய தலைநகரை நிர்ணயித்து தமிழர் வரலாற்றில் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றவர்.

"சோழர் வரலாற்றில் முதலில் மகத்தான மன்னனாக அறியப்பட்ட இராஜராஜ சோழனின் சாதனைகளுக்குப் பின்னணியாக இருந்தவன் இராஜேந்திரச் சோழன் தான். பஞ்சவன் மாராயன் என்ற பெயருடன் இராஜராஜசோழனின் மாதண்ட நாயகனாக இருந்து, படையெடுப்புகளை நடத்தி, எதிரிகளை கட்டுக்குள் வைத்திருந்தான். இன்றைய குடகு பகுதிகளில் தங்கியிருந்து சாளுக்கிய நாடு, கேரள நாடுகளை

அடக்கினான். அதனால்தான் இராஜராஜ சோழன் அமைதியாக தஞ்சையில் ஆட்சி செய்ய முடிந்தது. ஆகவே, ராஜேந்திரனின் சாதனைகள் இராஜராஜசோழன் காலத்திலிருந்தே துவங்குகின்றன" என்கிறார் குடவாயில் பாலசுப்பிரமணியன்.

"இராஜேந்திர சோழனின் முதல் சாதனை இந்தியா முழுவதையும் வெற்றிகொண்டது. இராஜராஜசோழனின் காலத்திலேயே சோழ நாட்டுக்குத் தெற்கேயும் மேற்கேயும் உள்ள அனைத்து நாடுகளையும் தந்தையும் மகனும் வென்றிருந்தார்கள். தான் மன்னனாக முடிசூடிய பிறகு வடநாடுகளை நோக்கி தன் பார்வையைத் திருப்பினான். மேலைச் சாளுக்கியர்கள்தான் அப்போது சோழர்களுக்குப் பெரிய தொல்லையாக இருந்தார்கள். முதலில் அவர்களை வெற்றிகொண்டான். பிறகு, இன்றைய மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், மேற்கு வங்கம், வங்கதேசம் வரை சென்று அவர்களை வெற்றிகொண்டான். இதனால் பெரும் செல்வம் கிடைத்த தோடு அவனுடைய ஆளுமையும் இந்தியா முழுக்க தெரியவந்தது. நாடுகளைப் பிடித்து ஆட்சி செய்வது அவன் நோக்கமாக இருக்கவில்லை" என்கிறார் குடவாயில் பாலசுப்ரமணியம்.

**மூன்று பெரும் சாதனைகள்**

இராஜேந்திர சோழன், மன்னனாக முடிசூடிய பிறகு தன் முன்னோர்களின் தலைநகரான தஞ்சாவூரில் இருந்தபடி பத்து ஆண்டுகள்தான் அதாவது 1014 முதல் 1024வரைதான் ஆட்சி செய்தான்.

"இராஜேந்திர சோழனின் முதல் சாதனை இந்தியா முழுவதையும் வெற்றிகொண்டது.

இராஜேந்திர சோழனின் இரண்டாவது சாதனை, புதிதாக ஒரு தலைநகரை நிர்ணயம் செய்தது. வளமான தஞ்சாவூரிலிருந்து 50 கி.மீ. தூரத்தில் வறண்ட பகுதி ஒன்றில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரை நிர்மாணித்தான் இராஜேந்திரச் சோழன். இப்படிச் செய்ததற்குக் காரணம் இருந்தது என்கிறார் பாலசுப்ரமணியம். இராஜேந்திரச் சோழனின் காலத்தில் தஞ்சாவூர் ஒரு இராணுவக் கேந்திரமாக உருவெடுத்திருந்தது. படைகள் பெருகியிருந்தன. இவ்வளவு பெரிய படைகளை வளமான காவிரியின் வடிநிலப் பகுதியில் வைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. இதனால் கொள்ளிடத்திற்கு வடகரையில் ஒரு வறண்ட பெரும் பகுதியைத் தேர்வுசெய்து புதிய தலைநகரமாக உருவாக்கத் திட்டமிட்டான் இராஜேந்திரச் சோழன்.

இராஜேந்திரச் சோழனின் மூன்றாவது மகத்தான சாதனை அவனுடைய கடல்கடந்த படையெடுப்புகள். ராஜேந்திரச் சோழனின் கப்பற்படை, அந்த காலகட்டத்தில் உலகிலேயே மிகச் சிறந்த கப்பல் படையாக இருந்தது. இந்தக் கடற்படையின் மூலம் மலேசிய தீபகற்கம், இந்தோனீசியத் தீவுகள் உட்பட கிழக்காசிய நாடுகளின் பெரும்பகுதியை இராஜேந்திரச் சோழன் வெற்றி கொண்டான்.

தமிழ் மன்னர்களில், ஏன் அந்த காலகட்டத்து இந்திய மன்னர்களில் இராஜேந்திர சோழன் அளவுக்கு கடல் கடந்து சென்று வெற்றிபெற்றவர்கள் யாருமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ராஜேந்திர சோழனுக்கு முன்பாக, இராஜராஜ சோழன் கடல் கடந்து சென்று மாலத்தீவை வென்றிருக்கிறான். ஈழ மண்டலப் படையெடுப்பையும் நடத்தியிருக்கிறான். ஆனால், இராஜேந்திர சோழன் வங்கக் கடலைக் கடந்து 1025இல் ஸ்ரீவிஜய நாட்டை (தற்போதைய இந்தோனீசியப் பகுதி) வென்றான். கடாரத்திற்கு (தற்போதைய மலேசியாவின் ஒரு பகுதி) பல கப்பல்களை அனுப்பி ஸ்ரீமாறவிஜயோத்துங்க வர்மனை அடக்கினார். அங்கிருந்து பெரும் எண்ணிக்கையிலான யானைகள் உட்பட பல பரிசுகள் சோழ இராஜ்ஜியத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

இராஜேந்திரச் சோழனின் கல்வெட்டுகள் கிட்டத்தட்ட 12 துறைமுக நகரங்களைக் குறிப்பிடுகின்றன. அவை பெரும்பாலும் மலேயத் தீபகற்பம், சுமத்திரா, நிகோபார் தீவுகளைச் சேர்ந்தவை. கடல் கடந்து சென்று அந்நாட்டு மன்னர்களை அடக்கிபிறகு, ராஜேந்திரச் சோழன், அந்த நாடுகளை தன்னாட்டோடு இணைத்து ஆட்சி செய்யவில்லை. மாற்றாக செல்வங்களைச் சேர்ப்பது, வணிகர்களின் நலன்களைப் பாதுகாப்பது ஆகியவையே இந்தப் படையெடுப்பின் நோக்கமாக இருந்தன.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

---

1. கீழை நாடுகளை வென்ற தமிழ் மன்னன் ___________.
2. சித்தன்னவாசல் ஓவியங்கள், ஏழாம் நூற்றாண்டில் (கி.பி.600 -630) ___________ மன்னரால் வரையப் பட்டவை.
3. இராஜராஜன் கல்வெட்டுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது அரசனின் ___________.

## 12.2. கல்லணை

நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் என்கிறது தொல்காப்பியம். 'நீரின்றி அமையாது உலகு', நீர் 'மிகுனும் குறையினும் நோய் செய்யும்' என்கிறார் வள்ளுவர். நீரில்லாமல் இவ்வுலகம் இல்லை என்பதை பண்டைய தமிழர்கள் அறிந்து வைத்திருந்திருக்கிறார்கள் என்பதற்கான வெளிப் படையான சான்று இது.

தமிழரின் நீர் மேலாண்மை திறன் மிக தொன்மையானது. சங்ககாலம் தொட்டு நீரை கொண்டாடி இருக்கிறார்கள், அதை பாதுகாத்து இருக்கிறார்கள். சங்க காலத்தின் முந்நீர் விழவு என நீருக்கு விழா எடுத்திருக்கிறார்கள் தமிழர்கள். பண்பாட்டு ஆய்வாளர் தொ.பரமசிவம் தமிழர் பண்பாட்டை நீர் பண்பாடு என்கிறார்.

கல்லணை சோழ மன்னர்களில் மாவீரனாக போற்றப்படும் கரிகால சோழனால் கட்டப்பட்டது. கரிகாலன் கட்டிய கல்லணை: தமிழர்களின் நீர் மேலாண்மைக்கான சால்பு!

தமிழரின் நீர் மேலாண்மை குறித்து குறிப்பிடும் போது, அதில் கல்லணையை குறிப்பிடாமல் இருக்க முடியாது. சர்வதேச அளவில் தமிழரின் நீர் மேலாண்மை அறிவை பறைசாற்றியது கல்லணை.

கல்லணை மணற்பாங்கான ஆற்றுக்குள் அடித்தளம் அமைக்கப் பள்ளம் தோண்டினால் நீர் ஊறிக் கொண்டே. நிச்சயம் நீர் ஊற்றில் அடித்தளம் அமைக்க முடியாது. பின் எப்படி கரிகாலன் கல்லணையை கட்டினார்? இதனை ஆய்வு செய்த ஆர்தர் காட்டன், அணைக் கட்டின் அடித்தளத்தில் 12 அடி ஆழம் வரை குழி தோண்டிப் பார்த்திருக்கிறார். அணையின் ரகசியம் அங்கு அவருக்கு தெரிந்திருக்கிறது. அணை கட்டின் 12 அடி ஆழத்திற்கு கீழே பாறைகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி அணை கட்டப்பட்டு இருக்கிறது. அந்த பாறைகளின் இணைப்புக்கு களிமண் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதன் காரணமாக அவர் கல்லணையை 'மகத்தான அணை' என குறிப்பிட்டு இருக்கிறார்.

அறிஞர் வா.செ.குழந்தைசாமி, "உரகில் உள்ள அணைகளில் இன்றும் உயிரோடு பயன்பாட்டில் உள்ள காலத்தால் மூத்த அணை கல்லணை" என்றார். இவர் நீரியல் அறிஞர். முக்கொம்பும் கல்லணையும் காவிரியின் பாதையில் முக்கியமான இடங்கள். திருச்சிக்கு மேற்கே 18 கி.மீ தொலைவில் முக்கொம்பு உள்ளது. இங்கிருந்துதான் காவிரி, கொள்ளிடம்,

காவிரிக்கால் என்று காவிரி மூன்றாகப் பிரிகிறது. இதனால்தான் இந்த இடம் 'முக்கொம்பு' ஆனது.

## 12.3. நீர் நிலைகளை குறிக்கும் பெயர்கள்

அகழி, அசும்பு, அலந்தை, ஆவி, ஆறு, இலஞ்சி, இலந்தை, உடுவை, உவளகம், ஊரணி, எல்வை, ஏல்வை, ஏம்பல், ஏந்தல், ஏரி, ஓடை, கண்மாய், கயம், கால், கால்வாய், கிடங்கு, கிணறு, குட்டை, குட்டம், குண்டு, குண்டம், குண்டகம், குழி, குளம், கூவல், கூபம், கேணி, கோட்டகம், சட்டம், சலதரம், சிலந்தரம், சிக்கரி, சுனை, சூழி, சேங்கை, தடம், தடாகம், தம்மம், தாகம், தாங்கல், தரவு, பாக்கம், பொய்கை, மங்கல், மடு, மடுவு, மூழி, வலயம், வாக்கம், வாய்க்கால், வாவி.

உலகின் பழமைவாய்ந்த அணை எங்குள்ளதென்றால் அது நமது தமிழகத்தில் தான். அதுவே தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கல்லணை. தஞ்சை காவிரி மீது கட்டப்பட்டுள்ள இந்த கல்லணை சோழ மன்னர்களில் மாவீரனாக போற்றப்படும் கரிகால சோழனால் கட்டப்பட்டது. உலகில் கட்டப்பட்ட அணைக்கட்டுகளில் மிகப் பழமையானதும், பல நூற்றாண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்து வருவதும் இந்த கல்லணை தான். இந்த அணை கரிகாலன் என்ற சோழ மன்னனால் சங்ககாலத்தில் கட்டப்பட்டது.

கரிகாலன் கல்லணை கட்டி காவிரியின் போக்கைக் கட்டுப்படுத்திக் கழனிகளை செழுமையாக்கியதை பழங்கால கல்வெட்டுகளிலும் பாடல்களிலும் இன்றும் காண முடிகிறது. கல்லணையின் நீளம் 1080 அடி, அகலம் 66 அடி, உயரம் 18 அடி, இது நெளிந்து வளைந்த அமைப்புடன் காணப்படுகிறது. கல்லும் களிமண்ணும் மட்டுமே சேர்ந்த ஓர் அமைப்பு 2000 ஆண்டுகளுக்கு மேலாக காவிரி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி வருவதை எவராலும் மறுப்பதற்கு இல்லை.

தஞ்சை மாவட்டம் தொடர்ச்சியாக வெள்ளத்தாலும், வறட்சியாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. அப்போது 1829ஆம் ஆண்டில் காவிரி பாசன பகுதி தனி பொறுப்பாளராக ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் சர் ஆர்தர் காட்டன் நியமிக்கப்பட்டார். பல காலம் கல்லணை மணல் மேடாக இருந்ததால் நீரோட்டம் தடைப்பட்டது. பல காலம் பயனற்று கிடந்த கல்லணையை, தைரியமாக சிறு சிறு பகுதிகளாக பிரித்து மணல் போக்கிகளை அமைத்தார். பின்னர் கல்லணையை பல ஆண்டுகளாக ஆராய்ந்து மேற்க்கண்ட விளக்கத்தை கண்டுபிடித்தார். இவரை இந்திய நீர் பாசனத்தின் தந்தை என்றும் போற்றப்படுகின்றனர்.

கல்லணையை மெக்கன்சி ஆவணக்குறிப்புகளில் அணைக்கட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது. 1853ஆம் ஆண்டில் பேயர்டு சுமித் என்ற ஆங்கில பொறியியல் வல்லுனர் தென்னிந்தியாவின் பாசனம் என்ற நூலில் கல்லணையை ஒரு மிகச் சிறந்த பொறியியல் சாதனை எனக் குறிப்பிட்டுள்ளார். காலத்தை வென்று நிற்கும் தமிழனின் பெரும் சாதனையைப் பார்த்து வியந்து அதை தி கிராண்ட் அணைக்கட் (மகத்தான அணை) என்று அழைத்தார் சர் ஆர்தர் காட்டன். பழந்தமிழரின் அணை கட்டும் திறனையும் பாசன மேலாண்மையையும் உலகிற்கு எடுத்து கூறினார். அதுவே பிறகு உலகமெங்கும் பிரபலமாயிற்று.

## 12.4. மாமல்லபுரம்

கற்களையெல்லாம் கவின்மிகு கலைகளாக்கி தமிழர்களின் பெருமையையும் புகழையும் உலகுக்கு உணர்த்திச் சென்றவர்கள் பல்லவ மன்னர்கள். அப்படி, கலைக் கருவூலங்களாக விளங்கும் மாமல்லபுர கோயில்கள் நம் பண்பாட்டுச் சின்னங்கள்; யுனெஸ்கோ பாரம்பர்ய நினைவுச் சின்னங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டவை. நம் பெருமை யையும் கலாசாரத்தையும் உலகுக்கு உணர்த்தும் மாமல்லபுரம்.

கடற் சீற்றத்திற்கு இடையே, கடற்கரையோரமாக 1400 ஆண்டுகளுக்கு முன் பெரும் பாறை ஒன்றின் முகப்பை மட்டும் பட்டையாகச் செதுக்கி, அதன் பின் உள்நோக்கி குடைந்த வகையில் உருவாக்கப்பட்டவையே மாமல்லபுரம் குடைவரைக் கோயில்கள். மாமல்லபுரத்தின் உச்சி கோபுரம் மட்டும் 60 அடி. கோபுரத்தை தாங்கும் வகையில் முதலில் தூண்கள் செதுக்கப்பட்டன.

பல்லவ மன்னர்கள் காலத்தில் இங்கு முக்கிய துறைமுகமாக மாமல்லபுரம் கடற்கைரை செயல்பட்டு வந்துள்ளது. இச்செழிப்பன துறைமுக நகரம் அழகிய சிற்பங்களுடன் பல்லவ மன்னர்களால் வாழ்நாள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மாமல்லபுர சிற்பங்கள் அனைத்தும் திராவிட பாரம்பரியத்துடன் அமைக்கப்பட்டு பல்லவ மன்னர்களின் கலை சிறப்புக்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தது.

மாமல்லபுர சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட தேர்சிலைகள், குகை கோயில்கள் நல்ல உறுதித்தன்மையுடன் அமைக்கப் பட்டுள்ளன. உயிரோட்டத்துடன் கூடிய நினைவு சின்னங்கள், புனித தன்மை மிக்க அழகிய சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளது. புராண கதைகள், காவிய போர்கள், பேய்கள், கடவுள்கள், விலங்கினங்கள் போன்ற அனைத்து உருவங்களும் தெளிவாக சுவர்களில் வரையப்பட்டுள்ளது. அனைத்து

சிற்பங்களும் தத்ரூபமாக கலைநயத்துடன் வரையப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் அமைந்துள்ள பெரும்பாலான கோயில்கள் பல்லவ மன்னர்களில் நரசிம்ம வர்ம பல்லவர் 1 மற்றும் நரசிம்மவர்மபல்லவர் 2 ஆகிய மன்னர்கள் காலத்தில் முழுமை பெற்றது.

சோழர்காலத்தின் சிற்பங்கள் பல்லவர்கால சிற்பங்களை விட மிகவும் எளிமையானவையாக அமையப்பட்டுள்ளது. பல்லவ மன்னர்கள் ஜைன மதத்தினை பின்பற்றி வந்தனர் ஆனால் மகேந்திர வர்ம பல்லவ மன்னர் காலத்தில் வைனவத்தை பின்பற்றப்பட்டதால் சிவன் மற்றும் விஷ்ணு ஆலங்கள் கட்டப்பட்டது. இக் கோயில் சிற்பங்கள் தாஜ்மஹாலிற்கு அடுத்தபடியாக காதல் தீம் கொண்ட சிறபங்கள் கொண்டதாக உள்ளது. பெரும்பாலான கோயில்கள் கடல் வெள்ளத்தினால் கடலுக்குள் மூழ்கியும் பின்னர் கடல் நீர் வற்றி கோயில்கள் காலை சூரிய ஒளியில் மிக அழகாக காட்சி அளிக்கின்றது.

**குகை கோயில்கள்**

மாமல்லபுரத்தில் ஒன்பது குகை கோயில்கள் அமைந்துள்ளன. இந்த குகை கோயில்கள் இந்து மத புராணத்தில் நிகழ்ந்த உண்மை சம்பவங்கள் பற்றிய சிறப்பம்சங்கள் நிறைந்துள்ளது. பல்வேறு குகை கோயில்களில் ஓய்வெடுப்பதற்கான வசதிகளும் அமையப் பட்டுள்ளது. குறிப்பாக கிருஷ்ணர் குகையில் அமைந்துள்ள சிற்பங்கள் அனைத்தும் உயிரோட்டத்துடன் அமையப் பெற்றுள்ளன. பிரபஞ்சத்தில் விஷ்ணு உறங்கும் கோலத்தில் உள்ளதைப்போல் மகிஷாசுரமர்த்தினி குகையில் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள துர்க்கா தேவி சிலை எருமை மாட்டின் தலையுடன் ஆக்ரோஷமாக காட்சியளிக்கிறது.

**சித்தன்னவாசல் ஓவியங்கள்**

புதுக்கோட்டையிலிருந்து விராலிமலைக்குச் செல்லும் சாலையில், 16கி.மீ தூரத்தில் அமைந்திருக்கிறது சித்தன்னவாசல். இதற்கு, ‘தென்னிந்தியாவின் அஜந்தா குகை’ என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அன்னவாசல் என்ற ஊருக்கு முன்னதாக உள்ளது இந்த ஊர்.

சித்தன்னவாசல் ஓவியங்கள், ஏழாம் நூற்றாண்டில் (கி.பி.600 -630) சிம்மவிஷ்ணுவின் மகன் மகேந்திரவர்மனால் வரையப் பட்டவை எனச் சொல்லப்படுகிறது.

பல்லவர் காலத்துக்கு முன்னர் கோயில்கள் செங்கற்களாலும், மரத்தாலும், மண்ணாலும், உலோகங்களாலும் கட்டப்பட்டுவந்தன. குகைக்

கோயில்களையும் - குடவரைக் கோயில்களையும் தமிழகத்தில் முதன் முதலில் கட்டியவர் மகேந்திரவர்மன்தான். இவர் சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாறியவர். சித்தன்னவாசல் சமண மத மையமாக இருந்ததை, இங்கு உள்ள கல்வெட்டுகளும் இந்த ஊரைச் சுற்றியுள்ள பழைமையான சமணச் சின்னங்களும் வெளிப்படுத்துகின்றன.

“சித்தன்னவாசல் ஓவியங்கள், பல்லவர் காலத்து ஓவியங்கள்" என்று வரலாற்று ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூறிவந்துள்ளனர். தற்போது கிடைத்துள்ள கல்வெட்டுகளிலிருந்து அந்த ஓவியங்கள் பாண்டியர் காலத்தவை என்று தெரியவந்துள்ளது.

## 12.5. அங்கோர்வாட் கோயில்

**தமிழ் மன்னன் கட்டிய கம்போடியா அங்கோர்வாட்**

உலகின் மிகப் பெரிய கோயிலை இரண்டாம் சூரிய வர்மன் என்ற தமிழ் மன்னன் கம்போடியாவை கைப்பற்றிய போது அங்கு உள்ள அங்கோர்வாட் என்ற இடத்தில் இக்கோயிலை கட்டியுள்ளான். இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத் தலங்களிலேயே இது தான் மிகப் பெரியது. கி.பி 1113 தொடங்கி 1150 வரை, ஏறத்தாள 37 ஆண்டுகள் கட்டப்பட்டது. இரண்டாம் சூரியவர்மன் அங்கோர் வாட்டை முதலில் ஒரு விஷ்ணு கோயிலாகத் தான் கட்டினார். சூரியவர்மன் இறந்த பிறகு ஆட்சிக்கு வந்த ஏழாம் ஜெயவர்மன் இதை பவுத்தக் கோயிலாக மாற்றினார்.

கம்போடியா நாட்டின் முக்கிய வருவாய் இந்த அங்கோர்வாட் கோயில் சுற்றுலாவிற்கு வரும் சுற்றுலா பயணிகளை நம்பி தான். இன்றைய கட்டிடவியல் வல்லுநர்களும் அறிவியல் அறிஞர்களும் வியக்கும் பிரம்மாண்டமான படைப்பு கம்போடியாவின் அங்கோர்வாட் ஆலயம். 500 ஏக்கரில் பரந்திருக்கும் இந்தக் கோயிலை ஒரு கலைப் பொக்கிஷம் என்று கூறலாம்.

1992ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு அங்கோர் வாட்டை உலக மரபுச் சின்னமாக அறிவித்ததுடன், அதிகம் சிதைவுறாமல் பராமரித்தும் வருகிறது. 65 மீட்டர் உயரம் கொண்ட மூன்று நிலைகளை உடைய கோபுரம், அதனைச் சுற்றிலும் நான்கு சிறிய கோபுரங்கள்; இரண்டு சிங்க சிலைகளைக் காவலாகக் கொண்ட நுழைவுவாயில்! அந்த நுழைவு வாயில் வழியே கோயிலின் உள்ளே சென்றதும் விதவிதமான சிற்பங்கள், வித்தியாசமான சன்னல்கள், கதவுகள், மிக நீண்ட பிரகாரங்கள்,

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பல தோற்றங்களில் தேவமங்கையரின் சிலைகள், பொற்றாமரைக் குளம். கோபுர நுழைவாயில் பகுதியில் இராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணக்காட்சிகள் அத்துடன் இரண்டாம் சூர்ய வர்மணின் அரசவைக் காட்சிகள் தத்ரூபமாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

14ஆம் நூற்றாண்டில் கம்போடியா மீது அடுத்தடுத்துத் தொடுக்கப்பட்ட போர்களால் சிதிலமடைந்தது. ஆகவே அங்கு காடுகள் சூழப்பட்டு அடையாளம் தெரியாமல் மறைந்தது. இதனை உலகிற்கு வெளிகொண்டு வந்த பெருமை ஹென்றி மோஹாட் என்பவரையே சேரும்.

## 12.6. பெரிய (பெருவுடையார்) கோயில், தஞ்சாவூர்

### கி.பி.10ஆம் நூற்றாண்டு / முதலாம் இராஜராஜ சோழன்

தஞ்சாவூரின் பெரிய கோயில் சோழர் காலத்தில் கட்டடக்கலை சிறப்பம்சமாக விளங்கியது.இந்த 212 அடி (64.8 மீட்டர்) உயரமான சிவன் கோவில் நாட்டின் மிகப்பெரிய சிவ லிங்கங்களில் ஒன்றாகும்.ஒரு மகத்தான நந்தி (காளை), 19.4 ‘x 8.23’ x 12 ‘(5.94 x 2.51 x 3.66 மீட்டர்) அளவிடுகிறது.இது இந்தியாவின் இரண்டாவது பெரிய நந்தி ஆகும், இது ஒரே கல்லில் இருந்து செதுக்கப்பட்டிருக்கிறது.

கி.பி. 1004இல் கோயில் கட்டும் பணி தொடங்கி ஆறே ஆண்டுகளில் சிறப்பாக முடிந்து கி.பி. 1010இல் குடமுழுக்கு நடத்தப்பட்டது. பொதுவாக ராஜகோபுரம் உயரமாகவும், மூலஸ்தான விமானம் உயரம் குறைத்தும் கட்டப்படுவது வழக்கம். சோழர்களின் கட்டடக்கலை முறைப்படி, ராஜகோபுரம் சிறிதாகவும், விமானம் பெரிதாகவும் கட்டப்படுவது மரபாக இருந்தது. அதுபோல், தஞ்சாவூர் கோயில் விமானம் 216 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டது. இக்கோயில் முதலாம் இராஜராஜ சோழனே எடுப்பித்தான் என்பதை அரசனது கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இராஜசிம்ம வர்மப் பல்லவன் கட்டிய காஞ்சி கைலாச நாதர் கோயில் இக்கோயில் கட்டுவதற்கு ஓர் உந்துதலாக அமைந்தது என்று கூறின் அது மிகையில்லை.

இராஜராஜ சோழன் சோழப் பேரரசின் விரிந்த பரப்பிற்கும், பேரரசின் ஆளுமைக்கும், செல்வ வளமைக்கும் ஏற்றவாறு இக்கோயிலை எழுப்ப உளங் கொண்டு அவ்வாறே செய்வித்துள்ளான். இக்கோயிலுக்கான நிவந்தங்கள் சோழப் பேரரசின் பரந்து பட்ட பரப்பில் குடி கொண்டுள்ள

எல்லா மக்களிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவை கல்வெட்டுகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இசைக்கலைஞர்கள், ஆடல் மகளிர்கள் போன்ற கோயிலுக்கு அணுக்கத் தொண்டு புரிவோருக்கான நிவந்தங்கள் ஒழுங்காக முறைப்படுத்தப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன என்பது நோக்கத்தக்கது. தளிச்சேரி பெண்டுகள் என்றழைக்கப்படும் பெரிய கோயிலில் நடனமாடிய 400 ஆடல் மகளிர்க்கான கொடைகள் மற்றும் அவர்களைப் பற்றிய குறிப்புகள் மிக நீண்ட கல்வெட்டுகளாக இக்கோயிலில் காணக்கிடைக்கின்றன.

இராஜராஜன் இக்கோயிலைக் கட்டி குடமுழுக்கு நடத்திய போது பொன்னால் விமானத்தின் கூரையை வேய்ந்துள்ளான். தக்ஷிணமேரு என்றழைக்கப்படும் சிறப்புடைய இவ்விமானம் சோழர்களின் கட்டடக்கலையை உலகெங்கும் பறை சாற்றுவதாய் பொலிவுடன் விளங்குகிறது.

இராஜராஜன் கல்வெட்டுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது அரசனின் மெய்க்கீர்த்தியாகும். கல்வெட்டு தொடக்கத்தில் இடம் பெறும் மெய்க்கீர்த்தி எனப்படும் அரசனது போர் வெற்றிகளைக் குறிப்பிடும் இம்முறை இராஜராஜனாலேயே முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது.

இராஜராஜன் கட்டிய இப்பெருங்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் ஒன்று இராஜராஜனின் நேரடிக் கூற்றாக அமைந்துள்ளது. தஞ்சை இராஜராஜேச்சரத்தில் உள்ள இராஜராஜ சோழனின்

**முதல் கல்வெட்டு கூறும் செய்தி**

“நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜராஜீச்சரமுடையார்க்கு நாங்குடுத்தனவும், நம் அக்கண் கொடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீவிமானத்தின் கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிந்தருள, கல்லில் வெட்டின. யாண்டு இருபதாவது நாள் முன்னூற்றொரு பத்திரண்டினால் உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த ஸ்ரீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவர் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எண்ணூற்றிருபத்தொன்பதின் கழஞ்சேய் முக்காலே மூன்று மஞ்சாடி நாளதினாலேயே டுத்த பொன்னின் பத்மாஸன ஸ்ரீபலி தலம் ஒன்று மேற்படி கல்லால் நிறை தொள்ளாயிரத்து தொன்னூற்றைய்ங் கழஞ்சரையே நாலுமஞ்சாடி”.

நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும் மற்றும் கொடுப்பார் கொடுத்தனவும் ஸ்ரீவிமானத்தின் கல்லிலே வெட்டுக என்ற சொற்றொடர் அமைந்த கல்வெட்டில் பெரிய கோயிலுக்கு பொருள் அளித்தவர் யாரெல்லாம் என்று பட்டியலிட்டு அதனை கருவறை விமானத்தில் கல்வெட்டாய் நிலை பெறச் செய்ய ஆணையிடுகிறார்.

**சுவரோவியங்கள்**

தஞ்சை பெரிய கோயிலின் கருவறை உள் திருச்சுற்றின் சாந்தார நாழிகையின் சுவர்ப்பகுதிகளில் இராஜராஜன் சோழன் காலத்து ஓவியங்கள் காணப் படுகின்றன. நாயக்கர் காலத்தில் இவ்வோவியங்களின் மேல் புதிதாக ஒவியங்கள் வரையப்பட்டன. எனவே சோழர் ஓவியங்கள் தெரியாமலிருந்தன. காலடைவில் நாயக்கர் கால ஓவியங்களுக்கு அடியில் சோழர் கால ஓவியங்கள் வரையப்பட்டிருந்து கண்டறியப்பட்டது.

நாயக்கர் கால ஓவியங்கள் தொழில் நுட்ப முறையில் மிகவும் சிரத்தையாக எடுக்கப்பட்டு கோயிலின் திருச்சுற்று மாளிகையில் வைக்கப்பட்டது. இப்பொழுது சாந்தார நாழிகையில் சோழர் கால ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன. சிவபெருமான் முப்புரமெரித்த காதையும், ஆலமரத்தடியில் தென்முகக் கடவுள் உயிர் குலத்திற்கு மறையோதிய காட்சியும், ஆடல் வல்லானின் ஓவியமும், ஆடல்வல்லானை இராஜராஜன் அவன் தன் தேவியரோடு வணங்கி நிற்கும் காட்சி, ஆடல் மகளின் நடனக் காட்சி, சுந்தரரின் வாழ்க்கை வரலாற்று ஓவியக் காட்சிகள் ஆகியன இடம் பெற்றுள்ளன. இவ்வோவியங்கள் பிரெஸ்கோ எனப்படும் ஓவிய வகையினைச் சார்ந்தது. காலத்தால் அழியாத கைவண்ணமாக இவ்வோவியங்கள் அமைந்துள்ளன.

**பூம்புகார் - உலகின் தொன்மையான நகரம்**

ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடற்கோளில் மூழ்கிய நகரம் பூம்புகார் ஆகும். கிறித்து பிறப்பதற்கு 7500 ஆண்டு முந்தைய நகரம் இதுவாகும். அதாவது 9500 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடல் கோளில் மூழ்கின. பூம்புகாரும் குசராத்தின் காம்பேவும் அரப்பா, மொகஞ்சதரோ நாகரிகங்களை விடப் பழமையானவை ஆகும். பூம்புகார் நகர் கடலில் மூழ்கியுள்ளதை ஆங்கிலேயே அறிஞர் கிரகாம் குக் என்பவர் காணொளி, ஒளிபடச் சான்றுகளுடன் உலக நாடுகளுக்கு நிரூபித்தார். அதில் மண்

கல்லான கருவிகள், மனித எலும்புகள், வீட்டுச் சுவர்கள், பாத்திரங்கள், ஆபரணங்கள், வீட்டு முற்றங்கள் ஆகியவை காணப்படுகின்றன.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

1. கல்லணை______________ கட்டப்பட்டது.
2. அங்கோர்வாட் இடத்தில் மிகப் பெரிய கோயிலை __________ கட்டப்பட்டது.
3. மாமல்லபுரத்தில் ________குகை கோயில்கள் அமைந்துள்ளன.

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் பண்டைத் தமிழரின் சாதனைச் சுவடுகள், கல்லணை, நீர் நிலைகளை குறிக்கும் பெயர்கள், மாமல்லபுரம், அங்கோர்வாட் கோயில் மற்றும் பெரிய (பெருவுடையார்) கோயில், தஞ்சாவூர் பற்றி அறிந்து கொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -1**

1. இராஜேந்திர சோழன்
2. சிம்மவிஷ்ணுவின் மகன் மகேந்திரவர்மனால்
3. மெய்க்கீர்த்தியாகும்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் -2**

1. கரிகால சோழனால்
2. இரண்டாம் சூரிய வர்மனால்
3. ஒன்பது

## தொகுதி 4 அறிமுகம்

**தொகுதி-4இல் தமிழர் வாழ்வும் பண்பாடும்,** இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன, தமிழர் வாழ்வும் பண்பாடும், கலைகள், கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்கு என்ற தலைப்பில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

**பிரிவு – 13:** இப்பிரிவில் தமிழர் வாழ்வும் பண்பாடும், தமிழர் வாழ்வும் பண்பாடும் – பண்பாடு, நாகரிகம், பண்பாடு, தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள், நடுகல் வழிபாடு, விருந்தோம்பல்,

**பிரிவு–14:** இப்பிரிவில் கலைகள், கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, கூத்து, தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்கு பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**தொகுதி 4**இல் உள்ள அனைத்து பிரிவுகளிலும் உங்கள் முன்னேற்றத்தைச் சோதிப்பதற்கான பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் அனைத்தையும் தாங்கள் தவறாமல் முடிக்க வேண்டும்.

மேலும், மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் இந்த மாதிரி வினாத்தாளுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து படிக்கவும்.

# பிரிவு-13

# தமிழர் வாழ்வும் பண்பாடும்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

13.1. தமிழர் வாழ்வும் பண்பாடும் - பண்பாடு

13.2. நாகரிகம், பண்பாடு

13.3. தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள்

13.4. நடுகல் வழிபாடு

13.5. விருந்தோம்பல்

13.6. தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம்

13.7. தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள்

13.8. தொழிலும் வணிகமும்

13.9. அறிவியல் நோக்குதலையாய கூறுகள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இந்தப் பிரிவில் தமிழர் வாழ்வும் பண்பாடும் – பண்பாடு, நாகரிகம், பண்பாடு, தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள், நடுகல் வழிபாடு, விருந்தோம்பல், தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம், தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள் மற்றும் தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்குதலையாய கூறுகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- தமிழர் வாழ்வும் பண்பாடும் – பண்பாடு, நாகரிகம், பண்பாடு
- தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள்

- நடுகல் வழிபாடு, விருந்தோம்பல், தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம்
- தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள்
- தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்குதலையாய கூறுகள்

## 13.1. தமிழர் வாழ்வும் பண்பாடும் - பண்பாடு

தமிழர் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தனர். தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புற கலை, தற்காப்பு கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவங்கள், தமிழர் மரபுகள், சடங்கு முறைகள், அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றை வெளிப்படுத்தப்படுத்தும் ஆவணமாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது. பழந்தமிழரின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், அன்றாட வாழ்வியல் முறை, அரசு, அமைச்சு, ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை நமக்குக் காட்டி நிற்கின்றன.

## 13.2. நாகரிகம், பண்பாடு

தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பற்றி சுருக்கமான முறையில் விளக்கியுரைப்பது இப்பாடத்தின் நோக்கமாகும். தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிந்துகொள்வதற்கு முன்னர், இவ்விரு சொற்கள் உணர்த்தும் பொருட்களை புரிந்துகொள்வது முக்கியமானதாகும். பெரும்பாலும் இவை இரண்டும் ஒரே பொருளில் புரிந்துகொள்ளப் படுகின்றன. இவ்விரு சொற்களுமே மனிதன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பெற்றுள்ள வளர்ச்சினைக் குறிப்பிடுகின்றன. எனினும், அறிஞர்கள் இவ்விரண்டிற்கும் இடையே நுட்பமான வேறுபாட்டைக் காண முயன்றுள்ளனர்.

மனிதனுடைய வளர்ச்சியினை இரண்டாகப் பகுத்துக் காணலாம். அவற்றை அகவளர்ச்சி என்றும், புறவளர்ச்சி என்றும் அழைக்கலாம். தனக்கே உரிய சிறப்புப் பண்புகளாலேயே மனிதன் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான். அவனுனடைய மனமே அவ்வேறுபாட்டை உருவாக்குகிறது. சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும்போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேணவேண்டியவனாகிறான். இதற்குச் சில பண்புகள் தேவைப்படுகின்றன. அன்பு, அருள், வாய்மை, தூய்மை. ஒப்புரவு (பொதுநலன்), கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படையானவையாகும். இவையே மிக உயர்ந்த மானிடப் பண்புகளாகும். இத்தகைய பண்புகளை முன்னேறிய இனங்கள் அனைத்திலும் காணமுடியும், இத்தகு மானிடப் பண்புகளின் வளர்ச்சியே அகவளர்ச்சி எனக் குறிப்பிடப்படுகிறது.

மனிதனுடைய அறிவும் அனுபவமும் மேற்சொல்லப்பட்ட பண்புகளாக மட்டுமின்றிப் பருப்பொருட்களாகவும் வெளிப் படுகின்றன. உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்ற பிற பொருட்களின் வாயிலாகவும் மனிதனின் வளர்ச்சி வெளிப்படுகின்றது. இவை எல்லாம் தோன்றுவதற்கான அறிவு அகச்சார்பு உடையதாயினும், மேற்குறிப்பிட்ட நுண்பொருட் பண்புகளுடன் ஒப்பிடுகையில் புறத்தன்மை கொண்டதாகும். இத்தகைய வளர்ச்சி பறவளர்ச்சி எனக் குறிப்பிடப் படுகிறது. மேற்சொல்லப்பட்டுள்ள அகவளர்ச்சிகள் பண்பாடு என்றும், புறவளர்ச்சிகள் நாகரிகம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இவ்விரண்டு வளர்ச்சிகளும் இணைந்து அமைந்த சமுதாயமே முழுவளர்ச்சி பெற்ற சமுதாயம் எனலாம்.

**நாகரிகம்**

நகர்ப்புறத்து ஆரவார வாழ்வே நாகரிகம் எனலாம். ஆங்கிலச் சொல்லான சிவிலிசேஷன் என்பதும் நகர்ப்புறத்து திருந்திய வாழ்வையே குறிகின்றது என அறிஞர் தேவநேயப்பாவாணர் அவர்கள் விளச்சியுள்ளார். இலத்தீன் மொழியிலும் சிவிடாஸ் என்பது சிட்டி அல்லது சிட்டி ஸ்டேட் என்று பொருள்படும். சிவிஸ்-சிட்டிஷன்: 'சிவிலிஸ்' என்னும் இலத்தீன் சொல் ஆங்கிலத்தில் சிவிலிசி என்றாயிற்று. எனவே, நகரமே நாகரிகப் பிறப்பிடம் என்று தெரிகிறது. உலகப்பெரு நாகரிகங்கள் அனைத்தும் பேராற்றங் கரைகளிலேயே உருவாகின். யூப்ரட்டீஸ், டைகரட்டீஸ், சிந்து,

கங்கை, காவிரி, வைகை, பேரியாறு ஆகியவற்றின் ஓரங்களில் தோன்றிய நாகரிகங்களை பழமையானனல், மருத நிலங்களை நகரங்கள் உருவாகக் காரணமாகின. பெரிய நகரங்கள் பல்வகைத் தொழில்களும், சுலைகளும் தோன்ற இடமளித்தன, நகர் + அகம் > நகரம் > நகரிகம் > நாகரிகம் என்றாயிற்று என்பார் அறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர்.

**பண்பாடு**

தமிழில் உள்ள 'பண்பாடு' என்னும் சொல் ஆங்கிலத்தில் கல்ச்சர் என்னும் சொல்லில் ஆளப்படுகிறது. பண்பு என்னும் சொல்லின் அடிப்படையில் பிற்காலத்தில் ஆக்கம் பெற்ற சொல்வடிவம் 'பண்பாடு' என்னும் சொல்லாகும், 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்' என்னும் கவித்தொகைத் தொடர் இச்சொல்லாக்கத்தோடு தொடர்புபடுத்திக் காணப்படுகிறது.

அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் பண்பாட்டுக்குத் தரும் விளக்கம் சிந்திக்கத்தக்கதாகும். பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு கவையுணர்வாகவும், நடையுடை பாவணைகளாகவும் தோன்றும். மக்களின் வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், சமூகப் பழக்க-வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயம் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர்.

பண்பாடு பற்றி தெ.பொ.மீ அவர்கள் மேலும் கூறுவது மனர்கொள்ளத் தக்கதாகும். 'முன்னே கூறியது போல, இவை மக்கள் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும், தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும்போதே, பண்பாடு என்கிறோம்,

"மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்னும் நிலைமையில் அறிவு, நம்பிக்கை. அறவாழ்க்கை, சட்டம், வழக்கங்கள் முதலியவற்றைக் கொண்டு பெற்ற வாழ்கை முறையே பண்பாடு" என ஈ.பி.டெய்லர் விளக்கியுள்ளார்.

நாகரிகம் மற்றும் பண்பாடு ஆகியவற்றின் இலக்கணம் காலத்துக்குக் காலம் மாறுபடும் தன்மை உடையதாகும். மனித இணம் ஒவ்வொன்றிலும் காணப்படும் வாழ்க்கைமுறை, செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு அந்தந்த இனத்தின் பண்பாடு விளக்கப்படும். மனிதப் பண்பாடு என்பது ஒரு பொதுத்தன்மை கொண்டதாயினும், குறிப்பிட்ட மனித இனம்

ஒவ்வொன்றும் தனக்கெனத் தனித்து அடையாளப்படுத்திக் காணத்தக்க பண்பாட்டு ஒழுங்கைக் கொண்டதாக இருக்கும்.

தமிழ் மக்களின் வாழ்வில் காலங்காலமாகக் காணப்பெறும் வாழ்வியல் முறைகள் தமிழ்ப் பண்பாடு எனப்பெறும், தமிழ்ப் பண்பாடு செழுமையும் உயர்வும் உண்டயது. சங்க இலக்கியங்கள் முதலிய பண்டைய இலக்கியங்கள் வழியும், நாட்டுப்புற இலக்கியப் படைப்புகள் வழியும் தமிழ்ப் பண்பாடுகள் குறித்த செய்திகள் நாம் வரலாற்று நோக்கில் அறியலாம்.

குறிப்பிட்ட இனத்தின் பண்பாடு என்பது பல இனத்தவரோடு கலந்து வாழும் சூழவில், மற்றை இனத்தாரின் பண்பாட்டுத் தாக்கத்தால் நெகிழ்ச்சியும் மாற்றமும் பெறும். தமிழரின் தனித்த பண்பாடு என்பது அயல்மொழி, அயல்நாட்டவரின் ஆட்சி ஆகியவற்றால் மாற்றங்களைப் பெற்றுள்ளது. அயல்நாட்டில் குடியேறி வாழ்வதாலும் தமிழர் தம் தனித்த பண்பாட்டினை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், தமது தனித்த பண்பாட்டைப் பேணிக்காக்கும் முயற்சியைத் தமிழ் மக்கள் தாய் நிலத்திலும் அயல் நிலத்திலும் தொடர்ந்து மேற்கொண்டே வருகின்றனர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 1**

1. ____________ என அழைக்கப்பட்டவர்.
2. தமிழர் வகுத்த ____________ நிலங்கள்.
3. அறத்தொழில் செய்யும் மருத்துவரை _________ என்று குறிப்பிட்டனர்.
4. நகர்ப்புறத்து ஆரவார வாழ்வே ___________எனலாம்.

## 13.3. தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டின் தலையாய கூறுகள்

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை, உணவு முறை, ஆடை அணிகலன்கள் அணியும் முறை, திருமணம், விருந்தோம்பல், பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறைகள், விழாக்கள், கடங்குகள், உறவுநிலைகள், கட்டடக் கலை, சிற்பம், ஓவியம், இசை, கூத்து. நடனம் மற்றும் கைவினைகள் ஆகியவை தமிழ்ப் பண்பாட்டின் தலையாய கூறுகளாகும்.

தமிழரின் சமயம், அரசியல், ஆட்சிமுறை, வரிவகைகள், நாணயங்கள், நீதிமுறைகள், வணிகம், ஈல்வி, வேளாண்மை, வானியல் அறிவு மற்றும் மருத்துவம் ஆகியவை தமிழர் நாகரிகத்தின் தலையாய கூறுகளாகும்.

**அன்றாட வாழ்க்கைமுறை**

அன்றாட வாழ்க்கைமுறை என்பது மக்கள் காலையில் துயில் எழுதல் தொடங்கி இரவில் துயில்கொள்ளுதல் வரையிலான நிகழ்வுகளின் கோவை எனலாம். தமிழர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கம் அல்லது வாழ்க்கைமுறை கொண்டிருக்கலாம். ஒருவரே கூட ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு வகையான பழக்கவழக்கம் அல்லது வாழ்க்கைமுறை கொண்டிருக்கலாம். எனினும், தமிழர் அனைவரும் பொதுவாகக் கொண்டிருக்கும் வாழ்க்கைமுறை குறித்தே இங்கு காண இருக்கிறோம்.

**அகமும் புறமும்**

அகமும் புறமும் அமைந்த பொருள் இலக்கணம் அகம் - புறம் என இருவகைப்படும். அகம் என்பது தலைவன் தலைவியர் இடையே அகத்தே (மனத்துள்) தோன்றும் காதல் உணர்வுகளைப் பற்றியது. புறம் என்பது போரும் வெற்றியும் ஈகையும் புகழும் பற்றியது. அறம், பொருள், இன்பம் எனக் கூறப்படும் உறுதிப் பொருள்களுள் இன்பம் என்பது அகப்பொருளைக் குறிப்பது. அறமும் பொருளும் புறப்பொருளைக் குறிப்பன. முன்னது வீட்டு வாழ்க்கை; பின்னது நாட்டு வாழ்க்கை. இவற்றை முறையே அகத்திணை, புறத்திணை என்றும் வழங்குவர்.

**அகம்-புறம் இலக்கண அணுகுமுறை**

புறப்பொருள் இலக்கியங்களும் இலக்கணங்களும் பெரும்பாலும் அரசர்களின் போர் நிகழ்வுகள், வீரம், கொடை, புகழ் குறித்தே அமைகின்றன. புற இலக்கியங்கள் உண்மை வாழ்வின் நிகழ்வுகளையும் வரலாற்றில் இடம் பெறத்தக்க தலைவர்களின் செயல்களையும் கூறுவன. புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் பாடப்பெறும் அரசர்கள் கற்பனைப் பாத்திரங்கள் அல்லர். ஆனால் அகப்பொருள் பாடல்களில் இடம்பெறும் தலைவன், தலைவி, தோழி, செவிலி போன்றோர் முற்றும் கற்பனைப் பாத்திரங்களே. அவர்களின் இயற்பெயர், ஊர்ப்பெயர் போன்றவை குறிப்பிடப்படுவதில்லை. இந்த அடிப்படை வேறுபாடு கொண்டே அக-புற இலக்கியங்களும் இலக்கணங்களும் அமைகின்றன.

**களவு**

களவு என்பதற்கு பிறர்க்குரிய பொருளை மறையில் கோடல் (பிறர் அறியாது கொள்ளுதல்) என்று பொருள் கூறுவர் இளம்பூரணர். தமக்கு உறவு அல்லாத ஒரு பெண்ணை அவளது உறவினர் கொடுக்கக்

கொள்ளாது, கேட்டுப் பெறாது பெண்ணின் விருப்பத்தோடு யாரும் அறியாமல் கூடி, பின்னும் அந்நிலை வழாஅமல் வாழ்தல் களவு என அகப்பொருளில் வழங்குகிறது.

ஊழ் கூட்டுவிக்க ஒப்பாரும் மிக்காரும் அற்ற தலைவனும் தலைவியும் சந்தித்துக் காதல் கொண்டு தொடர்வது களவு வாழ்க்கை ஆகும்.

**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப** (தொல்காப்பியம் -2)

என்று களவின் தொடக்கத்தைத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. இதை இயற்கைப் புணர்ச்சி என்பர். இதன்மேலும் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் எனக் களவு தொடரும்.

**கற்பு**

வரைவு எனப்படும் திருமணம் நிகழ்ந்த பிறகு, தலைமக்கள் மேற்கொள்ளும் இனிய இல்லற வாழ்க்கை கற்பு எனப்படும். அது இரு வகைப்படும்.

**களவு வழி வந்த கற்பு**

தலைமக்கள் இருவரும் மறைமுகமான காதல் வாழ்வைச் சிலகாலம் மேற்கொண்டு, பின்னர் 'வரைவு' நிகழ - அதன் பின் அமையும் கற்பு வாழ்க்கை களவின் வழிவந்த கற்பு ஆகும்.

**களவின் வழிவராத கற்பு**

தலைவன் - தலைவியருக்குத் திருமணத்துக்கு (வரைவுக்கு) முன்பு யாதொரு நட்பும், மறைமுகத் தொடர்பும் இன்றி, பெற்றோர் கூடி உடன்பட்டு அமைத்து வழங்கும் இல்லற வாழ்க்கை 'களவின் வழி வாராக் கற்பு' எனப்படும்.

**மடலேறுதல்**

சங்க நூல்கள் மூலம் மடல் ஏறுதல் ஆகிய செயல் எவ்வாறு நிகழும் என்பதை உணர முடிகின்றது. தலைவன் பனை மடலால் ஒரு குதிரையைச் செய்கின்றான். அது புல் உண்ணாத குதிரை. ஆனால் அது உண்மைக் குதிரையைப் போன்றதே என்று தலைவன் உணர்த்துகின்றான். அந்தக் குதிரையின் துணையுடன் தன் காம நோயை நீக்க முயல்வதாகத் தலைவன் கூறுகின்றான். பனை மடலால் தான் செய்த குதிரைக்கு மணிகளைக் கட்டுகின்றான். அதற்கு ஆவாரம் பூவால் தொடுக்கப்பட்ட மாலையைப் போடுகிறான். மடல் ஏறும் தலைவன் எலும்பு மாலையைத்

தான் அணிந்து கொள்கிறான். தலையில் எருக்கம் பூவால் ஆன மாலையை அணிந்து கொள்கிறான். இந்தப் பூக்கள் விலை கொடுத்து வாங்காதவை. பயனற்ற பூக்கள். மடல் ஏறுபவன் தன் வெட்கத்தை விட்டு விடுகின்றான்.

**மாவென மடலும் ஊர்ப பூவெனக்**
**குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப**
**மறுகி னார்க்கவும் படுப**
**பிறிது மாகுப காமங்காழ் கொளினே.**
**- பேரெயின் முறுவலார்.** (குறுந்தொகை - 17)

**முதற்பொருள்**

முதன்மையும் அடிப்படையுமான பொருள் முதற்பொருள் எனப்பட்டது. ‘மலை’ முதலான நிலங்களும் ‘மாலை’ முதலான பொழுதுகளும் முதற் பொருளாகும். ஆகவே, முதற்பொருள் நிலம், பொழுது என இருவகைப்பட்டது.

**நிலம்**

நிலம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலம்சார்ந்த இல்லற ஒழுக்கம் அன்பின் ஐந்திணை எனப்பட்டது. ஐந்திணையோடு ஒருதலைக்காதல் என்னும் கைக்கிளையும், பொருந்தாக்காமம் என்னும் பெருந்திணையும் அகத்திணை ஏழு என்பதை வரையறை செய்துள்ளது.

கைக்கிளையும் பெருந்திணையும் குறிஞ்சி முதலான பாலை வரையிலான ஐவகை நிலத்துள்ளும் நிகழலாம். எனவே இத்திணைகளுக்கென தனியே நிலம் வகுக்கப்படவில்லை.

**சிறுபொழுது**

தொல்காப்பியம் நாளன்றை ஆறு சிறுபொழுதுகளாகப் பாகுபடுத்தியுள்ளது. வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்பன. அவை,

| | | |
|---|---|---|
| வைகறை (விடியல்) | - | 2-6 மணி |
| காலை | - | 6-10 மணி |
| நண்பகல் | - | 10-2 மணி |
| ஏற்பாடு | - | 2-6 மணி |
| மாலை | - | 6-10 மணி |
| யாமம் (நள்ளிரவு) | - | 10-2 மணி |

பண்டைத் தமிழர்கள் வைகறைப் பொழுதில் துயில் எழுவதைப் போற்றி வந்துள்ளனர். இதனை 'வைகறை யாமம் துயில் எழு' என்னும் ஆசாரக்கோவைத் தொடராலும் அறியலாம்.

**பெரும்பொழுது**

பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டின் காலப்பிரிவு ஆகும். ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களையும் ஆறு பிரிவுகளாகப் பிரிப்பர். இது நீண்ட காலப் பிரிவாக இருப்பதால் பெரும்பொழுது எனப்படுகிறது. ஆண்டில் உள்ள பன்னிரண்டு மாதங்களும் பின்வருமாறு ஆறு பெரும் பொழுதுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

- சித்திரை, வைகாசி - இளவேனில் காலம் - மார்ச்சு பிற்பகுதி, ஏப்ரல், மே முற்பகுதி
- ஆனி, ஆடி - முதுவேனில் காலம் - மே பிற்பகுதி, சூன், சூலை முற்பகுதி
- ஆவணி, புரட்டாசி- கார் காலம் - சூலை பிற்பகுதி, ஆகஸ்டு, செப்டெம்பர் முற்பகுதி
- ஐப்பசி, கார்த்திகை - குளிர்காலம் - செப்டெம்பர் பிற்பகுதி, அக்டோபர், நவம்பர் முற்பகுதி
- மார்கழி, தை - முன்பனிக் காலம் - நவம்பர் பிற்பகுதி, டிசம்பர், சனவரி முற்பகுதி
- மாசி, பங்குனி - பின்பனிக் காலம் - சனவரி பிற்பகுதி, பிப்ரவரி, மார்ச்சு முற்பகுதி

**கருப்பொருள்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களுக்கும் உரிய பொருள் கருப்பொருள் எனப்படும். ஒவ்வொரு நிலத்தையும் சார்ந்து - அங்கு விளங்கும், வாழும், திகழும் பொருள்கள் யாவும் கருப்பொருளாகும். இலக்கண நூல்களில் கருப்பொருள்கள் 14 என வரையறுக்கப்பட்டுள்ளன. தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, பண், யாழ், தொழில் ஆகியன இவற்றுள் அடங்கும். அக இலக்கியத்தில் கையாளப்படும் இலக்கிய உத்தி முறையாகிய உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றின் அடிப்படையாக இக்கருப் பொருள்கள் அமையும்.

**உள்ளுறைக்கான சங்க இலக்கியப் பாடல்....**

**பாடியவர்**: **ஆலங்குடி வங்கனார்**. இவரது இயற்பெயர் வங்கன். இவர் சோழ நாட்டிலுள்ள ஆலங்குடி என்னும் ஊரைச் சார்ந்தவராதலால் ஆலங்குடி வங்கனார் என்று அழைக்கப்பட்டார். இவர் அகநானூற்றில் ஒருபாடலும் (106), குறுந்தொகையில் இரண்டு பாடல்களும் (8,45), நற்றிணையில் மூன்று பாடல்களும் (230, 330, 400), புறநானூற்றில் ஒருபாடலும் (319) இயற்றியுள்ளார்.

**பாடலின் பின்னணி:** ஒரு தலைவன் தன் மனைவியைவிட்டுச் சிலகாலம் ஒரு பரத்தையோடு தொடர்புகொண்டு, அவள் வீட்டில் தங்கியிருந்தான். அங்கிருந்தபொழுது அவள் விருப்பப்படி நடந்துகொண்டான். பிறகு, தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்று தன் மனைவியோடு வாழ ஆரம்பித்தான். தலைவி (தலைவனின் மனைவி) தன்னை இழித்துப் பேசியதை அறிந்த பரத்தை, "இங்கிருந்த பொழுது என் மனம்போல் நடந்து கொண்டான். இப்பொழுது தன் மனைவிக்கு அடங்கி வாழ்கிறான்" என்று தன் கருத்தைத் தலைவியின் அருகில் உள்ளவர்கள் கேட்குமாறு பரத்தை கூறுகிறாள்.

**கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉ மூரன்**
**எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல**
**மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே.**

**அருஞ்சொற்பொருள்**:

கழனி = வயல்; மா = மா மரம்; உகுதல் = உதிர்தல்; தீம்பழம் = இனிய பழம்; பழனம் = பொய்கை; வாளை = ஒருவகை மீன்; கதுவுதல் = பற்றுதல்; ஊரன் = ஊரை உடைய தலைவன்; ஆடி = கண்ணாடி; பாவை = கண்ணாடியில் தோன்றும் உருவம்; மேவல் = விரும்பல்.

**உரை**: வயல் அருகில் உள்ள மா மரத்திலிருந்து, பழுத்துத் தானாக விழுகின்ற இனிய பழங்களைக் கவ்வி உண்ணும் வாளை மீன்கள் வாழும் ஊரை உடைய தலைவன், என் வீட்டிலிருந்த பொழுது என்னை வயப்படுத்துவதற்காக என்னைப் பெருமைப்படுத்தும் மொழிகளைப் பேசினான். இப்பொழுது, தன்னுடைய வீட்டில், முன்னால் நிற்பவர்கள் கையையும் காலையும் தூக்குவதால் தானும் தன் காலையும் கையையும் தூக்கும் கண்ணாடியில் தோன்றும் உருவத்தைப்போல், தன் புதல்வனின் தாய் (மனைவி) விரும்பியவற்றைத் தலைவன் செய்கிறான்.

**விளக்கம்**: இப்பாடலில் முதற்பொருளாக வயலும், கருப்பொருளாக வாளைமீன், மாம்பழம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருப்பதால், இப்பாடல் மருதத்திணையைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

தலைவனின் மனைவியை "மனைவி" என்று குறிப்பிடாமல், "தலைவனின் புதல்வனின் தாய்" என்று குறிப்பிடுவது பரத்தை தலைவி மீது கோபமாக இருக்கிறாள் என்பதைக் குறிக்கிறது.

வயலருகில் உள்ள மாமரத்திலிருந்து விழும் பழங்களைக் கவ்வும் வாளைமீன் என்பது எவ்வித முயற்சியும் இன்றி, தலைவனை எளிதில் பற்றி அவனோடு இன்புறும் பரத்தையரின் செயலை உள்ளுறை உவமமாகக் குறிக்கிறது..

**இறைச்சிக்கான சங்க இலக்கியப் பாடல்....**

**சுனைவாய்ச் சிறுநீரை எய்தாது என்று**
**எண்ணியப் பிணைமான் இனி துண்ண**
**வேண்டிக் கலைமாத்தன் கள்ளத்தின் ஊச்சும்**
**சுரம்என்பர் காதலர் உள்ளம் படர்ந்த நெறி**

(ஐந்திணை ஐம்பது – 38)

இந்தப்பாடலை எழுதியவர் மாறன் பொறையனார் என்ற புலவராவார்.

**உரிப்பொருள்**

ஐவகை நிலத்துள்ளும் வாழும் மக்களின் ஒழுக்கவியலைக் கூறுவது உரிப்பொருள். ஒரு நிலம் சார்ந்து அங்குள்ள கருப்பொருள்களை அடிப்படையாக வைத்துப் பாடப்பெறும் பாடல்களில் அந்த நிலத்துக்குரிய ஒழுக்கமும் இடம்பெறும்.

- குறிஞ்சி - புணர்தல் - தலைவனும் தலைவியும் ஒன்றுசேர்தல்.
- முல்லை - இருத்தல் - தலைவி பிரிவைப் பொறுத்துக் கொள்ளுதல்.
- மருதம் - ஊடல் - தலைவனிடம் தலைவி பிணக்குக் கொள்ளுதல்.
- நெய்தல் – இரங்கல் - தலைவி பிரிவுக் காலத்தில் வருந்துதல்.
- பாலை - பிரிவு - தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல்.

**புறத்திணைகள்**

புறப்பொருள் என்பது பொருள் இலக்கண வகைகளுள் ஒன்று. இது புறம் பற்றிய உலகியல் நெறிகளாகிய மன்னனின் வீரம், வெற்றி, கொடை, புகழ், கல்வி, அறம் முதலியவற்றைக் குறித்து விளக்கிக் கூறுவது ஆகும்.

அகத்திணை ஏழு என்பதைப் போலவே புறத்திணையும் ஏழு என தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் வரையறை செய்துள்ளது. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் திணை ஈறாக உள்ள ஏழும் புறத்திணைகளாகும். தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பின் வந்த 'புறப்பொருள் வெண்பாமாலை' என்னும் இலக்கண நூல் புறத்திணை வகைகளைப் பன்னிரெண்டாக வகுத்துள்ளது. அவை,

1. வெட்சி - ஆக்களைக் கவர்தலுக்கான போர்
2. கரந்தை- ஆக்களைக் மீட்டலுக்கான போர்
3. வஞ்சி - மாற்றார் மண்ணைக் கவரச்செய்யும் போர்
4. காஞ்சி - தடுப்பதற்கான போர்
5. நொச்சி - பிறரிடமிருந்து கோட்டையைக் காப்பதற்கான போர்
6. உழிஞை- அக்கோட்டையைக் கவர முற்றுகை இடுவதற்கான போர்
7. தும்பை- நேருக்கு நேர் நின்று வலிமையைக் காட்டும் போர்
8. வாகை - இவ்விருவருள் ஒருவர் பெறும் வெற்றியே ஆகும்.
9. பாடாண் - பாடப்படுகின்ற ஆண்மகனின் ஒழுகலாறு
10. பொதுவியல் - புறத்திணைகள் ஒன்பதிலும் வகைப்படுத்த முடியாத பாடல்களான அறம் கூறும் பாடல்களையும், அறிவு கூறும் பாடல்களையும் உள்ளடக்கியது.
11. கைக்கிளை
12. பெருந்திணை

கைக்கிளை, பெருந்திணை ஆகியன காதல் பற்றிய செய்திகளுக்கு உரிய ஆகலான் அவற்றைத் தொல்காப்பியர் புறத்திணையில் சேர்க்கவில்லை. பொதுவியல் என்பது புறத்திணைகளில் கூறப்படாது விட்ட துறைகளும் கூறப்பட்ட புறத்திணைகளுக்குப் பொதுவாய் வருவனவும் ஆகியவற்றுக்கு இலக்கணம் கூறுவதாகும். இதனையும் தொல்காப்பியர் கூற வேண்டிய தேவையில்லை என்பதால் விட்டு விட்டார். எனவே தொல்காப்பியர் மிகச் சிறப்பாகப் பாகுபாடு செய்த புறத்திணைகளை ஏதோ காரணம் கருதி, பிற்காலத்தார் பன்னிரண்டாகப் பிரித்தனர் என நாம் கருதலாம்.

இவற்றுள் புறப்பொருள் வெண்பாமாலை கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஐந்தைக் கூடுதலாகப் புறத்திணைகளாப் பன்னிரெண்டாகக் காட்டுகிறது.

**போரியல் அறம்**

**ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,**
**எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என**
**அறத்துஆறு நுவலும் பூட்கை, மறத்தின்**
**கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்**
**எங்கோ, வாழிய குடுமி! தங் கோச்**
**செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,**
**முந்நீர் விழவின், நெடியோன்**
**நன்னீர்ப் பறுளி மணலினும் பலவே!** (புறநானூறு 9)

**பாடியவர்**: நெட்டிமையார், பாடப்பட்டோன்: பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

**திணை**: பாடாண், துறை: இயன்மொழி, குறிப்பு: இதனுடன் காரிகிழாரின் ஆறாவது புறப்பாட்டையும் சேர்த்து ஆய்ந்து,

போர் அறம் - பசு, பசுப் போன்ற இயல்புடைய பார்ப்பனர், பெண்டிர், மரபுநோய் உள்ளவர், இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்தும் குழந்தைப்பேறு இல்லாதவர் ஆகியோர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுங்கள். இங்கே என் அம்பு பாயும் போர் நிகழவிருக்கிறது – என்று அறவழி கூறியபின் போரிடும் பாங்குடையவன் இந்த அரசன். கொல்களிற்றின் மேல் கொடி தோன்ற இருந்துகொண்டு போரிடுபவன். இவன் என் அரசன்.பெயர் குடுமித் தங்கோ (குடுமியான் மலை அரசன். இவன் பஃறுளி ஆற்று மணலின் எண்ணுக்கையைக் காட்டிலும் பல்லாண்டுகள் வாழ்வானாக! பஃறுளி ஆறு நெடியோன் நாட்டில் ஓடிய ஆறு. இந்த நெடியோன் முந்நீர் விழா நடத்தியவன். அதில் யாழ் மீட்டும் பாணர்களுக்கு தூய பொன் அணிகளை வழங்கியவன்.

## 13.4. நடுகல் வழிபாடு

**போர் வெற்றிக்கான விருந்து**

**பழந்தமிழரின் அன்றாட வாழ்வியல் முறைகள்**

தமிழர்தம் அன்றாட வாழ்வின் தொடக்கமே தூய்மை, அழகியல் உணர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. விடியற்காலையில் மகளிர் தத்தம் இல்லவாசலைப் பெருக்கித் தூய்மைச்செய்து, சாணம் தெளித்து

மகிழ்வர். அழகிய கோலங்களை வாசலில் இடுவர். சாணமிடுதல் சுகாதார அறிவின் வெளிப்பாடாகவும், கோலமிடுதல் அழகியல் உணர்வின் வெளிப்பாடாகவும் உள்ளது. மேலும், கோலமிடுதல் ஒரு கலையாக விளங்குவதையும், அரிசிமாக் கொண்டு கோலமிடுதல் எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்கு உணவுதரும் கருணை உணர்வினின் வெளிப்பாடாகவும் அமைகின்றன.

வைகறையில் துயிலெழல், ஆறு குளம் முதலிய நீர்நிலைகளுக்குச் சென்று நீராடல், இறைவழிபாடு செய்தல், தேவாரம் முதலியவற்றைப் பாடிப் பூசித்தல், முதல் நாள் வடித்த சோற்றில் நீர் ஊற்றி வைத்திருந்த நீராகாரத் தெளிவினைக் குடித்தல், பழையது உண்ணல், கூழ், களி உண்ணல் எனத் தமிழரின் அன்றாட வாழ்வின் தொடக்கபகுதி அமைந்திருப்பதை இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை வேளையில் கோவில்களின் திருப்பள்ளி எழுச்சிவிழா கொண்டாடப்படும். பக்தர்கள் கடுமையான குளிரையும் பனியையும் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரில் குளித்து இறைவனை வழிபடுவர். இறைவனை வழிபடுதல் நோக்கமாயினும், மருத்துவப் பயனும் இதில் அடங்கியுள்ளது. அதிகாலை நேரத்தில் குளிர்ந்த நீரில் குளிப்பது உடல் வெப்பத்தைப் போக்கி உடலுக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடியது. மேலும், ஓசோன் படலம் அதி காலை நேரத்தில் பூமிக்கு அண்மையில் இருப்பதால், அதன் காற்று உடலுக்கு நன்மை பயக்கும் என்று அறிவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அனைத்துத் தொழில்களும் புது உணர்வோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் தொடங்க ஏற்ற நேரமாகக் காலை நேரம் கருதப்படுகிறது. தமிழர்களின் அன்றாட வாழ்க்கை தூய்மையும் ஒழுங்கும் கொண்டு விளங்கியதை ஞா. தேவநேயப்பாவாணர் தமது 'பண்டைத் தமிழர் நாரிகமும் பண்பாடும்' என்னும் நூலில் (ப 31,32) விளக்கமாகக் கூறியுள்ளார்.

கல்வித் தொழிலாளர், காவலர், வணிகர் முதலிய உடல் உழைப்பில்லா வகுப்பினர் காலையிலும்; உழவர், கைத்தொழிலாளர்கள், கூலி வேலைசெய்வோர் முதலிய உழைக்கும் வகுப்பினர் மாலையிலும் நாள்தோறும் குளித்து வந்தனர். அழுக்கைத் தேய்ப்பதற்கு ஆடவர் பீர்க்கங்கூட்டைப் பயன்படுத்துவ துண்டு. பெண்கள். மஞ்சள், சுண்ணம் முதலியவற்றைத் தேய்த்துக் குளிப்பர். சுண்ணம் என்பது பலவகைநறுமணப் பொருட்களைச் சேர்த்து இடித்த பொடி, அதனை

இடித்துப் பயன்படுத்துவது பண்டைக் காலத்து இளமகளிருக்குப் பெருவழக்கமாக இருந்துள்ளது.

பொற்சுண்ணம்-பொன்போலும் பொடி; இது வண்ண உவமை. ‘பொன், அழகு’ என்பாரும் உளர். ‘சுண்ணம்’ என்பது, ‘சூர்ணம்’ என்னும் ஆரியச் சொல்லின் திரிபு. அரிதாரம் முதலிய மணப் பொருள்கள் பலவற்றை உரலிலிட்டு இடித்த நறுமணப் பொடியே இங்குப் பொற்சுண்ணம் எனப்பட்டது. இதனை மகளிர் பலர் குழுமி இடிப்பர் என்பது, “பலர்தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தர்” (மதுரைக்காஞ்சி.அடி.399) என்னும் அடிக்கு “இடிக்க வல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள் போலப் பரக்கும் சுண்ணத்தை யுடையாரும்” என நச்சினார்க்கினியர் உரைத்த உரையாலும் அறியப்படும். சுண்ணம் இடித்தல், தினைகுற்றுதல் முதலியவற்றைச் செய்யும் பொழுது பாடப்படும் பாட்டே, ‘வள்ளை’ என்னும் உரற்பாட்டு. (உலர்ந்த மகிழம் பூ பொடி, கிச்சிலி கிழங்கு பொடி, கஸ்தூரி மஞ்சள் பொடி, கோரை கிழங்கு பொடி, உலர்ந்த சந்தனத் தூள், சோம்பு, கஸ்தூரி மஞ்சள், வெட்டி வேர், அகில் கட்டை, சந்தனத் தூள், கார்போக அரிசி, தும்மராஷ்டம், விலாமிச்சை, கோரைக்கிழங்கு, கோஷ்டம், ஏலரிசி, பாசிப்பயறு முதலியன சேர்த்து இடிக்கப்பட்டப் பொடியே சுண்ணப்பொடி கலவையாகும்)

சுண்ணம் இடிக்கும்போது பாட்டுப் பாடுவர். இச்செயல் மாணிக்கவாசகர் மனத்தைக் கவர்ந்ததினால், 'திருப்பொற் சுண்ணம்’ என்னும் திருவாசகப் பாடல் தில்லையில் அருளிச் செய்யப்பெற்றது. ஆடவர் புதன் மற்றும் சனி ஆகிய நாட்களிலும் பெண்டிர் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களிலும் எண்ணெய்த் தேய்த்து தலைமுழுகினர், இது குளிப்பு நீராட்டு என்றும் தலைமுழுக்கு நெய்யாட்டு என்றும் சொல்லப்பெறும் நெய்யாட்டில் எண்ணையையும் உடம்பழுக்கையும் போக்க சியற்காய் அரையல், அரைப்பு அரையல், உசிலைத்தூள், பாசிப் பயிற்றுமா, களிமண் முதலியவற்றைப் பயன்படுத்தினர். இருபாலரும். குளித்தவுடனும் தலைமுழுகியவுடனும் வெளுத்த துண்டினால் தலையையும் உடலையும் துவர்த்தி, வெளுதுத்த ஆடைஉடுத்துவர், மாற்றாடை இல்லாவிடில், முன்பு அணிந்திருந்த ஆடையைத் துவைத்து உடுத்துவர்,

பெண்டிர் அகிற புகையாலும் சந்தனப் புகையாலும் தம் கூந்தலின் ஈரம் உயர்த்துவர், காலையில் குளிப்பினும் குளிக்காவிடினும், பல் துலக்காமல் ஒருவரும் உணவு உண்பதில்லை, சோறுண்பவர் வாயும் முகமும் கைகாலும் கழுவியபின், துப்புரவான இடத்தில் தடுக்கில் அன்லது

பலகையில் அமர்ந்து சம்மணம்பிட்டு அமர்ந்து உணவு உண்பர். கழுவிய வாழை இலையில் அல்லது வெண்கல வட்டிலில் உணவை இட்டு வலக்கையால் எடுத்துண்டர். அரசர் பொற்கலத்திலும், செல்வர் வெள்ளிக்கலத்திலும் உண்பது வழக்கம், பெற்றோரும் பெற்ற சிறுபிள்ளைகளுமாய் இருந்தாலொழிய, ஒரே கலத்தில் அல்லது இலையில் பலர் உண்பதில்லை. உண்டு எழுந்தபின், இலைளய அகற்றித் தண்ணீர் அல்லது சாணநீர் தெளித்துத் துப்புரவாக்குவர், இலையில் விட்ட மிச்சிலை பெற்றோரும் மனைவியரும் இரப்போரும் தவிரப் பிறர் உண்ணார்.

சில உணவு வகையால் ஏற்படும் வாய் நாற்றத்தைப் போக்குவதற்கு நறுமணச் சரக்கை வாயிலிடுதல், வெற்றிலைத் தின்னுதல், மார்பிறி சந்தனம் பூசுதல் முதலியவற்றைச் கையாள்வர். இவற்றைச் செரிமானத்தின் பொருட்டென்றுச் சொல்வதுமுண்டு', தமிழரின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள் அவர்தம் பண்பாட்டு மேன்மையைப் புலப்படுத்துகின்றன. என்று வையாபுரிப்பிள்ளை கூறுகின்றார். அவரின் கருத்துக்களை இனிக் காணலாம். 'பண்டைத் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை எளிமையும் மேன்மையும் உடையதாகும்; சிறிதும் சுட்டமற்றதாகும். மேலும், பண்டைத் தமிழர் குடும்ப நெறியில் உள்ளத்தைச் செலுத்தினர்; பொருளீட்டி இன்புறுதலில் ஈடுபாடு செலுத்தினர்; உபசாரஞ் செய்தலை மேற்கொண்டனர். தமிழாது பண்பாட்டிள் மேன்மையை இத்தகைய இனிய வாழ்க்கை நன்கு புலப்படுத்துகிறது. (தமிழர் பண்பாடு -சம்பனி காவியம், ப.40)

**உணவுமுறை**

உணவைச் சுவைளபுறச் சமைப்பதிலும் சுவைதேர்ந்து உண்பதிலும் தமிழ சிறந்து விளங்குகின்றனர். சமுதாய ஏற்ற இறக்கங்களுக்கேற்ப உணவுமுறை, தரம் வறுபட்டுக் காணப்படுகின்றன. தமிழர்தம் உணவுப் பண்பாடு குறித்த ஞா.தேவநேயப் பாவாணரின் கருத்துகள் சிலவற்றை இங்கு காண்போம். 'உலகில் முதன்முதலாய் உணவை நாகரிகமாகச் சமைத்து உண்டவன் தமிழனே, ஏனைய நாட்டாரெல்லாம். தம் நாட்டில் விளைந்த உணவுப் பொருட்களைப் பச்சையாகவும் கட்டும் வெறுமையாய் அவித்தும் உண்டுவந்த காலத்தில் உணவைச் சோறும் கறியும் என இரண்டாக வகுத்து. நெல்லரி சியைச் சோறாகச் சமைத்தும், அறி அல்லது குழம்பு வகைகளை, கவையூட்டுவளவும் உடம்பை வலுப்படுத்துனவும் நோய் வராது தடுப்பனவுமான பலவகை மருந்துச் சரக்குகளை

உசிலையாகச (மசாலா) சேர்த்து ஆக்கியும், உயர்வாக உண்டுவந்த பெருமை தமிழனுடையதாகும். காய்வகைகளைக் காம்பு களைந்து சிவ வேண்டுபவற்றைர் சிவில் கழுவியும், பித்தமுள்ளவற்றை அவித்திறுத்தும், மஞ்சள், மினகு அல்லது மிளகாய் வற்றல், சீரகம், கொத்துமல்லி, தேங்காய் முதலியவற்றை மைபோல் அரைத்துக் கலந்தும், இஞ்சி, வெங்காயம் வெள்ளைப்பூண்டு, பெருங்காயர், சுராம்பூ(கருவாய்ப்பூ), கருவாய்ப் பட்டை, ஏலம், சோம்பு முதலியவற்றை வேண்டுமளவு சேர்த்தும், வெந்தபின் புளி அல்லது எலுமிச்சஞ்சாறு விடவேண்டிய வற்றிற்கு விட்டும், கடுகு, கறிலேப்பிலை முதலியுன் துவி ஆவின் நெய்யில் தாளித்தும், முதன்முதற் குழம்பு செய்யப்பெற்றது தமிழகத்திலேயே, தானிப்பு இலக்கிய வழக்கில் குய் எனப்படும்.

உலகில் அரிசியுள்ள தானியங்கள் பலவகை உள்ளள. அவற்றுள். நெல்லரிசிச் சோறு போல் வேறொன்றும் சுவையாய்க் குழம்பொடு பொருந்துவதில்லை. தமிழகத்திலேயே, காடைக் கண்ணியரிசி, குதிரைவாலியரிசி, சாமையரசி, தனையரிசி, வரகரிசி என ஐவகை அரிசிகள் உள்ளன. அவை நெல்வரிசிக்கு ஈடாது, கம்பும் சோளமும் கஞ்சியும் கூழுமே ஈமைத்தற்கு உதவும். கேழ்வரகால் களியும் கூழும்தான் ஆக்க முடியும், கோதுமை, வாற்கோதுமை போன்ற பிறநாட்டுத் தானியங்களால் ரொட்டி மட்டுமே செய்யமுடியும்.

பச்சரிசி, புழுங்கலரிசி என்னும் இருவகையுள், தமிழர் விரும்பியது பின்னதே. அது சூட்டைத் தணிப்பதால் வெப்பநாட்டிற்கு ஏற்றதாகும். குழம்பின் சுவையையும் மிகுத்துக் காட்டும்.

பொதுவாக, காலைச் சிற்றுண்டியும் நண்பகல் மற்றும் மாலைப் பேருண்டியுமாக மூவுண்டிகளே பண்டைத் தமிழர் உண்டுவந்தனர். உழவர்கள் மற்றும் கூலியாட்களைப் பொறுத்தவரை பழஞ்சோறு, பழங்கறி, ஊறுகாய் ஆகியவையே காலை மற்றும் நண்பகல் உணவாகும். புதுக் கறியாயிருப்பின் நெருப்பில் வாட்டியதும் துவையலுமாயிருக்கும். இரவு உணவே அவருக்குப் புதுச் சமையலாகும்.

மங்கல தாட்கள், விழா நாட்கள், விருந்து நாட்கள் போன்ற சிறப்பு நாட்களைத் தவிர மற்ற நாட்களில் உழவர்கள் மூவேளையும் நெல்லரிசிச் சோறுண்பதில்லை, வரகு, சாமை, கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய அவ்வக் காலத்து விளைந்த தானியத்தையே பசுலுணவாய் உண்பர். இல்லத்திலும் நிழலிலும் இருந்து வேலை செய்லோரேல்லாம், பெரும்பாலும், காலையில் பழையதும் நண்பகல் மற்றும் மாலையில்

சுடுசோறும் உண்பர். அரசரும் செல்வரும் எல்லா நாளும், பிறரெல்லாம் சிறப்பு நாளும் காலையிற் பலகாரமும் பொங்கல் போன்ற சிற்றுண்டி எங்கைளை உண்பர். இருவேளைப் பேருண்டிகளுள் தமிழர்களுக்குச் சிறந்தது நண்பகலதே. குழம்புச் சோறும், மிளகு நீர்ச்சோறும், மோர் அல்லது தயிர்ச்சோறும் என, முச்சுவையுள்ளது பேருண்டி, அதை அறுசுவை என்பது எழக்கு, முக்களிகளுள் ஏதேனும் ஒரு இனிப்பும், பாகற்காய் அல்லது சுண்டைக்காய் வற்றல் கசப்பும், காரவடை உறைப்பும், புளிக்கறியும் தயிரும் ஊறுகாயும் புளிப்பும், மாதுளங்காய் துவர்ப்பும், உப்பேறி உவர்ப்பும், தமிழரின் சுவை முதிர்ச்சியையும் தலைசிறந்த நாகரிகத்தையும் மருத்துவ அறிவையும் உடல் நலவுணர்ச்சியையும் ஒருங்கே காட்டும். அறுசுவைகளுள் தமிழருக்குச் சிறந்தவை இனிப்பும் புளிப்பும் ஆகும். இது வெப்ப நாட்டியல்பு (பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக, 33-35)

பண்டைக் காலத்தில் தமிழர்களால் மரக்கறி உணவும் புலால் உணவும் விரும்பி உண்ணப்பட்டன. புலால் உண்ணுதலைத் திருவள்ளுவர் கடிந்து ஒதுக்கினும் பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் புலாலுணவு விரும்பு உண்ணப்படுகிறது.

அரிசிச்சோறு, தயிர்ச்சோறு, காய்கறிச் சமையல், நண்டுக்கறி, வரால் மீன் குழம்பு, ஊறுகாய், உடும்புக்கறி, வாகுச்சோறு, கோழிக்கறி, பன்றியிறைச்சி, ஈயல் உணவு, ஆட்டிறைச்சி, மாதுளங்காயை வெண்ணெயில் பொரித்து உண்ணல், கள்ளுண்டல் முதலிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகப் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன.

வீட்டுக்கு வந்த விருந்தினருக்குப் பார்ப்பனப் பெண்கள் மாவடு ஊறுகாயடு உணவு பரிமாறினர் என்னும் செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. கள்ளுண்டு கனித்தல் உணவின் ஒரு பகுதியாகவும் இயல்பான உணவு முறையாகவும் பண்டைய நானில் இருந்துள்ளது. கபிலர் போன்ற அந்தணப் புலவர்களும் கள்ளுண்டலைப் பாராட்டியே பேசியுள்ளனர்.

தமிழ்நாட்டில் இசுலாமியர், கிறித்தவர், நாயக்கர், மராட்டியர் முதலியோரின் வருகைக்குப் பின்னர், அவர்களின் உணவுமுறைகளில் சில தமிழரின் உணவுமுறையுடன் கலந்தன. வடநாட்டு, மேனாட்டு உணவுமுறைகளும் இடம்பெறலாயின, தேனீர், காபி, குளிர்பானங்கள் அருந்துதல், உணவுமுறைகளில் ஒன்றாகவே காணப்படுகிறது. மற்றவர்தம் உணவு வகைகள் தமிழரின் உனாவில் இடம்பெறிறும்

பண்டிகைகள், படையல்கள் ஆகிய நிகழ்ச்சிகளில் மரபான உணவுகளே இடம்பெறக் காணலாம்.

**விருந்தோம்பல்**

‘விருந்து’ என்ற சொல்லுக்குப் ‘புதுமை’ என்பது பொருள். பழந்தமிழர்கள், உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியவராக நம்மிடம் வரும் மக்களை ‘விருந்து’ என்றனர்.

விருந்தினரைப் போற்றுதல் என்பது உயர்ந்த மனிதப் பண்புகளுள் ஒன்றாகும். பண்டைத் தமிழர்கள் விருந்தோம்பலில் தலைச்சிறந்து விளங்கினர். தொல்காப்பியம் விருந்திரைப் போற்றுதலைத் தலைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது.

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்** (தொல், கற்பு, 11)

சங்கப் புலவர்கள் விருந்தோம்பலைப் பல இடங்களில் போற்றிப் பாடியுள்ளனர். வேளை தவறிய வேளையில் விருந்தினர் வரினும் முகம் கோணாமல் விருந்தினரை வரவேற்றுப் பேணும் தலைவியை நமக்குக் காட்டுகிறது.

**அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்-** நற்றிணை 142

கணவன் மனைவிக்கிடையில் சிறுபிணக்கு ஏற்பட்டிருப்பினும், விருந்தினர் வரின் தங்களின் ஊடலை மறந்து விருந்தினரைப் போற்றுவர் என்பது சங்க இலக்கியம் காட்டும் செய்தி. இது விருந்துக் கண்டு ஒளிந்த ஊடல் எனப்படும். தலைவியின் ஊடலைத் தீர்த்துக்கொள்ள எவரேனும் விருந்தினர் வரமாட்டாரா எனத் தலைவன் ஏங்குவதை நற்றிணை (120) காட்டுகின்றது.

**--நட்புலந்து**
**அட்டி கோளை அம்ம அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று**
**சிறிய முள்ளெயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகம்காண் கம்மே**

தன்னை நாடிவந்த விருந்தினரைப் போற்ற முதல்நாள் தன் வாளையும், மறுநாள் யாழையும் அடமானம் வைத்து விருந்தோம்பிய பண்பினைப் புறநானூறு (316) எடுத்துரைக்கி ன்றது. ஏழ்மைநிலையில் இருப்பினும்,

கடன் பெற்றாவது விருந்தினரைப் போற்றும் உயர் பண்பையும் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு**

என்கிறார் திருவள்ளுவர். விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுவர்,

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று**

என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமை அறிய முடிகிறது.

தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். வீட்டிற்கு வரும் உறவினர்களை மட்டுமல்ல, முகம் தெரியாத யாராக இருந்தாலும் அவர்களை அன்போடு உபசரித்து முகம் மலர உணவளித்து உள்ளன்போடு வழியனுப்பும் வாழ்வியலை தருகிறது தமிழரின் பண்பாட்டுக் கோட்பாடு.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி விருந்தினரைப் போற்ற இயலாத நிலையை எண்ணி வருந்தியநாக இளங்கோவடிகள் காட்டியுள்ளார் (கொலைக்களக் காதை 71-73), திருக்குறள் உள்ளிட்ட அற இயக்கியங்கள். விருந்தோம்புதலைத் தலையாய அறங்களாகப் போற்றுகின்றன. திருவள்ளுவர் விருந்தோம்பல் என்னும் தலைப்பில் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.

பண்டைக் காலத்தில் தமிழரின் இயல்பான பண்டாக இருந்த விருந்தோம்பல் பின்னர் அறமாக வலியுறுத்தப்படும் நிலையை அடைந்ததை இது காட்டுகிறது. கம்பர் தாம்படைத்த இராமாயணத்தில் சீதையின் வாயிலாக விருந்தோம்பல் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். சீதை அசோக வனத்தில் சிறை இருக்கும்போது, விருந்தினர் வருகையில் இராமனால் அவர்களை போற்றமுடியாது போகுமே என்று வருந்துகின்றாள்.

விருந்தோம்பல் தமிழர்களின் பண்புகளில் ஒன்றாகவிளங்கி யுள்ளதை மேற்காணும் செய்திகளின் வாயிலாக அறியமுடிகிறது.

**நம்பிக்கைகள்**

நன்று, தீது குறித்த எண்ணத்தால் ஆர்வம், அச்சம் ஆகியவற்றின் விளைவால் தமிழரிடையே காலங்காலமாகப் பல நம்பிக்கைகள் வழங்கிவருகின்றன. இந்த நம்பிக்கைகளில் பல அறிவியல் அடிப்படை அற்றவை. ஆயினும், இவற்றின் தாக்கம் தமிழ் மக்களின் உள்ளங்களில் மிகுதியாக உள்ளது.

நல்லநாள், நல்லநேரம் பார்த்து வேலையினைத் தொடங்குதல், பறவையலி முதலிய சகுனம் பார்த்தல், பல்லியின் குரல் கேட்டல், பல்லி உடல்மேல் விழுவதற்குப் பலன் எண்ணல், விரிச்சி கேட்டல், உன்னம் பார்த்தல், கண் மற்றும் தோள் துடித்தான் பலன், கனவுகளுக்குப் பொருள்காணல், விண்மீன் நிலைகாணல், பேயோட்டல், கூடல் இழைத்தல் எனப் பல தம்பிக்கைகள் பண்டைத் தமிழரிடையே நிலவின.

**நல்லநேரம் பார்த்தல்**

திங்களும் உரோகிணியும் கூடிய நல்லநாளில் திருமணம் நடத்தப்பட்டது. இது நன்னாள் பார்த்து மங்கலச் செயல்களைச் செய்யும் நம்பிக்கையைக் காட்டுகிறது. பண்டைநாளில் நல்ல வேளையை 'முழுத்தம்' என்றனர். அதுவே இன்று 'முகூர்த்தம்' எனப்படுகிறது. 'நாள் செய்வதை நல்லவர் செய்யார்' என்பது பழமொழி, வள்ளலை நாடிச் சென்ற புலவர், தனக்குப் பரிசில் கிட்டாததற்குப் புரவலன் காரணமல்ல; புறப்பட்ட பொழுதும் அப்போது எதிர்ப்பட்ட பறவையுமே காரணம் எனக் கூறுவதைச் சங்கப் பாடலொன்று காட்டுகின்றது.

**புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை**
**உள்ளி வருநர் பழியலர் அதனால்**
**புலவேன் வாழியர் ஓரி** (புறம்-204)

**பல்லியின் குரல் கேட்டல்**

பல்லியின் குரலைச் சகுனமாகக் கொள்ளும் மரபும், உடம்பில் பல்லிவிழும் இடத்திற்கேற்பப் பலன் காணும் மரபும் பண்டைக் காலந்தொட்டு நிலவுகின்றன. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி பல்லையை நோக்கி நற்பலன் கூறுக என வேண்டுவதை,

**மையல் கொண்ட மதனழி இருக்கையள்**
**பகுவாய் பல்லி படுதோறும் பரவி**
**தல்ல கூறுகென நடுங்கி** (அகம்-289)

என அகநானூற்றுப் பாடல் கூறுகிறது.

**விரிச்சி கேட்டல்**

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது எதிர்பாராத வகையில் நற்சொற்களைப் பிறர்கூறக் கேட்டல் 'விரிச்சி கேட்டல்' எனப்படுகிறது. இதனை நன் நிமித்தமாகக் கொள்வர். பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவரும் முன் வெட்சி மறவர் விரிச்சி கேட்டலைப் 'பாக்கத்து விரிச்சி' என்பார் தொல்காப்பியர். முதுசெம்பெண்டிர் விரிச்சி கேட்டுச் சொல்வர் என முல்லைப்பாட்டு மொழிகின்றது.

**கனவு பற்றிய நம்பிக்கை**

கனவில் சில தீய நிமித்தங்களைக் காணுதல் தளவில் சில தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தமிழரின் நம்பிக்கைகளுள் ஒன்று, புறநானூற்றுப் பாடல் 40-ல் தீய நிமித்தங்களைக் கனவில் கண்ட கிள்ளிவளவனின் பகைவர்கள் அஞ்சிய செய்திக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன், பாண்டியன்மாதேவி ஆகியோர் தீய விளைவுகளைத் தரும் கனவுகளைக் கண்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்ல, தீய விளைவுகளை ஏற்படுத்தும் கனவு குறித்த நம்பிக்கையைக் காலந்தோறும் பல இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

**மேலும் பல நம்பிக்கைகள்**

'உன்னம் பார்த்தல்' என்னும் நம்பிக்கையும் பண்டு வழங்கியது. உன்னம் என்பது ஒருவகை மரம், உன்னமரம் தளிர்த்துக் காணப்படின் செயல் வெற்றிபெறும் என்றும், வாடிக் காணப்படின் தோல்வி என்றும் அக்காலத்தில் நம்பினர். ஆந்தையின் அலறலைத் தீய நிமித்தம் எனக் கருதியமையைப் புறநானூறு காட்டுகின்றது.

ஆடவரின் வலக்கண், வலத்தோள் துடித்தலும், மகளிரின் இடக்கண், இடத்தோள் துடித்தலும் நன்மை நேர்வதற்கு அறிகுறிகளாகக் கருதப்பட்டன. காக்கைக் கரைந்தால் விருந்தினர் வருவர் என்னும் நம்பிக்கையும் தமிழர்களிடையே நிலவுகிறது.

அறிவியல் கருத்துகள் மிகுந்துள்ள இக்காலத்தில் பெரும்பாலான இந்நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகளே! என்னும் தெளிவு மிகுந்துள்ளது வேறு வகையான மூட நம்பிக்கைகள் அவ்விடங்களைப் பிடித்துள்ளன.

## 13.5. விருந்தோம்பல்

**வாழ்வியல் முறை அகம், புறம்**

**சங்க காலத் தமிழரின் வாழ்க்கை முறை**

தமிழகத்து வரலாற்றுக்குட்பட்ட காலம் சங்க காலம் ஆகும். இக்காலத்தில் தமிழரின் நாகரிகம் முழு வளர்ச்சியுற்றிருந்தது. மூன்று பேரரசுகள் சங்க காலத்தில் அமைந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இம்மூன்று பேரரசுகளை ஆண்ட மன்னர்கள் தங்கள் நாட்டிற்கு நன்மையைச் செய்து மேன்மையடையச் செய்தனர். ஒவ்வோர் மன்னர்க்கும் இடையே ஆதிக்கப்போட்டி நடைபெற்று வந்தாலும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டிருந்தனர். இச்சங்க காலத்தின் அரசியலில் மக்களின் பங்கும் அவசியமாகிறது. எனவே அக்கால மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகிறது.

சங்க காலத்தில் நாடானது நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு அந்நிலத்தின் வழியே மக்களும் தங்களது வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர். குறிப்பாகக் காடும் காட்டைச் சார்ந்த இடத்தை முல்லை என்றும், மலையும், மலையைச் சார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த பகுதியை நெய்தல் என்றும் பிரித்து அவ்வந்நிலத்தை ஒட்டியே வாழ்ந்து வந்தனர். இவ்வாறு நிலத்தை ஒட்டிவாழ்ந்த சங்க கால மக்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் ஆவர்.

**இல்லறம்**

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களில் வாழ்ந்த மக்கள் உழைத்துப் பொருள் ஈட்டுவர், காதலிப்பர், மணமுடிப்பர், இல்லற வாழ்வில் இருந்து இன்பமுறுவர். அக்காலத்தில் இல்லற வாழ்க்கையைப் பெரிதும் போற்றினர்.

இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்று கொன்றைவேந்தனில் ஔவையார் குறிப்பிடுவது போல் இல்லறத்தில் சிறந்து இருந்தனர்.

இல்லறத்தைச் சங்க காலத்தில் அகம் எனக் கொண்டிருந்தனர். இதற்குச் சங்க இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு,

கலித்தொகை, அகநானூறு ஆகிய அகப்பொருளைப் பாடும் இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன.

களவு, கற்பு எனத் தம் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள் சங்க காலத் தமிழர்கள் ஆவர். தாமாகக் கூடுவது களவு வாழ்க்கை என்றும், பெரியோர்களால் கூட்டப்பட்ட வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்றும் கொண்டிருந்தனர். மேலும் மடல் ஏறுதல் என்ற ஒன்றினையும் பின்பற்றினர். ஒருவன் தான் காதலித்த பெண்ணை மணக்க வாய்க்காதபோது மடல் ஏறுவது வழக்கமாகும். பனங்கருக்கினால் குதிரை ஒன்று செய்து அதன்மேல் அவன் ஏறி அமர்ந்து தன் காதலியின் வடிவம் தீட்டிய கொடி ஒன்றைத் தன் கையில் ஏந்தித் தெருத்தெருவாகச் செல்வான். அக்குதிரையை ஊர்ச் சிறுவர்கள் இழுத்துச் செல்வர். இதனையே மடல் ஏறுதல் என்பர்.

**உணவு உணவு முறை - விருந்தோம்பல்**

அரிசிச் சோற்றையே பண்டைய தமிழர் தம் சிறப்பு உணவாகக் கொண்டனர்.

**இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த**
**அவைப்பு மாண் அரிசி அமலை வெண் சோறு**

(சிறுபாணாற்றுப்படை :193-194)

வரகு, சாமை ஆகியவற்றைச் சமைத்து உண்டார்கள். நெல்லில் பலவகை தமிழகத்தில் விளைந்தது. சங்க கால மக்கள் உணவில் மிளகு, கடுகு, உப்பு, புளி, வெண்ணெய், கருவேப்பிலை போன்றவைகளைச் சேர்த்துக் கொண்டார்கள். நுங்கு, இளநீர், பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம் போன்றவைகளையும் உண்டார்கள். கொள்ளுப் பருப்பு, பயிற்றம் பருப்புகளையும் உணவில் சேர்த்துக் கொண்டார்கள்.

பண்டைத் தமிழகத்தில் ஊன் உண்ணும் பழக்கம் பரவலாக இருந்தது. ஊனுக்காக ஆடு, மான், முயல், மீன், நண்டு, கோழி, உடும்பு முதலியவைகளை உண்டார்கள். கள்ளுண்ணும் வழக்கம் பழந்தமிழகத்தில் மிகவும் விரிவாகக் காணப்பட்டது. குறிப்பாக, மன்னர், பாணர், புலவர், கூத்தர், பொருநர், விறலியர் அனைவருமே கள்ளினை உண்டு களித்தனர். இயற்கையாகக் கிடைத்த பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள் ஆகியவற்றையும், யவனர்களால் கப்பலில் கொண்டு வரப்பட்ட தேறலையும் (தேறல் - தெளிந்த மது), காய்ச்சி இறக்கிய மதுவையும் உண்டனர். யவனர் இரட்டைப்பிடிச் சாடிகளில் மரக்கலம் வழியே

கொண்டு வந்த மதுவை உண்டதற்கான சான்றுகள் அரிக்கமேட்டுப் புதைகுழிகளில் காணப்பட்டன.

**நம்பிக்கைகள் - விழாவும் வழிபாடும்**

தொல்காப்பியத்தில் "நம்பும் மேவும் நசையாகும்மே" என்று வருகின்றது. நம்பு என்ற சொல்லிற்கு 'நசை' அல்லது 'விருப்பம்' எனும் பொருளைத் தருகின்றது.

நற்றிணை 327ஆம் பாடலில் 'நம்புதல்' என்ற சொல்லாட்சி நம்பிக்கை என்னும் பொருளில் வந்தள்ளது. 'நம்பிக்கை' என்ற பொருளிலேயே நற்றிணையில் பயின்றுவந்துள்ளமையை அறிய இயலுகின்றது.

**"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்**
**சுருவான் போல நோக்கும்"**

இவற்றிலிருந்து நம்பு என்ற சொல், தொடக்கத்தில் 'விருப்பம்' என்ற பொருளிலும் பின்னர் 'நம்பிக்கை' என்ற பொருளிலும் வருவதை அறியமுடிகின்றது.

**நம்பிக்கையின் வகைகள்**

நம்பிக்கைகள் பல்வகையின; பிறப்புமுதல் இறப்புவரை மனித வாழ்வில் பல்வகை நம்பிக்கைகளும் இடம்பெறுகின்றன. அவற்றுள் சில.

**இறை நம்பிக்கை**
**ஊழ் பற்றிய நம்பிக்கை**
**சோதிடத்தில் நம்பிக்கை**
**சகுணத்தில் நம்பிக்கை**
**(காக்கை, ஆந்தை, பல்லி, கண் துடித்தல்)**
**தன்னம்பிக்கை**
**சடங்கு நம்பிக்கை**
**கனவு நம்பிக்கை**
**நாள் பற்றிய நம்பிக்கை**

'நாளும் கோளும் நலிந்தோர்க்கில்லை' என்பது பழமொழி, என்றாலும் நாட்டுப்புற மக்கள் எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் நல்ல நேரம், நல்ல நாள், சூலம் (திசை பார்த்தல்) பார்த்துத் தொடங்குவதில் பெருநம்பிக்கை கொண்டுள்ளனர். விதைப்பு, நடவு, அறுவடை, சடங்குகள், வழிபாடு, பயணம், இறப்பு என்று எல்லாவற்றிலும் நாள், நேரம் பார்க்கத் தவறுவதில்லை.

- புதன், வியாழன், வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் திருமண நாள் குறிப்பது நல்லது.
- திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் திருமணம் நடந்தால் துன்பம் நேரும்.
- பிறந்த நாள் மற்றும் பிறந்த கிழமைகளில் திருமணம் நடந்தால் துன்பம் நேரும்.
- சனிக்கிழமை முதன்முதலில் நோயாளிகள் மருந்து சாப்பிடக் கூடாது.
- சனிக்கிழமை ஒரு வீட்டில் இறப்பு நேரின் அது தொடரும்.
- திங்கள் கிழமை பயணம் மேற்கொள்வது தீமை தரும்.
- திருமணமான பெண்ணை வெள்ளிக்கிழமையன்று கணவன் வீட்டிற்கு அனுப்பக்கூடாது.
- எந்த நல்ல காரியத்தையும் மாலை நேரத்தில் தொடங்கக்கூடாது.

இந்த நாள் இனிய நாள் என்று வரையறை செய்திருக்கும் நாட்டுப்புற மக்களின் அனுபவ அறிவு வியந்து போற்றுவதற்கு உரியதாகும்.

**வழிப்பாட்டின் தோற்றம்**

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகமல் இருக்க எண்ணயே இயற்கையை வழிபட முற்பட்டான். அதனடிப்படையில் தான் இயற்கை வழிபாடுகளும், விழாக்களும் தோற்றம் பெற்றன எனலாம். பலிகள் தருவதன் மூலம் இயற்கையின் சீற்றத்திலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கையன் அடிப்படையில் தான் விழாக்களும், கொண்டாட்டங்களும் தோன்றின. காலப்போக்கில் மனிதன் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினான். இவ்வகையிலேயே மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்கக் கூடும்.

உளவியல் பேரறிஞர் சிக்மண்ட பிராய்டு அவர்களும் இயற்கையிடமும். மரணத்திற்கப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது என்கிறார்.

**சிறுதெய்வ வழிபாட்டு முறைகள்**

மக்கள் தெய்வங்களுக்குச் செய்யும் சடங்குகளும், வழிபாட்டு நெறிகளும் வழிபாட்டு முறை எனப்படும். சிறுதெய்வ வழிபாடுகள் எந்தவித மதக்

கோட்பாடுகளுக்கும் உள்ளடங்காமல் ஆகம விதிகளுக்கு உட்படாமல் சம்பிரதாய (காலங் காலமாகச் செய்யப் பட்டுவரும்) வழிபாட்டு முறைகளைப் பின்பற்றாமல் கிராம மக்கள் விரும்பிய வண்ணம் நிகழ்த்தப் படுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் தெய்வங்களுக்குத் தகுந்தவாறு வேறுபடும். ஒவ்வொரு தெய்வமும் தனக்கெனத் தனித்த வழிபாட்டு முறைகளைக் கொண்டிருக்கும்.

சிறுதெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல், நேர்த்திக் கடன் செலுத்துதல், ஆடியும் பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகின்றன.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

1. தமிழர்களின் பண்பாட்டு கூறுகள்__________
2. தமிழர்களின் குணங்கள் ____________
3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை________

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம், தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள் மற்றும் தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்குதலையாய கூறுகள் ஆகியவற்றைப் பற்றி ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்புடமை, உலக ஒருமைப்பாடு
2. கலாச்சாரம், பண்பாடு, ஈகைக் குணம், அன்பு, வீரம், மானம் ஆகியவை
3. திருமணமும் குடும்பமும்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

1. முதற்பொருள்
2. "தமிழர் நாகரிகமும் பண்பாடும்"
3. கூத்துக்கலையின்

# பிரிவு-14

# தமிழர் கட்டடக் கலைகள் மற்றும் வணிகம்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

14.1 கலைகள்

14.2. தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம்

14.3 சிற்பம்

14.4 ஓவியக்கலை

14.5 தமிழர் இசை

14.6. தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள்

14.6. தொழிலும் வணிகமும்

14.7. அறிவியல் நோக்கு

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இந்தப் பிரிவில் தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம், ஓவியம், இசை, கூத்து, நாடகம், தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள் மற்றும் தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்குதலையாய கூறுகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்துகொள்ளலாம்.

- தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம்
- தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள்
- தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்குதலையாய கூறுகள்

## 14.1 கலைகள்

பண்டைய காலத்தில் கலைகளில் ஓவியம், இசை, கூத்து, நாடகம் ஆகியவை மிக உயர்ந்த நிலையை எட்டியிருந்ததாகத் தெரிகிறது. ஓவியத்திற்கு என்று ஒரு நூல் வழக்கில் இருந்ததாகவும் கூறுவர். சுவர்களின் மேல் வண்ண ஓவியங்கள் தீட்டியிருந்தனர். எளிதில் அழிந்து போகக் கூடிய வண்ணங்களை ஓவியர்கள் பயன்படுத்தியிருந்தனர்.

இசை, நாடகம், நாட்டியம், கூத்து ஆகிய கலைகளின் வளர்ச்சியைப் பற்றிய விளக்கங்களை சிலப்பதிகார அரங்கேற்று காதையில் விரிவாகக் காணலாம். ஆண்களும், பெண்களும் கூத்திலும், இசையிலும் மேம்பட்டிருந்தனர். மன்னன் முன்பு தம் கலையாற்றலைக் காட்டிப் பெரும் பரிசில்களைப் பெற்று வந்தனர் பழந்தமிழ் மக்கள். கரிகால் சோழனின் மகள் ஆதிமந்தியின் கணவன் ஆட்டனத்தி என்பான் நடனத்தில் ஈடு இணையற்று விளங்கினான்.

நாட்டியம், கூத்து ஆகிய கலைகளைப் பற்றிய பல விரிவான நூல்கள் அக்காலத்தில் தமிழில் இருந்தன. அவை அனைத்தும் காலப்போக்கில் அழிந்து விட்டன.

அரங்கின் முன்பு மூன்று வகையான திரைகள் தொங்கவிடப்பட்டன. திரையை எழினி என்று குறிப்பிட்டனர்.

கூத்தில் பதினொரு வகை இருந்ததாகத் தெரிகிறது. அவையாவன: கடையம், மரக்கால், குடை, துடி, அல்லியம், மல், குடம், பேடு, பாவை, கொடுகொட்டி, பாண்டரங்கம் என்பன. இவ்வாறாகச் சங்க காலத்தில் கலை நன்கு வளர்ச்சியுற்றிருந்தது.

தமிழர் கட்டடக்கலை என்பது பண்டைக்காலத் தமிழர்களின் கட்டடங்கள் வடிவமைப்புச் செய்வதற்கான கலையும் அறிவியலும் ஆகும். தமிழர்கள் மிக நீண்ட காலமாகவே ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நிலையாக வாழ்ந்துவருபவர்கள். ஆனாலும் இவற்றோடு இணையாகச் சாதாரண மக்களுக்கான வீடுகளையும் கட்டடங்களையும் உள்ளடக்கிய இன்னொரு கட்டடக்கலை மரபும் இருந்தது.

சமூக அமைப்பில் கோயில்களை முதன்மை கட்டுமானங்களாக கொண்ட அந்த கட்டிடக்கலையில் நுணுக்கமான அம்சங்கள் இந்தியா, இலங்கை, மாலத்தீவு உள்ளிட்ட பல தெற்காசிய நாடுகளில் பரவலாக இன்றும் இருக்கின்றன. மேலும், பல்வேறு காலகட்டங்களில் தமிழக பகுதிகளை ஆட்சி செய்த ராஜ்ஜியங்களின் அடிப்படையில் அவற்றின் தாக்கமும்,

தனித்தன்மையும் தமிழக கட்டிட கலையின் மீது பதிந்து புதிய அம்சங்களும் உருவாகி இருக்கின்றன.

**தொடக்கக் கால கட்டுமான பொருட்கள்**

சுமார் 6 நூற்றாண்டுக்கு முன்னர் சுடு மண், மரம், சுதை, மூங்கில், வைக்கோல், புல் மற்றும் செங்கல் ஆகியவை கட்டுமான பணிகளில் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு அனைக்கப்பட்ட வீடுகளும், மன்னர் மாளிகைகளும், வணிக நிறுவனங்களும், பொது இடங்களும் இருந்ததற்கான அடையாளங்கள் இன்று பல இடங்களில் உள்ளன. கிட்டத்தட்ட 6ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் கட்டுமான பணிகளில் கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டு கட்டிடங்கள் உருவாயின.

## 14.2. தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம்

**தொழில் நுட்ப அம்சங்கள்**

சோழர்கள் காலத்தில் தமிழர் கட்டிட கலை வளர்ச்சி பெற்று, பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் ஆட்சிக்காலத்தில் பெரிய அளவில் கோயில்கள் கட்டப்பட்டன.

அவை பல்லவர்களின் கட்டுமான பாணியை பின்பற்றியிருந்தாலும், அவற்றிலிருந்து பல்வேறு நிலைகளில் வேறுபட்டிருந்தன. கருங்கற்களை கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பல கோயில்களை சோழர்கள் அமைத்தனர். அவர்கள் பல்வேறு பொது கட்டமைப்புகளையும் வடிவமைத்து கட்டிடக்கலையை வளர்த்தது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் தென்னகத்தில் சிறப்பான கட்டிடக்கலை வல்லுனர்கள் கொண்ட விஜயநகர அரசின் கட்டிட கலை அம்சங்கள் பொருந்திய கோவில்கள் அமைக்கப்பட்டன.

தமிழர்கள் கட்டும் பெரும் கட்டிடங்களுக்கு அடித்தளம் அமைப்பது எப்படி? என்பது குறித்து அவர்களுக்குத் தெளிவான அறிவு இருந்தது. தேவையான அளவு பள்ளம் தோண்டிக் கொள்ள வேண்டும். அந்தப் பள்ளத்தில் முதல் வரிசையாக மணல் கொட்டப்பட வேண்டும். பிறகு இரண்டாவது வரிசையாக நாகப்பழம் அளவு உள்ள கற்களைப் போடப்பட வேண்டும். பிறகு அதன் மீது 3வது வரிசையாக தேங்காய் அளவு கற்கள் போடப்பட வேண்டும். நான்காம் வரிசையில் யானை தலையளவு கற்கள் போடவேண்டும். இவ்வாறு செய்வதை திம்மியாகப் போடுவது என்று கூறுவார்கள். நவீன பொறியியலில் இம்முறையை

ஏழ்ஹக்ங்க் நற்ர்ய்ங்ள் என கூறுவார்கள். ஆனால் பல ஆயிரம் ஆண்டு முன்பே இந்த நுணுக்கத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள்.

அடிமானம் எதுவரை இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும் தமிழர்களுக்கு தெளிவான அறிவு இருந்தது.

**கல் காணும் வரை**

கீழே கருங்கல் இருக்குமானால் எவ்வளவு பாரம் வேண்டுமானாலும் தாங்கும். எனவேதான், பெரும் கட்டிட அமைப்புகளுக்கு கல் காணும்வரை தோண்டி அடிமானத்தை அமைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக தஞ்சை பெரிய கோயில் செம்பாறாங்கல் எனப்படும் பாறையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் அடிமானம் 5 அடி ஆழம் மட்டுமே தரைக்குள் சென்றிருப்பதாக இந்தியத் தொல்லியல் துறை கண்டுபிடித்துள்ளது.

**மணல் காணும் வரை**

மணலில் கட்டப்பட்டிருக்கும் போது எவ்வளவு பாரமாயினும் தாங்கும். தமிழகத்தில் அமைக்கப்பட்ட நெடுநிலை மாடங்கள் மணற்பாங்கான நிலத்தில்தான் கட்டப்பட்டன.

**நீர் காணும் வரை**

அடிமானம் மட்டத்தில் தண்ணீர் வந்துவிட்டால் உலர்ந்துள்ள நிலையில் பாதிபாரம்தான் தாங்கும். நிலத்தடி நீர் மட்டம் இனி உயராது என்ற அளவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அதற்குகீழே போகக்கூடாது என்று பொருள் கொள்ள வேண்டும்.

**மண்ணின் அடர்த்தி**

கட்டிடங்கள் கட்டும்போது மண்ணின் அடர்த்தியைத் தெரிந்துகொள்ள பழந்தமிழர்கள் எளிய சோதனையைக் கையாண்டார்கள். ஒரு கோல் நீளம்; ஒரு கோல் அகலம்; ஒரு கோல் உயரம் கொண்ட குழி ஒன்றை வெட்ட வேண்டும். பின்னர் வெட்டப்பட்ட மண்ணை அதே குழியில் போட்டு நிரப்ப வேண்டும். குழி நிரம்பியது போக மண் இருந்தால் அது வன்புலம். குழியில் போட இன்னும் மண் தேவைப்பட்டால் அது மென்புலம். இந்த உண்மையை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டிருக்கிறார்.

கட்டிடம் என்பது வேடிக்கை பார்ப்பதற்கான அமைப்பு அல்ல. அது ஒரு குறியீடு. அந்தக்குறியீடு எதைச் சொல்கிறதென்பதே முக்கியம். நம்

கோயில்களின் குறியீட்டு ஆழம் மிக விரிவானது. ஒட்டுமொத்தமாக அவை பல்வேறு வழிபாட்டுமுறைகளையும் ஞானவழிகளையும் ஒன்றாக இணைக்கும் தொகுப்புத்தன்மையைக் காட்டுகின்றன. பிரிட்டிஷ் கட்டிடங்கள், அவர்களின் கிரேக்க-ரோம பாரம்பரியத்தை வலியுறுத்த விரும்புகின்றன.

நாம் பொதுக்கட்டிடங்களை அமைக்கும்போது நம்முடைய பண்பாட்டு அடையாளமாகவே அவற்றை அமைக்கவேண்டும். அவை என்ன சொல்கின்றன என்பது முக்கியம். நீண்ட பாரம்பரியம் உள்ள நம் நாட்டின் அழகியலுக்கும் நவீனகாலகட்டத்திற்கும் உள்ள ஒரு உரையாடலாக அவை அமைந்திருக்கவேண்டும். எப்படியோ அவை நம்மைச்சுற்றி உள்ள மலைகளுடனும் மரங்களுடனும் பிற தொன்மையான கட்டிடங்களுடனும் ஒரு இயல்பான அழகியல் ஒருமையைக் கொண்டிருக்கவேண்டும்.

## 14.3 சிற்பம்

சிற்பம் - இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன.

அ. தட்சிணாமூர்த்தி "தமிழர் நாகரிகமும் பண்பாடும்" என்ற நூலில் தமிழர் சிற்பக்கலையின் சிறப்பியல்புகளை விளக்கியிருக்கின்றார். அதற்காக மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் பின்வரும் கருத்தை தனது நூலில் தருகின்றார். "நமது சிற்பங்கள் அயல்நாட்டுச் சிற்பங்களைப்போன்று, வெறும் அழகிய காட்சிப் பொருள்களாக மட்டும் இல்லாமல், காட்சிக்கும் அப்பால் சென்று கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் ஊட்டுகின்றன." மேலும் வை. கணபதி அவர்களின் பின்வரும் குறிப்பையும் தருகின்றார். "நம் நாட்டுச் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலையின் இலக்கணங்களையும் இக்கலையில் புகுத்தியதாகும்."

சிற்றண்ண வாசலில் உள்ள நடன மாதர் ஓவியம் அக் காலத்துக் கூத்துக்கலையின் மாட்சியை விளக்குகிறது. வலப்புறத் தூணிலுள்ள ஓவியம், இடக்கையில் 'கஜஹஸ்த' நிலையும், வலக்கையில் ‘சதுர’ நிலையும் காட்டுகின்றது. இந்த நிலையில் அமைந்த பல சிற்பங்களையும் படிமங்களையும் தில்லையிற் காணலாம். தென்னகத்தில் மிகவும் புகழ்பெற்ற நடன நிலை இதுவென்பர், எதிர்த் தூணில் உள்ளது 'லதா விரிசிக' நடன நிலை யைக் காட்டுகின்றது. பல்லவர் காலத்தில் குழு நடனம் சிறப்புற்றது. வைகுந்தப் கோயிலில் உள்ள சிற்பங்கள் இதற்குச்

என்று. இக்குழுவில் ஆடவரும் பெண்டிரும் சேர்ந்திருக்கின்றனர். சிற்பக்கலை பற்றிய பகுதியில் இதுபற்றி விளக்கப்பட்டது.

கூத்து தமிழர்களின் பாரம்பரிய நாட்டர் கலை வடிவங்களில் ஒன்று. கிராமத்தின் மண்வாசனையையும், கிராம மக்களது வாழ்வாதாரங் களையும், அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் வெளிப் படுத்தும் வகையில் அமைவது கூத்துக்கலை.

பண்டைக் காலந்தொட்டே வளர்ந்து வந்துள்ள கவின் கலைகளில் ஒன்று சிற்பக்கலையாகும். பல்லவர் காலத்திற்கு முன்பு பெரும்பாலும் மண்ணுருவங்களும், சுதையுருவங்களுமே செய்யப்பட்டன. கோயில் கட்டுதற்குக் கருங்கல் பயன்படுத்தப் பட்ட பிறகுதான் சிற்பம் நிலைபேறடைந்த கலையாக உருவாயிற்று.

சங்க காலத் தமிழர்கள் மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலும் அழகிய சிற்பங்களை உருவாக்கினர். 'மண்ணீட்டாளர்' என்னும் கலைஞர்கள் மண் உருவங்களைச் செய்தனர். வீடுகளில் தச்சர்கள் அழகிய உருவங்களை நிலையில் உள்ள உத்தரக் கற்பலகையில் அமைத்தனர். திருமகள் உருவமே அதில் இடம் பெற்றது. இருபுறமும் செங்கழுநீர்ப் பூக்களைத் தாங்கிய பிடியுரு வங்கள் அமைக்கப்பட்டன.

நெடுநல்வாடை இதற்குச் சான்று பகர்கின்றது. அவர்கள் கூரிய உளியினால் செதுக்கி அமைத்த கட்டில்களின் வனப்பு முன்பே கூறப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க புகார், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை போன்ற இடங்களில் அகழ்வாய்வுகள் நடந்தபோது கிடைத்துள்ள பல்வேறு மண் உருவங்கள் அக்காலத்துச் சிற்பத்திற்குத் தக்க சான்றுகளாகும்.

மண்ணாலான சிற்பங்கள் போலவே சுதைச் சிற்பங்களும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தன. “சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காயின் சாறு முதலிய வற்றை ஊற்றி அரைத்து வச்சிரம்போல் செய்து, அதைக் கொண்டு உருவங்கள் செய்வது பண்டைய மரபு.

உருவங்களைச் செய் வதற்கு ஏதுவாக உள்ளே வலிய மரத்தாலான முளையன்று வைக்கப்பட்டுச் செங்கல், கம்பிகள் முதலியவற்றைப் பொருத்தி, சுண்ணாம்புக்காரை பூசி, மேலே சுதை பூசி உருவங்கள் அமைக்கப்படும் (இரா.நாகசாமி, தமிழகக் கோயிற்கலைகள், பக். 79-80).

காவிரிப்பூம்பட்டினத்து அகழ்வாய்வில் இத்தகு உருவங்கள் கிடைத்துள்ளன.

## 14.4 ஓவியக்கலை

ஓ என்ற எழுத்தே ஓவியம் என்ற பொருளுடையதாகப் பண்டைக் காலத்தில் இருந்தது. கற்காலத்திலேயே ஓவியக்கலை உருவாகத் தொடங்கி விட்டது. மனிதன் குகைகளில் வாழ்ந்த போதே ஓவியம் தீட்டியிருக்கிறான். வேட்டையாடி உணவுப் பொருள்களைத் தேடிக்கொண்ட காலத்திலும் ஓவியம் படைத்திருக்கிறான்.

தமிழகத்தில் கீழ்வாலை, முத்துப்பட்டி, அணைப்பட்டி, வேட்டைக்காரன் பாளையம் ஆகிய ஊர்களில் வேட்டை யாடுவதைக் குறிக்கும் பழைமையான பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. கோயில் சுவர்கள், அரண்மனைப் பள்ளியறைகள், கொலு மண்டபங்கள் ஆகிய இடங்களில் வரையப் பெற்ற ஓவியங்கள் இன்னும் தமிழகத்தில் அழியாமல் கிடைக்கின்றன. ஓவியத்திற்கு என்றே தனி இடம் இருந்தது என்பதைச் சித்திரமாடம் என்ற சொல் வெளிப்படுத்தும்.

### ஓவியப்பாவை

பெண்ணின் அழகை ஓவியத்திற்கு ஒப்பிடுவது வழக்கம். ஓவியம் போன்ற பெண் என்றும் ஓவியப்பாவை என்றும் கூறுவர்.

> **உயிர்பெற எழுதப்பட்ட**
> **ஓவியப் பாவை ஒப்பாள்** (*சீவக:* 2048)

என்று சீவக சிந்தாமணி கூறுகின்றது. கொல்லி மலையிலே ஒரு பெண்ணின் ஓவியம் வரையப் பட்டிருந்ததாம். அதனைப் பார்ப்பவர்கள் உயிரைப் பறிகொடுக்கும் அளவிற்கு அதன் அழகில் மயங்கி விழுந்து விடுவார்களாம்.

### இரதியின் ஓவியம்

இப்படி ஒரு கதை (ஓவியப் பாவையைப் பற்றிய) நம் நாட்டில் நிலவுகிறது. தமிழக ஓவியங்களில் பெண்களுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டுள்ளது. மன்மதன் எனும் தெய்வ அழகனின் மனைவியான இரதியின் ஓவியம் திருப்பரங்குன்றத்தில் இருந்ததாகக் குறிப்பு உள்ளது.

### ஓவியச் செய்தி

ஓவியம் பேசுவது போல் இருக்க வேண்டும். ஏதோ ஒரு செய்தியை உணர்த்துவது போல் இருக்க வேண்டும். "தன்னைவிட்டுத் தன் கணவன்

பிரிந்து போய்விடுவானோ என்று அஞ்சுகிறாள் ஒரு பெண். போகாதீர்கள்! என்று சொல்ல நினைக்கிறாள். வாய் வரவில்லை ஆனால் அவள் நிற்கும் நிலையும் கண்ணில் இழையோடும் சோகமும் அந்தக் கருத்தை 'ஓவியச் செய்தி' போல உணர்த்தியதாகப்" புலவர் ஒருவர் பாடுகின்றார். ஓவியம் ஒரு கதை சொல்வதாக அமையலாம்; ஒரு நீதியை அறிவுறுத்துவதாகவும் அமையலாம்.

**ஓவியரும் ஓவியங்களும்**

தமிழக ஓவியங்களில் பழைமையானவை காஞ்சி கயிலாசநாதர் கோயில் ஓவியங்களும், பனைமலைக் கோயில் ஓவியங்களும், சித்தன்னவாசல் குகைக் கோயில் ஓவியங்களும், திருமலைப்புரம், மலையடிப்பட்டி ஓவியங்களும், தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயில் ஓவியங்களும் ஆகும்.

**காஞ்சி கயிலாசநாதர்**

**சித்தன்னவாசல் குகைக் கோயில் ஓவியம்**

**தஞ்சைக் கோயில் ஓவியம்**

**பனைமலைக் கோயில் ஓவியம்**

கி.பி. 600க்கு முற்பட்ட கோயில்கள் செங்கல், மரம், சுண்ணாம்பு ஆகியவற்றால் கட்டப்பட்டவை. அவை அழிந்துபோய் விட்டன. அவற்றில் வரைந்த ஓவியங்கள் பற்றியும் நமக்குச் செய்திகள் கிடைக்கவில்லை. நமக்குக் கிடைப்பனவற்றுள் காலத்தால் முற்பட்டது சித்தன்ன வாசல் ஓவியமே! அரசன் அரசி ஓவியம், தாமரைப் பொய்கை ஓவியம் ஆகியன அழகுமிக்கவை. அவையும் இன்று மெல்ல அழிந்து வரும் நிலையில் உள்ளன. இந்த ஓவியங்களைத் தீட்டிய ஓவியர்களைப் பற்றிய செய்தி ஏதும் நமக்கு கிடைக்கவில்லை. எனினும் கேவாத பெருந்தச்சன், குணமல்லன் சாத முக்கியன், கலியாணி, கொல்லன் சேமகன், இராசராசப் பெருந்தச்சன் போன்ற பெயர்கள் மட்டும் அறியப்படுகின்றன.

## 14.5. தமிழர் இசை

பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்பே இசையும் அதோடு இணைந்த கூத்தும் உருவாகி வளரத் தொடங்கின. இசை, கூத்து ஆகியவற்றின் கலை நுட்பங்களை விளக்கும் இலக்கணத் தமிழ் நூல்கள் எழுந்தன. இந்நூல்கள் எழுதப்பட்ட காலம் முச்சங்க காலம் என அறியப்படுகிறது. இம்முச்சங்க காலம் இற்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனவே

தமிழர் இசையும் கூத்தும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்விய கலைகளாக விளங்கின என உறுதியாகக் கொள்ளலாம்.

**பழந்தமிழ் இசை இலக்கண நூல்கள்**

இசையும் கூத்தும் ஒன்றோடொன்று இணைந்த கலைகள். கூத்து என்பதைப் பழந்தமிழ் மக்கள் நாடகம் என்றும் அழைத்தனர். நாட்டியம், ஆடல் என்ற சொற்களும் கூத்துக் கலையைக் குறிக்கும்.

முச்சங்க காலத்தில் இசைக்கு இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. கூத்துக்கும் இலக்கணம் எழுதப்பட்டது. எனவே இரு கலைகளை இணைத்தும் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. கால ஓட்டத்தில் பல நூல்கள் அழிந்துபோயின. எஞ்சிய நூல்கள் பற்றி இடைக்கால உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அகத்தியம் இது அகத்திய முனிவரால் எழுதப்பட்டது. இயல், இசை, அகத்தியம் நாடகம் என்ற முத்தமிழுக்கும் இந்நூல் இலக்கணம் கூறும்.

இசை நுணுக்கம் சிகண்டி என்னும் முனிவரால் எழுதப்பட்டது. இது ஓர் இசைத் தமிழ்நூல். இந்திர காளியம் யாமளேந்திரர் என்பவரால் எழுதப்பட்டது. பஞ்சபாரதீயம் தேவவிருடி நாரதன் எழுதிய நூல்.

பஞ்சமரபு அறிவனார் என்பவர் இந்நூலின் ஆசிரியராவார். பழந்தமிழர் இசை நாடக இலக்கண நூலிது. இசை மரபு, வாக்கிய மரபு, நிருத்த மரபு, விநய மரபு, தாளமரபு என்னும் ஐந்து மரபுகள் பற்றிய நூலிது.

## 14.6. தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள்

பழந்தமிழ் இலக்கண நூல்களுள் முழுமையாகக் கிடைக்கும் நூல் தொல்காப்பியம். இது தொல்காப்பியர் என்பவரால் எழுதப்பட்டது. எழுத்து, சொல், பொருள் என்ற தமிழ் இலக்கணம் கூறும் நூல் இது. இசைத்தமிழ், தொடர்பான செய்திகளை இந்நூலில் ஆங்காங்குக் காணலாம். எடுத்துக்காட்டாகப் பொருளதிகாரம் அகத்திணையியல் 18ஆம் சூத்திரம் தமிழர் வாழ்க்கை நெறியின் அடிப்படைப் பண்பாட்டுக் கருவூலங்களைக் குறிப்பிடுகிறது.

**சூத்திரம்:**

**தெய்வ முணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிய**

(தொல். அகத்திணையியல் - 18)

இங்கு தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள். ஏழு கருப்பொருளில் ஒன்று யாழ். மற்றொன்று பறை.

**யாழ்**

தொல்காப்பியம் கூறும் 'யாழ்' என்னும் சொல் பழந்தமிழர் வகுத்த பண்ணிசையைக் குறிக்கும். இது மிடற்றிசை (குரலிசை), நரம்புக் கருவியிசை (யாழ் என்னும் தந்திக் கருவி இசை) காற்றுக் கருவியிசை (குழல் கருவியிசை)ஆகியவற்றின் முறைகளும் மரபுகளும் பற்றியதாகும்.

**பறை**

தொல்காப்பியர் கூறும் "பறை" என்னும் சொல் தாளம் பற்றியதாகும். அதாவது தாளத்தைக் கொட்டிக் கொடுக்கும் பல்வேறு தாளக்கருவிகளின் (Percussion Instrum) முறைகளும் மரபுகளும் பற்றியதாகும்.

**ஐந்துநிணைப் பண்கள், அதற்குரிய காலம்**

பழந்தமிழசு மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தினர். தாம் வாழ்ந்த நிலத்தை ஐந்தென வகுத்துக் கொண்டனர். மலையும் மலைசார்ந்த இடமும் "குறிஞ்சி" என்றனர். காடும் காடு சார்ந்த இடமும் "முல்லை" என்றனர். வயலும் வயல் சார்ந்த இடமும் “மருதம்” என்றனர், கடலும் கடல் சார்ந்த இடமும் கடலோரப் பகுதியும் “நெய்தல்” என்றனர். குறிஞ்சியும் முல்லையும் தன் இயல்பில் திரிந்து பாலை என்னும் வடிவம் கொள்ளும்.

நிலத்தை ஐந்தாக வகுத்துக் கொண்ட தமிழர் அந்தந்த நிலத்துக்குரிய இசையை உருவாக்கினர். அந்தந்த நிலத்திற்குரிய பண்களைக் கீழ்க்கண்டவாறு வகுத்துக் கொண்டனர்.

**குறிஞ்சி நிலத்திற்குரியது குறிஞ்சிப் பண்.**
**முல்லை நிலத்திற்குரியது முல்லைப் பண்.**
**மருத நிலத்திற்குரியது மருதப் பண்**
**நெய்தல் நிலத்திற்குரியது செவ்வழிப் பண்.**
**பாலை நிலத்திற்குரியது பாலைப் பண்.**

பழந்தமிழர் பாடிய பண் இசைகள் பற்றிப் பழமையான நூல்கள் கூறுகின்றன, முச்சங்கம் கூடிய இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இசை குறித்த இலக்கண நூல்களைத் தமிழர் எழுதியுள்ளனர். ஆனால் இந்நூல்கள் அழிந்துவிட்டன. இருப்பினும் தொல்காப்பியம், சங்கத்தொகை நூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள்,

சிலப்பதிகாரம் ஆகியவற்றில் பழந்தமிழர் இசை பற்றிப் பல செய்திகள் கிடைக்கின்றன. பழந்தமிழர் பாடிய இசையைப் 'பண்' என்றனர். ஐவகை நிலத்திற்கு ஏற்ற பண்களையும் இசைக் கருவிகளையும் உருவாக்கினர். பண்களைப் பாடுவதற்கும் கருவிகளை இசைப்பதற்கும் கலை வகுப்பினர் இருந்தனர். தத்தம் கலை முறைகளில் நல்ல திறன் பெற்றவர்கள் சமுதாயத்தால் மதிக்கப்பெற்றனர். பழந்தமிழர் பண்ணிசை முறை பக்தி இயக்க காலத்தில் நாடெங்கும் விரைந்து பரவியது. தேவாரப் பண்களும், பாசுரப் பண்களும் பிற்காலத்தில் கருநாடக இசை என்னும் பெயரில் பழந்தமிழர் இசை வளம்பெற உதவின.

**கூத்துக்கலை**

தமிழர் போற்றி வளர்த்த கலைகளில் கூத்தும் ஒன்று. இசைக் கலையோடு இணைந்து வளர்ந்த இதுவாகும். இக்கலை ஆடவர் பெண்டிர் இரு சாரார்க்கும் பொதுவாகும். விழாக்களின் போது கூத்தர்கள் மக்களைத் தம் ஆடல் பாடல்களால் மகிழ்வித்தனர். மக்களும் மன்னர்களும் கூத்தர்களைப் பேணினர். நானிலத்து மக்களும் ஆடிப்பாடி மகிழ்ந்ததற்குச் சங்க நூல்களில் எண்ணற்ற சான்றுகள் உள்ளன. பரதவர், குறவர் போன்ற மக்கள் பொழுதுபோக்கின்போது ஆடுவது தவிர, இக்கலையைத் தம் வாழ்விற்குக் கருவியாகக் கொண்ட தனி இனத்தவர் இருந்தனர். அவர்கள் கூத்தர், பொருநர், விறலியர், கோடியர் எனப் பலவாறு பெயர் பெற்றனர். சங்க காலத்திற்குப் பின்னர் சமயம் ஆடற்கலை யைப் போற்றி வளர்த்தது. செம்மையான பரத நாட்டியம் செழித்து வளர்ந்தது. தமிழில் கூத்துக் கலையின் இலக்கணங்களை உணர்த் தும் நூல்கள் பலவுண்டு. அவற்றுள் பல அழிந்தன. எஞ்சியவை சிலவே.

சங்க நாளில் எல்லாத் துறைகளிலும் ஆடலும் பாடலும் விரவியிருந்தன. பண்டையோர் ஆடிய ஆடல்களில் வள்ளிக்கூத்து என்பதும் ஒன்று. நாட்டுக்கு வளமும் வெற்றியும் கொணர்ந்த வள்ளியின் பெருமைகளைப் பாடி ஆடுவது இது வாகும். தொல்காப்பியர் இதனை 'வாடா வள்ளி' என்பர். வாடா வள்ளியினால் வளம்பல தரும் நாடுகளைப் பற்றிப் பெரும் பாணாற்றுப்படை

**"வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்**
**நாடுபல கழிந்த பின்றை"**

(பெரும்பாண். 370-371)

என்கிறது. இக்கூத்தினை ஆடவரும் பெண்டிரும் ஆடுவர். இஃது இழிந்தோர் காணும் கூத்தென்பர். இதுபற்றிய பிற செய்திகள் இல்லை.

பொதுமக்கள் ஆடிய இன்னொரு கூத்து, குரவை எனப்படும். மலைவாழ்நர் விரும்பி ஆடியது இக்கூத்தாகும். மலையுச்சியில் குன்றவாணர்கள் மான்தோற் சிறுபறையின் முழக்கோடு இதனை ஆடினர்.

**"நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு**
**மான்தோற் சிறுபறை கறங்கக் கல்லென**
**வான்தோய் மீமிசை அயரும் குரவை"**

(மலைபடு.320-322)

## 14.6. தொழிலும் வணிகமும்

சங்ககாலம் முதற்கொண்டு வணிகத்தில் தமிழர் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். திரைகடலோடியும் திரவியம் தேடு என்பது ஒரு முதுமொழி. இருப்பினும் வணிக சமூகம் பல சமயங்களில் நியாமற்ற முறையில் சுரண்டல் மூலம் செல்வம் ஈட்டி சமூகத்தில் ஏற்ற தாழ்வுகள் அல்லது சமனற்ற போக்கை பெருகச் செய்யும் போது அதனால் பாதிக்கப்பட்டவர்கள் "வர்க்க போராட்டத்தில்" ஈடுபட்டு வணிகரை எதிர்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக "உழவர் சமூகத்தைச் சேர்ந்த அப்பர் தலைமையில் தமிழ் நாட்டில் பொதுமக்கள் செல்வம் நிறைந்த வணிகருக்குகெதிராக திரண்டெழுந்ததை" குறிப்பிடலாம்.

தொல்காப்பியத்தில் வணிகருக்குரிய ஐந்து தொழில்கள் கூறப்பட்டிருக் கின்றன. அவையாவன:

**தமக்குரிய நூல்களை ஓதுதல்**
**தமக்குரிய யாகங்களைச் செய்தல்**
**தாம் பெற்ற பொருட்களை நல்வழியில் ஈதல்**
**உழவு செய்வித்தல்**

பசுக்களைக் காத்தல் என்பனவாம்.

வணிகர்கள் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப்பட்டனர். வணிகரைப் பாதுகாத்தல் ஒரு நாட்டின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை இலக்கியங்கள் கூறியிருக்கின்றன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னனை வாழ்த்தி குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர் 'பலவகை உணவுப்பண்டங்களை

விற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்றாய்' என்று பொருள்பட "கூலம் பகர்நர் குடிபுறந் தராஅ" என்று பாடியிருக்கிறார்.

"பண்டையத்தமிழ் மக்கள் வணிகத்திலும், தொழில் நுட்பத்திலும் சிறந்து விளங்கினர் என்பதை அண்மைக்காலத் தொல்லியல், கல்வெட்டியல், நாணய இயல் சான்றுகள் உணர்த்துகின்றன.

கிறித்து பிறப்பதற்குப் பன்னூறாண்டுகட்கு முன்பே தமிழர் மேற்கே கிரீசு, உரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடல் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, பாலத்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருள்களை விரும்பிப் பெற்றன. ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் மேற்காசிய நாடுகளில் நல்ல விலைக்கு விற்கப் பட்டன. யூதர்களின் தலைவர் மோசசு தாம் நடத்திய வழிபாட்டில் தமிழகத்து ஏலக்காயைப் பயன்படுத்தியுள்ளார். அக்காலம் கி.மு. 1490 என்பர். தென் அரேபிய நாட்டு அரசி சோபா என்பவள் இசுரேல் மன்னர் சாலமோனைக் காணச் சென்ற ஞான்று ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்களைக் கையுறையாகக் கொண்டு சென்றாளாம். சாலமோனின் காலம் கி.மு. 1000 என்பர். இவர் காலத்தில் டயர் நாட்டு மன்னர் ஹீராம் என்பாரின் ஏவலின் கீழ் மூன்றாண்டு கட்கொருமுறை சில மரக்கலங்கள் கீழை நாடு கட்குச் சென்றன. பொன்னும், வெள்ளியும், தந்தமும், குரங்கும், மயில் தோகையும், அகில் மரங்களும் (ஆல்மக்) இரத்தினங்களும் அக்கப்பல்களில் ஏற்றிச் செல்லப் பட்டன. இப்பொருள்கள் எல்லாம் சேர நாட்டினின்றும் சென்றனவாகும்.

பாபிலோனியாவுடன் தமிழர் நிகழ்த்திய வணிகம் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன. நிப்பூர் என்னுமிடத்தில் முரஷு என்பவரும் அவர் மக்களும் காசு வணிகம் நடத்தினர். அவர்கள் களிமண் ஏட்டில் கணக்குகளைப் பதிந்தனர். இதில் தமிழக வணிகருடன் நடத்திய வணிகத்தின் பற்று வரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அங்கேயே தமிழர் குடியேறியிருந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பிற நாட்டார் உள்ளத்தைக் கவரும் பல பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள் முத்தும், பவளமும், ஆரமும், அகிலும், வெண்துகிலும், சங்கும், மிளகும் குறிப்பிடத் தக்கவை. யவனர் என்பார் கிரேக்கரும் உரோமரும் அராபியரும் ஆவர். அவர்கள் பொன்னொடு வந்து மிளகொடு பெயர்ந்தனர்.

**"யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியடு பெயரும்"** - அகம் 149: 9-10

என்னும் குறிப்பினைக் காண்க. பெரிய மரக்கலங்களில் தமிழகத் தில் பொன்மிகுதற்குக் காரணமாகிய சிறந்த பண்டங்களை ஏற்றிக் கொண்டு வந்தனர்.

**"பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழிதரும் ஆடியற் பெருநாவாய்"**

(மதுரைக் 81-83)

என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. அதே நூல் குதிரைகளை இங்குக் கொண்டுவந்தது பற்றிக் குறிப்பிடுகிறது.

மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் தமிழர் சங்க காலத்துக்கு முன்பும் சங்க காலத்திலும் வெளிநாட்டு வணிகத்தில் சிறந்திருந்தனர் என்பது தெளிவாகும். இவ்வணிகம் பிற்காலத்திலும் தொடர்ந்தது. இடைக்காலத்தில் நானாதேசியத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர். வளஞ்சியர், மணிக்கிராமத்தார் என்னும் வணிகக் குழுக்கள் கடல் வாணிகத்தை நடத்தியதைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம்.

**தொழிலும் வணிகமும்**

வணிகர்கள் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப்பட்டனர். வணிகரைப் பாதுகாத்தல் ஒரு நாட்டின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை இலக்கியங்கள் கூறியிருக்கின்றன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னனை வாழ்த்தி குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர் 'பலவகை உணவுப்பண்டங்களை விற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்றாய்' என்று பொருள்பட "கூலம் பகர்நர் குடிபுறந் தராஅ" என்று பாடியிருக்கிறார்

பண்டைத் தமிழகத்தின் பொருளியல் நிலை என்பது கி.மு. 200 முதல் கி.பி. 200 வரையிலான காலத்தில் தமிழக நிலப்பகுதியில் அமைந்திருந்த பொருளியல் நிலையையும் கூறிகளையும் குறிக்கும். வேளாண்மை, நெசவு, முத்துக் குளித்தல், இடுபொருட்களைக் கொண்டு பயன்படு பொருட்களைச் செய்யுதல், கட்டுமானம் ஆகியன முதன்மையான தொழில்களாக இருந்தன. பல பகுதிகளில் நெற்பயிர் வேளாண்மை ஓங்கியிருந்தது. அதுவே மிகுதியாக உட்கொள்ளப்பட்ட உணவுப் பொருளாகவும் உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்றுப் பொருளாகவும் இருந்தது. மிளகு, கம்பு, சோளம், பருப்பு வகைகள், கரும்பு ஆகியனவும் அதிக அளவில் பயிரிடப்பட்டன. மதுரையும் உறையூரும் ஆடைத்

தொழில் மையங்களாகவும், கொற்கை நகர் முத்து வணிக மையமாகவும் விளங்கின.

**கைத்தொழில்**

ஆடை நெய்தல் சிறந்த கைத்தொழிலாகக் கருதப்பட்டது. கைம்பெண்கள் (கணவனை இழந்த பெண்கள்) நூல் நூற்கும் தொழிலில் ஈடுபட்டனர். பாண்டிய நாட்டில் நெய்யப் பெற்ற மிகமெல்லிய ஆடைகள் பாடலிபுத்திரம் போன்ற வடநாட்டு நகரங்களுக்கு அனுப்பப் பெற்றன என்பதைச் சாணக்கியர் தம் நூலில் கூறியுள்ளார். தச்சர், கொல்லர், கன்னார், தையற் தொழில் புரிவோர் முதலிய பல்வகைத் தொழிலாளர்களும் ஒவ்வொரு ஊரிலும் இருந்தனர். நுண்கலைகள் புரியும் தொழிலாளர்களும் அவர்களுடன் இணைந்து வாழ்ந்தனர்.

**வணிகம்**

தமிழகத்தில் விளைந்த விளை பொருள்களும் (உணவுப் பொருள்கள் மற்றும் இலவங்கம், ஏலம், மிளகு போன்றவை), கைத் தொழிற் பொருள்களும் நாட்டின் தேவையை நிறைவு செய்ததோடு பிற நாடுகளுக்கு விற்பனைப் பொருட்களாக அனுப்பும் அளவு மிகுந்து விளங்கின. கீழை நாடுகளிலிருந்து பட்டு, பீங்கான் போன்ற பொருள்களும் மேலை நாடுகளிலிருந்து போர்க்கருவிகள், உயர்ந்த மது வகைகள், கண்ணாடி ஆகிய பொருள்களும் இறக்குமதியாயின. சேரநாட்டு மிளகு, ஏலம், யானைத் தந்தம் ஆகியவைகளுக்கு அயல் நாடுகளில் மிகுந்த வரவேற்பு இருந்தன. ஏற்றுமதிப் பொருள்களுக்கும், இறக்குமதிப் பொருள்களுக்கும் அரசாங்க முத்திரையிடும் வழக்கம் இருந்தது. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி, முசிறி போன்ற துறைமுகங்களில் பண்டகசாலைகள் இருந்ததையும், கலங்களில் பொருள்களை ஏற்றுதல், இறக்குதல் ஆகிய பணிகள் இரவும் பகலும் நிகழ்ந்தன என்பதையும் சங்கப்பாடல்கள் தெளிவாகக் கூறுகின்றன. துறைமுகங்களில் கலங்கரை விளக்கங்கள் (Light House) இருந்தன என்பதும் அறிய முடிகிறது.

## 14.7. அறிவியல் நோக்கு

தமிழர்கள் வானியல் அறிவு பெற்றிருந்தார்கள் இந்த உலகம் ஒன்றையன்று சார்ந்து இயங்குகிறது. நிலம் மண்ணால் நிரப்பப்பட்டுள்ளது, நிலம் ஏந்திய விசும்பும், வான் என்ற விசும்பைச் சுற்றிய காற்று, காற்றை பரப்பும் தீயும், தீக்கு எதிரான நீரும் என

ஐம்பூதங்களாய் கலந்தது என்ற வரையறையின் வழி புறநானூற்று பாடல்களிலேயே பஞ்சபூதங்களின் சேர்க்கையே இவ்வுலகம் எனக் கூறுகிறது.

மனிதன் அறிவியல் துறையில் முன்னேறியுள்ள இன்றையக் காலகட்டத்தில் இயற்கையிலிருந்து விலகியே வாழ்வதால் நோய்கள் பெருகிக் காணப்படுகின்றன. மருத்துவக் கண்டுபிடிப்புகள் பல மனிதனின் ஆயுட்காலத்தைச் சிறிது நீட்டிக்கின்றன. இன்றைய கண்டுபிடிப்புகளின் அடித்தளம் நம் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரையுள்ள அனைத்து இலக்கியங்களிலும் உடல்நலத்தைப் பேணக்கூடிய மருத்துவச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. தமிழ் இலக்கியமானது, ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவத்தின் மகத்துவத்தினை நமக்குப் போதிக்கிறது. இங்கு, எட்டுத்தொகையில் காணப்படும் மருத்துவச் செய்திகள் ஆராயப்படுகிறது.

**மருத்துவர் - குறிப்பு**

'நோவு, நோதல்' போன்ற சொற்கள் நோயைக் குறிக்கின்றன. நோயை அறிந்து குணப்படுத்துபவரை 'மருத்துவர்' என்று அழைக்கிறோம். நோயுற்றோரின் உடல்நிலையை அறிந்து, அதற்குத் தகுந்தாற் போல பழங்காலத் தமிழ் மருத்துவர்கள் மருந்து கொடுக்கின்றனர். இதனை,

> **பொருந்தியன் வேட்ட பொருளவின் நினைத்த சொல்**
> **திருந்திய யாக்கையுடன் மருத்துவன் ஊட்டிய மருந்து**
> (கலி.17)

என்ற கலித்தொகைப்பாடல் எடுத்துரைக்கிறது. அறத்தொழில் செய்யும் மருத்துவரை 'அறவோன்' என்று குறிப்பிட்டனர்.

> **"அரும்பிணி உறுநர்க்கு வேட்டவை கொடாஅது**
> **மருந்து ஆய்ந்து கொடுக்கும் அறவோன்"** (நற்.136)

இங்கு நோயினை அறிந்து, அதற்கேற்ற மருந்து கொடுத்த மருத்துவர்களை 'அறவோன்' என்று கூறிய செய்தி புலப்படுகிறது.

**"பிறர் நோயும் தம்நோய் போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்"** (கலி.22)

இவ்வரிகளில் நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவர், தன்னையே நோயாளியாகப் பாவித்துச் சிகிச்சையளிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**அறுவை சிகிச்சை முறை**

இன்றைய மருத்துவத்தின் உயரிய நிலையான அறுவை சிகிச்சை முறைக்கு முன்னோடி நம் தமிழ்ச் சான்றோர்களே ஆவர். போரிலே புண்பட்ட வீரர்களின் உடலானது, ஊசி கொண்டு தைக்கப்பட்டதாகப் பதிற்றுப்பத்து பறைசாற்றுகின்றது.

**"மீன் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்**
**சிரல் பெயர்ந்தனை நெடுவள் ஊசி**
**நெடுவசி பரந்த வடுவாழ்**
**மார்பின் அம்புசேர் உடம்பினர்"** (பதிற்று.42)

இப்பாடலில், ஊசி கொண்டு தைக்கும் அறுவை சிகிச்சை முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**"செருவா யுழக்கிக் குருதி யோட்டிக்**
**கதுவாய் போக்கி துதிவா யெஃகமொடு**
**பஞ்சியுங் களையாப் புண்ணார்"** (புறம்.353)

இவ்வரிகளில் போரில் புண்பட்டு கிழிந்த தசையைத் தைத்துப் பஞ்சு கொண்டு கட்டிய செய்தி புலப்படுகிறது. ஊசியால் தைத்துப் பஞ்சினால் கட்டுப் போடுகின்ற இன்றைய அறுவை சிகிச்சை முறையைப் பழந்தமிழர்கள் அன்றே அறிந்து மேற்கொண்டனர். சங்கத் தமிழர்கள் வான் கோள்களில் தாமே ஒளிவிடக் கூடியவற்றையும் சூரியனிடம் இருந்து கடன்பெற்று ஒளிவிடுவன வற்றையும் கண்டறிந்து நாண் மீன்கள் கோள் மீன்கள் என்று பெயர் சூட்டி அழைத்தனர்.

**நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு**
**நாண்மீன் விராய கோள்மீன் போல**

என்று பட்டினப்பாலை என்ற சங்கநூல் இதனை அழகாகப் பேசும். அது போல வெள்ளி எனும் கோள் வடக்கு திசையில் நின்றால் மழை உண்டு என்றும் தெற்கு ஏகினால் மழை இன்மையும் ஏற்படும் என்றும் பதிற்றுப் பத்தும் சொல்கின்றது. அது போல சூரியனிலிருந்து சிதறும் துகள்களே எரி கற்கள் என்பதும் அவர்களுக்கத் தெரிந்து இருந்திருக்கிறது. இதனை வெங்கதிர் கனலி துற்றும் என்றது புறநானூறு. அது போல கோள்கள் சுற்றும் பாதைகள் பற்றியும் அவர்கள் அறிந்து இருந்தனர்.

பௌர்ணமி நாளில் சூரியனும் சந்திரனும் எதிர் எதிரே நிற்கும். ஆனால் நிலவு தோன்றும் கணத்திலேயே சூரியன் மறைந்து விடும் என்ற உண்மையையும் அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

1. முதன்மையும் அடிப்படையுமான பொருள் _________ எனப்பட்டது.
2. அ. தட்சிணாமூர்த்தி _________ என்ற நூலில் தமிழர் சிற்பக்கலையின் சிறப்பியல்புகளை விளக்கியிருக்கின்றார்.
3. சிற்றண்ண வாசலில் உள்ள நடன மாதர் ஓவியம் அக் காலத்துக் _________ மாட்சியை விளக்குகிறது.

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் தமிழர் கட்டிடக் கலையின் நுணுக்கம், தொல்காப்பியத்தில் இசைக் கூறுகள் மற்றும் தொழிலும் வணிகமும், அறிவியல் நோக்குதலையாய கூறுகள் ஆகியவற்றைப் பற்றி ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 1**

1. "பருத்திப் பெண்டிர்"
2. ஐவகை
3. அறவோன்
4. நாகரிகம்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள் - 2**

1. முதற்பொருள்
2. "தமிழர் நாகரிகமும் பண்பாடும்"
3. கூத்துக்கலையின்

**தொகுதி – 5இல் : மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம்** என்ற தலைப்பில் நான்கு பிரிவுகளாகயுள்ளன. அவை எழுத்துப் பிழை, தொடர்ப் பிழைகள், வேற்றுமை இலக்கணம், செய்யுள் நலம் பாராட்டல், பாடம் தழுவிய இலக்கிய வரலாறு - மரபுக் கவிதை, புதுக்கவிதை, உரைநடை ஆகியவற்றைப் பற்றி இத்தொகுதியில் தெரிந்து கொள்ளலாம்.

**பிரிவு-15: எழுத்துப் பிழை, தொடர்ப் பிழைகள்** இப்பிரிவில் மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம், பிழை நீக்கி எழுதுதல், ளகர லகர வேறுபாடுகள், நகர, னகர, ணகர வேறுபாடுகள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்துகொள்ளலாம்.

**பிரிவு-16: வேற்றுமை இலக்கணம்** இப்பிரிவில் வேற்றுமை இலக்கணம், வேற்றுமை விரி மற்றும் வேற்றுமைத் தொகை ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**பிரிவு-17: செய்யுள் நலம் பாராட்டல்** இப்பிரிவில் செய்யுள் நயம் பாராட்டல் மற்றும் செய்யுள் நலம் பாராட்டற்குரிய வழிகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

பிரிவு-18: **பாடம் தழுவிய இலக்கிய வரலாறு, மரபுக் கவிதை புதுக்கவிதை, உரைநடை** இப்பிரிவில் இலக்கிய வரலாறு, தமிழ்மொழி, மரபுக்கவிதை, புதுக்கவிதை மற்றும் உரைநடை ஆகியவை இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொகுதி 5இல் உள்ள அனைத்து பிரிவுகளிலும் உங்கள் முன்னேற்றத்தைச் சோதிப்பதற்கான பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் அனைத்தையும் தாங்கள் தவறாமல் முடிக்க வேண்டும்.

மேலும், மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் இந்த மாதிரி வினாத்தாளுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து படிக்கவும்.

# பிரிவு-15

## எழுத்துப் பிழை, தொடர்ப் பிழைகள்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

15.1. மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம்

15.2 . பிழை நீக்கி எழுதுதல்

15.3. ளகர லகர வேறுபாடுகள்

15.4. நகர, னகர, ணகர வேறுபாடுகள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இப் பிரிவில் மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம், பிழை நீக்கி எழுதுதல், ளகர லகர வேறுபாடுகள், நகர, னகர, ணகர வேறுபாடுகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- மொழித்திறன், இலக்கிய வரலாறு
- இலக்கணம் பிழை நீக்கி எழுதுதல்
- ளகர லகர வேறுபாடுகள், நகர, னகர, ணகர வேறுபாடுகள்

**15.1. மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம்**

**எழுத்துப் பிழை, தொடர்ப் பிழைகள்**

மொழித்திறன்கள்- பேசுதல் திறன்

மொழி கற்றலுக்கான திறன்களுள் செவிமடுத்தலுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது பேசுதலாகும். முதலில் செவிமடுக்கப் பழகும் பிள்ளை படிப்படியாக பேசப் பழகிக் கொள்ளும். எமது

எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தி ஏனை யோருடன் தொடர்பாடும் பிரதானமான ஊடகம். 'பேசுதல்' ஆகும்

மொழிப் பயன்பாட்டில் பேசுதல், எழுதுதல் என்ற இரண்டு அடிப்படைகள் உள்ளன. தமிழ் மொழியும் பேச்சுமொழி, எழுத்துமொழி என்னும் இருவகையாக அமைந்துள்ளது. 'பேசுதல்' அவரவர் தாய்மொழியில் இயல்பாக நிகழும். இருப்பினும், ஒலி வடிவத்தை எப்படி உச்சரிக்கிறோம் என்பதை நாம் முதன்மையாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பேசும் போதுள்ள ஒலி வடிவத்தை எழுத்து வடிவில் பதிவு செய்கிறோம். அவ்வாறு செய்யும் போது பலவிதமான சிக்கல்கள் தோன்றுகின்றன. ஆகையால், மொழியைப் பயன்படுத்துவதற்கு எழுத்து வழக்கினைக் கற்றுக் கொள்கிறோம். இச் செய்தியின் அடிப்படையில், பயன்பாட்டுத் தமிழ் என்பது கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித் திறன்களைக் கொண்டது என்பது புலனாகும்.

எழுத்துக்களை ஆளுந் திறனுக்கு மொழிப் பயிற்சி மிகவும் அவசியம். எழுதுவதில் நாம் தவறுகளைச் செய்கின்றோம். இதனால், மொழியின் வளம் குன்றுகிறது. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை ஆகியன தோன்றுகின்றன. அவற்றைக் களைவதற்கு அடிப்படை இலக்கணப் பயிற்சி மிகவும் அவசியம்.

வாழ்கின்ற வாழ்க்கைக்கு இலக்கணம் என ஒன்றுண்டு. வாழ்க்கைச் செம்மையுற இலக்கணம் இருப்பது போல, மொழி செம்மையுறவும் இலக்கணம் உண்டு. அவை காலத்தின் தேவைக்கேற்பவும், பயன்பாட்டுக்கேற்பவும் மாற்றம் பெறுவதுண்டு. பிழைகள் என்று உணர்ந்தபின் பிழையோடு எழுதுவது குற்றமாகும். இன்று வெளிவரும் பெரும்பாலான நாளிதழ்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள் போன்றவற்றில் பிழைகள் மலிந்திருக்கக் காணலாம். அவற்றை நமக்குத் துணையாகக் கோடல் தவறான முன்னுதாரணமாகும்.

**வெற்றிகரமான பேசுதலின் இயல்புகள்**

**குரலின் இனிமை**

**குரலின் உரப்பு:** குரலின் கூடிக்குறையும் தனமையே இதனால் கருதப்படுகின்றது. செவிமடுப்போர் தொகை அவர்கள் இருக்கும் தூரம் போன்றவற்றுக்க ஏற்ற வகையில் குரலை உயர்த்தியோ தாழ்த்தியோ பயன்படுத்தும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**தெளிவு**: சரியான உச்சரிப்புடன் பேசுதலே இங்கு தெளிவு என்பதால் கருதப்படுகின்றது. 4. பொருளுடையதாக இருத்தல்.: முன்வைக்கும் கருத்தில் தொடக்கமும், நடுவும், முடிவும் பொருந்தியமைவதோடு பொருள் விளங்கத்தக்கதாகவும் இருத்தல் அவசியமாகும்.

**இலக்கிய வரலாறு**

தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது; என்று தோன்றி வளர்ந்தது என்று இயம்பமுடியாத அளவுக்குப் பழமையானது: பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்கே உரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இலங்கியது. எனவே, தமிழில் காணக் கிடக்கும் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும், மக்கள் வாழ்க்கைநெறியின் செம்மையும் புலப் படுகின்றன. தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடவந்த பெஸ்கி பாதிரியார். தமிழ்ப்புலவர் ஆற்றல்சான்ற மொழியினைக் கையாண்டனர்: தமிழ்க் கவிதையில் சிறந்த பாட்டுகள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியும் காணப்படுகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆய்வதற்கு முன், நாட்டினுடைய வரலாற்றையும், மக்களுடைய வரலாற்றையும் ஓரளவு காணவேண்டும். ஓவியம் பின்னணியைத் துறந்து எவ்வாறு வாழ இயலாதோ அவ்வாறு இலக்கிய வரலாறும் நாட்டு மக்களின்றி இயங்காது.

மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். மொழி வளம் பெறுவதும், வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியன. உலகில் எண்ணிறந்த மொழிகள் தோன்றின; வளர்ந்தன. காலப்போக்கில் பல அழிந்தொழிந்தன. சிலவே இன்றளவும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றிருக்கின்றன. அம் மொழிகளுள்ளும் தமிழ், சீனம் போன்ற ஒரு சில மொழிகளே பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் பயின்று வருகின்றன. வடமொழி, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய வரலாற்றுப் பழமை வாய்ந்த மொழிகள் பேச்சு வழக்கு இழந்து மொழியளவில் நின்று விட்டன.

**சங்க காலம் கி.மு.500-கி.பி. 100**

**முதற் சங்கம்**

'பாண்டி நன்னாடுடைத்து நல்ல தமிழ்' என்று பாடினார் ஔவையார். பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்துப் புலவர்களுக்கு ஊக்கம் ஊட்டிப் புதிய நூல்களின் ஆக்கத்திற்கான தொண்டினைச் செய்தார்கள். முதல்

இடை கடை என்ற மூன்று சங்கங்கள் நிலவின என்ற செய்தி இறையனாரகப் பொருள் உரையால் தெரிய வருகின்றது. முதற்சங்கம் குமரிக்குத் தென்பால் - கடல்கோளுக்கு முன் பரந்திருந்த நிலப்பகுதியில் இருந்த தென்மதுரையில் நிலவியிருந்ததென்றும், அச் சங்கத்தில் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய ஐந்நூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தனர் என்றும், அவர்களால் பாடப்பட்டவை பரிபாடல், முதுநாரை, முதுகுருகு முதலான நூல்களென்றும், அச்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டுகள் நிலவிற்று என்றும், அகத்தியமே இலக்கண நூலாகப் பின் பற்றப்பட்டது என்றும் களவியலுரை கூறுகின்றது.

**இடைச் சங்கம்**

இடைச் சங்கத்தில் தொல்காப்பியனார், வெள்ளூர்க் காப்பியன். சிறுபாண்டரங்களார் உள்ளிட்ட ஐம்பத்தொன்பதின்மர் புலவர்களாய் வீற்றிருந்தனர் என்றும், அவர்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் முதலிய நூல்களை இயற்றினார்கள் என்றும், அவர்களுக்கு அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கண நூல்களாய் அமைந்தன என்றும், அச்சங்கம் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகள் நிலைத் திருந்ததென்றும், புலவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுர மென்றும் அந்நூல் கூறுகின்றது.

**கடைச் சங்கம்**

கடைச் சங்கப் புலவர்கள் சிறுமேதாவியார், சேந்தம் பூதனார், பெருங்குன்றூர்கிழார், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிள நாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலாய நாற்பத்தொன்பது புலவர்கள் என்றும், அவர்களால் பாடப்பெற்றவை நெடுந்தொகை நானூறு ஐங்குறுநூறு, குறுந்தொகை, நானூறு, நற்றிணை நானூறு. பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல் என்றும், அவர்களுக்கு நூலாய் விளங்கியவை அகத்தியமும் தொல்காப்பியமும் என்றும், அச்சங்கம் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகள் உத்தர மதுரையில் நிலவியிருந்ததென்றும் இறையனார் களவியலுரை கூறுகின்றது. ஆனால் களவியலுரை கூறும் இக் கூற்றை முழுவதும் உண்மையென்று கொள்வதற்கில்லை; இற்றைக்கு ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்த தமிழார்வம் மிக்கிருந்த புலவர்களின் உள்ளம், தமிழின் சிறப்பினை இப்படிக் கற்பனையாக எண்ணிப் பார்த்தது என்பர். 'சங்கம் என்ற ஓர் அமைப்பு நிலவியது என்பதே பொய்' என்பர் அறிஞர்

சிவராசப்பிள்ளை. ஆனால் புலவர் கூட்டம் ஒன்று தமிழ் நாட்டில் நிலவியது என்பதற்கு இலக்கியத்தில் பல்வேறு சான்றுகளைக் காணலாம்.

**சங்ககாலம்**

- முச்சங்கங்கள்
- சங்கச் செய்யுளும் பொருள் மரபும்
- எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும்
- சங்கப் புலவரும் சங்க இலக்கியப் பண்பும்.

**சங்கமருவிய காலம்**

- அரசியல் நிலை
- பண்பாட்டு நிலை
- சமய நிலை
- நூல்கள்
- உரைநடை இலக்கியம்
- இலக்கியப் பண்பு

**பல்லவர் காலம்**

- பல்லவர் காலத்துத் தமிழ் நாடு
- சமய நிலை
- கலை வளமும் இலக்கியப் பண்பும்
- பக்திப் பாடல்கள்
- பிற நூல்கள்
- உரைநடை நூல்கள்

**சோழர் காலம்**

- அரசியல் நிலை
- சமய நிலை
- இலக்கியப் பண்பு
- திருமுறைகளும், நாலாயிர திவ்விய பிரபந்தங்களும்
- காவியங்கள்

- சிற்றிலக்கியங்கள்
- இலக்கண நூல்கள்
- சைவ சித்தாந்த நூல்கள்
- உரை நூல்கள்
- நாயக்கர் காலம்

**அரசியல் நிலை**

- சமய நிலை
- இலக்கியப் பண்பு
- பிரபந்தங்கள்
- இலக்கியங்கள்
- உரையாசிரியர்கள்
- தமிழை வளர்த்த அரசரும் ஆதீனங்களும்

**ஐரோப்பியர் காலம்**

- அரசியல் நிலை
- சமய நிலை
- இலக்கியப் பண்பு
- உரைநடை இலக்கியம்
- செய்யுள் இலக்கியம்
- நாடக இலக்கியம்

**இருபதாம் நூற்றாண்டு**

## 15.2. பிழை நீக்கி எழுதுதல்

**சில வகைப் பிழைகள் / நீக்கும் வழி முறைகள்**

- பிழையற்ற நூல்களைப் படித்தல்.
- பொருள் தரும் வகையில் எழுதுதல்.
- பொருள் எளிதில் புரியும் வண்ணம் எழுதுதல்.
- தமிழில் உள்ள ல, ள, ழ, ற, ர, ண, ன வேறுபாடுகளின் பொருளுணர்ந்து பிழையின்றி எழுதுதல்.

## 15.3. ளகர லகர வேறுபாடுகள்

புளியைப் பிடித்தான் என்றும் புலியைக் கரைத்தான் என்றும் எழுதுவது தவறு. புளியைக் கரைத்தான் எனவும், புலியைப் பிடித்தான் எனவும் எழுத வேண்டும்.

ஒலி - சத்தம்

ஒளி - வெளிச்சம்

கல் - கல்வி

கள் - பானம்

சூல் - கருப்பம்

சூள் - சபதம்

நீலம் - நீல வண்ணம் அல்லது நீல நிறம்

நீளம் - தொலைவு, நெடுமை

குலம் - சாதி, இனம்

குளம் - நீர் நிலை

தால் - நாக்கு

தாள் - கால், காகிதம்

வேலை - தொழில்

வேளை - பொழுது

- தொடர்களை அமைக்கும் போது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைச் சரியான முறையில் அமைத்து எழுதுதல்.
- வல்லினம் மிகும் இடம், வல்லினம் மிகா இடங்களை அறிந்து, அவற்றைத் தக்கவாறு பயன்படுத்துதல்.
- ண, ழ, ள, ற, ன என்னும் எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அப்படி வருவதும் தவறு.

**நினைவிற் கொள்க**

ன - றன்னகரம்

ண - டண்ணகரம்

ந - தந்நகரம்

ர - இடையின ரகரம்

ற - வல்லின றகரம்

ல - இடையின ரகரத்தை அடுத்து வரும் லகரம்

ள - சிறப்பு ழகரத்தை அடுத்து வரும் ளகரம்

வல்லின றகரத்திற்குப் பின் அந்த றகரமே வரும்

(எ.கா) நேற்று,ஏற்றம், காற்றாடி, வெற்றிலை.

றன்னகரத்திற்குப் பின் அந்த னகரமே வரும்.

(எ.கா) அன்னம், நன்னன், மன்னன், முன்னம், பின்னம்.

டண்ணகரத்திற்குப் பின் அந்த ணகரமே வரும்.

(எ கா) கண்ணன் எண்ணம் கண்ணீர் கண்ணம்

மொழிக்கு முதலில் 'ந' தந்நகரமே வரும்.

(எ.கா) நன்று, நாள், நாடு, நேற்று, நல்லது.

## 15.4. நகர, னகர, ணகர வேறுபாடுகள்

ந, ன, ண ஆகியவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளை உணராமல், பலரும் தவறாகப் பயன்படுத்துவதைக் காணலாம். 'நான் உனக்கு முன்னூறு ரூபாய் கொடுத்தேன்' என்ற சொற்றொடர் மயக்கம் தருவதாக உள்ளது. இது, 'நான் உனக்கு முன்பு நூறு ரூபாய் கொடுத்தேன்' என்று பொருள் தருகிறது. கொடுத்தது 300 ரூபாய்; ஆனால், 100 ரூபாய் என வந்துள்ளது. ஆகவே, இது பிழைபட்ட சொற்றொடர். 'நான் உனக்கு முந்நூறு ரூபாய் கொடுத்தேன்' என்று அமையுமாறு எழுதுதல் வேண்டும்.

அன்னாள் -அவள்

அந்நாள்- அந்த நாளில்

ஊன்- மாமிசம்

ஊண்- உணவு

எண்பது-80 என்னும் எண்ணுப் பெயர்

என்பது -என்று சொல்லுவது

அண்மை - அருகில்

அன்மை - அல்லாமை

ஆண் - ஆண் மகன்

ஆன் - பசு

பனி - குளிர்ச்சி

பணி - வேலை

முன்னாள் - முற்காலத்தில்

முந்நாள் - மூன்று நாள்

மணம் - வாசனை, நறுமணம்

மனம் - உள்ளம்

- ற் - என்னும் வல்லின மெய் மட்டும் இக்காலத்தில் சொல்லுக்கு இறுதியில் நில்லாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.
- தகர வரிசைக்கு முன்னர் 'ந்' வரும்.

  (எ.கா) கந்தன், தந்தை,மந்தை, ஆந்தை,தந்தி.
- டகர வரிசைக்கு முன்னர் ண் வரும்.

  (எ.கா) கண்டம், பண்டம், தண்டு.
- றகர வரிசைக்கு முன்னர் ன் வரும்.

  (எ.கா) என்று, மன்றம், கன்று,நன்று.
- ற், ட் என்னும் வல்லின மெய்யெழுத்துகளுக்குப் பின்னர் எந்த மெய்யெழுத்தும் பயின்று

  வராது. (எ.கா) பயிற்சி,நட்பு,தட்சர், சுழற்சி.
- ர் - என்னும் இடையின மெய்யெழுத்துக்குப் பின்னர் வேறு மெய்யெழுத்து வரும். (எ.கா) பார்த்தான், தேர்ச்சக்கரம், சேர்க்கை, சொர்க்கம்.

---

**வலிமிகாத இடங்கள்**

---

- அது, இது, எது என்ற சுட்டுச் சொற்களை அடுத்து வல்லின எழுத்தில் (க, ச, த, ப) தொடங்கும் சொல் வந்தால், கட்டாயம் வலிமிகாது.

  எ.கா.: அது கடல் தான் – இது பால், எது தெரிந்தது?
- பன்மையைச் சுட்டும் இடங்களில் வலிமிகாது

எ.கா.: அவை பறவைகள், இவை கருவிகள், எவை கத்தின

- சுட்டி அன்று, இன்று, என்று என காலப் பொருளில் வரும்போது வலிமிகாது.

எ.கா.: அன்று கிடைத்தது, இன்று பேசினான், என்று தருவாய்?

- அத்தனை, இத்தனை, எத்தனை என்று எண்ணளவுப் பொருளில் வந்தாலும் வலிமிகாது.

எ.கா.: அத்தனை பாடல்கள், இத்தனை புத்தகங்கள், எத்தனை தருவாய்?

- நேரடியாகவே அளவுச் சுட்டாக வரும் சொற்களை அடுத்தும் ஒற்று வராது

எ.கா.: அவ்வளவு கெடுதல், இவ்வளவு சேர்ந்தது, எவ்வளவு கிடைக்கும்?

- ஆறு என்பது வழி என்ற பொருளில் வருவது, அதைச் சேர்த்துச் சுட்டும்போது வலி மிகாது.

எ.கா.: அவ்வாறு கூறினான், இவ்வாறு செய்தது, எவ்வாறு போகிறாய்?

- ஆறு என்பதற்கு மாற்றாக படி என்ற சொல்லும் வரும். அது சுட்டில் வந்தால் வலிமிகும்.

எ.கா.: அப்படிச் செய்தான். வினையெச்சச் சொல்லை அடுத்து வந்தால் வலிமிகாது.

எ.கா.: சொன்னபடி கேள், உள்ளபடி கூறினான், வாய்க்கு வந்தபடி பேசாதே, கூறியபடி கொடுத்தான்.

- பல, சில என்ற சொற்களை அடுத்து வலிமிகாது.

எ.கா.: பல பாடல்கள், சில கேள்விகள், பற்பல செய்திகள்.

- எட்டு, பத்து ஆகிய இரண்டு எண்ணுப் பெயர்களைத் தவிர, வேறு எந்தப் பெயருக்கும் வலிமிகாது.

எ.கா.: ஒன்று கேட்டான், இரண்டு கிடைத்தது, மூன்று செலவுகள், நான்கு தூண்கள், ஐந்து காப்பியங்கள், ஆறு புத்தகங்கள் ஏழு படிகள், ஒன்பது கோள்கள்.

- எண்ணுப் பெயர்கள் அடுத்து சொல்லோடு சேர்வதற்காக மாறி நிற்கையிலும் வல்லொற்று தோன்றாது.

  எ.கா.: ஒரு கடை, இரு கைகள், அறுசுவை, எழுபிறப்பு.

- நீ என்ற சொல்லை அடுத்து வலிமிகாது

  எ.கா.: நீ படித்தவன்.

- கட்டளைப் பொருள் தரும் அடுத்து ஒற்று தோன்றாது.

  எ.கா.: ஏறு கிளைமேல், நகர்த்து சுமையை, விடு கவலையை.

- பெயரும் வினையுமாக அமைந்த சொற்றொடர்களில் வலிமிகாது.

  எ.கா.: பூனை கத்தியது, ஆடு தாண்டியது, கிளி பேசியது.

- வினையும் பெயருமாக அமையும் சொற்றொடர்களிலும் ஒற்று மிகாது.

  எ.கா.: கத்தியது பூனை, நின்றது தேர், பறந்தன பறவைகள்.

- எச்சமாக நிற்கும் வினையை அடுத்து ஒரு பெயர்ச்சொல் வந்தாலும் ஒற்றிடல் இல்லை.

  எ.கா.: கொடுத்த பாரி, செய்கின்ற செயல், பாடிய பாட்டு. (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் விதிவிலக்கு – ஓடாக்குதிரை).

- இரண்டு பெயர்ச்சொற்கள் உம்மைத் தொகையாக வருகையில், வலிமிகக் கூடாது.

  எ.கா.: காடுகரை, பட்டிதொட்டி, சேர சோழ பாண்டியர்.

- வினைத்தொகையை அடுத்து வலிமிகுதல் இல்லை.

  எ.கா.: ஊறுகாய், குடிதண்ணீர், வெடிகுண்டு.

- ஒடு, ஓடு, அது, இருந்து, நின்று போன்றவை வேற்றுமை உருபுகளாகவும் பயிலும். அவற்றை அடுத்தும் வலிமிகாது.

  எ.கா.: அன்பொடு பேசினான், ஆற்றோடு போனது, எனது கை, வானிலிருந்து கொட்டியது, ஊரினின்று கிளம்பினான்.

- ஆ, ஓ, ஏ போன்ற நெடில்கள் வினா, வியப்பு, விளிப்பு என்று பல பொருள்களில் தோன்றும். அங்கும் வலிமிகுதல் இல்லை.

  எ.கா.: அவனா சொன்னான்? கள்ளோ காவியமோ? அன்பே பெரிது, கண்ணே தூங்கு.

- இரண்டு வினைச்சொற்கள் அடுத்தடுத்து வந்து எச்சமாக இருக்கையில், 'ந்து,' "ண்டு,' 'ன்று' என்னும் மென் தொடர்க் குற்றியலுகரமாக முடிந்தால் வலிமிகாது.

  எ.கா.: எழுந்து சென்றான், கண்டுகொண்டான், மென்று தின்றான்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

---

1. மொழிப் பயன்பாட்டில் _________, __________ என்ற இரண்டு அடிப்படைகள் உள்ளன.
2. வாழ்கின்ற வாழ்க்கைக்கு இலக்கணம் ________என ஒன்றுண்டு.

---

**தொகுத்தறிவோம்**

---

இப்பிரிவில் மொழித்திறன், இலக்கிய வரலாறு, இலக்கணம், பிழை நீக்கி எழுதுதல், ளகர லகர வேறுபாடுகள், நகர, னகர, ணகர வேறுபாடுகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

---

1. பேசுதல், எழுதுதல்
2. இலக்கணம்

# பிரிவு-16

## வேற்றுமை இலக்கணம்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

16.1. வேற்றுமை இலக்கணம்

16.2. வேற்றுமை விரி

16.3. வேற்றுமைத் தொகை

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இப் பிரிவில் வேற்றுமை இலக்கணம், வேற்றுமை விரி மற்றும் வேற்றுமைத் தொகை ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- வேற்றுமை இலக்கணம்
- வேற்றுமை விரி, வேற்றுமைத் தொகை

**16.1. வேற்றுமை இலக்கணம்**

பெயர்ச்சொற்களின் பொருள்நிலைகளைத் தொடர்கள் தோறும் வேறுபடுத்துவதே வேற்றுமை எனப்படும்.

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் (சொற்கள்) மறைந்தும், வெளிபட்டும் வர சொற்கள் புணரும் புணர்ச்சிக்கு வேற்றுமைப் புணர்ச்சி என்று பெயர். முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை – இவை இரண்டுக்கும் உருபு இல்லை.

இவ்வேற்றுமைப் புணர்ச்சி மூன்று வகைப்படும் அவை,

- வேற்றுமை விரி

• வேற்றுமை தொகை

• வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

## 16.2. வேற்றுமை விரி

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் மேற்கூறிய ஆறு வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு நிற்பது வேற்றுமை விரி எனப்படும். இவ்வேற்றுமை விரியானது,

- 2ஆம் வேற்றுமை விரி (ஐ) = கடிதத்தை அனுப்பினான்
- 3ஆம் வேற்றுமை விரி (ஆல்) = கண்ணால் நோக்கினாள்
- 4ஆம் வேற்றுமை விரி (கு) = பெற்றோருக்கு வணக்கம் செய்தல்
- 5ஆம் வேற்றுமை விரி (இன்) = கவலையின் நீங்கினான்
- 6ஆம் வேற்றுமை விரி (அது) = காதலது வெற்றி
- 7ஆம் வேற்றுமை விரி (கண்) = மனையின்கண் புகுந்தனர்

இவ்வாறு தொடர்கள் தோறும் பெயர்ச்சொற்கள் வேறுபடுவதே வேற்றுமை ஆகும்.

## 16.3. வேற்றுமைத் தொகை

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலுள்ள வேற்றுமை உருபுகள் மறைந்து வருவதே "வேற்றுமைத் தொகை" எனப்படும்.

- கடிதம் + அனுப்பினான் (ஐ) = கடிதத்தை அனுப்பினான்
- மரம் + வளர்த்தான் (ஐ) = மரத்தை வளர்த்தான்
- நூல் தொகுத்தான் (ஐ) = நூலைத் தொகுத்தான்
- புகழ் = அடைந்தான் (ஐ) = புகழை அடைந்தான்

**மூன்றாம் வேற்றுமைத் தொகை (ஆல் / ஒடு)**

- கண் + நோக்கினான் (ஆல்) = கண்ணால் நோக்கினான்
- மரம் + வாழ்கிறான் (ஆல்) = மரத்தால் வாழ்கிறான்

- (கருவி) வாள் + வெட்டினான் (ஆல்) = வாளால் வெட்டினான்
- (கருத்தா) கரிகாலன் + கட்டப்பட்ட அணை (ஆல்) = கரிகாலனால் கட்டப்பட்ட அணை
- புலி கொல் யானை (ஆல்)= புலியால் கொல்லப்பட்ட யானை
- (வினைமுதல்) விலங்கு மக்கள் அனையர் (ஒடு)= விலங்கொடு மக்கள் அனையர் பாலோடு கலந்த நீர்

**நான்காம் வேற்றுமை தொகை**

எப்பொருளாயினும் ஏதேனும் ஒன்றைப் பெறும் என்பதே அதன் பொருளாகும்.

| | | |
|---|---|---|
| காக்கை நிறம் கருமை | = | காக்கைக்கு நிறம் கருமை |
| உடல் உகந்த உணவு | = | உடலுக்கு உகந்த உணவு |
| கூலி வேலி | = | கூலிக்கு வேலை |
| கரும்பு வேலி | = | கரும்பிற்கு வேலி |
| பாரி நண்பர் கபிலர் | = | பாரிக்கு நண்பர் கபிலர் |
| பாம்பு பகை கருடன் | = | பாம்புக்குப் பகை கருடன் |

**ஐந்தாம் வேற்றுமைத் தொகை (இன்)**

‘இன்’ என்னும் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல் ஐந்தாவதாக அமையும் வேற்றுமையாகும். அது இப்பொருளை விட ‘இப்பொருள் இந்தத் தன்மையுடையது’ என்னும் ஒப்புப் பொருளை உணர்த்தும்.

- பணம் சிறந்த குணம் (இன்) பணத்தின் சிறந்த குணம்
- அமிழ்து இனியது இன்சொல் (இன்) அமிழ்தின் இனியது இன்சொல்
- தீய நட்பு தீர்ந்தான் (இன்) தீய நட்பின் தீர்ந்தான் (தீய நட்பிலிருந்து நீங்கினான்)

**ஆறாம் வேற்றுமைத் தொகை (அது)**

‘அது’ என்னும் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல் ஆறாவதாக வருவதாகும். இது ஒன்றோடொன்று இணை பிரியாத வகையிலும் பிரிக்கும் வகையிலும் அமையும்.

| | | |
|---|---|---|
| அவனது இயல்பு | – | தற்கிழகை / இணைபிரியாத வகையில் அமையும் உடைமை |
| அவனது தோட்டம் | - | பிறிதின் கிழமை / பிரிக்கும் வகையில் அமையும் உடைமை |
| மனிதன் இயல்வு (அது) | - | மனிதனது இயல்பு |
| அவன் செல்வம் | - | அவனது செல்வம் |
| நம் நாடு | - | நமது நாடு |
| வீரன் வாள் | - | வீரனது வாள் |
| வீட்டின் தூண் | - | வீட்டினது தூண் |
| ஆவின் கன்று | - | ஆவினது கன்று |

**ஏழாம் வேற்றுமைத் தொகை (கண்)**

ஏழாவதாக வருவது 'கண்' எனப் பெயர்பெற்ற வேற்றுமைச் சொல் ஆகும். அது ஒரு செயல் நடைபெறும் இடமாகிய நிலம், காலம், ஆகிய இரு பொருள்களைத் தரும்.

- பனையின் கண் உள்ள மடல் - தற்கிழமை
- பனையின் கண் உள்ள அன்றில் (பறவை) - பிறிதின்கிழமை
- வீட்டின்கண் உள்ள அறை - தற்கிழமை
- வீட்டின்கண் உள்ள பூனை - பிறிதின்கிழமை
- நாளின்கண் உள்ள நாழிகை - தற்கிழமை
- நாளின்கண் செய்யும் வேலை -பிறிதின்கிழமை
- கையின்கண் உள்ள விரல் - தற்கிழமை
- கையின்கண் உள்ள வளையல் - பிறிதின்கிழமை
- கறுப்பின்கண் இருக்கும் அழகு - தற்கிழமை
- இளமையின்கண் வாய்த்த செல்வம் - பிறிதின்கிழமை
- ஆட்டத்தின்கண் உள்ள அபிநயம் - தற்கிழமை
- ஆட்டத்தின்கண் உள்ள பாட்டு - பிறிதின்கிழமை

**எழுவாய் வேற்றுமை**

வேற்றுமை எட்டனுள் முதலாவதாக கூறப்படுவது எழுவாய் வேற்றுமை. இதில் எழுவாய் வேற்றுமையாவது எந்த உருபையும் சொல்லையும், விளியையும் ஏற்காது.

மரம் வளர்ந்தது - மரம் எழுவாய் வேற்றுமை இதில் மரம் என்னும் பெயர்ச்சொல் ஒரு தொடருக்கு எழுவாயாக அமைந்தால் இதற்கு எழுவாய் வேற்றுமை என்று பெயர். இதற்கு பெயர் வேற்றுமை என்ற பெயரும்

இதற்குண்டு. இவ்வேற்றுமை ஆங்கிலத்திலும் பெயர் வேற்றுமை என்னும் பொருளில் Nominative case என்று அழைக்கப்படுகிறது.

மரம்

உண்டு

மரம் வளர்க

மரம் வளர்ந்தது

மரம் பெரியது

கயல்விழி பார்த்தாள்

கண்ணன் படித்தால்

எட்டாம் வேற்றுமை (விளி)

வேற்றுமை எட்டனுள் எட்டாவதாக வருவது விளி வேற்றுமை. இதிலும் எழுவாய் எந்த வேற்றுமை உருபையும் ஏற்காது. விளித்தல் பொருளில் வரும்.

கந்தா வா!

இவ்வாறு, ஐ, ஆல், (ஒடு), கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் பெயர்ச்சொல்லோடு சேர்ந்து, ஒரு தொடரின் பொருளை மாற்றியும், பொருள் தரும் வகையில் மொழியை உருவாக்கவும் துணைப் புரிபவையே இவ்வேற்றுமை உருபுகளாகும்.

புலி கொல் யானை

**வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும்**

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் வேற்றுமை உருபுகள் வந்தால் மட்டும் சொற்கள் ஒன்றோடொன்று புணர்ந்து பொருள் கொடா. சில விடங்களில் வேற்றுமை உருபுகளோடு சில வினைச் சொற்களும் (பயனும்) சேர்ந்து வந்தால் தான் பொருள் கொடுக்கும். இவ்விரண்டும் மறைந்து வருவதற்கு “வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையும்” என்று பெயர்.

- தாமரைக் குளம் - தாமரையை உடைய குளம்
- பொற்றொடி - பொன்னால் செய்யப்பெற்ற தொடி
- கைவிரல் - கையிலுள்ள விரல்

தமிழ்மொழியின் தொடரமைப்பில் வேற்றுமைகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. பெயர்ச்சொற்களின் பொருள்நிலைகளைத் தொடர்கள் தோறும் வேறுபடுத்துவதே ___________ எனப்படும்.
2. வேற்றுமைப் புணர்ச்சி ___________ வகைப்படும்.
3. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலுள்ள வேற்றுமை உருபுகள் மறைந்து வருவதே ___________ எனப்படும்.

**தொகுத்தறிவோம்**

இப் பிரிவில் வேற்றுமை இலக்கணம், வேற்றுமை விரி மற்றும் வேற்றுமைத் தொகை ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

1. வேற்றுமை
2. மூன்று
3. “வேற்றுமைத் தொகை”

# பிரிவு-17

# செய்யுள் நயம் பாராட்டல்

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

17.1. செய்யுள் நயம் பாராட்டல்

17.2. செய்யுள் நயம் பாராட்டற்குரிய வழிகள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இப் பிரிவில் செய்யுள் நயம் பாராட்டுதல், செய்யுள் நலம் பாராட்டற்குரிய வழிகள் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- செய்யுள் நயம் பாராட்டுதல்
- செய்யுள் நலம் பாராட்டற்குரிய வழிகள்

## 17.1. செய்யுள் நயம் பாராட்டல்

**செய்யுள் என்பது யாது?**

நிலைபெற்ற உண்மையை அழகுபடக் கூறுவது செய்யுள். இனிமையும், எளிமையும், செம்மையும் வாய்ந்த நடையில், படிப்போருடைய உள்ளத்து உணர்ச்சியைத் தட்டி எழுப்பக்கூடிய விதத்தில் நல்ல செய்யுள் அமைந்திருக்கும். பிறர்க்குத்தெற்றெனப் புலப்படாமல், மக்கள் வாழ்க்கையிலும், இயற்கையமைப்பிலும் உறைந்து கிடக்கும் அழ கினைச் சுவைபட எடுத்துக்காட்டுவது. செய்யுள் ஆழ்ந்த கருத்துக்களை, செவ்விய முறையில், கற்போர் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நல்ல சொற்கட்டுக்களின் வாயிலாக வெளிப்படுத்தும் வன்மை செய்யுளுக்கு உண்டு.

நயம் என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருள். நயம் பாராட்டுதல் என்பது செய்யுளில், பாடலில் அமைந்துள்ள நயங்களை எடுத்துக் காட்டுதல் ஆகும்.

பல்வேறு வகை படித்தல் பொருள்களில் காணப்படும் சொற்கள், தொடர்கள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு நயம் பாராட்டுதல்.

**செய்யுள் நயம் பாராட்டல்**

செய்யுளின் திரண்ட கருத்து, மையக்கருத்து, சந்தம், கற்பனை, தொடை நயங்களான மோனை, எதுகை, இயைபு, முரண் மற்றும் அணி நயங்கள் பற்றி விரிவாக அழகுபட விளக்குவது செய்யுள் நயம் பாராட்டல் எனப்படுகிறது.

## 17.2. செய்யுள் நலம் பாராட்டற்குரிய வழிகள்

- முதற்கண் செய்யுளைப் பன்முறை படித்துப் பார்த்தல் - இயன்றால் ஏதேனும் ஓர் இசையில் அமைத்துப் படித்தல்.
- புலவனது வரலாற்றை ஓரளவு உணர்தல்.
- புலவன் செய்யுளைப் பாடிய சூழ்நிலையை உணர்தல்.
- செய்யுளின் உயிர்நிலைக் கருத்தை உணர்தல்.
- புலவனது உணர்ச்சியை உணர முயலல்.
- புலவன் அச்செய்யுளின் வாயிலாக உணர்த்த முற்படும் உண்மையை அறிய முயலல்.
- சொற்கள் எவ்வாறு நயம்பட அமைக்கப் பட்டுள்ளன என்று ஆராய்ந்து பார்த்தல்.
- கருத்தினைப் புலவன் எம்முறையில் வெளிப்படுத்தியுள்ளான் என்றும், ஏன் அந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளான் என்றும் ஆராய்தல்.
- செய்யுளிற் காணப்படும் கற்பனை நயத்தை உணர்தல்.
- செய்யுளில் அமைந்திருக்கும் அணியினைக் காணுதல்.

**நளவெண்பா**

**"காமர் கயல்புரளக் காவி முகைகெகிழத்**
**நாமசையின் செக்தேன் தளையவிழப்-பூமடந்தை**
**தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகாஞ்குழ்**
**தன்னாட்டின் முன்னாட்டும் நாடு,"**

"வெண்பாவிற் புகழேந்தி" என்று புலவர்களால் பாராட்டப்பெற்ற புகழேந்திப் புலவர் நளனுக்குரிய நிடத நாட்டை ஈண்டு வர்ணிக்கின்றார். ஒரு நாட்டில் வாழும் மக்கள் இன்பமுடன் இருந்தால் அந்நாட்டின் அழகை வருணிப்பது எளிது. மக்கள் எப்பொழுது இன்பமுடன் இருப்பர்? நாட்டில் வளப்பம் மிகுந்து, பசியும் பிணியும் இன்றி இருந்தால் மக்கள் இன்பமாக வாழ்வர் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? எனவே, நிடத நாட்டில் மக்கள் பசியின்றி வாழ்ந்தனர் என்று சொல்ல விழைந்தார் புலவர் புகழேந்தியார். அதனை நேர் முகமாகக் கூறிவிட்டால் சுவை மிகுதியாக இராது. ஆராய்ந்து பார்ப்போர்க்குக் குறிப்பினால் புலப்படக் கூடியவாறு பாடினால்தான் சுவை இருக்கும். அதனைக் கருத்திற்கொண்ட புகழேந்தியார்' நிடத நாட்டின் வளத்தைக் குறிப்பினாற் புலப் படுத்துகின்றார்.

கடல் குழ்ந்த இவ்வுலகில் நிடத நாடு எல்லா நாடுகட்கும் முன்னதாகக் கருதப்பட்டது என்கின்றார் புலவர். அவ்வாறு கருதப்பட்டது ஏன்? அந்நாடு பூமிதேவியின் கண்போல் விளங்கியது. பூமியை ஒரு பெண் என்றும், பெண்ணின் முகத்திற்குக் கண் அழகைத் தருவதுபோல, பூமியாகிய பெண்ணின் முகத்திற்கு நிடத நாடு கண்போல் இருந்து அழகு தந்தது என்றும் புலவர் ஈண்டுக் கூறியுள்ளார்.

நிடத நாடு பூமிதேவியின் கண்போல் விளங் கியது. இவ்வுவமை பொருந்துமாறு புலவர் பாடியுள்ளார். நிடத நாட்டில் மீன்களும், நீல மலர்களும், தாமரை மலர்களும் விளங்கின. மீனும், நீல மலரும், தாமரை மலரும் பெண்ணின் கண்களுக்கு உவமை யாகக் கூறப்படுதல் உண்டு. நிடத நாட்டில் மீன்கள் புரளுங்காட்சியும், நீலமலர் பூத்திருக்குங் காட்சியும், தாமரை பூத்து, அதனிடமிருந்து தேன் துளிக்குங் காட்சியும் புலவருடைய மனக்கண்முன் தோன்றின. அவை பூமிதேவியின் கண்களைப்போல் தோன்றுவதாகப் புலவர்க்குக் கற்பனை உண்டாயிற்று. எனவே, பூமிதேவியின் கண்ணைப்போல் விளங்கியது நிடத நாடு என்று புலவர் பாடினார். உவமை எத்துணைப் பொருத்தமாக உள்ளது!

இனி, இப்பாடலை ஆராய்ந்து பார்த்தால் அந் நாட்டின் வளம் நமக்கு நன்கு புலப்படும். புது நீரில் கயல்கள் புரளும். நீல மலரும்,தாமரையும் நீர் மிகுந்த இடத்தில் பூக்கும் தன்மை உடையன. எனவே, மீன்கள் புரளுதல், நில மலர் பூத்தல். தாமரை பூத்துத்தேன் சொரிதல் ஆகியவை அந்நாடு நீர்வளம் மிக்க நாடு என்பதனைக் குறிப்பினால் வெளிப்படுத்தும். நீர்வளம் மிக்க நாட்டில் பயிர்கள் செழித்து வளரும் என்பதையும்,

அந்நாட்டு மக்கள் பசியின்றி இன்பமாக வாழ்வர் என்பதையும் வெளிப்படையாகக் கூறவும் வேண்டுமோ?

"நாடென்ப நாடா வளத்தன" என்றூச் திரு வள்ளுவனார். நாடென்பது பல்வகைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். எல்லாச் செல்வங்கட்கும் அடிப்படையானது நீர்வளம் ஆகும். அதுபற்றித்தான் புகழேந்தியார் நிடது நாட்டின் நீர்வளத்தைக் குறிப்பிட்டார். அக்நாட்டின் மக்கள் கவலையற்று வாழ்ந்தனர் என்பதே அவரது உட்கிடை ஆகும். பாடலை ஆராய்ந்து பார்ப்போர்க்கே இவ்வுண்மை புலப்படும். புகழேந்தியார் எத்துணைச் சுவையும், அழகும் அமையுமாறு, நிடத நாட்டைச் சிறப்பித்துள்ளார்! இத்தகைய, சுவை மிக்க பாடல்களைப் பாடிப் புகழை ஏந்திய காரணத்தினால் தான் அவருக்குப் புகழேந்தியார் என்னும் பெயர் வந்தது போலும்!

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக**

1. நிலைபெற்ற உண்மையை அழகுபடக் கூறுவது ________.
2. நயம் என்ற சொல்லுக்கு ________ என்பது பொருள்.

**தொகுத்தறிவோம்**

இப் பிரிவில் செய்யுள் நயம் பாராட்டுதல், செய்யுள் நலம் பாராட்டற்குரிய வழிகள் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்**

1. செய்யுள்
2. அழகு

# பிரிவு-18

## பாடம் தழுவிய இலக்கிய வரலாறு - மரபுக் கவிதை, புதுக்கவிதை, உரைநடை

**பாட அமைப்பு**

அறிமுகம்

குறிக்கோள்கள்

18.1. இலக்கிய வரலாறு

18.2. தமிழ்மொழி

18.3. மரபுக்கவிதை

18.4. புதுக்கவிதை

18.5. உரைநடை

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக

தொகுத்தறிவோம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்

**அறிமுகம்**

இப் பிரிவில் இலக்கிய வரலாறு, தமிழ்மொழி, மரபுக்கவிதை, புதுக்கவிதை மற்றும் உரைநடை ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

**குறிக்கோள்கள்**

இப்பிரிவை பயின்ற பின்னர் கீழ்கண்டவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

- இலக்கிய வரலாறு தமிழ்மொழி, மரபுக்கவிதை
- புதுக்கவிதை, உரைநடை

### 18.1. இலக்கிய வரலாறு - மரபுக் கவிதை, புதுக்கவிதை, உரைநடை - பழமையும் சிறப்பும்

தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது; என்று தோன்றி வளர்ந்தது என்று இயம்பமுடியாத அளவுக்குப் பழமையானது; பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்கே உரி கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இலங்கியது. எனவே, தமிழில் காணக் கிடக்கும் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும், மக்கள்

வாழ்க்கைநெறியின் செம்மையும் புலப்படுகின்றன. தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடவந்த பெஸ்கி பாதிரியார், 'தமிழ்ப்புலவர் ஆற்றல்சான்ற மொழியினைக் கையாண்டனர்; தமிழ்க் கவிதையில் சிறந்த பாட்டுகள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியும் காணப்படுகின்றன' என்று கூறியுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆய்வதற்கு முன், நாட்டினுடைய வரலாற்றையும், மக்களுடைய வரலாற்றையும் ஓரளவு காணவேண்டும். ஓவியம் பின்னணியைத் துறந்து எவ்வாறு வாழ இயலாதோ அவ்வாறு இலக்கிய வரலாறும் நாட்டு மக்களின்றி இயங்காது. மக்கள் வாழ்க்கையினின்று முகிழ்ப்பதே இலக்கியம்.

’மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி’ என்பர். மொழி வளம் பெறுவதும், வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியன. 'உலகில் எண்ணிறந்த மொழிகள் தோன்றின; வளர்ந்தன. காலப்போக்கில் பல அழிந்தொழிந்தன. சிலவே இன்றளவும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றிருக்கின்றன. அம் மொழிகளுள்ளும் தமிழ், சீனம் போன்ற ஒருசில மொழிகளே பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் பயின்று வருகின்றன. வடமொழி, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய வரலாற்றுப் பழமைவாய்ந்த மொழிகள் பேச்சு வழக்கு இழந்து மொழியளவில் நின்று விட்டன.

**தமிழினம்**

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' என்று தமிழினத்தின் பழமையினைப் பாராட்டிப் பேசுகிறார்கள். உலகின் பிறபகுதி மக்கள் நிலையான வாழ்வின்றி அமைதியற்று வாழ்ந்த காலத்திலேயே தமிழர்கள் நல்ல அரசியல் அமைப்பினையும், சமுதாய ஒருமைப்பாட்டினையும், வாணிகச் சிறப்பினையும், இலக்கியச் செல்வத்தினையும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். கடல், ஆர்கலி, முந்நீர், பரவை, புணரி முதலிய கடலையுணர்த்தும் தூய தமிழ்ச்சொற்களும், நாவாய், ஓடம், மரக்கலம், தோணி, தெப்பம், மிதவை, கலம், கப்பல், கட்டுமரம், திமில், அம்பி முதலிய மரக்கலத்தின் வேறு பெயர்களும், தமிழர் கடல் வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர் என்பதற்குச் சான்று பகரவல்லன.

## 18.2. தமிழ்மொழி

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றும், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்!' என்றும் பாரதியார்

தமிழின் உயர் வினையும் இனிமையினையும் பாராட்டினார். மாக்ஸ்முல்லர் என்னும் மொழி நூலறிஞர், 'தமிழே மிகவும் பண்பட்ட மொழி' என்றும், 'தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி' என்றும் பாராட்டியிருக்கிறார். "ஆற்றல் மிக்கதாகவும், சொல்லவந்த பல கருத்துகளைச் சில சொற்களால் புலப்படுத்துவதாகவும், தமிழ் மொழிபோல் வேறு எம்மொழியும் இல்லை" என்று பெர்சிவல் பாதிரியார் கூறுகின்றார்.'

'திரமிளம்" என்ற சொல்லிலிருந்தே தமிழ் பிறந்தது என்பர். இக்கருத்து, கால்டுவெலுக்கு உடன்பாடானது. ஆனால், தமிழ் என்னும் பழஞ்சொல்லிலிருந்தே திரமிளம், திராவிடம் போன்ற சொற்கள் தோன்றியிருக்க வேண்டு மென்பதே மொழி நூலார் பலர் கூறும் உண்மையாகும். தமிழ் எனும் சொல் இனிமை எனும் பொருள் பயப்பதை நந்தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. 'தமிழ் தழீஇய சாய லவர்,

**'தமிழ்பாட் டிசைக்கும் தாம ரையே' - கம்பராமாயணம்**

**'சீவக சிந்தாமணி 'தமிழெனும் இனிய தீஞ்சொற்றையல்' –**

மணிமேகலை

'இனிமையும் நீர்மையும் தமிழென லாகும்'- பிங்கலந்தை 'பாலேய் தமிழ் - திருவாய்மொழி

'அனுமான் சீதாப்பிராட்டியிடம் தூது சென்றபோது மதுரமான மொழியில் பேசினான்' என்று வால்மீகி முனிவர் சுந்தர காண்டம் சுருக்கம் 30, சுலோகம் 43இல் எழுதியிருப்பதைக் கொண்டு, அம்மதுரமொழி தமிழ்மொழியென்றே கொள்ளலாம்' என்று மகாவித்துவான் ரா. ராகவையங்கார் 'தமிழ் வரலாறு என்னும் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக-1**

---

1. புதுக்கவிதை என்றால், யாப்புக்குக் கட்டுப்படாமல் இயற்றப்படுவது ______________ எனப்படும்.
2. 1910ஆம் ஆண்டில் "வால்ட் விட்மன்" எனும் ஆங்கிலக் கவிஞர் எழுதிய ________________ எனும் நூலே புதுக்கவிதையின் முதல் நூலாகும்.
3. மறைமலை அடிகள் உரைநடையைப் போன்றே ___________ உரைநடை அமைந்திருக்கும்.

## 18.3. மரபுக்கவிதை

மரபுக் கவிதை என்பது யாப்பு இலக்கணத்தோடு அமைந்தது. யாப்பு என்றால் கட்டுதல் என்று பொருள். அதாவது எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற இலக்கண உறுப்புக்களால் கட்டப்படுவது. பாட்டுக்குரிய இலக்கணம் யாப்பிலக்கணமாகும். யாப்பு என்பது செய்யுள் எனவும் பொருள்படும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனச் செய்யுள் நான்கு வகைப்படும்.

கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபுக் கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபுக் கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியனவே ஆகும். யாப்பு வடிவத்திற்கு அடிப்படை சந்தமும், தொடையும் ஆகும். சந்தம் என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது.

அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது. மரபுக் கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் இவை படிக்கப்படுவனவாக மட்டுமே அமைந்து விட்டன. பாக்களின் ஓசை நயத்துக்குக் காரணமான சொற்களை அளவிட்டுச் சீர் எனக் குறிப்பிட்டனர். குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துகளால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியும், அடியால் பாடலும் முறையே அமைகின்றன.

சீர்களுக்கு இடையிலான ஓசை தளை எனப்படுகின்றது. சீர், தளை, அடி ஆகியவற்றின் வேறுபாட்டால் பா வகைகள் அமைகின்றன. சீர்களின் முதலெழுத்து ஒற்றுமை - மோனை; இரண்டாம் எழுத்து ஒற்றுமை - எதுகை; இறுதியில் அமையும் ஒலி ஒற்றுமை - இயைபு; சொல், பொருள் ஆகியவற்றில் காணும் முரண்பாடு - முரண்; ஓர் அடியின் எழுத்தோ அசையோ சீரோ அடுத்த அடியின் முதலாக அமைவது அந்தாதி - எனப் பாடல்கள் தொடுக்கப்படுவது தொடை எனப்படும். அடுத்த பாடத்தில் (மரபுக் கவிதை வடிவம்) இவை குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை, மரபுக்கவிதைக்கே உரியது. மரபுக் கவிதையைப் பா வகைகள், பாவினங்கள் என இரண்டாகப் பாகுபடுத்துவர்.

## 18.4. புதுக்கவிதை

புதுக்கவிதை என்றால், யாப்புக்குக் கட்டுப்படாமல் இயற்றப்படுவது 'புதுக்கவிதை' எனப்படும். புதுக்கவிதையின் பாடுபொருள் என்பது, சமூகக் கொடுமைகளை எதிர்ப்பது, உழைக்கும் மக்களை மதிப்பது புதுக்கவிதையின் பாடுபொருள் ஆகும்.

புதுக்கவிதைக்கு முன்னோடி பாரதியார். குறுங்கவிதையின் வகைகள்

- துளிப்பா (ஐக்கூ)
- நகைத் துளிப்பா (சென்ரியு)
- இயைபுத் துளிப்பா (லிமரைக்கூ)

துளிப்பாவிற்கான ஜப்பானிய இலக்கியப் பெயர் ஐக்கூ (ஹைக்கூ). இயைபுத் துளிப்பா, அங்கதத்தோடு மூன்றடிகளில் அமையும். முதலடியும் மூன்றாமடியும் ஈற்றுச் சீர்களில் இயைபு பெறும். இரண்டாமடி பிறவற்றினும் நீண்டிருத்தல் சிறப்பு.

கி.பி. இருபதாம் நூற்றாண்டு தொடங்கிப் புதுக்கவிதை, தமிழிலக்கியத்தில் தோன்றிச் சிறக்கலானது. பாரதியார் எழுதிய வசன கவிதைகளே தமிழில் காணும் புதுக்கவிதை முறைக்கு முன்னோடியாக அமைந்தது.

யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் வகையில் உருவானதே புதுக்கவிதை. எதுகை, மோனை, சீர், தளை சிதையாமை முதலான காரணங்களால் மரபுக் கவிதையில் அடைமொழிகளாக வெற்றெனத் (பயனின்றி) தொடுத்தல் அமைவதாக உணரத் தொடங்கியமையின் மடைமாற்ற முயற்சி எனவும் இதனைக் கருதலாம். கவிதை எழுத இனிக் காரிகை (யாப்பருங்கலக் காரிகை) கற்க வேண்டியதில்லை என்ற தெம்புடன் கவியெழுத வந்த புதுக்கவிதையாளர்களும் இங்கு உண்டு. புதுக்கவிதை, உரைவீச்சாகக் கருதத்தக்கது. அது மரபுக்கவிதை, கவிதை வசனக் கலப்பு, வசனம் என எந்த வாகனத்திலும் பயணிக்க வல்லதாக அமைந்தது.

மரபுக்கவிதை மௌனமாய் மார்தட்டிக் கொள்ள புதுக்கவிதைகள் புரியும் விதமாய் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. நேசம், காதல், கோபம், மகிழ்ச்சி, அன்பு, பாசம், துக்கம், ஏக்கம், எதிர்பார்ப்பு, காத்திருப்பு என எல்லாவற்றையும் சுவைபட புதுக்கவிதைகள் அலங்கரித்து வருகின்றன.

புரியும் வகையிலும், தெளிவாகவும் புதுக்கவிதைகள் வரையப் படுகின்றன. மனித மனங்கள் நிரப்பப்படுகின்றன.

1910ஆம் ஆண்டில் “வால்ட் விட்மன்” எனும் ஆங்கிலக் கவிஞர் எழுதிய “புல்லின் இதழ்கள்” எனும் நூலே புதுக்கவிதையின் முதல் நூலாகும். இதைத் தொடர்ந்து அமெரிக்காவை விட்டு இங்கிலாந்தில் குடியேறிய “எஸ்ரா பவுண்ட்” ஒரு சிறந்த புதுமையான புதுக்கவிதையைத் தந்தார்.

## 18.5. உரைநடை

இருபதாம் நூற்றாண்டில் தனித்தமிழ் எழுதிய அறிஞர்களில் மறைமலை அடிகள் குறிப்பிடத்தக்கவர். மறைமலை அடிகள் உரைநடையைப் போன்றே பாவாணரின் உரைநடை அமைந்திருக்கும். ஏனெனில் இருவர்தம் உரைநடையும் தனித்தமிழில் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அச்சு இயந்திரங்களின் வரவால் தமிழில் முதலில் மலர்ச்சி பெற்றது உரைநடையே. பல வகையான கட்டுரை நூல்கள், சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்புகள், திறனாய்வு, உரையாசிரியர்கள் எனப் பல பிரிவுகளில் உரைநடை வளர்ந்தது. 1904ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற தமிழ் உரைநடையின் வரலாறு என்ற (History of Tamil Prose) ஆங்கில நூல் வி.எஸ்.செங்கல்வராய பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது. தொல்காப்பியத்தில் வரும் உரைநடைக் குறிப்புக்கள் தொடங்கி, சுந்தரம் பிள்ளை, சூரிய நாராயண சாஸ்திரியார் வரையிலான தமிழ் உரைநடை வளர்ச்சியைக் காய்தல், உவத்தல் அகற்றி ஆராயும் இந்நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இனி, தமிழ் உரைநடை வளர்த்த சான்றோர்களைக் காண்போம்.

**உரைநடை முன்னோடிகள்**

அச்சு இயந்திர அறிமுகம் தமிழ் உரைநடை வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது. அச்சடித்த உரைநடை நூல்கள் பல வருவதற்குப் பல அறிஞர்கள் காரணமாகத் திகழ்ந்தார்கள். அத்தகைய முன்னோடிகளாகிய தமிழறிஞர்களைப் பற்றி முதலில் பார்ப்போம்.

**வ.உ.சிதம்பரம் பிள்ளை**

தேச விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்களும் இலக்கிய வளர்ச்சிக்குப் பணி புரிந்திருக்கிறார்கள். பத்திரிகையாசிரியராகத் திகழ்ந்த வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள், மெய்யறிவு, மெய்யறம் என்ற நீதி நூல்களைத் திருக்குறள் கருத்துக்களை ஒட்டி விளக்கி எழுதியுள்ளார்.

மக்களுக்காகத் தொண்டு செய்ய ஆர்வமும், மேடைப்பேச்சுப் பயிற்சியும் இருந்தபடியால் வ.உ.சி.யின் நடையில் நெகிழ்ச்சி காணப்படுகிறது என்கிறார் மு.வரதராசனார்.

பழைய நாரதர் என்ற புனைபெயர் கொண்டு நகைச்சுவையும் வீரச்சுவையும் மிகுந்த கட்டுரைகள் பல எழுதினார் சுப்பிரமணிய சிவா.

**மறைமலையடிகள்**

மறைமலையடிகளால் இயற்றப் பெற்ற பல்வகை உரைநடை நூல்கள், அறிவியல் நூல்கள், நாவல்களான குமுதவல்லி நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள். ஆராய்ச்சி நூல்களான, சாகுந்தல நாடக ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், சிவஞான போத ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி. கட்டுரை நூல்களான, தொலைவில் உணர்தல், மரணத்தின்பின் மனிதர் நிலை, சிந்தனைக் கட்டுரைகள், இளைஞர்க்கான இன்றமிழ், சிறுவர்க்கான செந்தமிழ், உரைமணிக்கோவை, அறிவுரைக் கோவை, வேளாளர் நாகரிகம், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், முற்கால, பிற்காலத் தமிழ்ப் புலவோர், தமிழர் மதம், சைவ சித்தாந்த ஞானபோதம், பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா என்ற நூல்களும் திருவாசக விரிவுரையும் எழுதி உள்ளார். தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்ததால் தனித்தமிழ் இயக்கத் தந்தை என்று போற்றப்படுகிறார்.

**திரு.வி.கலியாண சுந்தரனார்**

தமிழாசிரியராக இருந்து பின் பத்திரிகை ஆசிரியராகி, தொழிலாளர் தலைவராகவும் விளங்கிய திரு.வி. கல்யாண சுந்தரனாரின் உரைநடை எளியது; இனியது. இவரது பத்திரிகைத் தமிழை, தேசபக்தன், நவசக்தி என்ற பத்திரிகைகள் மூலம் அறியலாம். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை என்ற நூல்களை எழுதியுள்ளார்.

க.ப.சந்தோஷம், மகிழ்நன் என்ற புனை பெயரில் வடக்கும் தெற்கும் என்ற நூலை எழுதியுள்ளார். பா.வே.மாணிக்க நாயக்கர் கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும், அஞ்ஞானம் என்ற இரண்டு நூல்களை எழுதியுள்ளார். இவ்விருவரும் தமிழில் நகைச்சுவை இலக்கியத்தை வளர்த்தவர்கள்.

செல்வக்கேசவராய முதலியார் திருவள்ளுவர், கம்பநாடர், தமிழ், தமிழ் வியாசங்கள், வியாச மஞ்சரி, கண்ணகி கதை, அவிநவக் கதைகள், பஞ்சலட்சணம் முதலிய நூல்களைப் பழமொழி கலந்த நடையில் எழுதித் தமிழுக்கு அழகும் மெருகும் தந்தார்.

பேராசிரியர் பூரணலிங்கம்பிள்ளை தமிழ்க் கட்டுரைகள், மருத்துவன் மகள், கதையும் கற்பனையும் என்ற நூல்களை எழுதியுள்ளார்.

பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் உரைநடைக் கோவை என்ற தனது நூலில் பழைய இலக்கியத்தில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி எழுதியுள்ளார். நீண்ட வாக்கியங்களை உடையது இவர் நடை.

சோமசுந்தர பாரதியார் தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாயமுறை என்ற இரண்டு நூல்களை எழுதியுள்ளார்.

**பேராசிரியர். ரா.பி.சேதுப்பிள்ளை**

அழகான நடையில் 25க்கும் மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதியவர் ரா.பி.சேதுப்பிள்ளை. ஊரும் பேரும், வேலும் வில்லும், செந்தமிழும் கொடுந்தமிழும், தமிழின்பம், வீரமாநகர் என்பன அவரியற்றிய சில நூல்கள்.

**பேராசிரியர் அ.சிதம்பரநாத செட்டியார்**

அ.சிதம்பரநாத செட்டியார் பழந்தமிழ்ச் சொற்களை இடையிடையே கலந்து மெருகு ஊட்டி எழுதுவதில் வல்லவர். முன்பனிக்காலம், தமிழோசை, தமிழ்காட்டும் உலகு என்பன அவர் எழுதிய சில நூல்கள். ஏ.சி.செட்டியார் என்று அன்புடன் அழைக்கப் பெற்றவரும் இவரே!

**உ.வே.சாமிநாதய்யர்**

தமிழ்த் தாத்தா என்றழைக்கப்படும் உ.வே. சாமிநாத அய்யர் மணிமேகலை கதைச் சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச்சுருக்கம் போன்ற பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை**

வையாபுரிப் பிள்ளை தமிழ்ச்சுடர் மணிகள், சொற்கலை விருந்து, காவிய காலம், இலக்கியச் சிந்தனைகள், இலக்கிய உதயம் முதலிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறிக - 2**

1. கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது ___________கவிதையாகும்.

2. புதுக்கவிதை என்றால், யாப்புக்குக் கட்டுப்படாமல் இயற்றப்படுவது ___________ எனப்படும்.

**தொகுத்தறிவோம்**

இப்பிரிவில் இலக்கிய வரலாறு, தமிழ்மொழி, மரபுக்கவிதை, புதுக்கவிதை மற்றும் உரைநடை ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டீர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்-1**

1. புதுக்கவிதை
2. புல்லின் இதழ்கள்
3. பாவாணரின்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்தறியும் பயிற்சிக்கான விடைகள்-2**

1. மரபுக்

2. ‘புதுக்கவிதை’

**பார்வை நூல்கள்:**


1. குறுந்தொகை, சக்திதாசன் சுப்பிரமணியன், (செவ்விலக்கியக் கருவூலம் தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2012,
2. சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம், ந.மு.வேங்கடசாமி நாட்டார். தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2012.
3. சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம், ந.மு.வேங்கடசாமி நாட்டார், தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2012.
4. சிலப்பதிகாரம் - வஞ்சிக்காண்டம், ந.மு.வேங்கடசாமி நாட்டார், தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2012.
5. புறநானூறு மூலமும் உரையும், (இரண்டு தொகுதிகள்) ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை.
6. நற்றிணை மூலமும் உரையும், (இரண்டு தொகுதிகள்) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, அருணா ப்ளிகேஷன்ஸ், 13-1 உஸ்மான் சாலை, சென்னை
7. குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் உரை. கபீர் அறக்கட்டளை, சென்னை.
8. கலித்தொகை மூலமும் உரையும், பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை.
9. நெடுநல்வாடை மூலமும் உரையும், பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை
10. திருக்குறள் - பரிமேலழகர் உரையுடன் ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்.
11. பதினென்கீழ்க்கணக்கு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.சென்னை
12. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அக்காதெமி, புதுடெல்லி,
13. மது. ச.விமலானந்தன், தமிழ் இலக்கிய வரலாறு. மீனாட்சி புத்தக நிலையம். மதுரை,
14. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு மீனாட்சி புத்தக நிலையம், மதுரை,


**இணையத் தளங்கள்/மின்னூலகங்கள்**

1. www.tamilvu.org
2. www.tamildigitallibrary.in
3. https://www.tamiluniversity.ac.in/english/library-2/digital-library/
4. https://www.tamilelibrary.org/
5. www.projectmadurai.org

## பருவ இறுதி மாதிரி வினாத்தாள்

**இளங்கலை வணிக நிர்வாகவியல்** (BBA) / **இளங்கலை வணிகவியல்** (B.Com)

பாடக் குறியீடு : **DLTAM - 11** / பாடத்தலைப்பு: **தமிழ் -I**

**மொத்த மதிப்பெண்கள்:** 70 **நேரம்:** 3 மணி

**பகுதி – அ** (2 மதிப்பெண்கள்) **5X2=10** மதிப்பெண்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களில் இருந்து ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி [அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்]

1. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?
2. பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையின் அழகையும் சிறப்பையும் வளத்தையும் விவரித்துக் கூறும் நூல் எது?
3. பாரதியார் படைப்புகள் மூன்றினைக் கூறுக.
4. புரட்சிக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
5. கவிமணி விநாயகம் பிள்ளையின் படைப்புகள் மூன்றைக் கூறுக.
6. நீண்ட ஆயுளைப் பெறுவதற்கான வழி யாது?
7. காவியப் பாவை நூலின் ஆசிரியர் யார்?
8. ஆசிரியர் வன்சொல் சாற்றிட முன்வருவது எப்போது என்கிறார் முடியரசன்?

**பகுதி – ஆ** (5 மதிப்பெண்கள்) **4X5=20** மதிப்பெண்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி [அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்]

9. சங்க இலக்கியம் குறிப்பிடும் தமிழர்பண்பாட்டை விளக்குக.
10. குறுந்தொகை குறிப்பு வரைக.
11. புறநானூறு குறிப்பு வரைக.
12. பாரதியார் பாடல்களில் உள்ள சமூகச் சிந்தனைகளை விளக்குக.
13. தமிழின் பெயர்களாகப் பாரதிதாசன் கூறுவனவற்றை விளக்குக.
14. தமிழின் சிறப்பை பாரதிதாசன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
15. தமிழர்க் கட்டடக் கலையை விளக்குக.

**பகுதி – இ (**10 மதிப்பெண்கள்) **4X10=40** மதிப்பெண்கள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி [அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்]

16. சங்க இலக்கியம் தமிழர் வாழ்வியல் நூல் என்பதை கட்டுரை வரைக.
17. குறுந்தொகை கூறும் தமிழர் மாண்பினை விளக்கிக் கட்டுரை வரைக.
18. தமிழரின் வீரத்திற்கு புறநானூறு உரைக்கும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
19. பாரததேசம் என்னும் கவிதையின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
20. உடல்நலம் பேணுவதற்கான வழிமுறைகளைக் கவிமணி எவ்வாறு எடுத்துரைக்கிறார்? விளக்குக.
21. தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொகுத்துரைக்க.
22. எழுத்துப்பிழை, தொடர்ப்பிழைகளுக்கு தகுந்த சான்றுகளுடன் விளக்குக.

# Document Information

Analyzed document Tamil.pdf (D162613479)
Submitted 3/30/2023 10:58:00 AM

Submitted by Ruby Evangelin

Submitter email rubyevangelin.sms@velsuniv.ac.in

Similarity 0%

Analysis address rubyevangelin.sms.vels@analysis.urkund.com

Sources included in the report

Entire Document

jkpo;j;Jiw njhiyJ}u kw;Wk; ,izatopf; fw;wy; ikak; (CDOE) Nty;]; mwptpay; njhopy;El;g cau; Muha;r;rp epWtdk; (tp];lh];)

Ntyd; efu;< gp.tp. itj;jpaypq;fk; rhiy< gy;yhtuk;< nrd;id - 600 117.
DLTAM11 - jkpo;nkhopg;ghlk; ,sq;fiy jkpo; -1

(gUtKiw)

( ) (CDOE) - 1 ( ) DLTAM11 - 2023

. . . . . . . . . (CDOE) (CDOE) March 2023 (First Edition – Updated) © Vels Institute of Science, Technology and Advanced Studies-2023 All rights reserved. No part of this work may be reproduced in any form, by mimeograph or any other means, without permission in writing from the Vels Institute of Science, Technology and Advanced Studies(VISTAS).

Further information on the VISTAS ODL Academic Programmes may be obtained from VISTAS at Velan Nagar,

P.V.Vaithiyalingam Road, Pallavaram, Chennai–600117 [or] www.velsuniv.ac.in

, 5 17 . 1 . 1 - 1 - 2 - 3 - 4 , . 2 . 5 , 6 , 7 , 8 . 3 , , 9 . . ., , 10 . , 11 , 12 . 4 13 - - , - - - , - - - - - , - . 5 , , 14 , , 15 , 16 , 17 , , .

. 1 1 5 2 12 3 17 4 22 2 5 30 6 35 7 41 8 45 3 9 - . . ., 54 10 - . 62 11 70 12 88 4 13:1 - - , 100 13:2 - - - 117 13:3 - - - - - 130 13:4 - 142 5 , , 14 , 151 15 156 16 164 17 - , , 168 - 179

5 1 1 1.1.1 1.1.2 - 3 1.1.3 - 40 1.1.4 - 135 . ; ; ; ; ;
1.1.1 - Kuṟuntokai ; . ' ' , - , .

## SWAYAM PRABHA

The SWAYAM PRABHA is a group of 40 DTH channels devoted to telecasting of high-quality educational programmes on 24X7 basis using the GSAT-15 satellite. Every day, there will be new content for at least (4) hours which would be repeated 5 more times in a day, allowing the students to choose the time of their convenience. The channels are uplinked from BISAG-N, Gandhinagar. The contents are provided by IITs, UGC, CEC, IGNOU. The INFLIBNET Centre maintains the web portal.

**Open and Distance Learning (ODL) students of Vels Institute of Science, Technology and Advanced Studies(VISTAS)** are advised to use the SWAYAM PRABHA (A good initiative of Ministry of Education, Government of India) as part of supplementary learning materials in addition to the Self Learning Materials(SLM) supplied to the students.

Open and Distance Learning (ODL) students of VISTAS can also visit **https://swayamprabha.gov.in/** and under Higher Education can view the videos uploaded in the website.

Swayam Prabha

Ministry of Education
Government of India

# SWAYAM PRABHA

*An initiative by Ministry of Education*

***SWAYAM PRABHA is a group of 40 channels devoted to telecasting of high-quality educational programmes on 24X7 basis using the GSAT-15 satellite***

**Connect with us**

***https://www.swayamprabha.gov.in/***

Feedback
/Queries
+91 7604974865

SMS Service
Call Us Now
+91 8000992222

LIVE STREAMING

DD Free Dish

dishtv

Jio Mobile App

***Turning every TV into classroom because education is not a privilege, but a Right***

- With atleast 4 hours of fresh content repeated about 5 times daily, students have the privilege of choosing the viewing time as per their convenience
- Content creation is coordinated by IITs, CEC, IGNOU & UoH.
- BISAG-N uplinking the 40 SWAYAM PRABHA channels
- INFLIBNET centre maintains the SWAYAM PRABHA web portal
- AI - enabled SMS based schedule retrieval system
- 1.2 Lakhs + videos cover curriculum based course contents of UG/PG level of divers discipline including technical, non-technical & competitive exams
- SWAYAM PRABHA channels can be accessed through DDFree Dish | Dish TV | JiO Mobile App
- Archive videos & programme schedule for all channels
- Learn from eminent professors at your home
- IIT PAL: To assist the students for classes 11 and 12, who are aspiring to join IITs

**Our Partners**

BISAG-N MeitY

CEC

ignou THE PEOPLE'S UNIVERSITY

IIT TIRUPATI

**Contact**
**Office of the Chief Coordinator**
**MSB 150, Department of Chemical Engineering**
**Indian Institute of Technology Madras**
**E-mail: swayamproiitm@dth.ac.in**

| SWAYAM Prabha Channels Information | |
|---|---|
| **Channel Number** | **Channel Description** |
| Channels 01 – 10 & 40 are managed by **CEC, New Delhi.** | |
| 1 | Language and Literature |
| 2 | History, Culture & Philosophy |
| 3 | Social & Behavioral Sciences |
| 4 | Education and Home Science |
| 5 | Information, Communication and Management Studies |
| 6 | Law and Legal Studies |
| 7 | Economics and Commerce |
| 8 | Physical and Earth Sciences |
| 9 | Life Sciences |
| 10 | Applied Sciences |
| 40 | Arts/Literature, Social Science, Management and other Professional Courses, Natural and Applied Science |
| Channels 11 to 16 are Managed by **IGNOU, New Delhi** | |
| 11 | Social Sciences & Humanities |
| 12 | Basic and Applied Sciences |
| 13 | Professional Education |
| 14 | State Open Universities and Gyandarshan |
| 15 | Capacity Building and Teacher Education |
| 16 | Skill and Vocational Education |
| Channels 17 to 20 are managed by **IIT Bombay** | |
| 17 | Biotechnology and Biochemical Engineering |
| 18 | Electronics and Communication Engineering |
| 19 | Electrical Engineering |
| 20 | Physics |

| | |
|---|---|
| Channels 21 to 22 are managed by **IIT Delhi** | |
| 21 | Textile Engineering |
| 22 | IIT PAL (JEE competition assistance) |
| | Channels 23 is managed by **IIT Gandhinagar** |
| 23 | Civil Engineering |
| Channels 24 to 28 are managed by **IIT Kanpur** | |
| 24 | Aeronautical Engineering |
| 25 | Humanities and Social Sciences |
| 26 | Management, Law, Economics;<br>Business Analytics, Communication, Cooperative Management |
| 27 | Mechanical Engineering, Engineering Design, Manufacturing E & T and allied subjects |
| 28 | Visual communications, Graphic design, Media technology |
| | Channels 29 to 30 are managed by **IIT Kharagpur** |
| 29 | Architecture & Interior Design. |
| 30 | Computer Sciences Engineering / IT & Related Branches |
| Channels 31 to 35 are managed by **IIT Madras** | |
| 31 | Instrumentation, Control and Biomedical and Engineering |
| 32 | Bridge Courses, Impact Series |
| 33 | Chemical Engineering, Nanotechnology, Environmental and Atmospheric Sciences |
| 34 | Health Sciences |
| 35 | Metallurgical and Material Science Engineering, Mining and Ocean Engineering |
| 36 | Skills and Logistics (IT - Enabled Sector, Banking, Financial and Insurance sector Skills Logistics, Supply Chain Management and Transportation, Life skills) |
| Channels 37 to 38 are managed by **IIT Tirupati** | |
| 37 | Chemistry, Biochemistry and Food Processing Engineering |
| 38 | Mathematics |
| Channels 39 is managed by **University of Hyderabad and National Sanskrit University** | |
| 39 | Performing Arts (Indian Classical Music and Dances), Theatre Arts, Film making and Painting |

सत्यमेव जयते
Ministry of Education
Government of India

SATHEE






# SATHEE

## Self Assessment, Test and Help for Entrance Exams for Competitive Exams

JEE | NEET | CLAT | ICAR | SSC | BANK PO | RRB

- Mentoring and live sessions from the students of Premier colleges of India
- **Video Lectures** for Subject experts
- Comprehensive **E-Study Material**
- **Test Series:** All India Mock Tests Topic wise, Subject wise, Weekly Test
- Discussion **Forum** & **Problem solutions**
- Learning material available in English **+ 12 Regional languages**

English | हिन्दी | বাংলা | मराठी | తెలుగు | മലയാളം | ਪੰਜਾਬੀ | தமிழ் | ગુજરાતી | اردو | ಕನ್ನಡ | ଓଡ଼ିଆ | অসমীয়া


Sathee on App Store

Sathee on Play Store

Sathee Website

## SATHEE is LIVE on SWAYAM PRABHA!!

DTH CHANNELS **SATHEE (COMPETITIVE EXAM)**




SWAYAM PRABHA
Free DTH Channel for Education

https://swayamprabha.gov.in/index.php/about/competitive

+91-8953463074 | prutor@iitk.ac.in | https://sathee.prutor.ai

## *Marching Beyond 30 Years Successfully*

### *43 Institutions, 42,000 Students 7,500 Staff Members*

# VELS



**INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)**
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
PALLAVARAM - CHENNAI
INSTITUTION WITH UGC 12B STATUS
www.vistas.ac.in

---

**VELS MEDICAL COLLEGE & HOSPITAL**
Under VELS INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act. 1956)
Uthukottai Taluk, Tiruvallur District - 601 102
www.velsmedicalcollege.com

**MAHAVIR INSTITUTE OF MEDICAL SCIENCES (MIMS)**
VIKARABAD, HYDERABAD- TELANGANA
www.mahavirmedicalcollege.org

---

**SRI VENKATESWARA DENTAL COLLEGE & HOSPITAL**
Thalambur, Chennai
www.svdentalcollege.com

**MEGHNA INSTITUTE OF DENTAL SCIENCES (MIDS)**
NIZAMABAD, HYDERABAD - TELANGANA
www.meghnadentalcollege.com

---

**VEL NURSING COLLEGE**
Under VELS INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act. 1956)
www.velnursingcollege.com

**VENKATESWARA NURSING COLLEGE**
Thalambur, Chennai
www.venkateswaranursing.ac.in

---

**VELS VIDYASHRAM**
CBSE
Pallavaram - Thalambur - Cantonment
www.velsvidyashram.com

**VELS GLOBAL SCHOOL**
TAMIL NADU | KARNATAKA | DELHI - NCR | WEST BENGAL
www.velsglobalschool.com

---

**VAELS INTERNATIONAL SCHOOL**
KKIC / CISCE / CAMBRIDGE INTERNATIONAL
NEELANKARAI - INJAMBAKKAM
www.vaelsinternationalschool.com

**KINDLE KIDS INTERNATIONAL SCHOOL**
SLF Building, 510 Thomson Road #B2-00, Singapore
www.kindlekids.sg

---

**VELS KINDER KIDS**
No. 9, Dr. Ranga Road,
Mylapore, Chennai
www.velskinderkids.com

**CTC**
Cambridge Tutors College
LONDON
South Croydon, Greater London
www.ctc.ac.uk

**SHRI ISARI VELAN MISSION HOSPITAL**
*A Comfort Care Centre*
**150 Bedded Multi Speciality Hospital**
www.velanhospital.com